2988

T.N.C.A. Debates

Official Report

Vol 43 No 3

8th May 1987

D
V211,31 N87
N87.43.3
136533

வெளியீடு 3-5-1988

Issued 3-5-1988

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, மே 8 1987-தொகுதி 43 எண் 3

**Friday, May 8 1987-Vol 43 No 3**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

**Legislative Assembly Secretariat Fort St. George, Madras-600 009**

[Price Rs-3.00 paise

விலை ரூ.3.00 காசுகள்]

D
V211.31'N87
N87.43.3

136533
சென்னை-600 008

உள்ளடக்கம்.

8-5-1987

| | பக்கங்கள். |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள்— | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 361—393 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் .. | 393—413 |
| 2. தகவல் கோரல்— | |
| மருத்துவக்கல்லூரி நுழைவுத் தேர்வுகளைத் தள்ளி வைக்கும் நீதிமன்றத் தீர்ப்பு. | 413—416 |
| 3. அறிவிப்புகள்— | |
| (அ) பொதுக் கணக்குக் குழுவிற்கு உறுப்பினர்கள் நியமனம் | 416— 417 |
| (ஆ) மனுக்கள் குழுவிற்கு உறுப்பினர்கள் நியமனம். | 417—418 |
| (இ) இயக்கூர்திகள் (மோட்டார் வண்டிகள்) வரிவிதிப்பு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987 (ஆ.இ.). | 488 |
| (ஈ) மருத்துவப் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு, 1987 (ஆ.இ) | 557 |
| (உ) சட்ட முன்வடிவின் மீதான ஆய்வு தள்ளி வைக்கப் பெறுதல். | 576 |
| (ஊ) விற்பனை வரிச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1987 (ஆ.இ.) | 584 |
| 4. அரசினர் தீர்மானங்கள்— | |
| (அ) மனுக்கள் குழுவிற்குக் கூடுதலாக உறுப்பினர்கள் நியமனம். | 418 |
| (ஆ) பேரவை அலுவல் வரிசையில் மாற்றம் | 490 |
| 5. கவன ஈர்ப்புகள்— | |
| (அ) நீலகிரி மாவட்டத்தின் சில பகுதிகளில் பருவமழை பொய்த்ததால் விவசாயத்தில் பாதிப்பு. | 418—419 |

பக்கங்கள்

(ஆ) நெற்குன்றத்தில் வீட்டுவசதி வாரிய நிலங்களை சிலர் ஆக்கிரமிப்பு செய்தது. 419—420

(இ) சென்னைப் புறநகர்ப் பகுதிகளில் ஆக்கிர மிப்புகளை வரைமுறை செய்யும்போது கிரையம் வசூலித்தல். 420—422

(ஈ) கூட்டுறவுச் சங்க சிறப்பு அதிகாரிகள் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளது. 422—426

(உ) இராசபாளையத்திலுள்ள மகப்பேறு மருத்துவமனையில் உள்ள அசுத்தமான நிலைமை. 426—428

(ஊ) பள்ளி இறுதித் தேர்வு அறிவியல் வினாத்தாள் வடிவமைப்பினை மாற்றியதால் மாணவர்கள் பாதிப்பு. 428—431

(எ) திருச்சி 'பெல்' நிறுவனத்திற்கருகிலுள்ள அரசுக் கல்லூரியை மூடுவதாக வந்துள்ள செய்தி. 431—433

(ஏ) மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் நிர்வாகம் கதவடைப்புச் செய்துள்ளதால் தொழி லாளர் பாதிப்பு. 433—437

(ஐ) தென்னாற்காடு மாவட்டத்தில் துணை மின் நிலையங்கள் அமைக்கப்படாததால் விவசாயிகளுக்கு ஏற்படும் இன்னல்கள். 437—439

(ஒ) பெரம்பலூர் மதனகோபாலசாமி கோயில் நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள். 439—442

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—

(அ) சிறுநீரகங்கள் (நோய் தீர்க்கும் நோக் கங்களுக்குப் பயன்படுத்தப்படுதலுக்கான அதிகாரமளிப்பு) சட்ட முன்வடிவு, 1987. 484

(ஆ) நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன்வடிவு, 1987. 442—484

(இ) வேளாண் வருமானவரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1987. 484—487



பக்கங்கள்.

(ஈ) இயக்கூர்திகள் (மோட்டார் வண்டிகள்) வரி விதிப்பு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987. 488

(ஈ—) சென்னை மாநகர் காவல் (மதுரை மாநக ருக்கும் கோயம்புத்தூர் மாநகருக்கும் நீட்டிப்பு), சட்ட முன்வடிவு, 1987. 488—489

(உ) விளம்பரப் பொருள்களின் கட்டாயத் தணிக்கைச் சட்ட முன்வடிவு, 1987. 489

(ஊ) இந்திய முத்திரைத்தாள் மற்றும் பதிவு செய்தல் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன் வடிவு, 1987. 489—490

(எ) இயக்கூர்திகள் (மோட்டார் வாகனங்கள்) வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1987. 490—493

(ஏ) இயக்கூர்திகள் (மோட்டார் வண்டிகள்) [வேலை நிறுத்தம் அல்லது ஆர்ப்பாட்டம் அல்லது கண்டனத்தின்போது, வேண்டு மென்றே போக்குவரத்திற்கு இடையூறு விளைவிக்கின்றமைக்காக, ஊர்தியோட்டும் உரிமங்களை நீக்கம் (ரத்து) செய்தல்] சட்ட முன்வடிவு, 1987. 493—529

(ஐ) கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன் வடிவு, 1987. 529—532

(ஒ) கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு, 1987. 532—535

(ஓ) மாநகராட்சி சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1987. 535—545

(ஔ) அழகப்பா பல்கலைக்கழக (திருத்த) சட்ட முன்வடிவு, 1987. 545—550

(அஅ) பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1987. 550—556

(ஆஆ) பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1987. 556—557

(இஇ) மருத்துவப் பல்கலைக்கழகச் சட்ட முன்வடிவு, 1987. 557—571

பக்கங்கள்.

(ஈஈ) தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1987. 571—576

(உஉ) தொழு நோயாளிகள் (தமிழ்நாடு நீத் தறவு) சட்ட முன்வடிவு, 1987. 577—580

(ஊஊ) மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1987. 580—583

(எஎ) அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன் வடிவு, 1987. 584

(ஏஏ) ஊராட்சிகள்(திருத்தச்) சட்ட முன்வடிவு, 1987. 584—586

(ஐஐ) விற்பனை வரிச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1987. 586

(ஒஒ) மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987. 586—587

(ஓஓ) மாவட்ட நகராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987. 587

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள். 588

2988

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1987, மே 8, வெள்ளிக்கிழமை.

சித்திரை 25, பிரபவ—திருவள்ளுவர் ஆண்டு 2018.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

''அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்''.

சொற்களின் தொகுதி அறிந்த தூய்மை உடையவர், அவைக் களத்தின் தன்மை அறிந்து ஏற்ற சொற்களை ஆராய்ந்து சொல்ல வேண்டும்.

## 1. வினாக்கள்— விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

**கோவில் நிலங்களுக்கு வரி விலக்கு.**

(*621—வினா எண் 25:5) —திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு நிதி அமைச்சர்—கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா:—

கோவில் நிலங்களுக்கு வரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கும் சட்டம் எப்பொழுது முதல் செயலுக்கு வரும்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய சட்டம் தற்போது இயற்றப்பட உத்தேசமில்லை.

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் தலைவர் அவர்களே, கோவில் நிலங்களுக்கு வரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கும் சட்டம் தற்போது இயற்ற முடியாவிட்டாலும், கோவில்கள் இப்போது வருமானம் இல்லாமல் இருக்கின்றன. அதன் நிலங்களைக் குத்தகைக்குப் பயிர் செய்கிறார்கள். அந்தக் குத்தகைதாரர்கள் ஒழுங்காகக் குத்தகை கொடுப்பது கிடையாது. கோவில்களுக்கு வருமானம் இல்லாத காரணத்தால், குத்தகைதாரர்களிடமே அந்த நிலங்களுக்கு வரி வசூலிக்க அரசு தனி முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, தேவஸ்தானங்களுக்கு குத்தகைக்காரர்கள் கொடுக்க வேண்டிய பாக்கியைக் கொடுக்காமல் இருக்கிறார்கள். இந்த பாக்கியை வசூல் செய்ய அரசு சட்டங்கள், மாரட்டோரியம் சட்டங்கள் அமுல் செய்யப்பட எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாமல் தடைகள் தொடர்ந்து இருந்து வருகின்றன. ஆகவே, தேவஸ்தானங்கள் அரசுக்குச் செலுத்த வேண்டிய வரியைச் செலுத்த முடியவில்லை. வருவாய் ஆய்வாளர்கள் அரசுக்குச் செலுத்த வேண்டிய வரிகளை, தேவஸ்தானங்களிடம் வசூலிக்க நடவடிக்கை எடுத்து சில தேவஸ்தானங்கள் உயர்நீதிமன்றங்களில் ரிட் மனு கொடுத்து, தடையாணை பெற்றுள்ளன. இவ்வழக்குகள் நீதிமன்றத்தில் இன்னும் நிலுவையில் உள்ளன. மேலும், இக்கேள்வி எந்த வரியிலிருந்து கோவில் நிலங்களுக்கு விலக்கு அளிப்பது என்று குறிப்பிட்டு தெளிவாக இல்லை. ஆனாலுங்கூட, இப்பொழுது குத்தகைக்காரர்கள் தங்களுக்குக் குத்தகை பாக்கியைச் செலுத்தாத காரணத்தால் வரி செலுத்துவதற்கில்லையென்று குறிப்பிட்டு, தேவஸ்தானங்கள் ரிட் மனு போட்டிருக்கிறார்கள். ஆகவே, அரசுக்கு வர வேண்டிய பணத்தை அந்தக் கோவில்கள் இன்னும் செலுத்தவில்லை. இந்த நிலையில்தான் இன்னும் இருந்து கொண்டிருக்கிறது.

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்குக் கோவில்கள் எவ்வளவு வரி பாக்கி வைத்திருக்கின்றன? தமிழ் நாட்டில் எத்தனை ஏக்கர் நஞ்சை நிலம் கோவில்களுக்கு இருக்கின்றன? புஞ்சை நிலம் எவ்வளவு இருக்கிறது? எவ்வளவு ரூபாய் வர வேண்டியிருக்கிறது? கோவில்கள் அரசுக்கு வரி கட்டாவிட்டால், அந்த நிலங்களையோ அல்லது கோவில்களையோ ஜப்தி செய்யக் கூடிய நிலை ஏதும் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அது பற்றிய விவரங்கள், குறிப்புகள் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் அளிக்கலாம்.

**திரு. வை. பாலச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு திருக்கோவிலிலும் வருகின்ற வருமானத்தில் 40 சதவிகிதத்திற்கு மேற்படாத தொகையை அங்கே பணிபுரிகின்ற பணியாளர்களுக்குக் கொடுக்க விதியிருக்கிறது. ஆனால், இன்றைக்குக் குத்தகைக்காரர்கள், அவர்களுடைய குத்தகை பாக்கியைக் கொடுக்காத காரணத்தால், ஆலயங்களுடைய வருமானம் குறைந்து இருக்கிறது. இந்த நிலையில் அவர்கள் இந்த வரியைக் கட்ட வேண்டிய நிலைமையிருக்கும் போது, மிகுந்த பாதிப்புக்கு ஆளாகிறார்கள். ஒரு சில திருக்கோவில்கள் மட்டும் தான் நீதிமன்றத்திற்குச் சென்று ரிட் பெட்டிஷன் போட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த ரிட் பெட்டிஷன்களுடைய முடிவு வருகிறவரை எல்லா திருக்கோவில்களும் நிலவரி கொடுக்க வேண்டாம் என்று அரசு முடிவெடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, கொடுக்க வேண்டாம் என்று முடிவெடுக்க முடியாது. ஆனால் கோவில்கள் மட்டுமல்ல, வரி செலுத்த வேண்டுமென்ற விதிமுறை இருக்கிற பொழுது, அந்த விதிமுறைகளைக் கடைபிடிக்க வேண்டிய விதத்திலேதான் அவரவர்கள் இருக்கிறார்கள். வருமானத்தைத் திரட்டுவது எப்படி என்றும் வரி வசூலிப்பதற்கான வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்வது எப்படி என்பதையும்தான் அந்த, அந்த நிறுவனங்கள் தனியாகக் கவனிக்க வேண்டும். வரியினுடைய அளவும் மிகமிகக் குறைவுதான். ஆனாலுங்கூட, அந்தக் குத்தகைகாரர்களிடமிருந்து பாக்கியைப் பெறுவதற்கான முயற்சிகளிலே அவர்கள் முறைப்படி ஈடுபடுவதுதான் முறையாக இருக்கும்.

உச்ச வரம்பு சட்டம்.

628—(*வினா எண். 2846) **திரு.** எம். செல்லமுத்து, மற்றும் **திரு. கோ. வீரய்யன் ;** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உச்ச வரம்பு சட்டத்தில் எடுக்கப்பட்டுள்ள நிலம், விநியோகிக்கப்பட்ட நிலம்—விநியோகிக்கப்பட்டவருக்கு ஒப்படைக்காமல் உள்ளதா ?

(அ) ஆம் எனில், அப்படி எத்தனை வழக்குகள் உள்ளன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) 31-3-1987 முடிய இச்சட்டத்தின் கீழ் 1,66,757 ஏக்கர் நிலம் எடுக்கப்பட்டு 1,24,275 ஏக்கர் விநியோகிக்கப்பட்டது. நிலம் விநியோகிக்கப்பட்டவருக்கு ஒப்புவிக்கப்படாதது சம்பந்தமாக நிலத்திற்கு 407 வழக்குகள் நிலுவையில் உள்ளன.

**திரு. கோ. வீரய்யன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்படைக்கப்பட்ட நிலம் சம்பந்தமாக, ஒப்படைப்பு கொடுத்தும் நிலத்தை அனுபவிக்க முடியாத நிலையில் 407 வழக்குகள் இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். அந்த 407 வழக்குகளிலே எவ்வளவு விவசாயிகள் வருகிறார்கள்? அதற்குட்பட்டு எவ்வளவு நிலம் வருகிறது? அதைத் துரிதமாக அவர்கள் பெறுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உபரியாக அறிவிக்கப்பட்ட பரப்பில் தடையாணையால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பரப்பு 26,804 ஏக்கர் ஆகும். உபரி நில விநியோக விதி 13-ன் கீழ் இருப்பது 9,976 ஏக்கர் ஆகும். தமிழ்நாடு கரும்புப் பண்ணைப் கழகத்திற்குக் கொடுக்கப்பட்டது, 4,041 ஏக்கர் ஆகும். ஒப்படை நடவடிக்கையில் உள்ள ஏக்கர் 1,661 ஏக்கர். ஆனால் விநியோகிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 97,785. விநியோ

கிக்கப்பட்டவர்களுக்கு ஒப்படைக்காமல் உள்ள நில ஒப்படைதாரர்களின் எண்ணிக்கை 35,687. அதிலே அடங்கிய பரப்பளவு 57,134.31 ஏக்கர் ஆகும். அதற்கான விவரங்களைக் குறிப்பிட வேண்டுமானால் ஒப்படை உத்திரவு வழங்கப்பட்டதைத் தொடர்ந்து பல்வேறு நீதிமன்றங்களால் பிறப்பிக்கப்பட்ட தடையாணைகளின் காரணமாக உள்ள நில விஸ்தீரணம் 9,322.81 ஏக்கர் ஆகும். பிரிவு 18(1)-இன் கீழ் திருத்தம் மற்றும் திருத்திய அறிவிக்கைக்காக 1,509.91 ஏக்கர். தொகை மதிப்பு முடிவு செய்யப்படாததால் உள்ள நிலம் 2,935.90 ஏக்கர். 'இ' நோட்டீஸ் கொடுக்கும் நிலை ஏற்பட்டு நில மதிப்பு முதல் தவணைத் தொகை வசூல் செய்தல் மற்றும் 'எப்' படிவ பட்டா வழங்குதல் ஆகிய காரணங்களுக்காக இருப்பது 1,8730.02 ஏக்கர் ஆகும். ஒப்புரவு ஆவணங்கள் தயார் செய்வதற்காக இருப்பது 24,635.59 ஏக்கர் என்ற அளவில் இருந்து வருகிறது.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட நிலங்கள் விநியோகிக்கப்பட்டதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது சம்பந்தப்பட்ட வழக்குகள் மட்டும் 407 தேங்கி இருக்கின்றன. உச்சவரம்பின் கீழ் எடுக்கப்பட்ட நிலங்களில் அவை விநியோகிக்கப்பட்டு இடைக்காலத்தில் 407 வழக்குகள் மூலமாக அந்த மனுக்களில் சம்பந்தப்பட்டவர்கள் பல ஆண்டுகளாக அந்த நிலங்களுக்காக பல்வேறு அதிகாரிகளிடத்திலே அலைந்து கொண்டிருக்கிறார்கள். அந்த 407 வழக்குகளையும் துரிதமாக முடித்து அவர்களுக்கு நிலங்களைக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

இன்னமும் உச்சவரம்புச் சட்டத்தின் மூலமாக எடுக்கப்பட வேண்டிய நிலங்கள் எடுக்கப்படவேண்டுமென்று இந்தச் சட்டமன்றத்திலே சட்டம் நிறைவேற்றப்பட்டு அனுப்பப்பட்டது. அந்தச் சட்டத்தின்படி தமிழ்நாட்டில் மேலும் உள்ள உச்சவரம்பு நிலங்களை எடுப்பதற்கு அரசு துரித நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்குகளை விரைவிலே முடித்து இந்தப் பிரச்சினை தீரவேண்டுமென்பதுதான் அரசினுடைய நோக்கம். அந்த 407 வழக்குகளில் நிலத் தீர்ப்பாயங்களில் 225 வழக்குகள் இருக்கின்றன. நில ஆணையர் முன்பாக 10 வழக்குகள் இருக்கின்றன. அரசின் முன்னால் 14 வழக்குகள் இருக்கின்றன. உயர்நீதிமன்றத்திலே 158 வழக்குகள் இருக்கின்றன. ஆக மொத்தம் 407 வழக்குகள் இருக்கின்றன. நீதிமன்றங்கள் தடையாணைகள் பிறப்பிக்கப்பட்டதை பொறுத்தவரையிலும் நீதிமன்றங்களின் தீர்ப்புகளை நாம் எதிர்பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். பிரிவு 18(1) திருத்தம் மற்றும் திருத்திய அறிவிக்கைக்காக 1,509.91 ஏக்கரைப் பொறுத்தவரையிலும் இருக்கிற கால அவகாசம் ஒரு ஆண்டிற்குள்ளாக அதை முடிக்கலாம் என்ற அளவுக்கு இப்போது நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே 'இ' நோட்டீஸ் கொடுக்கும் நிலை நில மதிப்பு முதல் தவணை தொகை வசூல் செய்தல் மற்றும் 'எப்' படிவ பட்டா வழங்குதல் சம்பந்தப்பட்ட 2,935.90 ஏக்கரைப் பொறுத்தவரையில் அவை படிப்படியாக 2 ஆண்டுகளிலிருந்து 3 ஆண்டுகளுக்குள்ளாக இவைகளை எல்லாம் பைசல் செய்துவிட முடியும் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மற்றவைகளைப் பொறுத்தவரையிலும் உட்பிரிவு ஆவணங்கள் தயார் செய்வதற்காக நில அளவைப் பணியாளர் போதுமான அளவுக்கு இல்லை என்றும் அவர்கள் அதிகம் தேவைப்படுகிறார்கள் என்றும் அவர்கள் அதிகம் நியமிக்கப்பட்டால்தான் விரைவாக நடத்தமுடியும் என்றும் செயற்குறிப்பு இருக்கிறது. அது அரசின் ஆய்வில் இருக்கிறது. அதிகமாக நியமித்து 2, 3 ஆண்டுகளுக்குள்ளாக இந்தப் பிரச்சினை தீர்க்கப்படவேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.



### தாம்பரம் சுங்கச் சாவடி அலுவலகம்.

629 (*வினா எண் 9419)—திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் மேற்கு கக்கன் தெருவில் 10 சென்ட் நிலத்தில் தமிழ்நாடு அரசு சுங்கச் சாவடி அலுவலகம் அமைக்க ஒதுக்கிய இடத்தை தனி நபர் ஒருவர் ஆக்கிரமித்துள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும்( ஆ) ஆக்கிரமிப்பு ஏதுமில்லை.

[முற்பகல் 10-10]

திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சுங்கச் சாவடிக்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் இப்பொழுது மிகப் பெரிய ஒரு கட்டிடம் இருக்கிறது. எந்த அடிப்படையிலே அந்தக் கட்டிடம் கட்டுவதற்குத் தனியாருக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டம், சைதை வட்டம், தாம்பரம் கிராமம் புல எண். 329-1-பி. 1-ல் உள்ள 0.10 ஏக்கர் பரப்பு தமிழ்நாடு அரசு சாவடி என கிராம சுவடியில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி நிலம் அரசாணை எண். 3438, வருவாய்த்துறை, நாள் : 24—9—1974-ல் டாக்டர் சி. ஜே. அலெக்சாண்டர் என்பவருக்கு ரூ. 15,641-க்குக் கிரயம் வசூலித்துக் கொண்டு ஒப்படை செய்ய அரசு உத்தரவு

வழங்கப்பட்டுள்ளது. அதில் அவர் தற்போது கட்டிடம் கட்டி பிலிப்ஸ் என்ற பெயரில் மருத்துவ மனையை நடத்தி வருகிறார் மேற்படி நிலம் அரசாணையின்படிதான் ஒப்படை செய்யப் பட்டது ; ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை.

திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடம் மிகவும் மதிப்பு வாய்ந்த ஒரு இடமாக இருந்தும், அதைத் தனி நபருக்குப் பட்டா செய்திருக் கின்றார்கள். இனியேனும் அதுபோன்ற விவகாரங்களில், அங்குள்ள மக்களின் கருத்தை அறிந்து செயல்படுத்துவதற்கு அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, 1974-லேயே நடைபெற்றிருக் கிறது. அப்பொழுதே அங்கேயிருக்கிற பொதுமக்களோ, அங்கே யிருக்கிற நகராட்சி மன்றமோ ஆட்சேபணை எழுப்பியிருப்பார் களோ, என்னவோ தெரியாது. எழுப்பி இருப்பார்களேயானால் அதுபற்றி ஆராய்ந்து தக்க ஒரு முடிவு எடுக்க முடியும். ஆனால், அப்படிப்பட்ட இடங்கள் ஒப்படைக்கப்படுகின்ற சூழ்நிலையில் பொது மக்களோ மற்றவர்களோ ஆட்சேபணை எழுப்புவார்களே யானால் அதைப்பற்றி பரிசீலித்துதான் வருவாய்த்துறையும் மற்றும் அரசும் முடிவெடுக்கும்.

காமராஜர் மாவட்டம், விருதுநகர் தலைமை மருத்துவமனை.

630 (*வினா எண் 8518)—திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காமராஜர் மாவட்டம்,விருதுநகர் தலைமை மருத்துவ மனையில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கை எத்தனை ?

(ஆ) அதனை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 132.

(ஆ) ஆம்.

(இ) தலைமையிட மருத்துவமனையில் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த மேலும் 48 படுக்கைகள் வசதி கொண்ட கூடுதல் பிரிவு கட்டிடம் மற்றும் அறுவையரங்கு, பிணவறை ஆகியவை கொண்ட கட்டிடங்கள் கட்ட ஆணை வழங்கப்பட்டு கட்டிட வேலைகள் நடைபெற்று வருகின்றன.



திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, விருதுநகர் காமராஜ் மாவட்டத்தினுடைய தலைநகர். மாவட்டத் தலைமை மருத்துவ மனையிலே 300 படுக்கைகளாவது வேண்டும். ஆனால், இருப்பது 132. ஏற்கனவே, 1985-வது ஆண்டு பட்ஜெட்டிலே சிவகங்கை விருதுநகர் பகுதியிலே ரூ. 30 இலட்சம் செலவில் படுக்கை வசதி களை விஸ்தரிக்கப் போவதாக அறிவிப்பு வந்தது. இப்பொழுது 48 படுக்கைகள்தான் விஸ்தரிக்க இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். 300 படுக்கைகளாவது வேண்டும். அதை அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, படுக்கை வசதியை வருகின்ற நோயாளிகளின் எண் ணிக்கையை பொறுத்துத்தான் நிர்ணயிக்க வேண்டுமே தவிர, தலைநகர் என்பதற்காக நிர்ணயிக்க முடியாது. நோயாளிகள் எண்ணிக்கை கூடுமானால், படுக்கை வசதிகளையும் அதிகரிக்க அரசு எப்பொழுதும் தயாராக இருக்கிறது.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விவரத்தை சொன்னார்கள். அங்கே அதிகமான நோயாளிகள் பாயிலே, தரையிலே படுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கணக்குகளை எடுத்துப் பார்த் தால் விவரம் தெரியும். ஆகவே, அங்கே இட வசதி இல்லை யென்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, என்னுடைய கோரிக்கையை அமைச்சர் அவர்கள் நிறைவேற்றுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகரில் மட்டுமல்ல, தமிழ்நாட்டில் இருக்கிற எல்லா மருத்துவ மனைகளிலும் இதுதான் நிலைமையாக இருக் கிறது. ஆகவே, நிதி ஆதாரத்திற்கு ஏற்ப அதை விரிவாக்கு வதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

அரசு மருத்துவமனைகள்.

631. (*வினா எண் 8934)—திரு. கே. முத்துவேல் : மாண்பு மிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா —

(அ) இராமநாதபுரம் மாவட்டம் கமுதி, முதுகுளத்தூர் தாலூக்காக்களில் உள்ள அரசு மருத்துவ மனைகளுக்கு எந்தவித மருந்தும் சப்ளை செய்யப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : இராமநாதபுரம் மாவட்டம், கமுதி மற்றும் முதுகுளத்தூர் தாலூக்காக்களில் உள்ள அரசு மருந்தகம் மற்றும் மருத்துவமனைகளில் உயிர்காக்கும் மற்றும் இதர மருந்துகள் போதிய அளவு இருப்பில் உள்ளது.

திரு. கே. முத்துவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கமுதி, முதுகுளத்தூர் மிகவும் பின்தங்கிய பகுதி. அங்கே நாய்க்கடி, பாம்புக்கடிக்கான மருந்துகள் கிடையாது. அவற்றை எல்லாம் மதுரை போன்ற பெரிய நகரங்களுக்குச் சென்றுதான் வாங்க வேண்டும். இதுபோன்ற மருந்துகளை கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருந்துகளை அங்கே வைப்பதற்கான நடவடிக்கையை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. முத்துவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்துக்குளத்தூர் மருத்துவமனை மிகவும் சுகாதார கேடு உடையதாக, சுகாதாரம் இல்லாத சூழ்நிலையில் இருக்கிறது அதிலும் குறிப்பாக அங்கே இருக்கின்ற மகப்பேறு மருத்துவ மனையின் கட்டிடம் மிகவும் ஆபத்தான சூழ்நிலையில் இருக்கிறது. நானும் வணிகவரித்துறை அமைச்சர் திரு. த. இராமசாமி அவர்களும் இதனை நேரடியாகப் பார்த்திருக்கிறோம். ஆகவே அந்தக் கட்டிடத்தை மாற்றி புதிய கட்டிடம் கட்டித் தர அரசு முன் வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, சுகாதாரக் கேடு உள்ளவர்கள்தான் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வருகிறார்கள். ஆகவே மருத்துவமனையையே சுகாதாரக் கேடாக ஆகி விட்டால் என்ன செய்வது என்பது தெரியவில்லை? எனவே நிதியாதாரத்திற்கேற்ப விரைவில் அந்தக் கட்டிடத்தைப் பழுது பார்க்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

632 (*வினா எண். 12253)—திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, திருக்காட்டுப்பள்ளி அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தி எல்லா வசதிகளும் கொண்ட மருத்துவமனையாக அமைக்க அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.



(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்காட்டுப்பள்ளியில் இருக்கின்ற அரசு மருத்துவமனை ரொம்பவும் தாழ்வான பகுதியில் இருக்கிறது. திருச்சிக்கும், தஞ்சாவூருக்கும் இடையில் அது இருப்பதால் ஏறத்தாழ 40 கிலோ மீட்டர் வரையில் சென்றுதான் பெரிய மருத்துவ மனைக்குச் செல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது. நகரப் பஞ்சாயத்தாக திருக்காட்டுப்பள்ளி இருக்கின்ற காரணத்தால் அரசு மருத்துவமனையை வேறிடத்திற்கு மாற்றி அல்லது அதே இடத்திலே அதனை நன்கு விரிவுப்படுத்தி அந்தப் பகுதியில் இருக்கின்ற நோயாளிகளின் குறைகளைப் போக்க உரிய வசதிகளைச் செய்து தர அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதை அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. இதைப்பற்றி நடவடிக்கை எடுக்கப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கும்பகோணம் சோழன் போக்குவரத்துக் கழகம்.

633—(*வினா எண். 3986)—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் சோழன் போக்குவரத்துக் கழகத்தில் ஆதி திராவிடர் சமுதாயத்திற்கு ஒதுக்கப்பட்ட விகிதப்படி ஓட்டுநர்களும் நடத்துநர்களும் நிரப்பட்டுள்ளனரா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே: (அ) ஆம்.

(ஆ) 1-1-1987 நிலவரப்படி ஆதி திராவிடர் மற்றும் மலை சாதியினர் பணி நிலவரம் கீழ்க்கண்டவாறு :—

| பிரிவு. | | மொத்தப் பணியாளர்களின் எண்ணிக்கை. | ஆதி/ம.சா. எண்ணிக்கை. | ஆதி/ம.சா. சதவிகிதம். |
|---|---|---|---|---|
| ஓட்டுநர் | .. | 1,525 | 107 | 7 |
| நடத்துநர் | .. | 1,542 | 385 | 25 |

திரு. கூடலூர் இ. வி. வேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஜாதி அடிப்படையில் அதாவது பி.சி. பார்வர்ட் கம்யூனிட்டி, ஓப்பன் காம்பெட்டிஷன் ஆகிய அடிப்படைகளைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள்,

ஆனால் அந்தத் தொழிலாளர் பெருமக்கள் எல்லாம் இந்த கார்ப்பரேஷன்கள் எல்லாம் புனரமைப்பு வேண்டும் என்பதற்காக ஓடாய்த் தேய்ந்து, உழைத்துக் கொண்டு இருக்கிறார்கள். அந்தத் தொழிலாள வர்க்கத்தினுடைய சந்ததியினருக்கு முன்னுரிமை அளித்து அவர்களுக்கென்று இட ஒதுக்கீடு செய்யப்படுமா என்பதை நான் அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் யாராவது இடையிலே விபத்துக் காரணமாக இறந்துவிட்டாலோ அல்லது அப்படிப்பட்ட ஆபத்து ஏற்படுகிறபோதோ அவர்களுடைய சந்ததியினருக்கு முன்னுரிமை கொடுத்து ஏதாவது ஒரு பணியை அவர்களுடைய வீட்டிலே உள்ள ஒருவருக்குக் கொடுக்க வேண்டும் என்ற முறையை இந்த அரசு வைத்திருக்கிறது. ஆனால் ஓய்வு பெறுகின்றவர்களைப் பொறுத்த வரையில் வாரிசு அடிப்படையில் பணி கொடுக்க வேண்டும் என்பதைக் கொள்கை அளவில் இந்த அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. அதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. ஒருவர் 58 வயதில் ஓய்வு பெறுகிறபோது அவருடைய மகன் 10 வது வகுப்பு படித்துக் கொண்டு இருந்தாலும் கூட வேலை கிடைக்கிறது என்ற ஆர்வம் காரணமாக நன்றாகப் படிக்கக் கூடிய பையனைக் கூட பள்ளியிலிருந்து நிறுத்திவிட்டு ஒரு சாதாரண வேலையில் சேர்ந்து விடுகிற நிலைமை இருக்கிறது என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லி, ஆக அந்தக் கொள்கை சரியான கொள்கை அல்ல என்று முடிவெடுத்து, இப்போது அவர்களுக்கென்று ஓட்டுனர் பயிற்சிப்பள்ளி, ஐ.டி.ஐ., இன்ஜினியரிங் கல்லூரி, மருத்துவக் கல்லூரி போன்றவற்றில் இப்படிப்பட்ட வசதிகள் ஏற்படுத்தி அவர்களுடைய தரத்தை நல்லபடியாக உயர்த்தி நல்ல பணியில் அமர்த்த வேண்டிய நடவடிக்கையை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது.

திரு. சா. ஞானசுந்தரம் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது ஆதி திராவிடர்களுக்கு 7 சதவீதம்தான் அளிக்கப்பட்டு இருப்பதாகத் தகவல் தந்திருக்கிறார்கள். ஆனால் அரசாங்கத்தினுடைய நிர்ணயப்படி 18சதவீதம் அளிக்க வேண்டும் என்று இருக்கிறது. அதை அளிப்பதற்குரிய வகையில் மீண்டும் தேர்வு நடத்தி ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்களை எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவர் அவர்களே, நான் அடுத்து சொன்னதை அவர்கள் கவனிக்காமல் விட்டுவிட்டார்கள் என்று கருதுகிறேன். நடத்துனர்களைப் பொறுத்த வரையில் 25 சதவீதத்திற்கு இந்த அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. அதற்குக் காரணம் நடத்துநர் அதிகம் பேர், ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் வருகிறார்கள். ஆனால் ஓட்டுநர்களைப் பொறுத்த வரையில் நாம் கேட்கிற அளவுக்கு எதிர்பார்க்கின்ற அளவுக்கு உரிய எண்ணிக்கையில் வராத காரணத்



தால் அது 7 சதவீதத்திலேயே நிற்கிறது. நடத்துனர்களைப் பொறுத்த வரையில் நிறையப்பேர் வருகிற காரணத்தால் 18 சதவீதம் என்பதற்கு மேலே போய் 25 சதவீதம் வரையில் இந்த அரசு போய் இருக்கிறது. அதிலே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். பி. ஆர். சி.யைப் பொறுத்த வரையில் நமக்கிருக்கின்ற நிலைமையைச் சொல்ல விரும்புகிறேன். எஸ். ஆர். வி. எஸ்.ஐ ராமன் அண்ட் ராமன் என்ற இரண்டும் தனியார் கம்பெனிகளாக இருந்து பின்னர் அவற்றை நாம் எடுத்துக் கொண்டோம். அப்படி எடுத்துக் கொண்ட போது ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்களைப் போதுமான அளவுக்கு நியமனம் செய்யவில்லை. இந்த அரசு பொறுப்பினை ஏற்றதற்குப் பிறகு அதிலே மிகவும் கவனம் செலுத்தி ஆதி திராவிடர்களை நாம் சேர்த்தாலும் கூட இந்தப் போக்குவரத்துக் கழகம் இரண்டாகப் பிரிக்கப்பட்ட காரணத்தால், இந்தப் போக்குவரத்துக் கழகம் இதிலே ஜூனியர் என்ற வகையில் இளைஞர்களை மாற்றி அந்தப் போக்குவரத்துக் கழகத்திற்கு அனுப்ப வேண்டிய நிலை ஏற்பட்ட போது பெரும்பாலான ஆதி திராவிடர்கள் அந்தப் போக்குவரத்துக் கழகத்திற்குச் சென்றுவிட்டார்கள். இருந்தாலும் கூட அதை ஈடுபடுத்துகின்ற வகையில் நாம் நடவடிக்கைகளை எடுத்து செய்திருக்கிறோம். ஓட்டுநர்களில் நாம் எதிர்பார்க்கின்ற அளவு எண்ணிக்கையில் வருவதில்லை.

[முற்பகல் 10-20]

திரு. கி. [illegible] : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கார்ப்பரேஷனில் வேலை செய்பவர்கள் பணிக் காலத்தில் இறந்து விட்டால் அவர்களுடைய குழந்தைகளில் ஒருவருக்கு வேலை வாய்ப்பு அளிப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதிலே ஒரு சிக்கல் இருக்கிறது. இறந்தவர்களுக்கு 58 வயது ரிடையர்மெண்ட் எஜ் வருவதற்குள் பையன் தயாராக இருந்தால் வேலை கொடுப்பதாகவும் 58 வயதிற்கு பிறகு ரிடையர்மெண்ட் ஆனதற்கு பிறகு உயிரோடு இருந்தால் அவருடைய குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லை என்றும் ஒரு நியதியைக் கடைப் பிடிக்கிறார்கள். அதை மாற்றி அமைத்து இறந்தவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் முறையாக படித்து வேலைக்குத் தகுதியாக வருகிறபோது வேலை கொடுப்பதற்கு ஒரு பெர்செண்டேஜ் கூட ஒதுக்கி, அதிலே ரிடையர் ஆனவர்களின் குடும்பத்திற்கும் இறந்தவர்களின் குடும்பத்திற்கும் வேலை கொடுப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவர் அவர்களே, இவையெல்லாம் பெரும்பாலும் தொழிற்சங்கத் தலைவர்களோடு மிகத் தீவிரமாக மிக அதிகமாகப் பேசி முடிவு எடுக்கின்ற பிரச்சனைகள் தாம். 58 வயதிற்கு பிறகு அவர்களின் குடும்பங்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்று வைப்பதில்கூட எல்லோருக்குமே

கொடுத்து விட முடியாது. அந்த அளவுக்கு இடம் இருப்பதில்லை. இடம் இல்லாத காரணத்தால்தான் இப்படி சில நியதிகளை வைத்திருக்கிறோம். இன்னொன்று குறிப்பிட்ட சதவீதம் ஒதுக்கி ஓய்வு பெறுபவர்களின் குடும்பங்களுக்கும் கொடுக்கலாம் என்று சொன்னார்கள். அது நல்ல யோசனையாக இருந்தாலும் கூட யாருக்குக் கொடுப்பது என்ற பிரச்சினை வந்து விடும். அதிலே பிறகு அரசாங்கம் அவர்களுக்கு சலுகை காட்டியது, இவர்களுக்கு காட்டியது என்ற பிரச்சினையெல்லாம் வந்து விடும். அதனால் தகுதியை அவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக ஐ.டி.ஐ. ஆக இருந்தாலும் சரி, டிரைவர்ஸ் டிரையினிங் ஸ்கூலாக இருந்தாலும் சரி அந்த தொழிலாளர்களுடைய குடும்பத்திற்கு மட்டுமே வாய்ப்பு கொடுக்கப்படுகிறது. அவர்கள் மட்டுமே அந்த டிரெயினிங்கில் சேர்ந்து பயிற்சி பெறலாம். அதைப்போன்று கல்லூரிகளிலே, போக்குவரத்து கழகங்களின் சார்பாக நடத்தப்படுகிற என்ஜினீயரிங் கல்லூரியில் 40 சதவீதமும், மருத்துவக் கல்லூரியிலே 33 சதவீதமும் ஒதுக்கி அவர்கள் தகுதியை உயர்த்துவதற்காக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

**செங்கல்பட்டு மாவட்டம், கேளம்பாக்கம்—கோவளம் இடையேயுள்ள பழுதடைந்த பாலம்.**

634—(*வினா எண் 7000) திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு மாவட்டம், கேளம்பாக்கம்—கோவளம் இடையே பழுதடைந்துள்ள பாலத்தைப் புதுப்பிக்க அரசின் நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பாலப் பணியானது நிரந்தர சீராக்கப்பணியின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு பணி முடிக்கப்பட்டுவிட்டது.

**திரு. வி. தங்கவேலு**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலத்திற்கு சீரமைப்பிற்காக அரசு எந்த அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என அறிய ஆவலாக இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி** : தலைவர் அவர்களே, இந்த சீரமைப்புக்காக ஏறக்குறைய 1 1/2 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டு பணி முடிக்கப்பட்டு விட்டது. இருந்தாலும் புதுப் பாலம் அமைப்பதற்காக 25 லட்சம் ரூபாயில் திட்டம் தீட்டப்பட்டிருந்தாலும் நிதிப் பிரச்சினை காரணமாக உடனே எடுக்க முடியாத நிலைமை இருக்கிறது. எதிர்காலத்தில் சூழ்நிலைக்கு ஏற்ப நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம்.





**திரு. வி. தங்கவேலு** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு மாவட்டம் உல்லாசப் பயணிகளை கவர்கின்ற இடமாக இருக்கிறது. குறிப்பாக கோவளம் மிகவும் அதிகமாக உல்லாசப் பயணிகளை கவர்ந்திருக்கிறது. இப்படிப்பட்ட இடங்களுக்கு போகிற போது அந்த உல்லாசப் பயணிகளுக்கு மிகவும் சிரமம் உண்டாகிறது. அதைத் தவிர்க்கின்ற வகையில் இப்படிப்பட்ட பாலங்களை உடனுக்குடன் சீரமைப்பு செய்ய ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கெங்கு உல்லாசம் இருக்கிறதோ அவை எல்லாம் உல்லாசத்திற்கு ஏற்ற இடம் தான் என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் செங்கல்பட்டு மாவட்டத்திற்கு போய் பார்த்து விட்டு வந்து கேள்வி கேட்பதில் இருந்தே அது நல்ல இடம் தான் என்று புரிகிறது. இருந்தாலும் நிதிப் பிரச்சனை என்பது எல்லா இடங்களுக்கும் இருப்பது போன்று தான் இதற்கும் இருக்கிறது. எனவே எது எது அவசியமோ அதை எல்லாம் லிஸ்ட் அவுட் செய்து எடுத்துக்கொண்டு வருகிறோம். அதன் முக்கியத்துவம் கருதித்தான் 25 லட்சம் ரூபாய் செலவு ஆகும் என்ற கணக்கில் ஒரு திட்டம் தீட்டி வைத்திருக்கிறோம். ஆனால் பணம் இல்லாத காரணத்தால் இந்த ஆண்டு ஒதுக்க முடியவில்லை. எதிர் காலத்தில் பார்க்கலாம்.

**திரு. வைகை, சா. துரைசாமி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து மகாபலிபுரம் செல்லுகின்ற சாலை மிகவும் குறுகலாக இருக்கிறது. அங்கே பல ஆக்கிரமிப்பாளர்கள் சாலையிலேயே வீடு கட்டிக் கொண்டிருக்கிறார்கள். உல்லாசப் பயணிகள் அதிகமாக செல்லுகின்ற சாலையாக இருப்பதால் அதை தேசிய நெடுஞ்சாலையாக ஆக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி**: தலைவர் அவர்களே, ஆக்கிரமிப்புகள் இருக்குமானால் அவற்றை அகற்றிவிட்டு முறைப்படி அகலப்படுத்துவதற்கு நடவடிக்கையெடுக்கலாம். இதனை தேசிய நெடுஞ்சாலையாக மாற்ற வாய்ப்பு இருக்காது என்று நினைக்கிறேன். எனவே போக்குவரத்திற்கு உகந்த வகையில்—உல்லாசப் பயணிகள் அதிகமாக வருகிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள், அந்தச் சாலையை சீர்படுத்துவதற்கு எதிர் காலத்தில் நடவடிக்கையெடுக்கலாம்.

**தூத்துக்குடி—காயல்—ஆறுமுகநேரி இரயில் பாதை.**

635. (*வினா எண் 13213) திரு. வே. இரா. ஜெயராமன் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி—காயல்—ஆறுமுகநேரி இரயில் பாதை ஏற்படுத்த மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுது இரயில்வேக்கு தூத்துக்குடி—காயல்—ஆறுமுகநேரிக்கு இரயில்பாதை இணைப்பு அமைப்பதற்கான கருத்து எதுவும் இல்லை.

திரு. வே. இரா. ஜெயராமன்: தலைவர் அவர்களே, தமிழகத்தில் எந்தெந்த புதிய வழித்தடங்களில் இந்த ரெயில் பாதைகளைப் போட வேண்டுமென்று மத்திய அரசுக்கு நமது அரசு சிபார்சு செய்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, மத்திய அரசுக்கு ரெயில்வே சம்பந்தப்பட்ட பாதைகளை அமைத்தல், அகலப்படுத்தல், மேம்பாலம் கட்டுதல் போன்ற ஏறத்தாழ 22 பணிகளை சிபார்சு செய்திருக்கிறோம். ஒவ்வொன்றாகப் படிப்பதென்றால் அரை மணி நேரத்திற்கு மேலாகும். ஆகவே தனியாக அறிக்கை கொடுக்க தயாராக இருக்கிறேன்.

சென்னையில் மினி டாக்ஸிகள்.

636 (*வினா எண் 13415) திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் மினி டாக்ஸிகள் இயக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மினி டாக்சிகள்' இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. சைதை சா. துரைசாமி : தலைவர் அவர்களே, மினி டாக்சிகள் இயக்கும் செயற்குறிப்பு இல்லையென்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். எதிர்காலத்திலாவது அப்படிப்பட்ட நடவடிக்கைகளையெடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா? சென்னை மாநகரத்தில் எத்தனை ஆட்டோ ரிக்ஷாக்கள், டாக்சிகள் ஓடுகின்றன என்ற விவரத்தையும் தெரிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, டாக்சிகளே சிறிய வண்டிகள்தான், மினி டாக்சிகள் என்று இருப்பதாகத் தெரியவில்லை. மினி டாக்சியென்றால் என்னவென்று நம்முடைய சட்டத் திட்டத்திலும் வகுத்திருப்பதாகத் தெரியவில்லை. டாக்சிக்கு அடுத்து ஆட்டோ ரிக்ஷாதான் சிறிய வாகனம். இப்போது போதிய அளவிற்கு ஆட்டோ ரிக்ஷாக்களும், டாக்சிகளும் ஓடிக்கொண்டிருக்கின்றன. ஆட்டோ ரிக்ஷாக்கள் அதிகமாக வந்துவிட்ட காரணத்தால் டாக்சிகள் பணியை விட்டு வெளியே செல்கிற நிலைகூட ஏற்பட்டிருக்கிறது. சென்னை நகரத்தில் எத்தனை ஆட்டோ ரிக்ஷாக்கள், டாக்சிகள் ஓடுகின்றன என்ற விவரத்தை உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். அந்த விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேட்டால் தருகிறேன்.



திரு. சைதை சா. துரைசாமி : தலைவர் அவர்களே' இந்த மினி டாக்சிகள் புதியதாக அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதாக பத்திரிகையில் செய்தி வெளிவந்து, மாருதி கார்கள் மினி டாக்சிகளாக மாற்றப்படும் என்று அந்த அடிப்படையில் இந்தக் கேள்வி கேட்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பத்திரிகையில் வந்த செய்தி அடிப்படையில் கேள்வி கேட்கக் கூடாது. மினி டாக்சி என்று எதுவும் இல்லையென்று அமைச்சர் அவர்கள் தெரிவிக்கிறார்கள்.

திரு சைதை சா. துரைசாமி : தலைவர் அவர்களே' மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கும் மற்ற முக்கியமான இடங்களுக்கும் செல்வதற்கு அரசே டாக்சிகளை இயக்குகிறப் பணியை மேற்கொள்ளுமா? தனியார் டாக்சிகளில் விமான நிலையத்திற்குப் போகிற போது பல சிரமங்கள் ஏற்படுவதை கவனத்தில் கொண்டு அரசே டாக்சிகளை விட முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, மாருதி டாக்சிகள் விட இப்போது நம்முடைய அரசாங்கம் அனுமதித்து இருக்கிறது. ஒருவேளை அதை மினி டாக்சி என்று தெரிவித்து இருந்தாலும் தெரிவித்திருக்கலாம். இப்போது தனியாக மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கும் மற்ற இடங்களுக்கும் டாக்சிகள் விடுகிற உத்தேசம் அரசாங்கத்திற்கு நிச்சயமாக இல்லை. தேவையான அளவிற்கு பஸ்களை விட்டுக் கொண்டிருக்கிறோம். இப்போது ஓடிக் கொண்டிருக்கிற டாக்சிகளை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை காவல் துறை மற்றும் போக்குவரத்துத்துறை மூலமாக அரசாங்கம் தீவிரமாக எடுத்து வருகிறது. டாக்சிகளை நாமே விடுவது என்பது பல்வேறு சங்கடங்களை இதற்கு மேலும் உருவாக்கிவிடும் என்பதால் அந்தப் பொறுப்பை அரசாங்கம் எடுத்துக் கொள்வது நல்லதல்ல.

திரு. ஆர். ரெங்கசாமி : தலைவர் அவர்களே, அரசாங்கம் மூன்று மாதத்திற்கு ஒருமுறை மோட்டார் பெர்மிட் வழங்கி வந்தது. இப்போது ஓராண்டு காலமாக அதை வழங்கவில்லை. ஏன் வழங்கவில்லையென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிற பிரச்சினை பெர்மிட் அல்ல; வண்டிகள் கொடுப்பது. அரசாங்கத்திற்கு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை 96 வண்டிகள் கொடுக்கிற உரிமையை கொடுத்திருந்தார்கள்.

[முற்பகல் 10–30]

ஆனால் அந்த 96, 3 மாதத்திற்கு ஒரு முறை நியாயமாக உடல் ஊனமுற்றவர்கள் என்று இப்படி கணக்குப்பார்த்து பிரித்துக் கொடுக்கிற நிலையை அரசாங்கம் எடுத்துக்கொண்டிருந்தது. இதிலே பல்வேறு சிக்கல்கள் இருக்கிற காரணத்தால், சரியான முறையிலே தேர்ந்தெடுப்பதில் காலதாமதம் ஏற்படுகிற காரணத்தாலே, இப்போது கொஞ்சம் காலதாமதம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. சென்னையை பொறுத்தவரையில் தனியாக உரிமம் கொடுக்கின்ற நிலை கொஞ்சம் காலமாக தடுத்து நிறுத்தப்பட்டு இருக்கிறது. காரணம் வண்டிகள் அதிகமாகிவிட்ட காரணத்தாலேயும், போக்குவரத்து நெரிசல் அதிகமாகிவிட்ட காரணத்தாலேயும், சென்னையைப் பொறுத்தவரையிலும் அதிகமான அளவிலே பெர்மிட் கொடுக்கிற நிலையை நாம் தடுத்து நிறுத்தியிருக்கிறோம்.

**திருமதி பா. வளர்மதி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இருக்கிற ஆட்டோக்காரர்கள் மீட்டருக்கு மேல் பணம் தரவில்லை என்றால், நாம் சொல்கிற இடத்திற்கு வர மறுக்கிறார்கள். ஒரு முறை, 2 முறை கண்டித்து விட்டு, 3-வது முறையும் அவர்கள் தொடர்ந்து தவறு செய்தால், அவர்களுடைய லைசென்சை ரத்து செய்வதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதே கூட கடுமையான நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொண்டு இருக்கிறது. எங்களுக்கு இருக்கிற பிரச்சனை, சரியான நேரத்திலே, அந்த வண்டியினுடைய நெம்பர், மற்ற பிரச்சனைகளை எழுதி அரசாங்கத்திடத்திலே கொடுப்பதற்கு அல்லது தருவதற்கு யாரும் முன்வராத காரணத்தால், இந்தத் தவறுகள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன என்று கூட நாங்கள் கருதுகிறோம். இருந்தாலும் கூட, காவல்துறையைச் சேர்ந்தவர்கள் மிகக் கடுமையான நடவடிக்கையை எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். சமீபத்திலே மாண்புமிகு முதல்வர் அவர்கள், இதற்கான பிரச்சினையைப் பற்றிப் பேசி இதிலே நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொல்லி, போதிய காவலர்களை நியமிப்பதற்கான நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள். அதை தான் ஒரு முறை கூட ஏற்கனவே நான் சட்டமன்றத்திலே அறிவித்திருக்கிறேன். இனி ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்ளே நடவடிக்கை மிகக் கடுமையாக இருக்கும். எல்லோரும் அதற்குத் தயாராகிக் கொள்ளவேண்டும் என்று நான் சொல்லியிருக்கிறேன்.

அப்படிப்பட்ட நடவடிக்கையை அரசாங்கம் இப்போது மேற்கொண்டிருக்கிறது. அதைத்தவிர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். தங்களுக்கு வருகிற பிரச்சினைகளை தயவுசெய்து அவ்வப்போது தரவேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



**திரு. எஸ். சிவராமன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கோட்டா முறையில், உடல் ஊனமுற்றவர்கள், ஆதி திராவிடர்கள் போன்றவர்களுக்கு பெர்மிட் கொடுப்பது சம்பந்தமாக, சென்னை மாநகரத்தில் மட்டும் தற்சமயம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அப்படி இருந்தால் கிராமப்புறங்களில் உள்ளவர்களுக்கு அரசு பெர்மிட் கொடுப்பதற்கு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி** : தலைவர் அவர்களே, ஏற்கனவே எங்கெங்கே ஆட்டோ ரிக்ஷாக்கள் ஓடிக்கொண்டிருக்கிறதோ, அந்தப் பகுதிகளில் அதிகமான எண்ணிக்கையில் ஆட்டோ ரிக்ஷாக்கள் இல்லை, இன்னும் அதிகமாக தேவையிருக்கிறது என்று கருதினால், அந்தப் பகுதியிலே மட்டும் கொடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஏற்கனவே தேவையான அளவிற்கு வண்டிகள் இருந்து, நாம் பெர்மிட் கொடுப்பது என்பது, வீணான போட்டிகளை ஏற்படுத்தி, பிரச்சினைகளை உருவாக்குவதற்கு அரசாங்கமே காரணமாக இருந்துவிடக் கூடாது என்பதற்காக இதிலே கொஞ்சம் கடுமையாக நடந்து கொள்ள வேண்டியதாக இருக்கிறது.

**திரு. ஜி. கே. ஜெ. பாரதி** : மாண்புமிகு பேரவையின் தலைநாயகர் அவர்களே, இங்கே மாருதி காரை அனுமதித்திருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மாருதி கார்களுக்கு நீங்கள் மீட்டர் வைத்திருக்கிறீர்களா? மேலும் 'ஆயிரம் கண்ணுடையாள் மாரியாள்' போன்று, சல்லடைக் கண்களாக இருக்கிற அந்த டாக்சிகளிலே ஏறுவதற்கு பயமாக இருக்கிறது. மேலும் அவர்கள் லாங் டிஸ்டன்சுக்கு போகும்போது, போவதற்கும், வருவதற்கும் பணம் கொடுக்க வேண்டும் என்று கேட்கிறார்கள், இதைத் தடுப்பதற்கு என்ன வழியை வைத்து இருக்கிறீர்கள்? ஷார்ட் டிஸ்டன்ஸ் போவதற்குக் கூட கன்சாலிடேட்டடாக கேட்கிறார்கள், இதைத் தடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாருதி கார் மட்டுமல்ல, எல்லா வண்டிகளும், அது டாக்சியாக இருந்தாலும், ஆட்டோவாக இருந்தாலும், அவைகளுக்கு மீட்டர் பொருத்தப்பட வேண்டும். இது பொதுவாக இருக்கிற ஒரு சட்டத்திட்டம். இதிலே எவ்வளவு கட்டணம் வாங்கவேண்டும் என்பதை அரசாங்கம் நிர்ணயிக்கிறது. இப்போதுகூட கட்டணத்தை உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கை அரசாங்கத்திடத்திலே வைக்கப்பட்டு இருக்கிறது. தவறாகப் பயன்படுத்தக்கூடியவர்கள், அந்த மீட்டரைப் பயன்படுத்தினாலும் சரி, மீட்டருக்கு மேலே பணம் கேட்டாலும் சரி, கீழே பணம் கேட்டாலும் சரி, அதைத் தடுத்து நிறுத்த வேண்டியது அரசாங்கத்தினுடைய கடமையாக எடுத்துக்கொள்ளவேண்டும். அதற்கு

மாண்புமிகு உறுப்பினர்கள் அவ்வப்போது, அந்த டாக்சிக் காரர்கள் இப்படிச் செய்தார்கள் என்ற குறிப்பை எங்களுக்குக் கொடுத்துவிட்டால், நடவடிக்கை எடுப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். இப்போது ஆங்காங்கே சில பயணிகள் எங்களுக்கு கம்ப்ளெயின்ட் செய்கிறார்கள். அதன் மீது நாங்கள் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். இதிலே கொஞ்சம் எல்லோரும் அக்கறைக் காட்டிச் செய்வார்களேயானால் நிச்சயமாக ஓரளவிற்கு இந்தப் பிரச்சனையத் தீர்க்க முடியும் என்று கருதுகிறேன்.

டாக்டர் அ. பொன்னுசாமி : பெருமைபெற்ற பேரவையின் தலைவர் அவர்களே, இப்போழுதெல்லாம் ஓடுகின்ற டாக்சிகள் ஹைதர் அலி காலத்து டாக்சிகளாகத்தான் இருக்கின்றன. பயணிகள் பயணம் செய்வதற்குக்கூட பயப்படுகிறார்கள். பாதசாரிகளும் கூட பயப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே இப்போது இருக்கிற அந்த டாக்சிகளை எல்லாம் நல்லமுறையிலே பழுதுபார்த்த பின்னாலேதான் சரியான முறையிலே எப். சி. செய்த பிறகுதான் ஓட்டவேண்டும் என்ற ஒரு உத்தரவை வழங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அவர்கள் பிட்னஸ் சர்டிபிக்கெட் வாங்குவதற்கு வருகிறபோது, அதிலே சம்பந்தப்பட்ட துறையிலே இருக்கிற அதிகாரிகள் கொஞ்சம் கவனமாக இருக்கிறார்கள். இருந்தாலும் கூட இந்த டாக்சி தொழிலைப் பொறுத்தவரையிலும், இன்றைக்கு யதார்த்தமாக இருக்கிற உண்மையை நாம் பேசவேண்டியது நம்முடைய நியாயம் என்று கருதுகிறேன். இன்றைக்கு அந்தத் தொழிலைப் பொறுத்தவரையில், அந்தத் தொழில் நசிந்துவிட்டது. எனவே அவர்கள் புதிய வண்டிகளைப் போட்டு, டாக்சிகளை ஓட்டி, நிச்சயமாக அதிலே வருகிற வருமானத்தை வைத்து கடனைக் கட்ட முடியாத நிலை இருக்கிறது. காரணம் போக்குவரத்துக் கழகங்களினுடைய சார்பாக போதிய அளவிற்கு, நல்ல நல்ல பேருந்துகளை மிக அதிகமான வகையில், விட்டுவிட்ட காரணத்தாலே, இன்றைக்கு டாக்சி, ஆட்டோக்களை விரும்புவதை விட, மக்கள் அதிகமாக பஸ்ஸிலே போய்விடுகிற காரணத்தால், அவர்களுக்குப் போதிய அளவிற்கு வருமானம் இல்லை என்பதை நாம் கண்கூடாகக் காணுகிறோம். எனவே இதன் காரணத்தால், நிச்சயமாக, அந்த வண்டிகளை வெளியே அனுப்பிவிடவேண்டும் என்று நினைத்தாலும் கூட, பொருளாதார சூழ்நிலையைக் கருதி அவைகளை நாம் விட்டுவிட வேண்டிய கட்டாய சூழ்நிலை இருக்கிறது. இருந்தாலும் வண்டிகளை ரோட்டிலே ஓட்டுவதற்கு தகுதியான அளவிலே வைத்துக் கொள்வதற்கான நடவடிக்கையை நாம் எடுக்கலாம்.



## அரசு பொருட்காட்சிகள்.

637—(*வினா எண்.973)—திரு.செ. செம்மலை மற்றும் திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசால் மாவட்ட தலைநகர்களில் நடத்தப்பட்டு வரும் பொருட்காட்சிகளை எல்லா மாவட்டத் தலைநகர்களுக்கும் விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்காக நடப்பாண்டில் எத்தனை மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 1985–86-ல் கூடுதலாக ஈரோட்டில் பொருட்காட்சி நடத்தப்பட்டது. 1986–87-ல் கூடுதலாக அண்ணா மாவட்டம் திண்டுக்கல்லில் பொருட்காட்சி நடத்தப்பட்டது. மேலும் நடப்பு ஆண்டில் கடலூரில் பொருட்காட்சி நடத்தலாம் என அரசு முடிவு செய்து நடத்தப்பட்டது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை இப்படி மாவட்டத் தலைநகரங்களில் நடத்தப்பட்டு வந்த இந்த பொருட்காட்சிகள் மூலம் அரசுக்கு வந்த நிகர லாபம் எவ்வளவு என்ற விவரத்தையும், சென்னை தீவுத் திடலில் நிரந்தரப் பொருட்காட்சியை அமைப்பதற்கு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் உத்தரவிட்டு இருப்பதாக அமைச்சர் அவர்கள் ஒரு முறை பேசி இருக்கிறார்கள். அப்படி தீவுத் திடலிலே அமைக்கப்படவிருக்கிற, சுற்றுலாத் துறை மூலம் அமைக்கப்படவிருக்கிற அந்த நிரந்தரப் பொருட்காட்சி எவ்வளவு பொருட் செலவிலே அமைக்கப்படவிருக்கிறது என்கின்ற விவரங்களையும், என்னென்ன அம்சங்களைக் கொண்டதாக அந்தப் பொருட்காட்சி அமைய இருக்கிறது என்கின்ற அந்த விவரங்களையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 9—2—1987 வரை இத்துறைக்குக் கிடைத்த நிகர வருமானம் 1 கோடியே 51 லட்சத்து 35 ஆயிரம் ஆகும். மொத்த வருமானம் 5 கோடியே 14 இலட்சத்து 82 ஆயிரம் ஆகும். தீவுத் திடலில் நிரந்தரமான பொருட்காட்சி அமைப்பதற்கு, சுற்றுலாத் துறை மூலம் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் சொன்னக் கருத்தை அமல் ஆக்குவதற்காக, புரட்சித் தலைவர் அவர்களே அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள், விரைவில் அதற்கான பணி துவக்கப்படும்.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத் தலைநகரங்களில் நடைபெறும் சுற்றுலாப் பொருட்காட்சிகளினுடைய நாட்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துகின்ற செயற் குறிப்பு உள்ளதா என்பதையும் அதோடு சென்னையிலே அமையவிருக்கின்ற நிரந்தரப் பொருட்காட்சியினுடைய மொத்த மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற லாபத்தின் அடிப்படையில் மாவட்டங்களில் நடத்தப்படும். பொருட்காட்சிகளினுடைய நாட்களை நாம் தற்போது உயர்த்திக்கொண்டுதான் இருக்கிறோம். தீவுத் திடலிலே அமைக்கப்போகிற நிரந்தரப் பொருட்காட்சியைப் பற்றி தனியாக வினா போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொருட்காட்சிகளை நிரந்தரமாக அமைக்கவேண்டுமென்கிற ஒரு கோரிக்கை இப்போது எழுந்து உள்ளது. சென்னையிலே, தீவுத் திடலிலே ஒரு நிரந்தர பொருட்காட்சியை அமைப்பது என்ற முடிவு உள்ளது. அது நல்லது; வரவேற்கத்தக்கது. இந்த மாநிலத்திலேயே சென்னையைத் தவிர, அடுத்தபடியாக அதிகப்படியாக பணம் கிடைக்கக்கூடிய இடங்களில் ஒன்று சேலம். அதற்கு அடுத்தபடியாக கோவை நகரம் இருக்கிறது. கோவையிலே இந்த முறை பொருட்காட்சியை நீங்கள் திறந்து வைக்கிற காலத்தில் ஒரு முக்கியமான கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதிகப்படியான பணம் அங்கே வசூல் ஆகக்கூடிய நிலை இருப்பதால், நிரந்தரப்பொருட்காட்சி ஒன்றை கோவையிலே ஏற்படுத்த வேண்டும். அதற்கு கட்டிடங்கள் கட்டுவதற்கு, இன்வெஸ்ட்மென்ட் செய்வதற்கு சில இண்டஸ்டிரியல் ஹவுஸஸ், சில தொழிற்சாலை அதிபர்கள் முன் வரலாம் என்ற நிலை இருக்கிறது. இதை அமைச்சர் அவர்கள் கவனத்தில் வைத்து செயல்படுத்த முன் வருவாரா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ரஷ்யாவில் உள்ளதைப் போல நிரந்தர 'எக்கனாமிக் எக்ஸிபிஷன் ' என்று சொல்லுவது போல நடத்துவதற்காக முதன் முதலில் சுற்றுலாத் துறையின் மூலம் தமிழ்நாட்டின் தலைநகரத்தில் நிரந்தரப் பொருட்காட்சி அமைக்க திட்டம் தீட்டப்பட்டு அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. மாவட்டங்கள் தோறும் அதுமாதிரி அமைப்பதற்கு கோவை பொருத்தமான இடமானால் முதல்வரை கலந்துகொண்டு அங்கே தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எப். எம். இராசரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் சிறப்பு வாய்ந்த சுற்றுலா மையங்களாக விளங்கிவரும் கன்னியாகுமரி, குற்றாலம், மதுரை போன்ற பல்வேறுபட்ட சுற்றுலா மையப் பகுதிகளில், வெளிமாநிலங்களிலிருந்து வருகின்றவர்களையும், வெளிநாடுகளிலிருந்து வருகின்றவர்களையும் கவருகின்ற வகையில் 'சீசன் ' சமயங்களிலாவது சுற்றுலா பொருட்காட்சிகளை அரசு அமைக்கின்ற ஆலோசனை உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.



(முற்பகல் 10–40)

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ஒவ்வொரு மாவட்டமாகச் சுற்றுலா பொருட்காட்சி நடத்தப்படுவதற்கு திட்டமிட்டு அது செய்தி விளம்பர இலாகா மூலம் மாவட்டங்கள் தோறும் பொருட்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. இதுவரையில் நடத்தப்படாத மாவட்டத்திலே நடத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. துரை கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே சுற்றுலாப் பயணிகளை கவரக் கூடிய பல்வேறு வசதி வாய்ப்புகள் அங்கே இருந்தாலும்—தொன்றுதொட்டு நாள்தோறும் நூற்றுக்கணக்கான வாகனங்களில் வெளிநாட்டவரும், அண்டை மாநிலத்தவரும் வந்து கொண்டிருக்கிறார்கள். அப்படி வந்து கொண்டு இருப்பவர்களை தஞ்சை மாவட்டத்தினுடைய தலைநகரில், தஞ்சை பகுதியில் முழுமையான அளவில் திருப்திப்படுத்தக்கூடிய அளவில் அங்கே எந்த விதமான வாய்ப்பும் வசதியும் இல்லாத காரணத்தால் அங்கே அவர்களை திருப்திப்படுத்தக்கூடிய அளவுக்கு இந்த பொருட்காட்சியையாவது அமைத்து அவர்களே கவரக்கூடிய அளவுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதேனும் ஏற்பாடு செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்புகிறபடி அங்கே இலாபகரமாக பொருட்காட்சி நடத்தப்படுவது இருக்குமானால் வருகின்ற ஆண்டில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

### வேடச்ந்தூர் வட்டம் கோவிலூர் தட்சிணதிருப்பதி வெங்கடாசலபதி திருக்கோயில்.

638—(*வினா எண். 3390)— மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் வட்டம், கோவிலூரில் உள்ள தட்சிண திருப்பதி வெங்கடாசலபதி திருக்கோயிலுக்கு சொந்தமான கட்டிடங்கள், நிலங்களை தனிப்பட்ட நபர்கள் குத்தகைக்கு விட்டு பணம் வசூலித்து வருகிறார்கள் என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதைத் தவிர்க்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) வேடசந்தூர் வட்டம், கோவிலூரில் உள்ள தட்சிண திருப்பதி வெங்கடாசலபதி திருக்கோயிலுக்கு சொந்தமான அசல் பட்டா உள்ள நிலங்களோ கட்டிடங்களோ இல்லை. இக்கோயில் பெயரில் உள்ள, ஆனால் அசல் பட்டா இல்லாத 13.31 ஏக்கர் நிலம், 6 தனிப்பட்ட நபர்களின் ஆக்கிரமிப்பில் உள்ளது.

(ஆ) இந்நிலங்களை ஆக்கிரமிப்புத்தாரர்களிடமிருந்து மீட்டு, சுவாதீனம் பெற நீதிமன்றத்தில் வழக்குகள் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்)** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நகரத்திலேயே இந்த கோவில் நிலத்திலே கடைகளை நிறைய கட்டியிருக்கிறார்கள். அவரவர்கள் வாடகையை தனிப்பட்டவர்கள் வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். எந்த அடிப்படையில் இந்த பதில் வந்தது என்ற விவரம் தெரியவில்லை. அதேபோல் கோவில் நிலங்களை தனிப்பட்டவர்கள் ஆக்கிரமித்து இருக்கிறார்கள். அவர்கள்மீது நடவடிக்கை எடுத்து 2, 3 ஆண்டுகள் ஆகியும் இன்னும் முடிவுறாமல் இருக்கிறது. எனவே, கோவிலூரில் உள்ள அந்த கோவிலுக்கான பணிகளைச் செய்வதற்கு இந்த அறநிலையத் துறை ஏதாவது ஏற்பாடு செய்து இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர்கள் குடியிருப்புக்கு என 91 சென்ட்டும், சட்டம் 8(1)—ன் கீழ் பிறருக்கு பட்டா வழங்குவதன் மூலம் 51 ஏக்கர் 66 சென்ட்டும் ஏற்கனவே வழங்கப்பட்டிருக்கின்றன. அப்பீலில் உள்ள நிலங்களை மீட்பதற்கு உள்ள வழக்குகள் திண்டுக்கல் மாவட்ட முன்சீப் கோர்ட்டில் இருக்கின்றன. அதை துரிதப்படுத்தி பரிகாரம் காண நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கோவில் பெயரில் பட்டா இல்லாத நிலங்களை கோவில் பெயருக்கு பட்டா மாற்றம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதுவரையில் மேற்படி கோவிலுக்கு எந்தவிதமான வருமானமும் இல்லாததால் பூஜைகள் எதுவும் நடைபெறவில்லை. ஆகவே நலிவு அடைந்த கோவிலுக்கு உதவும் திட்டத்தின்கீழ் பூஜைகள் நடைபெற முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிப்பட்டவர்கள் ஆக்கிரமிப்பிலிருந்து அந்த நிலங்களை பெறுவதற்கு சிவில் நீதிமன்றத்தில் வழக்குகள் தொடர்ந்து இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள்



சொன்னார்கள். அந்த கோவிலுக்கு ஒரு பைசா கூட வருமானம் இல்லை. அந்த கோவிலால் இந்த வழக்கை நடத்துவது என்பது மிகவும் கஷ்டமான காரியம். அப்படி பணம் இருந்தாலும் கூட இந்த கோவிலூரில் உள்ள அந்த கோவிலுக்கு மட்டும் அல்ல தமிழ் நாட்டில் உள்ள பல்வேறு கோவில் நிலங்கள், கோவில் சொத்துக்கள் இன்றைக்கு இப்படி சிவில் நீதிமன்றங்களில் 15 ஆண்டுகள் 10 ஆண்டுகள் நிலுவையில் இருப்பதால், இவ்வாறு நீதி மன்றத்திற்கு போவதே தவறு என்ற வகையில் நீதி மன்றத்திற்குப் போனால் துறை பயப்பட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே தமிழ்நாட்டில் இருக்கிற அறநிலையங்கள் சம்பந்தப்பட்ட கோவில்கள், சம்பந்தப்பட்ட குத்தகை இப்படி எல்லா வழக்குகளையும் தீர்ப்பதற்கு என, அறநிலையத் துறையின் வழக்குகளை தீர்ப்பதற்கு என ஒரு தனி ட்ரிப்யூனல் அமைக்க அரசு ஏதாவது பரிசீலனை செய்யுமா என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட வாரியாக உள்ள பல வழக்குகளை நடத்தவும், சென்னை மாநிலத்தின் தலைநகரில் உள்ள வழக்குகளை ஹைகோர்ட் அல்லாத மற்ற கோர்ட்டுகளில் உள்ள வழக்குகளை நடத்தவும், ஹைகோர்ட்டில் உள்ள வழக்குகளை நடத்தவும் தனியாக வழக்கறிஞர்களை நியமிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

**திரு. வை. பாலச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உள்ள திருக்கோவில்களுடைய நிலங்கள் ஆக்கிரமிப்பாளர்கள் கையில் இருப்பது போக அந்த நிலங்கள் யாரிடம் உள்ளன என்று தெரியாமல் பல்வேறு ஆலயங்களின் நிலங்கள் இருந்துக் கொண்டு வருகின்றன. இந்த ஆலய நிலங்கள் ஆலயத்திற்குச் சொந்தமானதா? அல்லது எந்த் எந்த நிலங்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு இருக்கின்றன என்பதைக் கண்டறிவதற்கு வட்ட ஆட்சியர் போன்றவர்கள் தலைமையில் ஒரு அமைப்பு ஏற்பட்டு செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. இந்த அமைப்பினுடைய பணி சிறப்பாக இல்லாத காரணத்தால் திருக்கோயில் வளர்ச்சியில் நம்பிக்கையும், அதில் ஆர்வம் கொண்டவர்களையும் கொண்டு மாவட்டந்தோறும் மக்கள் குழு என்ற பெயரில் அல்லது இந்து மக்கள் குழு என்ற பெயரில் குழு அமைத்து அந்த நிலங்களை கண்டு அறிவதற்கும் அதன் மேல், மேல் நடவடிக்கை என்ன எடுக்க வேண்டும் என்பதை அரசுக்கு ஆலோசனை கூறவும் ஏற்பாடு செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கூட இந்து சமய ஆட்சி அறநிலையத் துறையின் தலைமை அலுவலகத்தில் கோவிலுக்குச் சொந்தமான நிலங்களை கண்டுபிடிப்பதற்கு என ஒரு தனி பிரிவு இயங்கிக் கொண்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தகவல் கொடுத்தால் அந்த நிலங்களை அடையாளம் கண்டு பிடித்து மீட்க நடவடிக்கை எடுக்கப்படும்.

[1987 மே 8

தென்னாற்காடு மாவட்டம் திருவக்கரை அருள்மிகு சந்திரமௌலீஸ்வரர் ஆலயம்.

639.—(*வினா எண் 9355)—திரு. துரை அன்பரசன்: மாண்புமிகு சுற்றுலா மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் திருவக்கரையில் உள்ள அருள்மிகு சந்திரமௌலீஸ்வரர் ஆலய இராசகோபுரத்தை புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) தென் ஆற்காடு மாவட்டம், வானூர் வட்டம் திருவக்கரை அருள்மிகு சந்திரமௌலீஸ்வரர் திருக்கோயில் இராஜ கோபுரத்தை புதுப்பிக்க இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத் திருக்கோயிலின் இராஜகோபுரம் புதுப்பித்தல் மற்றும் இதர திருப்பணி வேலைகளை மேற்கொள்ள ரூ. 4,00,000-க்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு மேற்படி வேலைக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது. விரைவில் அதற்கு அங்கீகாரம் வழங்கி, வேலையைத் தொடங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும்.

திரு. துரை அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவக்கரையில் இருக்கின்ற அருள்மிகு சந்திர மௌலீஸ்வரர் ஆலயம் சோழர் காலத்தில் கற்றுளியாக்கப்பட்ட ஒரு புராதனமான திருக்கோயில் என்று வரலாறுகள் சொல்கின்றன. அப்படிப்பட்ட திருக்கோயில் இராஜகோபுரம் சீர்கெட்டு, அதைச் சுற்றியிருக்கின்ற மதிற்சுவர்கள் சிதிலமடைந்திருக்கிறது. ஆகையால் இராஜகோபுரத்தைச் சீரமைக்க அறநிலையத்துறை பணிகளை மேற் கொண்டுள்ளது என்று சொல்கின்ற மாண்புமிகு அமைச்சரவர்கள் அத்தோடு அந்தச் சுற்றுப் புற மதிலையும் சீர்படுத்தித் தர முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, ராஜகோபுரமும், அதையடுத்து மற்ற திருப்பணிகளும் அந்த மதிப்பீட்டில் அடங்கியிருக்கிறது.

திரு. துரை அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவக்கரை அருள்மிகு சந்திரமௌலீஸ்வரர் ஆலயம் சங்கராபரணி ஆற்று ஓரத்திலே அமைந்திருக்கின்ற ஒரு திருக்கோயிலாகும். யாத்திரிகர்கள் வருகின்றபோது அந்த சங்கராபரணி ஆற்றின் அக்கரையிலே வாகனங்களை விட்டுவிடுகிறார்கள். ஏறத்தாழ அந்தக் கோயிலுக்கு 2 கிலோ மீட்டர் நடந்து வர வேண்டியிருக்கின்ற காரணத்தால் பயணிகள், யாத்திரிகர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே அது ஒரு சிறந்த ஸ்தலமாக



1987 மே 8]

இருப்பதோடு அந்த சந்திரமௌலீஸ்வரர் ஆலயத்திற்குள்ளே பத்ரகாளிக்கு என்று ஒரு கோயிலும் உள்ளது. அந்த கோயிலுக்கு பௌர்ணமி நாளில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து போகிறார்கள். அவர்களுடைய நன்மையைக் கருதி, அந்த சங்கராபரணி ஆற்றில் ஒரு தரைப்பாலம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் சம்பந்தப்பட்ட துறைக்கு பரிந்துரை செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடம் உறுப்பினர் அவர்கள் வேண்டுகோள் விடுக்க வேண்டும். நாங்களும் அதற்கு உறுதுணையாக இருப்போம்.

பால் விநியோகத்திற்கு வயர்லஸ் கருவி.

640.—(*வினா எண் 7253)—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பால் விநியோகத்தை சீர்படுத்துவதற்காக வயர்லஸ் கருவிகளைப் பயன்படுத்தும் திட்டம் எப்போது முதல் செயல்படும்?

(ஆ) இந்த திட்டம் எந்தப் பகுதிகளுக்கு விரிவுபடுத்தப்படும்?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) 1985 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் முதல் வயர்லெஸ் கருவிகள் பயன்படுத்தும் திட்டம் சென்னையில் செயல்பட்டு வருகிறது.

(ஆ) இத்திட்டம் அம்பத்தூரிலும் நந்தனத்திலும் அமுலில் உள்ளது. மேலும் மாதவரத்திலும் நிலையான நிலையம் ஒன்று அமைக்க ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. இரண்டாவது பால் பெருக்குத் திட்டத்தின்கீழ் தேசிய பால் பண்ணை வாரியத்தின் கொள்கையின் அடிப்படையில் பால் பெருக்குத் திட்டத்தின்கீழ் வரும் ஒன்பது மாவட்டங்களில் (very high frequency) செயல்பட ஒரு திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத் திட்டத்தால் ஏற்படும் பலன் என்ன? இதற்காக அரசு செலவழிக்கிற தொகை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, தானியங்கி பால் வழங்கு நிலையங்கள் மற்றும் பால் ஏற்றிச் செல்கின்ற லாரிகள் இவைகளில் தவறுகள் நடக்காமல் இருப்பதற்கும், குற்றங்கள் நடந்தால் உடனுக்குடன் கண்டு பிடிப்பதற்கும் இது பயன்படுகிறது.

சங்கராபுரம் தொகுயில் கல்வராயன் மலையில் ஆரம்ப சுகாதார நிலையம்

641—(*வினா எண் 3995)—திரு. சோ. கலிதீர்த்தான்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியில் கல்வராயன் மலையில் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது திட்டம் துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இந்தத் திட்டம் 1987–88 ஆம் ஆண்டில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1987–88 ஆம் ஆண்டுத் திட்டத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கப்படும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் தற்சமயம் வெள்ளிமலை போன்ற பகுதியிலே அரசாங்க மருந்தகம் என்று சொல்லி ஆரம்பித்து டாக்டர்கள் போடப்பட்டிருக்கிறார்கள். ஆனால் டாக்டர்கள் அங்கு செல்வதேயில்லை. அந்த பகுதிகளிலே அதிகமான மருத்துவமனைகள் கிடையாது. எனவே, உடனடியாக அந்த மலைவாழ் மக்களுக்காக மருத்துவர்களை நியமித்து, அங்கேயே தங்கி சிகிச்சை செய்வதற்கு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-50)

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடி மக்களுடைய நலத்தைக் கருதி அங்கே பணிபுரிகின்ற மருத்துவர்களுக்கு தங்குவதற்காக குவார்ட்டர்ஸ் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி அதில் அவர்கள் தங்கவில்லை என்று புகார் வருகின்றபோது, அவர்கள் அங்கே தங்குவதற்கும், அவர்கள் அங்கேயிருந்து பணிபுரிவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

சேலம் மாவட்டத்தில் மத்திய சிறப்பு நிதி உதவி திட்டம்.

642. (*வினா எண். 4616)—திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) 1985–86 ஆம் ஆண்டுக்கு ஆதி திராவிட நலத்துறை மூலம் சேலம் மாவட்டத்தில் மத்திய சிறப்பு நிதி உதவி திட்டத்தின்கீழ் புதுச்சத்திரம் ஒன்றியத்தினை எடுத்துக்கொள்ள அரசு பரிசீலனை செய்யுமா ?





(ஆ) ஆம் எனில், பணியினை எப்போது செயல்படுத்தும்?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : 1985-86 ஆம் ஆண்டிற்கான ஒன்றியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, சேலம் மாவட்டத்தில் சங்கரி ஒன்றியம் மத்திய சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டதால், புதுச்சத்திரம் ஒன்றியம் மேற்கண்ட திட்டத்தின் கீழ் 1985–86 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. 1986–87 ஆம் ஆண்டிற்கான கூட்டமைப்புத் திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டத்தில் நாமக்கல் ஒன்றியம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. மேலும், கூட்டமைப்புத் திட்டத்தில்தான் (Clus er Developme.t Programme) புதுச் சத்திரம் ஒன்றியம் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பு உள்ளடக்கத் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டுமென்ற நியதி இல்லை. அங்குள்ள ஆதி திராவிடர்கள் பயன்பெறும் வகையில் என்னென்ன திட்டங்களைச் செயற்படுத்தலாம் என்று ஆராய்ந்து தக்க முன் மொழிவுகளை விரைவில் அரசுக்கு அனுப்பி வைக்குமாறு சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

திரு. சி. சிவப்பிரகாசம் : பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற ஆண்டுகளில் இந்த ஒன்றியத்தை சிறப்பு நிதியுதவி திட்டத்தின் கீழ் சேர்த்துக்கொள்ள அரசு உறுதிமொழி அளிக்குமா ?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ஆட்சியாளர், அங்கே பெரும்பாலும் ஆதி திராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்த வர்கள் ஆயிரம் பேர்கள் அங்கே இந்த திட்டத்திலே பயன்பெறுகின்ற அளவிலே இருக்கின்ற போது க்ளஸ்டர் புரோக்ராமில் அவர்களைத் தேர்ந்தெடுத்து ஒரு ஆய்வு அனுப்பும்போதுதான் அதை சேர்த்துக்கொள்கிறோம். அப்படி அவர்கள் அனுப்புகின்றபோது அரசு அதை சேர்த்துக்கொள்ளும்.

திரு. சி. சிவப்பிரகாசம் : தலைவர் அவர்களே, இந்த மத்திய சிறப்பு நிதித் திட்டத்தின் கீழ் ஆதி திராவிடர் மக்களுக்கு எந்தெந்த துறையின் மூலம், என்னென்ன பணிகளுக்கு , என்னென்ன திட்டங்களுக்கு உதவி அளிக்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : தலைவர் அவர்களே, மத்திய அரசு திட்டத்தின் கீழ் நேபாள தறியும் அதைப்போலவே அங்கே மலையிலே வாழ்கின்றவர்களுக்கு சிறுதொழில் செய்வதற்கு வேண்டிய கைத்தறிக் கூடங்கள் அமைத்துக் கொடுத்தும் இப்படி பல திட்டங்கள் வாயிலாக அவர்களுக்கு தறிகளை அளித்து அங்கே தேர்ந்தெடுத்த இடங்களில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, அந்த திட்டங்களைப்பற்றி தனிக் கேள்வி கேட்கின்றபோது விரிவான பதில் சொல்கிறேன்.

[1987 மே 8

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, க்ளஸ்டர் திட்டத்தின் மூலமாக ஆயிரம் ஹரிஜனக் குடும்பங்களை முன்னுக்கு கொண்டு வருவதற்காக திட்டம் போட்டிருக்கிறோம். ஆனால் நேபாளத் தறி போடக்கூடிய 10 இடங்களிலே நாம் ஆங்காங்கே இந்த கூடங்கள் கட்டி அந்த நூற்பு வசதியை செய்து கொடுப்பதற்கு வழி செய்கின்றோம். இவைகளைக்கூட மாற்றக்கூடிய அளவிலே மாற்றி, ஒரே இடத்தில் அல்லது இரண்டு இடங்களிலே 500 பேர்களுக்கு வேலை அளிக்கக்கூடிய அளவில் அவர்களுக்கு இந்த நூற்பு ஆலைகளை ஆரம்பிப்பதற்கான ஏற்பாட்டைச் செய்ய முடியுமா ? இந்தப் பணம் கூட அன்லிமிடெட். எவ்வளவுக்கு நாம் திட்டம் போட்டு அனுப்புகிறோமோ அவ்வளவிற்கு பணம் கொடுக்கிறார்கள் என்று சொல்கிறார்களே அவையெல்லாம் உண்மையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன யோசனை நல்ல யோசனை. இருந்தாலும் அங்கே ஒரே இடத்தில் ஆதிதிராவிட மக்கள் அதிகமாக இருக்கவேண்டும். 500 பேர்கள் ஒரே இடத்தில் கிடைப்பது அரிதாக இருக்கும். அப்படி அதிகமாக இருக்கின்ற இடத்தில் இந்தத் தறிகளை ஆரம்பிக்கின்றோம். பணத்தைப் பற்றிச் சொன்னார்கள். அதைப்பற்றிய குறிப்பு என்னிடம் இல்லை.

திரு. கோ. வீரய்யன் : தலைவர் அவர்களே, சிறப்பு நிதி உதவி திட்டத்தின் கீழ் மாவட்டத்தில் ஆண்டுக்கு ஒரு ஒன்றியத்தை எடுத்துக்கொள்வதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். 1987–88 ஆம் ஆண்டுக்கு எந்தெந்த மாவட்டத்தில் எந்தெந்த ஒன்றியங்கள் எடுக்கப்பட இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : தலைவர் அவர்களே, 1986–87 ஆம் ஆண்டுக்கு செங்கற்பட்டு மாவட்டம் திருப்போரூர், வட ஆற்காடு மாவட்டம் தரணம்பட், தர்மபுரி மாவட்டம் ஊத்தங்கரை, சேலம் மாவட்டம் நாமக்கல், பெரியார் மாவட்டம் குண்டாடம், கோவை மாவட்டம் குடிமங்கலம், நீலகிரி மாவட்டம் கூடலூர், தென்னாற்காடு மாவட்டம் காட்டுமன்னார்கோயில், திருச்சி மாவட்டம் கடவூர், தஞ்சை மாவட்டம், சீர்காழி, புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல், இராமநாதபுரம் மாவட்டம் நாயனார் கோயில், மதுரை மாவட்டம் சேடப்பட்டி, திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டம் மானூர், கன்னியாகுமரி மாவட்டம் ராஜக்காமங்கலம், அண்ணா மாவட்டம் தோப்பம்பட்டி, காமராஜர் மாவட்டம் வத்திராயிருப்பு, பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் மானாமதுரை போன்றவை ஆகும்.



1987 மே 8]

திருச்சி மாவட்டம் உப்பிலியாபுரம் தொகுதி, மலைப்பகுதியில் சாலைகள்.

643— (*வினா எண். 7316)—திருமதி இரா. சரோஜா : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் உப்பிலியாபுரம் தொகுதியில் மலைப் பகுதி கிராமங்களுக்கு சாலை போட அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) திருச்சி மாவட்டம் உப்பிலியாபுரம் தொகுதிக்குட்பட்ட பச்சைமலைப்பகுதியில் பழங்குடியினர் பகுதி முன்னேற்றப் பணிகள் துணைத் திட்டத்தின் மூலம் சோபனாபுரம் முதல் டாப் செங்காட்டுப்பட்டி வரை சாலை மேம்பாடு செய்தல் மற்றும் செங்காட்டுப்பட்டி முதல் மூலக்காடு மணலோடை வழியாக செம்புளிச்சாம்பட்டிக்கு சாலை மேம்பாடு செய்தல் ஆகிய இருவேலைப் பணிகளுக்கு ஆணை வழங்கப்பட்டு மேற்படி சாலை வேலைப்பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. 1987–88 ஆம் ஆண்டு பழங்குடியினர் மேம்பாட்டுத் துணைத் திட்டத்தில் டாப் செங்காட்டுப்பட்டி முதல் தேனூர் வரை சாலை அமைத்து மேம்பாடு செய்யும் வேலை சேர்க்கப்பட்டுள்ளது. இவை நடப்பு ஆண்டில் செயல்படுத்தப்படும்.

திருமதி இரா. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1977 ஆம் ஆண்டு முதல் 1986 ஆம் ஆண்டுவரை பச்சைமலை சாலைக்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது? எவ்வளவு தொகை செலவிடப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1977 ஆம் ஆண்டிலிருந்து 1986 ஆம் ஆண்டு வரை பழங்குடி மக்களுடைய நலத்திற்காக, அந்த மக்களுக்கு பாதை வசதி செய்து கொடுப்பதற்கு தமிழக அரசால் 14 கோடியே 98 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிலே 380 கிலோமீட்டர் தூரம் சாலை அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும் என்று அதிலே 12 பாதைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மீதிப்பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

திருமதி இரா. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் பச்சைமலையில், உப்பிலியாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் சோபனாபுரம் முதல் டாப் செங்காட்டுப் பட்டி வரையும், துறையூர் ஒன்றியத்தில் மூலக்காடு முதல் செம் புளிச்சாம்பட்டி வரையிலும் செல்லக்கூடிய சாலையைத் தார் சாலையாக அமைத்துக் கொடுக்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடியினர் நலத் திட்டத்தின்கீழ், நிதிநிலைமைக்கேற்ப அது செயல்படுத்தப்படும்.

திருமதி தா. இராசாம்பாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பச்சைமலைப் பகுதியில், என்னுடைய தொகுதியில் 32 கிராமங்கள் இருக்கின்றன. அதில் கூடமலை யிலிருந்து நரிப்பாடிக்கு ஒரு சாலை ஏற்கனவே 6 கிலோ மீட்ட ருக்கு அமைக்கப்பட்டுள்ளது. ஆனால், அந்தச் சாலையில் மக்கள் ஏற்கனவே நடந்து சென்று கொண்டு இருந்த நிலை மாறி அவர்கள் இன்றைக்கு நடந்துகூட செல்ல முடியாத நிலையில், முரம்பைக் கொட்டி, அவர்கள் சைக்கிளிலும் செல்லமுடியாத நிலை இருக்கிறது. அதை மீண்டும் சீர்படுத்தி, அதன் குறுக்கே உள்ள ஓடைகளைச் சரி செய்து கொடுக்க மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அரசு நடைமுறைப் படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலை பற்றிய விவரம் என்னிடம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடம் எழுதிக் கொடுக்கின்றபோது அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

**தனியார் தொழிற்சாலைகளில் ஆதி திராவிடர்களுக்கு இட ஒதுக்கீடு.**

644—(*வினா எண் 9257)—திருமதி டி. யசோதா : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா——

(அ) தனியார் தொழிற்சாலைகளில் ஆதி திராவிடர்களுக்கு வேலை வாய்ப்பில் 18 சத விகிதம் இட ஒதுக்கீடு செய்யப்படு கிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரிஜன மக்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பதிலே— தனியார்கள் நடத்தக்கூடிய தொழிலுக்கும் அரசாங்கம் கடனுதவி செய்கிறது. அரசாங்கம் லைசென்சு கொடுக்கிறது— மத்திய மாநில அரசுகள் கொடுக்கின்றன. அப்படி இருக்கும்போது ஏன் நாம் 18 சதவீதம் வேலை கொடுத்துத் தான் தீரவேண்டும் என்று உத்தரவு போடக்கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசைப் பொறுத்தவரையில், அரசுத் துறைகள் மூலமாக 18 சதவிகித வேலை கொடுக்க வேண்டும் என்று எல்லோருக்கும் தாக்கீது அனுப்பப்பட்டிருக் கிறது. அதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுடைய தலைமையில் ஒரு குழு சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறது. தனியார் நிறுவனங்களைப் பொறுத்தவரை யில் அண்மையில் தனியார் நிறுவனங்களுக்கு, தொழில் அதிபர் களுக்கு ஒரு சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறோம்— 18 சதவிகிதம் அங்கே வந்து சேர்கிறவர்களுக்கு— ஆதி திராவிடர்களுக்கு முன் னுரிமை கொடுக்கப்படவேண்டும் என்று சுற்றறிக்கை அனுப்பி அதன் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**சமூக நல நிறுவன இல்லங்களில் தங்கி படிக்கும் மாணவ மாணவிகளின் சாப்பாட்டுக் கட்டணம்.**

645.—(*வினா எண் 12337) திரு. க. பாரமலை: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சமூக நல நிறுவனங்கள் நடத்தும் மாணவ மாணவிகள் இல்லங்களில் தங்கி படிக்கும் மாணவ மாணவியர்க்கு வழங்கப் படும் சாப்பாட்டுக் கட்டணத்தை (போர்டிங் கிரேண்ட்ஸ்) உயர்த்திக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி நலத்துறை பிற்பட்டோர் நலத்துறையின்கீழ் நடத்தப்படும் தனியார் விடுதி களுக்கு அளிக்கப்படும் உணவு மானியத்தை உயர்த்தும் செயற் குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளது.

திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது வருகின்ற 1987—88 ஆம் ஆண்டிலேயே அமல் நடத்தப்படுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதித்துறை இசைவிற்கு அனுப்பியபோது 1986–87 ஆம் நிதியாண்டு முடிவு பெறும் தருவாயில் உள்ளதால், அடுத்த நிதியாண்டில் 1987–88-ல் அதை எடுத்துக் கொள்ளலாம் என்று அங்கே சொல்லி இருக்கிறார்கள். ஆகவே 1987–88 இல் அது எடுத்துக்கொள்ளப்படும்.

(முற்பகல் 11–00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

தென்னாற்காடு மாவட்டம், சிதம்பரம் அரசு நந்தனார் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி.

646—(வினா எண் 12625) : திரு. சா. ஜெயச்சந்திரன், திரு. கே. ஆர். கணபதி, திரு. கு. தமிழரசன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) தென்னாற்காடு மாவட்டம், சிதம்பரம் அரசு நந்தனார் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் (பாலிடெக்னிக்) தொழில் நுட்ப பாடங்களை பயிற்றுவிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்த உள்ளது?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சா. ஜெயச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ''இல்லை'' என்று பதில் சொன்னார்கள். சிதம்பரம் நந்தனார் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பாலிடெக்னிக் பயிற்சிக் கூடம் அமைப்பதற்காக அந்தப் பகுதியில் உள்ள நந்தனார் கல்விக் கழகத்திற்குச் சொந்தமாக 100 ஏக்கர் நிலம் இருக்கிறது. அதுவும் காட்டுமன்னார் கோயில் தாலுக்கா கள்ளிப்பாடி கிராமத்திலேயே உள்ளது. எனவே அந்த கிராமத்தில் நிலம் இருக்கிற காரணத்தால் அந்த நிலத்தைப் பயன்படுத்தி பாலிடெக்னிக் அமைக்கலாம், எனவே அரசு இதை மீண்டும் ஒருமுறை பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் 1986 ஜூலையில் எழுதிய ஒரு கடிதத்தில் அதைக் குறிப்பிட்டிருக்கிறார்—அதாவது அந்தப் பகுதியில் ஒரு தொழிற்



கூடம் அமைக்க வேண்டும் என்று—அதன் காரணமாகத் தான் நானும் ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநரும், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநருக்கு ஒரு செயற்குறிப்பு அனுப்பப்பட்டிருக்கிறது. அதன்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. கே. ஆர். கணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்களின் அறிக்கையின்படி அங்கே நந்தனார் கல்விக் கழகம் மூலம் தொழிற் பயிற்சிப்பள்ளிக்கு ஒரு செயற்குறிப்பு அனுப்பப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் இங்கே கேட்கிறபோது இதே மன்றத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ''நிச்சயமாக அமைக்கப்படும்'' என்று உறுதி தந்தார்கள். மேலும் சுமார் 100 ஏக்கர் நிலமும் அதனுடைய டிரஸ்டும் அங்கே இருக்கிற காரணத்தால் மறைந்த பெரியவர் திரு. சகஜானந்தா அவர்களின் பெயரில் அதை அமைக்க வேண்டுமென்றும் அதையும் இந்த ஆண்டே மறு பரிசீலனை செய்து இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அரசால் அமைக்கப்படுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : அது பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. கூடிய விரைவில் நிதி நிலைமைக்கு ஏற்ப ஆரம்பிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உடுக்குறியிட்ட வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

ஆ. உடுக்குறியிடாத வினாக்கள்

சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் தயாரித்தல்.

1—வினா எண் 104—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சூரிய ஒளியில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டத்தினை ஊக்குவிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

விடை—

தமிழ்நாடு அரசு இதுவரை, சேலம், தென்னாற்காடு ஆகிய மாவட்டங்களில் 20 மலைவாழ் கிராமங்களுக்கு (5 கிராமங்கள் 1983–84-லும், 15 கிராமங்கள் 1984–85லும்) சூரிய ஒளி

மின் சக்தி (சோலார் போட்டோ வோல்டேயிக் அமைப்பு) மூலம் தெரு விளக்குகளுக்கு மின்சக்தி அளித்துள்ளது. இதற்கான செலவுகளை மத்திய மாநில (தமிழ்நாடு) அரசுகள் ஏற்றுள்ளன.

தமிழக அரசு விளம்பரத்திற்காகவும் தஞ்சாவூர் மாவட்டத்தில் 10 சூரிய ஒளி மின் சக்தி மூலம் நீரிரைக்கும் பம்புகள் 10 விவசாயிகளின் நிலங்களில் நிறுவ திட்டமிட்டுள்ளது. இதற்கான செலவிற்கு மத்திய அரசு (டி. என். இ. எஸ்.) 88 சத விகிதத்திற்கு மேல் மானியமாக வழங்கியுள்ளது.

**சரபங்கா ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல்.**

2—வினா எண் 178—திரு. செ. செம்மலை : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், முத்துநாயக்கன் பட்டிக்கும் புதூர்—காடம்பட்டிக்கும் இடையில் சரபங்கா ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பணி துவங்கப்படும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) கோவை வட்டம் நெடுஞ்சாலைத்துறை கண்காணிப்பு பொறியாளரால் தொழில் நுட்ப அங்கீகாரம் விரைவில் வழங்கப்பட்டு பணி ஆரம்பிக்கப்படும்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக உதவிப் பேராசிரியர்கள் ஊதியம் பற்றிய கோரிக்கை.**

3—வினா எண் 210—திரு. மா. சின்னராசு : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர்கள் ( Asst. Professors ) தங்களது சம்பளத்தை ரூ. 1,100 என்று நிர்ணயிக்க கோரிக்கை விடுத்துள்ளார்களா ?





(ஆ) இதன் மீது அரசு எடுத்துள்ள முடிவு என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மேற்படி கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

**ஊனமுற்றோர்க்கு கல்வி தொழில் வாய்ப்பு அளிக்கும் சிறப்பு திட்டம்**

4—வினா எண் 766—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு சத்துணவு, சமூக நலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் ஊனமுற்றோர்க்குக் கல்வி, தொழில் வாய்ப்பு, தொழில் வாய்ப்பில் நிரந்தரம் போன்றவைகளை நிறைவேற்ற அரசு ஏதேனும் சிறப்பு திட்டம் வகுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) தமிழக அரசு ஊனமுற்றோர் நலனுக்காக பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது. ஊனமுற்றோர் மறுவாழ்வுக்கென கல்வி, குறுகிய காலப்பயிற்சி, வேலை வாய்ப்பு, சுய வேலை வாய்ப்பு, பொருளாதார உதவி ஆகியவைகளுக்காக பல திட்டங்களைத் தீட்டி நடைமுறைப்படுத்தி வருகிறது. இத்திட்டங்களில் முக்கியமாக மருத்துவ வசதி, கல்வி வசதி அளித்தல், வாழ்க்கைத் தொழில் பயிற்சி பொருளாதாரம் மற்றும் சமுதாய மறுவாழ்வு போன்றவை அடங்கும்.

**நத்தம் தொகுதியில் குடிநீர் பிரச்சினை போக்க ஆழ் குழாய்கள் அமைக்கும் திட்டம்.**

5—வினா எண் 1105—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியம், செந்துறை ஊராட்சியில் உள்ள ஊர்களில் ஆழ்குழாய்கள் அமைத்துக் குடிநீர் பிரச்சினையை தீர்க்க அரசிடம் திட்டம் ஏதும் உள்ளதா ?

விடை—

செந்துறை ஊராட்சியில் உள்ள மொத்தம் 16 குடியிருப்புகளில் 12 குடியிருப்புகளில் கைப்பம்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. மீதமுள்ள 4 குடியிருப்புகளில் உள்ள பொதுக் கிணறுகளில் போதுமான தண்ணீர் இருப்பதாலும் ஏற்கனவே

ஒரு மேல்நிலைத் தொட்டி உள்ளதாலும், 1 லட்சம் கொள்ளளவுள்ள வேறு ஒரு மேல்நிலைத் தொட்டி கட்டப்பட்டு வருவதாலும் தற்போது வேறு புதிய குடிநீர்த் திட்டம் அமைக்க அவசியமில்லை என தமிழ்நாடு குடிநீர் வாரியம் தெரிவித்து உள்ளது.

**கிராமங்களில் தன்னிறைவுத் திட்டத்தில் முடிக்கப்படாத பணிகளை முடிப்பதற்கான சிறப்புத் திட்டம்,**

6—வினா எண் 1562—**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்)** : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநிலத்தின் தன்னிறைவுத் திட்டத்தில் முடிக்கப்படாத வேலைகளை முடிப்பதற்கென அரசு சிறப்புத் திட்டம் ஏதேனும் வகுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை—

(அ) கிராமங்களில் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகள் யாவும் முடிக்கப்பட்டுள்ளன.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**கேசட்டுகள் மூலம் கிராம மக்களிடையே கல்வியறிவை பரப்பும் திட்டம்.**

7—வினா எண் 1610—**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கேசட்டுகள் மூலம் கிராம மக்களிடையே கல்வியறிவை பரப்ப அரசு திட்டம் ஏதும் வகுத்துள்ளதா ?

விடை—

கேசட்டுகள் மூலம் கிராம மக்களிடையே கல்வியறிவை பரப்ப அரசு திட்டம் ஏதும் இல்லை.

**கொடைக்கானல் ஏரியை சுத்தப்படுத்தி பாதுகாக்கும் நடவடிக்கை:**

8—வினா எண் 1614—**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கொடைக்கானல் ஏரியை சுத்தப்படுத்தவும் அதன் தனித்தன்மையை பாதுகாக்கவும் எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?



விடை—

ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 10,000 செலவில் பராமரிக்கப்படுகிறது.

**வாலியம்பட்டிக்கும் வேப்பங்குடிக்கும் இடையில் ஜி. ஏ. வாய்க்காலில் பாலம் கட்டுதல்.**

9—வினா எண் 1615 ஏ. **திரு. துரை கோவிந்தராசன் :**— மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், வாலியம்பட்டிக்கும் வேப்பங்குடிக்கும் இடையில் ஜி. ஏ. கெனாலில் ஒரு பாலம் கட்டும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

விடை—

இல்லை.

**கல்லணை—திருவையாறு செல்லும் பூம்புகார் சாலையை விரிவுபடுத்தும் திட்டம்.**

10—வினா எண் 1616—**திரு. துரை கோவிந்தராசன்** : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்லணையில் இருந்து திருவையாறு செல்லும் பூம்புகார் சாலையை விரிவு படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எந்நிலையில் உள்ளது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

**கைத்தறி லுங்கிகளை அரசே ஏற்றுமதி செய்யும் திட்டம்.**

11—வினா எண் 1622—**திருவாளர்கள் சைதை சா. துரைசாமி மற்றும் இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கைத்தறி லுங்கிகளை தனியார் ஏற்றுமதி செய்வதை தடை செய்து அரசே ஏற்றுமதி செய்யும் திட்டம் உள்ளதா ?

விடை—

இல்லை.

### சென்னை மாநகராட்சியால் கால்பந்தாட்ட விளையாட்டு மைதானம் அமைக்கும் திட்டம்.

12—வினா எண் 1623—திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சி நிர்வாகத்தினரால், அகில இந்திய அளவில் கால்பந்தாட்ட போட்டிகள் நடத்த புதியதாக பெரிய விளையாட்டு மைதானம் அமைக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், நடப்பு நிதியாண்டில் பணிகள் துவங்கப் படுமா ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### மின் உற்பத்திக்கென அந்நியக் கடன்கள்.

13—வினா எண் 1722—திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின் உற்பத்திக்கென்று அந்நியக் கடன்கள் ஏதேனும் பெறப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், ஆண்டுதோறும் செலுத்தப்படும் வட்டி எவ்வளவு ?

விடை—

(அ) ஆம். ஜப்பானிடமிருந்து 9,600 மில்லியன் யென்கள் (38.37 கோடி ரூபாய்) பெறப்பட்டுள்ளது.

(ஆ) 2.75 சதவீதம்.



### காவேரி நீரோட்டம் இறங்கும் இடங்களில் குறைந்த அழுத்த மின்சாரம் தயாரிக்கும் திட்டம்.

14—வினா எண் 1724—திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

காவிரியின் நீரோட்டம் இறங்கும் இடங்களில் குறைந்த அழுத்த மின்சாரம் தயாரிக்கும் திட்டம் உள்ளதா ?

விடை—

ஆம்.

### மின் கம்பியர்கள் அந்தந்த ஊரில் குடியிருத்தல்.

15—வினா எண் 1725—திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின் கம்பியர்கள் அந்தந்த ஊரில் குடியிருப்பதில்லையென்று புகார்கள் ஏதேனும் வந்துள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### விவசாயிகளுக்கு இலவசமாக கம்போஸ்ட் உரம் வழங்கும் திட்டம்.

16—வினா எண் 1728—திரு. குமரி அனந்தன் . மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விவசாயிகளுக்கு இலவசமாக கம்போஸ்ட் உரம் வழங்கப் படும் திட்டம் ஏதும் உள்ளதா ?

விடை—

விவசாயிகளுக்கு இலவசமாக கம்போஸ்ட் உரம் வழங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

### வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் செம்பனை வளர்ப்பு பற்றி ஆய்வு.

17—வினா எண். 1731—திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண்மை பல்கலைக் கழகத்தில் பாமவின் எண்ணை தரும் செம்பனை வளர்ப்பு ஆய்வு செய்யப்பட்டுள்ளதா

(ஆ) ஆம் எனில், தொடர்ந்து என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**மின்வாரிய அலுவலகத்தில் சூரிய ஒளி மின்சக்தியை பயபடுத்தும் திட்டம்.**

18—வினா எண். 1735—திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மின் வாரிய மத்திய அலுவலகத்தில் சூரிய ஒளி மின் சக்தியைப் பயன்படுத்தும் திட்டம் எந்த அளவில் உள்ளது ?

விடை—

இத்திட்டம் 1980 ஆம் ஆண்டிலேயே கைவிடப்பட்டது.

**மின்சாரத் திருட்டுத் தொடர்பாக சொத்துக்களை பறிமுதல் செய்தல்.**

19—வினா எண். 1744—திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மின்சாரத் திருட்டில் ஈடுபடுகிறவர்களையும் உடந்தையாயிருப்பவர்களையும் கண்டிக்கச் சொத்துக்களைப் பறிமுதல் செய்யும் சட்டம் கொண்டு வரப்படுமா ?

விடை—

மின்சாரத் திருட்டு தொடர்பாக சொத்துக்களை பறிமுதல் செய்ய சட்டம் ஏதும் இயற்றப்படவில்லை. அப்படி இயற்றும் கருத்துருவும் இல்லை.

**தொண்டரந்துளசியிலிருந்து சித்தப்பாறைக்கு புதிய சாலை அமைக்கும் திட்டம்.**

20—வினா எண். 1769.—திரு. கோ. இரகுபதி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) காட்பாடி தொகுதியில் தொண்டரந்துளசியிலிருந்து ஆந்திர மாநில எல்லையிலுள்ள சித்தப்பாறை என்ற இடத்திற்கு புதிய சாலை அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

135533 600 008

**வருவாய் குறைந்த பேரூராட்சிகளை ஊராட்சிகளாக மாற்றுதல்.**

21—வினா எண். 1791—டாக்டர் அ. பொன்னுசாமி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெத்தாம்பாளையம், நல்லாம்பட்டி, பள்ளபாளையம் ஆகிய பேரூராட்சிகளுக்குப் போதிய வருவாய் இல்லாததால் அலுவலர்களுக்குச் சரிவர சம்பளம் தரப்படாமலும், வீதி மின் விளக்குகள் துண்டிக்கப்பட்டும் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், வருவாய் குறைந்த இப்பேரூராட்சிகளை ஊராட்சிகளாக மாற்றும் உத்தேசம் உள்ளதா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) ஆம், வருவாய் குறைந்த பேரூராட்சிகளை ஊராட்சிகளாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**பட்டதாரி ஆசிரியர்களை இடைநிலை ஆசிரியர் பணியிடத்தில் அமர்த்தும் திட்டம்.**

22—வினா எண். 1873—திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டதாரி ஆசிரியர்களிடையே உள்ள வேலை இல்லாத் திண்டாட்டத்தைப் போக்கிட அவர்களை (Secondary Grade) ஆசிரியர்கள் பதவியில் அமர்த்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

பட்டதாரி ஆசிரியர்களை இடைநிலை ஆசிரியர் பணியிடத்தில் அமர்த்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**வண்டலூரில் கால்நடை மருத்துவக் கல்லூரி துவங்குதல்.**

23—வினா எண் 1986—திரு. எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வண்டலூரில் கால்நடை மருத்துவக் கல்லூரி துவங்க இருந்த அரசின் செயற்குறிப்பின் தற்போதைய நிலை என்ன ?

விடை—

வண்டலூரில் கால்நடை மருத்துவக் கல்லூரி துவங்க அரசிடம் எந்த செயற்குறிப்பும் இல்லை.

**தமிழகத்தில் துப்பறியும் நாய் வளர்ப்புப் பண்ணை ஆரம்பித்தல்.**

24—வினா எண் 1987—திரு. எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழகத்தில் துப்பறியும் நாய் வளர்ப்புப் பண்ணை ஆரம்பிக்கும் உத்தேசம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**குழந்தைகள் பால் உணவு தயாரிக்கும் தொழிற்சாலை ஆரம்பித்தல்.**

25—வினா எண் 1988—திரு. எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் குழந்தைகள் பால் உணவு (Milk Powder) தயாரிக்கும் தொழிற்சாலை ஆரம்பிக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்பட உள்ளது?

(இ) எங்கு தொடங்கப்பட உள்ளது ?



விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இவ்வினா எழவில்லை.

**மதுரை சாத்தூருக்கு பாண்டியன் பேருந்து விடல்.**

26—வினா எண் 2001—திரு. இரா. முத்தையா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுரையில் இருந்து சாத்தூருக்கு உசிலம்பட்டி, ஏழுமலை வழியாக பாண்டியன் பேருந்து விடக் கோரி அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது விடப்படும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இந்த சுற்று வழித் தடத்தை பிரயாணிகள் முழுமையாக பயன்படுத்தும் வாய்ப்பில்லை என்பதால், இவ்வழித்தடத்தில் பேருந்து செலுத்தப்படவில்லை.

**வண்டாரி அணைக்கட்டு செக்டேம் பராமரிப்பு.**

27—வினா எண். 2006—திரு. இரா. முத்தையா: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், வண்டாரி அணைக்கட்டு என்னும் ''செக்டேம்'' எவ்வித பராமரிப்பும் இல்லாதிருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதனை துறையே எடுத்துக் கொண்டு பராமரிப்புப் பணி மேற்கொள்ளப்படுமா ?

விடை—

(அ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், வண்டாரி அணைக்கட்டு என்னும் செக்டேம் பொதுப்பணித்துறையின் பராமரிப்பில் உள்ளதோடு இவ்வணைக்கட்டின் பராமரிப்பு பணிகள் அவ்வப்போது செய்யப்பட்டு தற்சமயம் அணைக்கட்டு நல் நிலையில் உள்ளது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1987 மே 8

### வெள்ளக்கோவில் பேரூராட்சியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையம்

28—வினா எண் 2022.—திரு. கு. ரமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பெரியார் மாவட்டம், வெள்ளக்கோவில் பேரூராட்சியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் அறுவை சிகிச்சை வசதிகள் செய்யப்பட வேண்டுமென்று பொது மக்கள் சார்பில் கோரிக்கை எழுப்பப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

விடை—

(அ) பொது மக்களிடமிருந்து எந்தவிதமான கோரிக்கையும் வரவில்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

### ஆயக்குடியில் கொய்யாப் பழத்திலிருந்து ஜாம் செய்யும் தொழிற்சாலை ஏற்படுத்தல்.

29—வினா எண் 2031—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

பழனித் தொகுதி ஆயக்குடி நகர பஞ்சாயத்தில் கொய்யாப் பழத்திலிருந்து ஜாம் செய்து வெளி நாட்டிற்கு அனுப்பும் தொழிற்சாலை ஏற்படுத்த அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

விடை—

இல்லை.

### மதுரை மாவட்டத்தில் தொழில் மையம் ஏற்படுத்தல்.

30—வினா எண் 2133— திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுரை மாவட்டத்தில் தொழில் மையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?



1987 மே 8]

விடை—

(அ) மதுரை மாவட்டத்தில் மதுரையில் மாவட்ட தொழில் மையம் ஏற்கனவே செயல்பட்டு வருகிறது.

(ஆ) இக்கேள்விக்கு இடம் இல்லை.

### சடையம்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம்.

31—வினா எண். 2147—திரு. த. புஷ்பராசு : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி யூனியன் சடையம்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### தஞ்சை நகரில் புதிய விளையாட்டு அரங்கம் கட்டுதல்

32—வினா எண். 2180—திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தஞ்சை நகரில் புதிய கூரையுடன் கூடிய (Indoor stadium) விளையாட்டு அரங்கம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### நெடுஞ்சாலைகளை செப்பனிடும் பணியாளர் வசதிக்காக சாலை ஓரங்களில் தங்கும் இடம் கட்டுதல்.

33—வினா எண். 2294—திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நெடுஞ்சாலைகளை செப்பனிடும் பணியாளர்களின் வசதிக்காக சாலை ஓரத்தில் 20 கி. மீ. தூரத்திற்கு ஒரு தங்கும் இடம் கட்டித் தருவதற்கு அரசிடம் செயற்குறிப்புள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை இடங்களில் முதல் தவணையாக கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**மேலூர் நகராட்சி பகுதிகளில் பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம்.**

34—வினா எண். 2314—திரு. க. வெ. வீரணம்பலம் : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மேலூர் தொகுதி மேலூர் நகராட்சி பகுதிகளில் பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம் அமுல்படுத்த அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**மேலூர் நெடுஞ்சாலை ஓரங்களில் ஆக்கிரமிப்பு செய்துள்ளோர்களை அகற்றல்.**

35—வினா எண். 2319—திரு. க. வெ. வீரணம்பலம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் சட்டமன்றத் தொகுதி மேலூர் நெடுஞ்சாலை ஓரங்களில், நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான நிலங்களில் ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களை அகற்ற அரசு முடிவு எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?



விடை—

(அ) ஆம்.

(ஆ) ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு விட்டன.

**அரசு மான்யத்துடன் கூடிய வங்கி கடன் மூலம் வெளி நாட்டுப் பசுக்களை வழங்கும் திட்டம்**

36—வினா எண் 2333—திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு. மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெளிநாட்டிலிருந்து வரவழைக்கப்படும் பசுக்களை அரசு மான்யத்துடன் கூடிய வங்கி கடன் மூலம் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மக்களுக்கு வழங்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்போது செயல்பட துவங்கும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

**அனைத்து மாவட்டங்களில் கைத்தறிப் பொருட்காட்சிகள் நடத்தி கைத்தறி துணி விற்பனையைப் பெருக்கும் திட்டம்**

37—வினா எண் 2334—திரு. மு. இராசாங்கம் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறி பொருட்காட்சிகளை அனைத்து மாவட்டங்களிலும் மாதந்தோறும் நடத்தி அதன்மூலம் கைத்தறி துணி விற்பனையை பெருக்க திட்டம் உள்ளதா ?

(ஆ) கைத்தறி நெசவாளர்களுக்கு மலிவு விலையில் கைத்தறி துணி தயாரிப்பதற்குத் தேவையான கச்சாப் பொருட்கள் வழங்க அரசிடம் திட்டம் ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், அது எப்பொழுது அமலுக்கு வரும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

(இ) இவ்வினாவுக்கு இடமில்லை.

**கைத்தறித் துணிகள் விற்பனைக்காக அரசு வழங்கும் தள்ளுபடி சதவீத அளவினை அதிகரித்தல்.**

38—வினா எண் 2335—திரு. மு. இராசாங்கம் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறி துணிகளின் விற்பனைக்காக தற்போது அரசால் வழங்கப்பட்டு வரும் '' அரசு தள்ளுபடி'' (Government Rebate) கால அளவினை அதிகரித்தும், அரசு தள்ளுபடி சதவீத அளவினை அதிகரித்தும், கைத்தறி துணி விற்பனையை அதிகரிக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்போது அமலுக்கு வரும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**வேப்பத்தூர் பஞ்சாயத்தில் நிதி பற்றாக்குறையை போக்கும் நடவடிக்கை**

39—வினா எண் 2351—திரு. மு. இராசாங்கம் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் தாலூகா, வேப்பத்தூர் பஞ்சாயத்தில் நிதி பற்றாக்குறை காரணமாக பணிகள் பாதிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**மின் உற்பத்திக்காக மைய அரசு வழங்கிய நிலக்கரி**

40—வினா எண் 2428—திரு. எஸ்.இராசாராமன் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தின் மின் உற்பத்திக்கு ஒரு ஆண்டுக்குத் தேவையான நிலக்கரி அளவு எவ்வளவு ?



(ஆ) 1983–84-ல் 1984–85-ல் மைய அரசு வழங்கிய நிலக்கரியின் அளவு எவ்வளவு ?

விடை—

(அ) 40.4 இலட்சம் டன்கள்.

(ஆ) 1983–84-ல் 25.31 இலட்சம் டன்கள். 984–85-ல் 31.31 இலட்சம் டன்கள்.

**ஐரோப்பியா மற்றும் மேற்கு நாடுகளில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக விற்பனை முகவர்கள் நியமனம்.**

41. வினா எண். 2430—திரு எஸ். இராசாராமன : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஐரோப்பியா மற்றும் மேற்கு நாடுகளில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் விற்பனை முகவர்களை நியமிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

விடை—

(அ) தற்போது இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**பிற மாநில அரசுகளிடமிருந்து வரவேண்டிய மின்பாக்கி கட்டணத் தொகை.**

42—வினா எண். 2434—திரு. எஸ்.இராசாராமன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) 1983–84, 1984–85 ஆம் ஆண்டுகளில் பிற மாநில அரசுகளிடமிருந்து அரசுக்கு மின்பாக்கிக் கட்டணமாக ஏதாவது தொகை வரவேண்டியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) அதன் விபரம் பின்வருமாறு :

| மாநிலம். (1) | 1983-84. (2) (ரூபாய் இலட்சங்களில்) | 1984-85. (3) (31.3.1985 முடிய) |
|---|---|---|
| 1. கேரளம் .. .. .. | 94.89 | 105.98 |
| 2. ஆந்திரம் .. .. .. | 29.86 | 29.86 |
| 3. கர்நாடகம் .. .. .. | 30.43 | 30.43 |
| 4. பாண்டிச்சேரி .. .. | 110.70 | 40.62 |
| மொத்தம் .. | 265.88 | 206.89 |

தஞ்சாவூரில் பிராந்திய கயிறு வளர்ச்சி மற்றும் பயிற்சி நிலையம் ஆரம்பித்தல்.

43—வினா எண் 2448—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூரில் பிராந்திய கயிறு வளர்ச்சி மற்றும் பயிற்சி நிலையம் (Regional Coir Development and Training Centre ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்படும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 1983 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் கயிறு வாரியத்தின் மண்டல கயிறு வளர்ச்சி மற்றும் பயிற்சி நிலையம் தஞ்சையிலுள்ள அருளானந்தா நகரில் துவங்கப்பட்டு வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. பிள்ளையார் பட்டியில் சொந்தக் கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. கூடிய விரைவில் இந்நிலையம் சொந்த கட்டிடத்தில் செயல்படும்.

கூவம் அபிவிருத்தித் திட்டம்.

44—வினா எண். 2456—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூவம் ஆற்றின் நாற்றத்தைப் போக்க "கூவம் அபிவிருத்தித் திட்டம்" போடப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?



விடை—

(அ) மற்றும் (ஆ) : கூவம் ஆற்றின் துர்நாற்றத்தைப் போக்க சம்பந்தப்பட்ட பல்வேறு துறைகளின் பிரதிநிதிகளைக் கொண்ட சிறப்புப் பணிக்குழு (Task force) ஒன்று அமைப்பதற்கான ஓர் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திருவில்லிபுத்தூர் அருள்மிகு ஆண்டாள் கோவிற் திருப்பணிக்கு ஒதுக்கப்பட்ட நிதி.

45—வினா எண் 2502—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் ஸ்ரீஆண்டாள் கோவில் திருப்பணிக்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீஆண்டாள்கோயில் திருப்பணி வேலைகளுக்கு 1977-78 நிதியாண்டில் ரூ. 50,000-மும் 1981-82 நிதியாண்டில் ரூ. 75,000-மும் ஆக மொத்தம் ரூ. 1,25,000 அரசு மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

இராஜபாளையம் பகுதியிலுள்ள நாய் இனத்தை அபிவிருத்தி செய்தல்.

46—வினா எண் 2510—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராஜபாளையம் பகுதியிலுள்ள "நாய்" இனத்தை அழிந்து போகாதவண்ணம் இனவிருத்தி செய்யும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இராஜபாளையம் நாய் இனத்தை அழிந்து போகாத வண்ணம் இனவிருத்தி செய்ய சென்னை, சைதாப்பேட்டை கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் அலுவலகத்தில் நாய் வளர்ப்புப் பிரிவு 1980-81-ம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

**சலவைத் தொழிலாளர்களை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் இணைக்க வரப்பெற்ற விண்ணப்பம்.**

47—வினா எண். 2528— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சலவைத் தொழிலாளர்களை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் இணைத்திட பரிந்துரை செய்யக்கோரி அரசுக்கு விண்ணப்பம் ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பதற்குரிய அடிப்படை பண்புகள் சலவைத் தொழிலாளர்களிடையே இல்லையாதலால், இவர்களை இப்பட்டியலில் சேர்க்க இயலாது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

**மாவட்டங்களில் வாகனங்களை நிறுத்த கட்டணம் வசூலிக்கும் திட்டம்.**

48—வினா எண். 2563— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சாலைகளில் வாகனங்களை நிறுத்த கட்டணம் வசூலிக்கும் திட்டம் மற்ற மாவட்டங்களுக்கு விரிவுப்படுத்தப்படுமா?

(ஆ) இத்திட்டத்தினால் இதுவரை கிடைத்துள்ள வருமானம் எவ்வளவு ?

விடை—

(அ) தற்போது இல்லை.

(ஆ) இத்திட்டத்தினால் சென்னை மாநகராட்சிக்கு கிடைத்துள்ள நிகர வருமானம் மாதமொன்றுக்கு சராசரி ரூ. 26,000 ஆகும்.

**செண்பக தோப்பு மலைவாழ் மக்களுக்கு குடும்ப அட்டைகள் வழங்கல்.**

49—வினா எண். 2568-ஏ— திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

திருவில்லிபுத்தூர் செண்பகத் தோப்பு மலைவாழ் மக்களுக்கு குடும்ப அட்டைகளை வடுங்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?



விடை—

திருவில்லிபுத்தூர் செண்பகத்தோப்பில் வாழும் 26 பழங்குடியினர் குடும்பங்களுக்கும் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு விட்டது.

**சுற்றுலா பயணிகளுக்காக எழும்பூர் மற்றும் சென்ட்ரல் ரெயில் நிலையங்கள் அருகே விடுதிகள் கட்டுதல்**

50. வினா எண். 2612— திரு. இரா. தாரைக்கனி :' மாண்புமிகு சுற்று'லா மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் வசதிக்காக சென்னை எழும்பூர் ரெயில் நிலையம் சென்ட்ரல் ரெயில் நிலையம் அருகே விடுதிகள் கட்டும் செயற் குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் யாது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) வேப்பேரியில் கண்ணப்பர் திடலை ஒட்டியுள்ள இடத்தில் நட்சத்திர ஓட்டல் கட்டும் திட்டமும் சென்னை பிராட்வேயில் பழைய சட்டக் கல்லூரி விடுதிகட்டிடம் உள்ள இடத்தில் பழுதடைந்த கட்டிடத்தை அகற்றி நட்சத்திர ஓட்டல் கட்டும் திட்டமும பரிசீலனையில் உள்ளன.

குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[முற்பகல் 11–00.]

**2. தகவல கோரல்.**

**மருத்துவக் கல்லூரி நுழைவுத் தேர்வுகளைத் தன் வந்நம் ; ) மன்றத் தீர்ப்பு**

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரவும் ஒரு விளக்கத்தை அவரிடமிருந்து பெறவும் இதைக் கேட்கிறேன்.

[1987 மே 8

மாநில உரிமைகளுக்கு முரணாக, நிர்வாகத் துறையின் நீதித்
துறை தலையிடுகிற வகையில் உச்ச நீதிமன்றம் வைத்தியக்
கல்லூரி மாணவர்கள் சேர்ப்பின் அகில இந்திய அடிப்படையில்
இருக்க வேண்டும் என்று தீர்ப்பளித்தது. அந்தத் தீர்ப்பின்
அடிப்படையில் அதை இரண்டாவது மறு ஆய்வுக்குப் போன
போது உச்ச நீதிமன்றத்தால் நுழைவுத் தேர்வுகளை எல்லாம்
தள்ளி வைத்து, மாநில அரசாங்கங்கள் இந்தக் கருத்திற்கு
எதிர்ப்பு இருந்தால் தெரிவிக்கலாம் என்று கூறி கால அவகாசம்
கொடுத்திருக்கிறது. இந்த நேரத்தில் மாநில அரசு என்னென்ன
வகையில் எந்தெந்த அடிப்படையில் அந்தத் தீர்ப்பு சரியில்லை
என்ற வகையில் தன்னுடைய எதிர்ப்பை உச்ச நீதிமன்றத்
திற்கு தெரிவித்திருக்கிறதா என்ற விவரத்தையும், இதை
வைத்துக்கொண்டு, சில பேர் இந்த மாநில அரசாங்கம் எதிர்ப்பு
தெரிவிக்குமா என்றும், தெரிவிக்காதுஎன்றும் பத்திரிகையில்
எழுதுகிற நிலைமை இருக்கிறது. எனவே மாநில உரிமையைப்
பாதிக்கிற இந்த விஷயத்தில் உச்ச நீதிமன்றத்தில் நம் மாநில அரசு
எந்த அடிப்படையில் அந்தத் தீர்ப்பை ரத்து செய்ய வேண்டும்
என்று வாதாடி இருக்கிறது என்ன அபிடெவிட் தாக்கல் செய்
திருக்கிறது என்கிற விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்
கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இதன் அடிப்படையை விளக்கிச்
சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.
முதலில் டெல்லி நிர்வாகத்தை ஏற்றுக் கொண்டிருக்கிற
மத்திய அரசு டெல்லியில் இருக்கிற மருத்துவக் கல்லூரியில்
மாணவர்கள் சேருவது என்றால் டெல்லியில் இரண்டாண்டுகள்
குடியிருந்தவராக இருக்க வேண்டும் என்று ஒரு உத்தரவைப்
போட்டது. அந்த உத்திரவை எதிர்த்து ஒரு மாணவன் உச்ச
நீதி மன்றத்திற்குச் சென்று உச்ச நீதிமன்றத்தின் 5 நீதிபதியைக்
கொண்ட கான்ஸ்டிடியூஷன் பெஞ்ச் உட்கார்ந்து ஆய்வு செய்து
அப்படிப் போட்ட உத்தரவு செல்லும் என்றும் அந்தந்தப்
பிராந்தியத்தில் இருக்கிற மாணவர்களுக்குத்தான் முன்னுரிமை
கொடுக்க வேண்டுமே தவிர மற்றவர்களுக்குக் கொடுக்க இயலாது
என்றும் தீர்ப்பளித்தது.

ஆனால் அதன் பிறகு மீண்டும் ஒரு மாணவர் உச்ச நீதி
மன்றத் தீர்ப்பை எதிர்த்து, மீண்டும் ஒரு தனி நீதிபதி முன்பு
உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். அப்போது
அவர்கள் சொன்ன வாதம் இந்தியா முழுவதும் ஒரே நாடுதானே
தவிர இரண்டாண்டுகள் குடியிருந்துவிட்டால் தான் குடிமகன்.
இல்லாவிட்டால் இல்லை என்று பொருள் கொள்ளக்கூடாது
என்றும், இந்தியாவில் வாழ்கிற அனைவரும் இந்தியர்களே
என்ற பெரிய நோக்கத்தின் அடிப்படையில் செயல்பட வேண்டும்
என்றும் சொன்னதை அந்த நீதிபதி ஒப்புக் கொண்டு அனை
வருக்கும் இதில் உரிமை கொடுக்க வேண்டும், யாரும் எங்கே
வேண்டுமானாலும், சேரலாம் என்கிற உரிமை இருக்கவேண்டும்
ன்றும் சொல்லிவிட்டு, அப்படித் தீர்ப்பு இருந்தாலும் மாநில
உரிமைகளைப் பாதுகாக்க வேண்டியிருக்கிறது என்றும் சொல்லி
யிருக்கிறார்.



1987 மே 8]

மத்திய அரசாங்கத்திற்கு மற்ற மாநிலங்கள் 15 சதவீதம்.
இடம் ஒதுக்க வேண்டும் என்று தீர்ப்பு வழங்கினார்கள்
இந்தத் தீர்ப்பை எதிர்த்துத்தான் மாண்புமிகு முதலமைச்சர்
அவர்களுடைய ஆலோசனையின் பேரில் மறு ஆய்வு செய்ய
வேண்டும் என்று நாம் மனு தாக்கல் செய்தோம். மறு ஆய்வு
செய்ய வேண்டும் என்ற நம்முடைய வாதம் நியாயமான
வாதம் என்பதை நாம் வழக்கறிஞர்களை வைத்து வாதிட்டோம்.
துர்ப்பாக்கியவசமாக நாங்கள் அறிந்த மட்டில் வேறு எந்த
மாநிலமும் மறு ஆய்வு செய்கிற மனுவை தாக்கல் செய்யவில்லை.
தாக்கல் செய்யத் தவறிவிட்டார்கள். நாம் ஒருவர்தான் தாக்கல்
செய்தோம். மறு ஆய்வு செய்ய வேண்டும். மாநிலங்களுக்கு
உரிமை கொடுக்க வேண்டும் என்று தாக்கல் செய்தோம்.

அது மட்டுமல்ல. வேறு சில பிரச்சினைகளும் உண்டு. 15
சதவீதம் நீங்கள் எடுத்துக்கொண்டால், அந்த 15 சதவீதத்தில்
பிற்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று
அரசியல் சட்டத்தில் இருக்கிறது. அந்த இட ஒதுக்கீடு இல்லை
யென்று சொன்னால் அரசியல் சட்டத்திற்கு முரண்பாடாக
போய்விடும். மாநிலங்களில் தான் பிற்பட்டவர்களுக்கு 50
சதவீதம் கொடுப்பதாக வைத்திருக்கிறோம். பிற்பட்டவர்கள்
பட்டியல் மாநிலத்தில்தான் இருக்கிறது, மத்திய அரசாங்கம்
இதை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவே இதற்கும் முரணாகப்
போகும், ஆகவே மறு ஆய்வு செய்து அந்தத் தீர்ப்பை ரத்து
செய்ய வேண்டும். மாநிலங்களுக்கு உள்ள உரிமையைப் பறிக்
கக்கூடாது என்று கேட்டோம். ஆனால் மத்திய அரசாங்கம்
அதைப்பற்றி இப்போது பரிசீலிப்பதற்கில்லை என்று உச்சநீதி
மன்றத்தில் வாதிட்டது. உச்ச நீதிமன்றம் அந்த வாதத்தை
ஏற்றுக்கொண்டு அடுத்த மாதம் முழுமையாக விசாரிக்கலாம்
என்று போட்டார்கள். 15 சதவீதம் ஒதுக்க வேண்டுமென்றால்
மத்திய அரசாங்கத்திற்கு 150 இடங்களை ஒதுக்க வேண்டும்.
இதற்கான நுழைவுத் தேர்வை நடத்த அறிவிக்கைகளை வெளி
யிட்டிருந்தார்கள். நுழைவுத் தேர்வை நடத்த அறிவிக்கை
வெளியிட்டிருந்த நேரத்தில் நுழைவுத் தேர்வை நிறுத்த வேண்டும்
என்று சொல்லப்பட்டது. இந்த ஆண்டு கொடுக்கத் தேவை
யில்லை. அடுத்த ஆண்டு அதைப் பற்றி கோர்ட்டில் தீர்ப்புக்குப்
பிறகு யோசிக்கலாம் என்றும் வாதிட்டோம். உச்ச நீதிமன்றம்
நுழைவுத் தேர்வை நிறுத்திவிட்டது. மாநில அரசாங்கம் 150
இடங்கள் காலியாக வைத்திருக்க வேண்டும் என்று சொல்லி
தடையாணையை விதித்திருக்கிறார்கள். இதை நாம் எதிர்த்து
மீண்டும் மனுச் செய்வதாக யோசித்துக் கொண்டிருக்கிறோம்.
இதற்கிடையில் பாதிக்கப்பட்ட மாணவர்கள் உச்ச நீதி
மன்றத்திற்குச் சென்று தாராளமாக தங்களுக்குள்ள உரிமையை
நிலைநிறுத்த முயற்சி செய்யலாம். தமிழ்நாடு மாணவர்கள்
உச்ச நீதிமன்றத்திற்குத் தாராளமாகச் செல்லலாம். அதற்குப்
பிறகு மற்ற மாநிலங்கள் எந்த அளவிற்குப் பங்கு கொள்ளும்
என்பது எனக்குத் தெரியவில்லை. முதலமைச்சருடைய ஆலோ
சனையின் பேரில் மற்ற மாநில மக்கள் நல்வாழ்வுத் துறை
அமைச்சர்களுக்கு எழுதுவதாக இருக்கிறேன். இதுதான் இன்
றைய நிலை. இதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை.

Mr. SPEAKER: There is one Judgment in your favour wherein it has been hold that the framing of policy is purely the Executive function. This has been reported in AIR 1983 - Supreme Court- Y. V. Chandrachud, C.J., R.S. Pateak and Sabyasachi Mukharji, JJ.- paragraph 36 - page 1174, where in it has been observed as follows

"This Court", that is, the Supreme Court, "is not a third chamber of the legislature. It has no such extre-terri torial ambitions and it dose not aspire to do the job of out-oiders, to use an expression of Lord Devlin. It is simply the highest Court of law and justice in a country governed by a written Constitution, which, it is it primary and exclusive function to interpret. The care which we must take is that while interpreting the laws and the Constitutions we ough not to be swayed by passing passions or by populist sentiments. We must do our duty by the Constitution, unaffected by extraneous considerations and guided solely by the obligation to be fair and just, almost to a fault."

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்துடன் ஒன்றைத் சேர்த்துக்கொள்கிறேன். உச்ச நீதிமன்றத்திலே கால்ன்ஸ்டிடியூஷன் பென்ச் உட்கார்ந்து வழங்கிய தீர்ப்புக்கு எதிராக தனி நீதிபதி இந்த தீர்ப்பை மாற்றியிருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். கான்ஸ்டிடியூஷன் பென்ச் உட்கார்ந்து அந்தந்த மாநிலங்களுக்குகே தர வேண்டும் என்று முடிவைக் கொடுத்தார்கள். தனி நீதிபதி எப்படி இந்தத் தீர்ப்பை அளித்தார் என்று தெரியவில்லை. இதை ஆட்சேபித்து போது அவர் எந்த பதிலும் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்குத் தலைமை நீதிபதியாக இருப்பவர் அந்த தீர்ப்பு வழங்கிய பென்ச்சின் உறுப்பினராக இருந்திருக்கிறார்.

### 3. அறிவிப்புகள்.

#### (அ) பொதுக் கணக்குக் குழுவிற்கு உறுப்பிளர்க்ள் நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையின் விதி 203(1[-ன் கீழ் 1987–88-ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவிற்கு கீழ்க்கண்ட பதினாறு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப் பெறுள்ளனர். என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கிறேன் ;—

1. டாக்டர் தே. குமாரதாஸ்
2. திரு. அ. ரகுமான்கான்
3. திரு. வி.பி. சிந்தன்



4. திரு. ஏ. எஸ். ரவீந்திரன்
5. திரு. எஸ். பி. மணவாளன்
6. திரு. கே. எம். தங்கமணி
7. திரு. மா. சுந்தரதாஸ்
8. திரு. எஸ். பி. துரைராசு
9. திரு. வி. எஸ். பஞ்சவர்ணம்
10. திரு. கே. ஆர். கணபதி
11. திரு. செ. இரத்தினவேலு
12. திரு. ப. தனபால்
13. டாக்டர் கே. பி. இராமலிங்கம்
14. திரு. இரா. சண்முகம்
15. திரு. ப. ந. இராமச்சந்திரன்
16. திரு. இரா. தாமரைக்கனி

நியமனம் செய்யப்பெற்ற வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 1987–88ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப் பெற்றதாக நான் அறிவிக்கிறேன்.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுத் தலைவர் ஆகியோரும் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

பேரவையின் 204-வது விதியின் கீழ் திரு. ஏ. எஸ். ரவீந்திரன் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

(முற்பகல் 11–10)

#### (ஆ) மனுக்கள் குழுவிற்கு உறுப்பினர்கள் நியமனம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 261(1)-வது விதியின்கீழ், பின்வரும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை 1987–88 ஆம் ஆண்டிற்கான 'மனுக்கள் குழு'விற்கு உறுப்பினர்களாக நான் நியமிக்கின்றேன்.

1. மாண்புமிகு திரு. வேடசந்தூர்வி.பி.பாலசுப்பிரமணியன், பேரவைத் துணைத் தலைவர்.
2. டாக்டர் கே. சமரசம்

3. திரு. கு. வடிவேல்

4. திரு. சி. சுப்புராயர்

5. திரு. மு. பாண்டுரங்கன்

6. திரு. சைதை சா. துரைசாமி

7. திரு. சோ. மா. இராமச்சந்திரன்

8. திரு. ஜெ. ராஜா பாபு

9. டாக்டர் ந. மாசிலாமணி

10. திரு. கே. சுப்பராயன்

11. திரு. கோ. வீரய்யன்

பேரவையின் 261(2)-வது விதியின்கீழ், மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன், பேரவைத் துணைத் தலைவர் அவர்களை இக்குழுவின் தலைவராக நியமிக்கின்றேன்.

4. அரசினர் தீர்மானங்கள்

(அ) மனுக்கள் குழுவிற்கு கூடுதலாக உறுப்பினர்கள் நியமனம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' 1987–88 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவிற்குக் கூடுதலாக 5 உறுப்பினர்களை பேரவைத் தலைவர் அவர்கள் நியமிக்கலாம் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

5. கவன ஈர்ப்பு

(அ) நீலகிரி மாவட்டத்தின் சில பகுதிகளில் பருவமழை பொய்த்ததால் விவசாயத்தில் பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. உச்சி அவர்களுக்குப் பதிலாக திரு. க. பாலசுப்பிரமணியன் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்ப்பார்கள்.



திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, '' நீலகிரி மாவட்டம், கூடலூர், உதகை, குன்னூர், கோத்தகிரி வட்டங்களில் இந்த ஆண்டு பருவ மழை பொய்த்து முழுமையாக விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதால், அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள கவலை குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

நீலகிரி மாவட்டத்தின் ஓராண்டு சராசரி இயல்பான மழையளவு 1,920.80 மி.மீ. 1986 ஆம் ஆண்டில் பெய்த சராசரி மழையளவு 1,422.40 மி.மீ. கடந்த ஆண்டு பெய்த மழையளவு குறைவாக இருந்தபோதிலும், முக்கியமான பயிர்கள் எதுவும் பாதிக்கப்படவில்லை. இருப்பினும், வரும் கோடை காலத்தில் குடிநீர் பற்றாக்குறை ஏற்படலாமென எதிர்பார்க்கப்படுவதால், அதனைத் தீர்ப்பதற்கு தேவைப்பட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஆ) நெற்குன்றத்தில் வீட்டு வசதி வாரிய நிலங்களை சிலர் ஆக்கிரமிப்பு செய்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. பி. சிந்தன் அவர்களுக்குப் பதிலாக திரு. கோ. வீரய்யன் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்ப்பார்கள்.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, '' வில்லிவாக்கம் தொகுதி, நெற்குன்றம் கிராமம், செல்லியம்மன் கோவிலுக்குச் சொந்தமான நிலத்தில் 32 ஆதி திராவிடக் குடும்பங்களை வருவாய்த்துறை அதிகாரிகள் மிரட்டி வீடுகளை நாசம் செய்தது குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

செங்கல்பட்டு மாவட்டம், சைதை வட்டம், நெற்குன்றம் கிராமத்தில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்காக நில எடுப்புச் சட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்ட நிலங்களை, முன்னாள் கிராம அதிகாரி மற்றும் சிலரின் தூண்டுதலால், தனியார்கள் சிலர் குடிசைகள் கட்டி, அத்துமீறி ஆக்கிரமணம் செய்திருந்தனர்,

இவ்வாக்கிரமணங்களை நில எடுப்புச்சட்டத்தின்படி, தேவையான
வழிமுறைகளைப் பின்பற்றி, வருவாய்த்துறை அலுவலர்களும்,
மற்றும் வீட்டுவசதி வாரிய அலுவலர்களும் வெளியேற்றியுள்ள
னர். செங்கற்பட்டு மாவட்ட வருவாய் அலுவலர் தனது
அறிக்கையில், அத்துமீறல்கள் எதுவும் நடைபெறவில்லை
என்பதையும். சேதமோ, இழப்போ, சம்பந்தப்பட்ட ஆக்கிரமிப்
பாளர்களுக்கு ஏற்படவில்லை என்பதையும் தெரிவிக்கின்றார்.

### (இ) சென்னை புறநகர்ப் பகுதிகளில் ஆக்கிரமிப்புகளை வரைமுறை செய்யும்போது கிரயம் வசூலித்தல்.

**திரு. எல்ல. இராசமாணிக்கம் :** மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே, '' தாம்பரம் மற்றும் புறநகர் பகுதிகளில்
முப்பது ஆண்டுகளாக அரசு தரிசு நிலங்களிலுள்ள குடிசைப்
பகுதி மக்களுக்கு இலவச மனைப்பட்டா வழங்குவதில் தற்போது
உள்ள அரசின் கொள்கைப்படி 3 சென்டுக்கு மேல் உள்ள இடங்
களுக்கு கூடுதல் விலை நிர்ணயம் செய்துள்ளது குறித்த ''
அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு
நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு
பேரவைத் தலைவரவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை
ஒன்றை வைக்கிறேன் :

**அறிக்கை.**

1984-ம் ஆண்டு 30-6-1984 வரை உள்ள ஆட்சேபணையற்ற
ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்த அரசு உத்திரவிட்டது.
செங்கல்பட்டு மாவட்டம், சைதாப்பேட்டை வட்டத்தில்
30-6-1984 வரை 44,891 ஆக்கிரமணங்கள் உள்ளன.
இவற்றில், 23,010 ஆக்கிரமணங்கள் 3 சென்டுக்கு மேல்
உள்ளது. தற்போதுள்ள அரசு கொள்கைப்படி ஆக்கிரமிப்பு
தாரர்கள் ஏழைகளாக இருந்தால் 3 சென்ட் வரை இலவச
மனைப் பட்டாவும் 3 சென்டுக்கு மேல் உள்ள கூடுதல்
நிலங்களுக்கு சென்ட் ஒன்றுக்கு 2 மடங்கு நிலக்கிரயமும்
செலுத்த வேண்டும். ஆக்கிரமிப்புதாரர்கள் பணக்காரர்
களாக இருந்தால் மூன்று சென்ட் வரை 1 மடங்கு நிலக்
கிரயமும், 3 சென்டுக்கு மேல் உள்ள கூடுதல் நிலங்களுக்கு
2 மடங்கிலிருந்து 4 மடங்கு வரை நிலக்கிரயமும் செலுத்த
வேண்டும். இவ்விதம் நிர்ணயிக்கப்படும் தொகை சந்தை மதிப்
பைவிட அதிகமாக உள்ளதென்றும், ஒப்படைதாரர்கள் மேற்படி
நிலங்களுக்கு கிரயம் செலுத்தி பட்டா பெறுவதற்கு தயங்கு
கிறார்கள் என்றும், இதனால் சைதாப்பேட்டை வட்டத்தில்
உள்ள ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து வசூல் செய்யப்பட
வேண்டிய நிலுவைத் தொகை ரூ. 4.37 கோடியாக உள்ளது
என்றும், அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.
மேலும் சென்னை நகரின் புறநகர் பகுதிகளில் உள்ள ஆக்கிர
மிப்புகளை வரன்முறை செயயும்போது எந்த அடிப்படையில்
கூடுதல் நிலத்திற்கான கிரயத்தை வசூலிப்பது என்பது பற்றிய
செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.



**திரு. எல்ல. இராசமாணிக்கம் :** மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே, இந்த நிலமற்ற ஏழை மக்கள் 30 ஆண்டுக்
காலமாகத் தரிசு நிலங்களில் குடியிருந்து வருகிறார்கள். சமீபத்
தில் சைதாப்பேட்டை வட்டத்தில் மட்டும் 44,891 ஆக்கிர
மிப்புகள் இருக்கின்றன. இவர்களுக்கு ரூ. 3,500 ஆண்டு
வருமானம் உள்ளவர்களுக்கு 3 சென்ட் வரை இனாமாகவும்,
ஆண்டு வருமானம் ரூ. 3,500-க்கு மேற்பட்டவர்களுக்கு மார்க்
கெட் நிலவரப்படி 3 சென்டுக்கு 14,000 ரூபாயும், 3 சென்டி
லிருந்து 5 சென்ட் வரை உள்ள மனைதாரர்களுக்கு இரண்டு
மடங்கு நிலக் கிரயமும், 5 சென்டிலிருந்து 8 சென்ட் வரை
உள்ள நிலச் சொந்தக்காரர்களுக்கு 3 மடங்கு நிலக் கிரயமும்
. . . . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் அவர்கள்
கேள்வி கேட்க வேண்டும்.

**திரு. எல்ல. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, பன்னெடுங்காலமாக இந்தப் பிரச்சினை
இருக்கிறது. கிட்டத்தட்ட புறநகர் பகுதியில் ஒரு இலட்சத்
திற்கு மேற்பட்டவர்கள், குடிசைவாழ் மக்கள் அல்லல்படுகிறார்
கள். இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குக் குறைந்தபட்சம் அந்த
மக்களுக்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டும். 1980-வது
வருடத்தில் விலை நிர்ணயம் செய்து நோட்டீஸ் கொடுத்தார்கள்.
அதற்குப் பின்பு அந்த நிலக் கிரையத்திற்கு இன்றுவரை வட்டி,
அபராத வட்டி, . கூட்டு வட்டி போட்டு இப்போது கட்டச்
சொல்கிறார்கள். குறைந்தபட்சம் இந்த வட்டிகளைத்
தவிர்ப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்பு
கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டம், சைதா
பேட்டை வட்டத்தைப் பொறுத்து 30-6-1986 வரை
44,891 ஆக்கிரமிப்புகள் உள்ளன. இவற்றில் 23,010
ஆக்கிரமிப்புகளில் 3 சென்ட்டுக்கு மேல் உள்ளவர்கள் இருக்கிறார்
கள். இந்த 3 சென்ட்டுக்கு உள்ளாக இருந்து, ஏழை எளியவர்
களாக இருந்து வேறு வீட்டு மனைப்பட்டா ஏதும் இல்லாமல்
இருந்தால் அவர்களுக்கு இலவசம் என்று வைத்திருக்கிறார்கள்.
அதற்குமேல் இருப்பவர்களுக்கு, 3 சென்ட்டுகளுக்கு மேல் 5
சென்ட்டுகள் வரை இருந்து ஏழைகளாக இருந்தால் ஒரு மடங்கு
கிரயம் என்றும், 5 சென்ட்டுகள் முதல் 10 சென்ட்டுவரை
இருப்பவர்களுக்கு 2 மடங்கு கிரயம் என்றும் சில வரைமுறைகள்
வகுத்து இருக்கின்றார்கள்.

வசதி படைத்தவர்களாக இருந்தால், அதற்கு என்று, மாண்பு
மிகு உறுப்பினர் அவர்கள் படித்தது போல, சிலபல வரை
முறைகள் வைத்திருக்கின்றார்கள்: இவர்கள் அத்தனை பேர்
களும் செலுத்த வேண்டியது ரூ. 4,37,21,611.15 காசு
களாக இருக்கின்றது. ஆனால் இவர்கள் கட்டாத

சூழ்நிலையில் இருந்துவருகிறார்கள். ஆகவே அவர்களுக்கு வீட்டு மனைப்பட்டாவும் வழங்கப்பட முடியாத சூழ்நிலையும் இருந்து வருகிறது. ஆகவே ஆக்கிரமிப்புகள் யாவற்றையும் குறுகிய காலத்தில் வரன்முறைப் படுத்த வேண்டும் என்றால் பட்டா வழங்கப்பட வேண்டும். அதை வழங்குவது என்றால், அதற்கான கிரையத்தை அவர்கள் வழங்க வேண்டும். அல்லது அந்த விதிமுறைகளை நாம் மாற்ற வேண்டும். ஆக விதிமுறைகள் என்பது மாநிலம் முழுமையும் ஒரே தன்மையாக இருப்பதைத் தவிர இடத்திற்கு இடம் நாம் மாற்றுவதற்கில்லை. இது வசூலிக்கப்படுவதற்குப் பதிலாக வேறு மாற்றுத் திட்டத்திற்கான செயல் குறிப்பு பற்றி நாம் இப்போது ஆலோசிக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று ஏழை எளியவர்களாக இருந்தால் அவர்கள் விஷயத்தைப் பொறுத்தவரையில் எவ்வளவு மடங்கு நிலம் கிரையத்தைப் பெறுவது என்பது பற்றி நாம் புதிதாக ஒரு திட்டம் வகுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

**(ஈ). கூட்டுறவுச் சங்க சிறப்பு அதிகாரிகள் வேலை நீக்கம் செய்யப் பட்டுள்ளது.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருவாளர்கள் மா. சுந்தரதாஸ், கே. கிருஷ்ணமூர்த்தி, எஸ். இராசாராமன், மூ. இராசாங்கம், டாக்டர் ந. மாசிலாமணி, என். எஸ். வி. சித்தன், க. சோலைராசு, செ. செம்மலை ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**திரு. மா. சுந்தரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழகம் முழுவதும் கூட்டுறவுச் சங்கங்களில் நியமிக்கப்பட்ட சிறப்பு அதிகாரிகள் வேலை நீக்கம் செய்யப் பட்டுள்ளது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

**அறிக்கை.**

1974 முதல், ஒவ்வொரு ஆண்டும், கூட்டுறவுத் துறையில், தற்காலிகமாக நியமிக்கப்பட்ட இளநிலை ஆய்வாளர்களில் பலர், தொடர்ந்து பணிபுரிய அனுமதிக்கப்பட்டு வந்தனர். தற்காலிகப் பணிகளை, வரன்முறை செய்ய, விதிகளில் இடமில்லை. சென்னை, உயர்நீதிமன்றத்தில், ரிட் மனு தொடுத்தனர். ரிட் மனு (804/83) தள்ளுபடி செய்யப்பட்டது. இருப்பினும்,



இப்பிரச்சினையை, அரசே பார்த்து ஒரு முடிவுக்குக் கொண்டு வரலாம் என உயர்நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. இக்கருத்துரு, பல ஆண்டுகளாக அரசின் பரிசீலனையில் இருந்து வந்தது. 1985 ஆம் ஆண்டு விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர் நியமனம்) அவசரச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கென, தேவையையொட்டி வேலை வாய்ப்பகங்கள் மூலம், மேலும் 890 இளநிலை ஆய்வாளர்கள், 1985 டிசம்பரில், தற்காலிகமாக நியமிக்கப்பட்டனர். இவர்கள் நியமிக்கப்பட்டு ஆறுமாதங்கள் கழித்து, முந்தைய ஆண்டுகளுக்கு அனுப்பப்பட்ட காலியிட மதிப்பீடுகளின் அடிப்படையில், இளநிலை ஆய்வாளர் நியமனத்திற்கென, தேர்வாணையம் தேர்ந்தெடுத்த, 820 நபர்களின் பட்டியல், 1986 ஜூன் மாதம், பெறப்பட்டது. இந்நிலையில், தேர்வாணையம் தேர்ந்தெடுத்துள்ள 820 நபர்களுக்கு, உடனடியாக, நியமன ஆணை வழங்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது.

2. மேற்கண்ட பின்னணியில் எழுந்த இப்பிரச்சினை, ஆராயப்பட்டு, இறுதி ஆணைகள் வெளியிடப்பட்டன. வெளியிடப்பட்ட ஆணைகளின் சாராம்சம் பின்வருமாறு :—

(1) தேர்வாணையம் மூலம் முறையான நியமனத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைவரும் உடனடியாகப் பணியில் அமர்த்தப்பட வேண்டும் ;

(2) மேற்கண்ட முடிவைச் செயல்படுத்துவதற்குத் தேவையான அளவுக்கு, தற்காலிக இளநிலை ஆய்வாளர்களில் பணி மூப்பு வரிசையில் இளையவர்களை பணி நீக்கம் (ousting for want of vacancy) செய்ய வேண்டும்.

(3) இந்த இரண்டு முடிவுகளையும் செயல்படுத்திய பிறகும், தற்காலிகப் பணியில் தொடர்ந்திருப்போருக்கும், (முதியவர்கள்) காலியிடமின்மையால் பணியிழந்தோருக்கும (இளையவர்கள்) தேர்வாணையம் சிறப்புத் தேர்வு நடத்த வேண்டும்.

(4) சிறப்புத் தேர்வின் முடிவுகளின் அடிப்படையில், தொடர்ந்து பணிபுரிந்துவரும் தற்காலிக இளநிலை ஆய்வாளர்களின், பணி வரன்முறை செய்யப்படும். பணியிழந்தோர் எதிர்காலத்தில் எழும் காலியிடங்களில் ஈர்த்துக் கொள்ளப்படுவர்.

3. மேற்கண்ட ஆணைகளின்படி, தேர்வாணையத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டோர் பட்டியலில் பணி நியமனத்திற்காகக் காத்திருந்த 344 நபர்களைப் பணியமர்த்துவதற்காக, தற்காலிக அடிப்படையில் பணியாற்றிவரும், பணி மூப்பில் இளைய 344 தற்காலிக இளநிலை ஆய்வாளர்களை, பணி நீக்கம் செய்ய, தற்போது ஆணை வழங்கப்பட்டுள்ளது. இந்த

344 தற்காலிக இளநிலை ஆய்வாளர்களும், சுமார் ஓர் ஆண்டு பணிபுரிந்தவர்களே. எனினும், இவ்வாறு தற்போது பணி நீக்கம் செய்யப்படும் 344 தற்காலிக இளநிலை ஆய்வாளர்களும், அரசு அறிவுரைகளின்படி, தேர்வாணையத்தால் நடத்தப்படவுள்ள சிறப்புத் தேர்வை, எழுதத் தகுதியுடையவர்களே.

4. மேற்கண்ட 344 இளநிலை ஆய்வாளர்களும், 16-12-85-க்குப் பின்னர், 1986 ஜூன் வரை பணியமர்த்தப்பட்டவர்கள். அவர்களைத் தற்காலிக அடிப்படையில், நியமனம் செய்யும்போதே, அவர்கள் எந்த நேரத்திலும், எவ்வித முன்னறிவிப்புமின்றி, பணிநீக்கம் செய்யப்படக்கூடும், எனத் திட்டவட்டமாக, அவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டுத்தான், அவர்கள் பணியில் சேர்ந்துள்ளனர். எனவே, அவர்களைப் பணி நீக்கம் செய்வதால், அவர்கள் எதிர்பாராத இன்னலுக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர் என்ற பிரச்சினைக்கே இடமில்லை. அவர்களைத் தொடர்ந்து பணியில் நீடிப்பதென்றால், மேலும் 344 பணியிடங்களை உடனடியாக அனுமதித்து அரசு ஆணை வழங்க வேண்டிய நிலை உள்ளது. அவ்வாறு அனுமதிக்கப்படும் பணியிடங்களுக்கான செலவினத்தை ஏற்கும் நிலையில், விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் இல்லை. எனவே, முழுச் செலவையும் அரசுதான் ஏற்க வேண்டிய நிலை உள்ளது. இதனால், அரசுக்கு ஆண்டொன்றுக்கு தேவையற்ற கூடுதல் செலவு சுமார் 41.3 இலட்சம் ரூபாய்கள் ஏற்படும்.

5. மேலும், அவர்கள் தற்போது பணி நீக்கம் செய்யப்பட்டாலும், அரசு அறிவித்துள்ளபடி தேர்வாணையம் நடத்தவுள்ள சிறப்புத் தேர்வினை எழுதி, முறையாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு, அவர்கள் தகுதியுள்ளவர்களாவார்கள். வேறு பணிகளுக்குச் செல்லவும் அவர்களுக்கு வாய்ப்பு உள்ளது. இவ்வாறு பணி நீக்கம் செய்யாமல், அவர்களை தற்காலிக அடிப்படையில் தொடர்ந்து பணியில் நீடிக்க அனுமதித்தால், அவர்கள் உரிய வயது வரம்பைக் கடந்து, வேறு பணிகளுக்குச் செல்லக் கூடிய தகுதியையும் இழந்து விடுவார்கள். தற்போதுள்ள தற்காலிக பணியிலும் அவர்களைத் தொடர்ந்து நிரந்தரமாக நீடிக்க, விதிகளில், வழி வகை இல்லை. பின்னர், ஒரு தேதியில் அவர்களைப் பணி நீக்கம் செய்யும்போது, அவர்கள் வேறு பணிக்கும் செல்லமுடியாமல், மிகுந்த துன்பத்தை அடைய நேரிடும்.

6. இதற்கிடையில், பணிநீக்கம் பெற்ற தற்காலிக இளநிலை ஆய்வாளர்கள் (விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்க தனி அலுவலர்கள்) பணிநீக்க ஆணைகளை எதிர்த்து சென்னை, உயர்நீதி மன்றத்தில், ரிட் வழக்கு (எண் 3889/87), தொடர்ந்துள்ளனர். பணிநீக்க ஆணைகளைச் செயல்படுத்த இடைக்காலத் தடையும் வேண்டியுள்ளனர். அவ்வழக்கு அனுமதி நிலை விசாரணைக்குப் பின் 24-4-87 அன்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.



திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ 890 பேர்களைத் தேர்ந்தெடுத்து வைத்திருக்கின்றார்கள். ஆனால் இப்போது இருக்கின்ற சொசைட்டிகள் 4,500 சொசைட்டிகள் இருப்பது அரசுக்குத் தெரியும். இந்த கோ-ஆப்பரேடிவ் செக்டாரில், பஞ்சாயத்தில் இருக்கின்ற ஈ. ஓ.க்கள்தான் அந்த 5,6 சொசைட்டிகளில் ஸ்பெஷல் ஆபீசர்களாக இருக்கின்றார்கள். அவர்களுடைய வேலையும் போக மேலும் 5, 6 சொசைட்டிகளில் ஸ்பெஷல் ஆபீசர்களாக இருக்கின்றார்கள். இப்போது இருக்கின்ற 890 பேர்களைத் தேர்ந்தெடுத்திருப்பது எம்ப்ளாய்ன்மெண்ட் எக்ஸ்சேன்ஜில் இருந்து கார்டு வந்து அதற்குப் பிறகுதான் தேர்ந்தெடுத்து இருக்கின்றார்கள். அவர்கள் ஏறத்தாழ 450 நாட்கள் வேலை செய்து இருக்கின்றார்கள். நாம் போட்ட சட்டப்படி அவர்கள் 450 நாட்கள் வேலை செய்து இருந்தால் நிரந்தரப்படுத்தப்பட வேண்டும். லேபர் ஆக்டில் 90 நாட்கள் அதாவது 3 மாத காலம் வேலை செய்து இருந்தால் நிரந்தரம் செய்ய வேண்டும். அப்படிப்பட்ட சட்டங்கள் இருப்பினும், வேகன்சி இருப்பினும் நம்முடைய அரசு அவர்களை வேலை நீக்கம் செய்தது சரியல்ல. ஆகவே அதை மறுபரிசீலனை செய்து அவர்களை வேலையிலே அமர்த்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11-20)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அவர்களை வேலையில் சேர்க்கும்போது தற்காலிகம் என்று சொல்லித்தான் சேர்க்கிறோம். நிரந்தரப் பணி அல்ல என்றும் சொல்லியிருக்கிறார்கள். வேலை நீக்கம் என்கிற பிரச்சினை அல்ல. குறிப்பிட்ட காலத்திற்கு என்றுதான் வேலையில் சேர்த்திருக்கிறார்கள். குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு வேலையை விட்டு செல்ல வேண்டும் என்று சொல்லித்தான் நியமிக்கப்பட்டார்கள். ஆகவே இதிலே வேலை நீக்கம் என்பது இல்லை. அநியாயமும் அல்ல. தேர்வாணைக் குழுவின் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், முறைப்படி உரியவர்கள் வந்ததற்குப் பிறகு அவர்களுக்கு இடம் கொடுக்காமல் இவர்களையே தொடர்ந்து அங்கே வைத்திருக்க வேண்டுமென்று சொல்வது நியாயமல்ல. இவர்கள் தேர்வு எழுதி தேர்வாணைக் குழுவின் பட்டியல் மூலமாக மறுபடியும் வேலையில் சேர்வதற்கான வாய்ப்பு உண்டு. இவர்கள் ஹைக்கோர்ட்டுக்குச் சென்று தடையாணை வாங்கவும் முயற்சி செய்தார்கள். ரிட்டும் போட்டார்கள். நீதிபதி விசாரித்தார்கள். அவர்கள் விசாரணை செய்ததில் இவர்களுடைய ரிட்டைத் தள்ளுபடி செய்து விட்டார்கள். ஆக, நியாயம் இவர்கள் பக்கம் இல்லை என்று அங்கேயும் சொல்லி விட்டார்கள். நம்மிடம் கருணை இருக்கிறது. ஆனால் விதி முறை இடம் தரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சோனலராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கைத்தறி உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற பல் வேறு கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்கெனவேயே இங்கே செயல் பட்டுக் கொண்டிருக்கின்றனவே, அவைகளிலே இவர்களைப் பணியில் அமர்த்தி, இவர்களைப் பயன்படுத்திக் கொள்ள அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, எங்கே பயன்படுத்திக் கொண்டாலும் இந்த ஆபத்து என்றைக்கும் வரும். வேலை வாய்ப்புத் துறை மூலமாக வேலை பெற வேண்டுமென்ற ஒரு முறை இருக்கிறது. அது போல தேர்வாணைக் குழுவின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற இன்னொரு முறை இருக்கிறது. ஆகவே, எங்கே இவர்கள் நியமிக்கப்பட்டாலும் தேர்வாணைக் குழுவின் பட்டியல் வெளியே வந்ததற்குப் பிறகு இவர்கள் எங்கேயும் 6 மாதம், 8 மாதம் அல்லது ஓராண்டு தான் பணியில் இருக்க வேண்டிய நிலைமை வரும். ஆகவே, எங்கே நியமிக்கப்பட்டாலும் அங்கேயும் இப்படிப்பட்ட நிலை வரத்தான் செய்யும். அதற்காகத்தான் தற்காலிகம் என்று சொல்லி நியமிக்கிறோம். அந்த வகையில் அவர்களை நேரடியாக நியமிக்கின்றோம். ஆனால் நிரந்தரமாக நியமிக்கத்தான் தேர்வாணைக் குழுவை நாம் வைத்திருக்கிறோம். தேர்வாணைக் குழு மூலம் நியமிக்கப்படுகின்ற அப்படிப்பட்ட நிலைமைகள் வேண்டாம் நாம் யாரை வேண்டுமானாலும் தற்காலிகமாக நியமிக்கலாம் அல்லது நிரந்தரமாக நியமிக்கலாம் என்கின்ற நிலைமைக்கு நாம் வந்தால் என்னென்ன, எது எது நடைபெறும் என்பதைப் பற்றி உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். விதி முறைகள் கட்டிக் காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காகவும், வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் என்கின்ற நிலைமைகள் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காகவும் நாம் இதை எல்லாம் கடைபிடிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**(உ) இராசபாளையத்திலுள்ள மகப்பேறு மருத்துவமனையிலுள்ள அசுத்தமான நிலைமை.**

திரு. கி. ராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளுக்கும், அரசுக்கும் பல முறை முறையிட்டும் இராசபாளையத்திலுள்ள அரசு மகப்பேறு மருத்துவமனை மிக அசுத்தமாக பொதுச் சுகாதாரத்தைப் பாதிக்கும் நிலையில் இருப்பதும் மற்றும் இராசபாளையம் ஒன்றியத்தைச் சார்ந்த ஜமீன் கொல்லங்கொண்டாவிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் அடிப்படை வசதி இல்லாததும் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக்கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:



அறிக்கை.

இராஜபாளையம் நகரிலுள்ள அரசினர் மகப் பேறு மருத்துவமனைக்கு சுற்றுச் சுவர் இல்லாததினால், சுற்றுப்புறமுள்ள மக்கள் அதை கழிப்பிடமாக பயன்படுத்துகிறார்கள் என்றும் மற்றும் சுற்றித் திரிகிற நாய், பன்றி, கழுதை போன்ற மிருகங்கள் மருத்துவமனைகளில் நுழைகின்றன எனவும், இதனால் சுகாதாரக் கேடு உள்ளது என பொது மக்களும் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் முறையிட்டதின் பேரில் அம்மருத்துவமனையைச் சுற்றி சுற்றுச் சுவர் கட்டினால் மேற் குறிப்பிட்ட குறைகளை களைந்து மருத்துவமனையை சுத்தமாக பராமரிக்க முடியும் எனக் கருதி ரூ. 90,000 மதிப்பீட்டில் அம்மருத்துவமனைக்கு சுற்றுச் சுவர் கட்டும் செயற் குறிப்பு அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது. இச் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. இது குறித்து ஆணை வெகு விரைவில் வெளியிடப்பட உள்ளது.

இராஜபாளையம் ஒன்றியத்தைச் சேர்ந்த ஜமீன் கொல்லக்கொண்டாவில் உள்ள ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு அடிப்படை வசதிகளான 6 படுக்கைகள் அமைக்கப்பட்டுள்ளது. பொது மற்றும் நடமாடும் மருத்துவக் குழு தேவைகளுக்காக ரூபாய் 20,000 மும் மற்றும் அதற்கு மேலும் மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன. அரசு மருந்தக கட்டிடங்கள் மற்றும் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. தண்ணீர் வசதி இருக்கின்றது. மேலும் எந்தப் பற்றாக்குறை குறித்தும் எந்தவிதமான தகவலும் அரசால் பெறப்படவில்லை. மேலும் இந்த ஆரம்பச் சுகாதார நிலையத்திற்காக ஏற்படுத்தப்பட்ட பணியிடங்களில் மூன்று மருத்துவ அதிகாரிகளும், ஏனைய பணியாளர்களும் நியமனம் செய்யப்பட்டு பணியாற்றி வருகிறார்கள்.

*திரு. கி. ராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூ. 90 ஆயிரம் மதிப்பீட்டில் சுற்று சுவர் கட்டுவதற்கான செயற் குறிப்பு அரசுக்கு அனுப்பப்பட்டிருப்பதாக விவர அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கனவே, பல ஆண்டுகளாகிவிட்ட நிலையில், எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் மருத்துவமனையைச் சுற்றி சுவர் கட்டி மருத்துவமனையைச் சுகாதாரமாக வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுமா ? இன்றைக்கு அந்த ஆஸ்பத்திரியை சுற்றி முட்செடிகளும், புதர்களுமாய் நிறைந்து காணப்படுகிறது. இதை வெட்டி சுத்தம் செய்வதற்குக் கூட பொதுப் பணித் துறைக்கோ அல்லது மருத்துவத் துறைக்கோ அவர்களுடைய நிதி ஒதுக்கீட்டில் நிதி ஒதுக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். சுற்றுச் சுவர் கட்டும் வரையில், ஆஸ்பத்திரியைச் சுற்றியுள்ள இடத்தைச் சுத்தம் செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிக்கையிலே, விரைவிலே 'அரசு ஆணை பிறப்பிக்கும் என்று இருக்கிறது. எவ்வளவு முடியுமோ அவ்வளவு விரைவில் அங்கே சுற்றுச் சுவர் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கி. ராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜமீன் கொல்லங் கொண்டாவிலுள்ள ஆரம்பச் சுகாதார நிலையத்திலுள்ள நிலைமை பற்றி ஏற்கெனவே புகார்கள் வந்திருக்கின்றன. அங்கே உள்ள உண்மை நிலைமை என்னவென்றால், ஆறு, படுக்கைகளிலே மெத்தை கிடையாது வெறும் துருப்பிடித்த இரும்பு கட்டில்கள் மட்டும் உள்ளன. இருக்கின்ற மெத்தைகளை உபயோகப்படுத்த முடியாத நிலையில், நிராகரிக்கப்பட்டு விட்டன. பெட் ஷீட்டுகள் கிடையாது புதிய பெட் ஷீட்டுகள் வாங்க நிதி ஒதுக்கீடும் கிடையாது. அதோடு, நான் நேரில் சென்று பார்த்தபோது பிரசவத்திற்காக. அங்கே சேர்க்கப்பட்டிருந்த ஒரு அரிசன பெண்மணி, தன்னுடைய சேலையாலேயே தன் உடம்பை மூடிப் போர்த்திக் கொண்டு படுத்திருந்தார். அது போல, அங்கேயுள்ள நோயாளிகளே சில மருந்துகளையும், குளுக்கோஸ் பாட்டிலையும் வெளியிலேயிருந்து வாங்கிக் கொண்டு வரக் கூடிய நிலைமை இருக்கிறது. இதைப் பற்றியெல்லாம் எழுத்து மூலமாக மருத்துவமனை அதிகாரிக்கும், மாவட்ட சுகாதார அதிகாரிக்கும் புகார்கள் எழுதியும், இதுவரை எனக்கு எந்த விதமான பதில் வரவில்லை. இத்தகைய நிலைமைகளை மாற்றியமைக்க, அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கின்ற கட்டில்களுக்கு மெத்தை இல்லை என்று சொன்னார்கள் அதை அரசு நிச்சயம் சீக்கிரத்தில் வாங்கித்தரும் கேட்டால் செய்யப்படும். போர்வை இல்லை என்று சொன்னார்கள். அதுவும் வாங்கித் தரப்படும். மருந்து இல்லை என்று சொன்னார்கள் அதைத்தான் என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இரு தாயிரம் ரூபாய்க்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் மருந்து வாங்கிக் கொடுக்கிறோம். மருந்துகள் அதிகம் இருக்கின்றன என்ற பிரச்சினையே தவிர, இல்லை என்ற பிரச்சினை இல்லை அப்படி எங்கேயாவது தமிழ்நாட்டில் எந்தவொரு மருத்துவமனையிலேயாவது அல்லது ஆரம்ப சுகாதார நிலையத்திலேயாவது மருந்து இல்லை என்று எந்த மருத்துவராவது சொல்வாரேயானால் அதை உடனே வாங்கிக் கொள்வதற்கும் அனுமதி அளித்திருக்கிறோம். மருந்து இல்லை என்றால் கடைத்தெருவிலே வாங்கிக் கொள்ளலாம் வாங்கி பில்லைக் கொடுத்து விடலாம். அந்த அனுமதியையும் பயன்படுத்தாமல், மருந்து இல்லை என்று நோயாளிகளிடம் சொல்லுகின்ற மருத்துவர்கள் யாரேனும் இருந்து, அதுபற்றி புகார் கொடுப்பாரேயானால் இப்பொழுதே சொல்கிறேன், அந்த மருத்துவர் தற்காலிகப் பதவி நீக்கம் செய்யப்பட்டு விசாரணைக்கு உள்ளாக்கப்படுவார்.

(ஊ) பள்ளியிறுதித் தேர்வு அறிவியல் வினாத்தாள் வடிவமைப்பினை மாற்றியதால் மாணவர்கள் பாதிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் இரா. தாமரைக்கனி, மெ. ஆண்டி அம்பலம், எ. தெய்வநாயகம், கே. சுப்பராயன், மா. மணிமாறன், ஜெ. கே. ஜி. பாரதி, ஆகி...



யோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்பு தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "1987 ஆம் ஆண்டு பள்ளியிறுதித் தேர்வில் அறிவியல் வினாத்தாள் வழக்கமான முறைகளுக்கு மாறாக இருந்தது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:—

அறிக்கை.

1987 மார்ச் பள்ளி இறுதித் தேர்வுக்கு (எஸ். எஸ். எல். சி.) தயாரிக்கப்பட்ட அறிவியல் வினாத்தாள் வழக்கமான முறையில் பாடத்திட்டத்தின்படி மாதிரி வினாத்தாள் தயாரிக்கப்பட்ட வடிவமைப்பிலேயே ( Design and Blue print.) தயாரிக்கப்பட்டுள்ளது. கேள்வித்தாளின் அமைப்பில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை. இதன்படி வினாத்தாள் வழக்கப்படி மூன்று பிரிவுகள் கொண்டதாகவே அமைக்கப்பட்டுள்ளது.

பிரிவு I-ல் மிக குறுகிய (Very short Answer type) வினாக்கள் மட்டும் கேட்கப்பட்டு, ஒரு சில வார்த்தைகளில் விடையளிக்குமாறு அமைக்கப்படுவது வழக்கம். ஆனால், சில கேள்விகளுக்கு மட்டும் சில வார்த்தைகளுக்குப் பதிலாக சில வாக்கியங்களில் (Short answer type) விடை அளிக்கும் வகையில் இம்முறை கேட்கப்பட்டுள்ளது. இதனால், குறித்த காலத்திற்குள் மாணவர்கள் விடையளிப்பதில் சிரமம் இருந்ததாக அரசுத் தேர்வு இயக்குநரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு ஏற்பட்ட இந்த இன்னல்களை கவனத்தில் கொண்டு, திருத்தும் முறைகளில் மாணவர்களுக்குத் தகுந்த மதிப்பெண்கள் கிடைக்கும் வகையில், திருத்துபவர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. எனவே, மாணவர்கள் எவரும் இதனால் பாதிக்கப்பட மாட்டார்கள் என அரசுத் தேர்வுகள் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எஸ். எஸ். எல். சி. கேள்வித் தாளில் அறிவியலில் அணுசக்தி பற்றிய கேள்வி வழக்கமாக எட்டு மார்க் அளவிற்கு இருக்கும். மாணவர்களும் தேவையான அளவிற்கு அதிகக் கவனத்துடன் வருவார்கள். ஆனால் இப்பொழுது ஒரு மார்க் மட்டும்தான் அந்தக் கேள்விக்கு இருந்தது. இதுபோன்று மேலும் சில கேள்விகள் ஒரு குறிப்பிட்ட சில பிரிவுக்குள் இருந்ததால் மாணவர்கள் சரியான முறையில் தங்கள் திறமையைக் காட்ட முடியவில்லை. இதைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தத் தேர்வைப் பொறுத்தவரைக்கும், அறிவியல் பாடங்கள் எல்லாவற்றிலுமே அப்படி வினாத் தாள்கள் கடினமான முறையாகவோ வழக்கமான முறைக்கு மாறாகவோ அமையவில்லை. கெமிஸ்ட்ரி, பிசிக்ஸ் ஆகிய இரு வினாத் தாள்களைப் பொறுத்தவரைக்கும் கடந்த ஐந்தாண்டுக் காலத்திலே இருந்ததைவிட மிகச் சுலபமாகவே வினாக்கள்தான் இருந்தன என்று அறிய வந்திருக்கிறது. ஆனால் கணிதத்தைப் பொறுத்த வரைக்கும் Very short answer questions and short answer questions. என்று இருவிதக் கேள்விகளில் போதிய நேரம் பற்றாத காரணத்தால் ஒரு ஐந்து மார்க், பத்து மார்க் அளவிற்கு மாணவர்களால் அந்தக் குறைந்த காலத்தில் எல்லாவற்றிற்கும் பதில் அளிக்க முடியவில்லை என்ற தகவல் வந்திருக்கிறது. வினாத்தாள்களெல்லாம் சிலபஸுக்கு உட்பட்டுத்தான் கேட்கப்பட்டு தயாரிக்கப்பட்டிருக்கின்றன. இதை அரசு ஆய்ந்து வருகிறது.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1987 ஆம் ஆண்டு பள்ளியிறுதித் தேர்வில் அறிவியல் வினாத்தாள் வழக்கமான முறைகளுக்கு மாறாக இருந்தது குறித்து, குறிப்பில் இறுதியில் அறிவித்த பிரகாரம் அரசு தகுந்த நடவடிக்கையெடுத்து மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்களைக் கவனித்து வினாக்களுக்குத் தகுந்த முறையில் மதிப்பெண்கள் அளிக்க உதவுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. சுப்பராயன் : பேரவைத் தலைவரவர்களே, பள்ளியிறுதித் தேர்வாக இருப்பதால் இந்த அறிவியல் தேர்வில் அவர்கள் தேர்ச்சியுறுவது கூடப் பாதிக்கப்படலாம் என்று மாணவர்கள் அஞ்சுகிறார்கள். எனவே, மிகக் குறைந்த மார்க் வித்தியாசத்தில் அதாவது விளிம்பு நிலையில் தேர்ச்சி பெறத் தவறுகிற அறிவியல் பாடத்தில் தவறுகிற மாணவர்களிடம் அனுதாபம் காட்டி அவர்கள் தேர்வு பெற்றதாக அறிவிக்கின்ற முறையில் அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப் போல, வினாதாள் அனைத்துமே சிலபஸுக்கு உட்பட்டுத்தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன. விளிம்பிலே குறைந்த எண்கள் பெறுகின்ற மாணவர்களுக்கு மட்டும் மார்க் என்று வருகின்ற பொழுது அதிக எண்கள் பெறுபவர்களுக்கும் மார்க் போட்டு ஆக வேண்டும். There cannot be a discrimination. தேர்வுகளெல்லாம் இப்பொழுது முடிந்து விட்டன ; அதாவது ஆசிரியர்கள் அதைச் சரிபார்ப்பதை முடித்திருக்கிறார்கள். கம்ப்யூட்டரிலே பீட் செய்து கம்ப்யூட்டரிலிருந்து நமக்கு விவரங்கள் தெரியும். குறைந்த பட்சமான எண் அதிகம் பேர் பெற்றிருக்கிறார்கள் என்பது தெரிய வருமானால், எல்லோருக்கும் சராசரியாக ஐந்து மார்க்கோ பத்துமார்க்கோ போடலாம். காரணம் அவர்கள்



அந்த ஐந்து மார்க்கோ பத்து மார்க்கோ பெறும் அளவிற்கு நேரம் போதவில்லை என்பதுதான் அவர்கள் கூறுகிற குறை. இதுகாறும் கல்லூரிகளைச் சேர்ந்த பேராசிரியர்கள் வினாக்களைத் தயாரித்தார்கள். தற்போது ஆசிரியர் சங்கங்களினுடைய வேண்டுகோளுக்கேற்ப, பள்ளி ஆசிரியர்களிலேயிருந்துதான் இந்த ஆண்டு வினாக்களைத் தயாரித்திருக்கிறார்கள். அவர்கள் அந்தப் பாடத்திட்டத்திற்கு உட்பட்டு வினாக்களைத் தயாரித்திருப்பதாகச் சொல்கிறார்கள். சரி பார்த்ததிலேயும் அதுதான் உண்மையாகத் தெரிகிறது. கம்ப்யூட்டர் மூலமாகத் தேர்வினுடைய முறை எப்படியிருக்கிறது, எந்த அளவிற்குச் செய்திருக்கிறார்கள் என்பது தெரிந்த பிறகு எல்லோருக்கும் சமமான ஒரு முடிவினை எடுக்க அரசு பரிசீலிக்கும்.

(முற்பகல் 11-30.)

(எ) திருச்சி ''பி.எச்.இ.எல். '' நிறுவனத்திற்கருகிலுள்ள அரசுக் கல்லூரியை மூடுவதாக வந்துள்ள செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் எ.எஸ்.ஏ. ஆறுமுகம், எம். அண்ணாதாசன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' திருச்சி மாவட்டம் திருவெறும்பூர். வட்டாரத்தில் பாரத மின்மிகு தொழிலகம் (பி.எச்.இ.எல்.) அருகிலுள்ள அரசு கலைக் கல்லூரியை அரசு மூடிவிட உத்தேசித்திருப்பதாக வந்த செய்தியால் அப்பகுதியில் வாழும் மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

திருச்சி 22 திருவெறும்பூரில் உள்ள அரசு கல்லூரியை மூடுவதற்கான கருத்துரு ஏதும் இல்லை.

*திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கல்லூரியை மூடிவிட உத்தேசித்து இருப்பதாக கருத்துரு எதுவும் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், அங்கேயிருந்து வந்திருக்கிற செய்தி என்னவென்றால்— அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்களின் தேவை கருதி அரசு கலைக்கல்லூரியை அமைத்துச்

செயல்படுத்தி வருகிறது. தேவையான கட்டிட வசதி, தங்கு வதற்கான விடுதி வசதி, மக்கள் விரும்பும். பாடம் இப்படி ஏது வுமே இல்லாமல் இருப்பதால் அங்கே மாணவர்கள் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருக்கிறது. இதைக் காரணமாக வைத்து இந்தக்கல்லூரியை மூட இருப்பதாக அங்கே இருக்கின்ற அனைத்து தொழிற் சங்கத்தைச் சேர்ந்தவர்களும் கையெழுத்திட்டு அனுப்பி யிருக்கிறார்கள் என்பதை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மேற்குறிப்பிட்ட அந்த எண்ணம் அர சுக்கு இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப் பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் கூறிய கூற்றினைப் பொறுத்த வரையில் அணுவளவும் ஆதாரம் இல்லை. இருக்கின்ற கல்லூரியை மூடக்கூடிய நோக்கம் அரசுக்கு இல்லை. அத்தகைய செயற் குறிப்பு எதுவும் தற்போது அரசிடம் இல்லை.

திரு. எம். அண்ணாநாதன் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, என்னுடைய தொகுதியாகிய திருவெறும்பூர் தொகுதியில் இருக்கின்ற அரசு கலைக் கல்லூரியை மூடிவிடுவதாக உள்ள பரவலான செய்தி பற்றிப் பத்திரிகைகளில் வந்ததால் அந்தத் தொகுதியின் மக்கள் மத்தியில் அது ஒரு பெரிய அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அங்கே ஆசிரியர்கள் வந்து என்னைப் பார்த்தார்கள். இதுபோன்ற நடவடிக்கை எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை என்று நான் சொன்னேன். அதற்குப் பிறகும் இந்த விளம்பரம், செய்தி வந்திருக்கிறது. எனவே, இதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தக் கல்லூரி இருக்கக்கூடிய இடம், பாய்லர் தொழிற்சாலை, இன்ஜினியரிங் கல்லூரி, ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ், துப்பாக்கித் தொழிற்சாலை என்று மக்கள் பெருக்கம் அதிகமாக உள்ள, தொழிலாளர்கள் நிறைந்த பகுதியாக இருப்பதால் அந்தக் கல்லூரியில் இடவசதி பற்றாக்குறை மற்றும் மாணவ, மாணவி யருக்கான வசதி போதாமை போன்ற நிலைமைகள் இருப்பதைத் தவிர்க்க வேண்டும். இப்படிப்பட்ட காரணங்களால் மாணவர் கள் அங்கே சேருவது குறைவாக இருப்பதாகச் சொல்கிறார்கள். அதனை நல்ல முறையில் செய்து, மாணவர்கள் அதிகமாகச் சேர்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து அந்தக் கல்லூரியை நல்ல முறையில் செயல்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைக் கல்லூரிகளில் மாணவர்களின் எண் ணிக்கை குறைந்து கொண்டு வருவது என்பது இந்த ஒரு கல்லூரிக்கு மட்டும் பொருந்தும் என்று இல்லை. பொதுவாக தற்போது பலன் ஈர்க்கின்ற தன்மை இல்லாமல் இருக்கின்ற காரணத்தால் கலைக் கல்லூரிகளில் மாணவர்கள் சேர்கின்ற எண்ணிக்கை மிக வும் குறைந்து கொண்டு வருகிறது. ஒரு இலட்சத்து 70 ஆயிரத் திற்கு மேற்பட்ட பட்டப்படிப்பு படித்தவர்கள் கூட பல்லாண்டு



களாக வேலை வாய்ப்பு இல்லாத நிலையில் இருந்து கொண் டிருக்கின்ற நிலைமை ஏற்பட்டிருப்பது பற்றிக்கூட இந்த அவை யில் எழுப்பப்பட்டிருக்கிறது. Arts Education has already outlived its utility. இதன் காரணமாகத்தான் தற்போது புதிய கல்விக் கொள்கையை ஒட்டி Need-based education என்ற முறையில் பட்டப் படிப்பினை முடித்துவிட்டு வெளியே வந்தவுடன் அவர்களுக்கு வேலை கிட்ட வேண்டும் ; அல்லது சுய வேலை வாய்ப்பை ஏற்படுத்தி அந்த வகையில் தானும் வேலை பெற்று பிறருக்கும் வேலை தரக்கூடிய வகையில் படிப்பு அமைய வேண்டும் என்று தற்போது டாக்டர் வி. சி. குழந்தைசாமி அவர் களுடைய தலைமையில் போடப்பட்டிருக்கின்ற குழு ஒரு மாற்றுப் பரிகாரத்தை அரசுக்குத் தர இருக்கிறது. 1988-89 ஆம் ஆண்டிலிருந்து சிலபஸ் அன்ட் கோர்ஸஸ் என்ற அடிப்படை யில் படிப்பினை மாற்றுகிறபோது இந்தப் பிரச்சினை எழாது. எல்லா கல்லூரிகளுக்கும் அப்போதுதான் மாணவர்கள் அதிக மாக வர முடியும். கலைக் கல்லூரியைப் பொறுத்த வரையில் தற்போது மாணவர்களிடம் உற்சாகம் இல்லாமல் இருப்பதற்குக் காரணம் வேலை கிடைக்கவில்லை என்பதுதான்.

(ஏ) மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் நிர்வாகம் கதவடைப்புச் செய்துள்ளதால் தொழிலாளர் பாதிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் கே. அன் பழகன், ஆர். ரெங்கசாமி, எஸ். கோவிந்தசாமி, கே. சுப்ப ராயன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர் மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சரின் கவனத் திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. கே. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் நிர்வாகம் கதவடைப்பு செய்துள்ளதால் இதில் பணிபுரியும் சுமார் 2,300 தொழிலாளர்கள் வேலையிழந்துள்ள நிலையில் அவர்களின் குடும்பங்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் இண்டஸ்டிரீஸ் சேலத்தை அடுத்துள்ள மேட்டூரில் இயங்கி வருகிறது. இவ்வாலையில் 29,688 கதிர்களும், 654 தறிகளும் இயங்கி வந்தன. இது தவிர, ஒரு டன் துணி தைக்கும் நூலும் இது உற்பத்தி செய்து வந்தது. தற்போதுள்ள நிர்வாகம் இவ்வாலையை 1-3-1983 அன்று மேற்கொண்டது. இவ்வாலை 16-4-1985 முதல் மூடப்பட்டு இருக்கிறது. இவ்வாலையில் மொத்தம் வேலை செய்யும் தொழிலாளர்களின் எண்ணிக்கை 2,400.

2. இவ்வாலை மூடப்பட்டதற்கான முக்கிய காரணங்கள் அதிகப்படியான வேலை ஆட்களும், குறைந்த வேலைப் பளுவும், நிர்வாகத் திறமையின்மை, நிதி நிலைமையில் கட்டுப்பாடு இல்லாது இருத்தல், ஆஸ்தியை விட பொறுப்புகள் அதிகமாக இருப்பவை ஆகியவைகளாகும். மேற்கண்ட காரணங்களால் இவ்வாலை மூடப்பட்டுள்ளது.

3. இதனை மீண்டும் திறப்பதற்கான வாய்ப்பை கண்டறிவதற்காகக் கைத்தறி இயக்குநரால் ஒரு குழு நியமிக்கப்பட்டது. இக்குழு 19-2-1987 அன்று ஆலைக்குச் சென்றது. அதன் பிறகு ஆலைக்கு பண உதவி செய்த நிதி நிறுவனங்களுடன் கலந்து உரையாடியது. தவணைக் கடன்களின் மீதான வட்டியைக் குறைத்தல், ஏற்கனவே தவணை கடந்துள்ள அசலையும், வட்டியையும் ஒன்றுபடுத்தி இலகுவான நீண்டகால தவணைகளில் திருப்பியளிப்பது பற்றி ஆராய்ந்தது. வங்கியின் பிரதிநிதிகள் தங்களுக்கு சேரவேண்டிய தொகை குறித்தான விவரங்களை அளிப்பதாகவும் ஆலோசிக்கப்பட்ட சலுகைகளைப் பற்றி தலைமை அலுவலகங்களை கலந்து ஆலோசித்து தகவல் அளிப்பதாகவும் கூறிச் சென்றார்கள். இதற்கிடையில் தொழிற்சாலையின் தொழிற்சங்கத் தலைவர்கள் குழுவினரைச் சந்தித்தார்கள்.

4. ஆலையினுடைய இயந்திரங்களின் தன்மை பற்றியும் அதனுடைய மொத்த உற்பத்தித்திறன் பற்றியும் கண்டறிவதற்குக் குழு தலத்திற்குச் சென்ற பொழுது ஆலை நிர்வாகத்தின் சார்பாக யாரும் ஆஜராகாத காரணத்தாலும் ஆலையின் பாக்டரியின் கதவுகள் பூட்டப்பட்டு சீல் வைக்கப்பட்டிருந்ததாலும் இயந்திரங்களின் தன்மை பற்றி கண்டறிந்து வர குழுவால் இயலவில்லை.

5. தொழிலாளர்களிடமிருந்து எந்த அளவுக்கு மில்லைத் திறப்பதற்கு ஒத்துழைப்பு கிடைக்குமென்று கண்டறிவதற்கும் மற்ற மூடிக் கிடந்த ஆலைகளைத் திறந்து வைத்த பொழுது தொழிற்சாலையிலுள்ள தொழிலாளர்கள் தானாகவே முன்வந்து செயல்படுத்திய ஊதியக்குறைப்புத் திட்டம் போன்றவற்றை செயல்படுத்துவது குறித்து பேச்சு வார்த்தை நடத்துமாறும் தொழிலாளர் நல இணை ஆணையர் அவர்களிடம் கேட்டுக்



கொள்ளப்பட்டுள்ளது. அவரும் தொழிலாளர்கள் பிரதிநிதிகள்
கூட்டம் கூட்டி இது குறித்துப் பேசுவார். எனவே இவ்வாலையை
லாபகரமாக நடத்த முடியுமா, முடியாதா என்பதற்கான
சாத்தியக் கூறுகள் ஆய்ந்து வரப்படுகின்றன.

திரு. கே. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, விவர அறிக்கையில் தெரிவித்துள்ளவாறு மாண்பு
மிகு அமைச்சர் அவர்கள் ஆலையைத் திறப்பதற்காக எடுத்துள்ள
முயற்சிகளை வரவேற்கிறேன். மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் கடந்த
2 ஆண்டுகளாக மூடப்பட்டுள்ளதால் தொழிலாளர்கள் பெரிதும்
பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சாப்பிடுவதற்குக் கூட வழி இல்
லாமல் கஷ்டப்படுகிறார்கள். தொழிலாளர்களின் குழந்தைகள்
படிப்பைத் தொடரக் கூட முடியாத நிலைமை இருந்து வருகிறது.
கைத்தறி இயக்குநரால் அமைக்கப்பட்ட ஒரு குழு அந்த ஆலை
யைப் பார்ப்பதற்குக் கூட நிர்வாகம் ஒத்துக் கொள்ளவில்லை.
அரசோடும் நிர்வாகம் ஒத்துழைப்பதாகத் தெரியவில்லை. அத்
தோடு அந்த ஆலையில் உள்ள நல்ல இயந்திரங்களையெல்லாம்
வேறு இடத்திற்கு அப்புறப்படுத்த முயற்சிகள் நடைபெறு
வதாக தொழிலாளர்கள் சொல்லுகிறார்கள். ஆகவே குஜ
ராத்தைப் போன்று தமிழக அரசே மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ்
நிறுவனத்தை எடுத்து நடத்த முன் வரவேண்டும். அதற்கு
சாத்தியக்கூறு இல்லை என்று சொன்னால், ஆலையைத் திறக்கும்
வரையில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு இடைக்கால
நிவாரணம் வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, நேற்றே மானியக் கோரிக்கையில்
பேசும்போது இதைப் பற்றியெல்லாம் விரிவாகப் பதில் சொல்லி
யிருக்கிறேன். மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் மட்டுமல்ல, பத்து பஞ்
சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. மத்திய அரசினர் நலிவுற்ற
எந்த ஆலையையும் தேசியமயமாக்கப் போவதில்லை என்று
திட்டவட்டமாக அறிவித்து விட்டார்கள். மாநில அரசும்
எந்த ஆலையையும் தேசிய மயமாக்கப் போவதில்லை.
ஒன்றிரண்டு நூற்பு ஆலைகள்—பவானி, ஸ்ரீ ஹரி ஆலைகளின்
நிர்வாகத்தோடு அரசின் சார்பிலே இயக்குநர்களை நியமித்து
ஜாயின்ட் மேனேஜ்மெண்ட்டிலே எடுக்கப்பட்டிருக்கின்றன. அத்
தோடு அரசாங்கம் பெரிய அளவிலே முதலீடு செய்யாமல் மிகக்
குறைந்த கன்செஷன்களோடு, அதுவும் அந்த ஆலைகளைத்
திறப்பதால் லாபகரமாக இருக்கும் என்று தெரிந்தால், அந்த
ஆலையை மட்டும்தான் எடுத்துச் செய்ய முடியும். இந்த
ஆலையைப் பொறுத்த வரைக்கும் மாண்புமிகு உறுப்பினர் சொன்
னது போல் இயக்குநருடைய தலைமையில் ஒரு குழு போடப்
பட்டிருக்கிறது. ஆலையினுடைய நிர்வாகம் முதலிலே அந்த
ஆலையைத் திறந்து அவர்களைப் பார்ப்பதற்குக் கூட அனுமதிக்க
வில்லை. கேட்டையே பூட்டி இருந்தார்கள். இப்போது பேச்சு
வார்த்தை நடத்த முன் வந்திருப்பதாகத் தகவல் கிடைத்திருப்ப

தாக அதிகாரிகள் சொன்னார்கள். எனவே மீண்டும் இந்த ஆலைகளைத் திறக்க முடியுமா என்பதைப் பற்றியும் அந்த ஆலைகளுக்குக் கடன் கொடுத்திருக்கிற வங்கிகளின் பிரதிநிதிகளோடு பேசி அரசு இது குறித்து பரிசீலிக்கும்.

திரு. கே. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற அறிக்கையிலிருந்து ஆட்குறைப்பு, சம்பள வெட்டு போன்ற விஷயங்களைத்தான் முதலாளிகள் வற்புறுத்துகிறார்கள் என்பது தெரிகிறது. நான் அரசுக்கு ஒரு விஷயத்தைக் கவனப்படுத்த விரும்புகிறேன் அத்தகைய முதலாளிகளின் கோரிக்கைகளை நாம் அனுமதிக்க ஆரம்பித்து விட்டால் இருக்கின்ற நல்ல ஆலைகளையும் நலிந்த ஆலைகளாக ஆக்கி, சம்பள வெட்டு செய்வதற்கும், ஆட்களைக் குறைப்பதற்குமான நடவடிக்கைகளை முதலாளிகள் எடுத்து விடுவார்கள். ஆகவே, அத்தகைய கோரிக்கைகளை நிராகரித்து மீண்டும் அதை மறு பரிசீலனை செய்து தமிழ்நாடு பஞ்சாலைக்கழகத்தின் மூலம் இந்த ஆலையை எடுத்து நடத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப் போல ஒரு ஆலையைத் திறக்க வேண்டும் என்ற நிலை ஏற்படுகிற போது முதலாளிகளின் சார்பிலே சிலவற்றை விட்டுக் கொடுத்தும், அதேபோல கடன் வழங்குகிற நிதி நிறுவனங்களின் சார்பிலே அபராத வட்டி போன்றவற்றை விட்டுக் கொடுத்தும், தொழிலாளர்களின் சார்பிலே சிலவற்றை விட்டுக் கொடுத்தும் வருகிற போதுதான், அந்த ஆலையைத் திறப்பதற்கு வேண்டிய வசதி ஏற்படும் என்ற அடிப்படையில் இந்தக் கருத்துரு பரிசீலிக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பழகன் அவர்களுக்குப் பதில் சொல்லும்போதே சொன்னேன், மத்திய அரசு எந்த நலிவுற்ற ஆலையையும் தேசியமயமாக்கப் போவதில்லை என்று.

குஜராத் பேட்டர்ன் பற்றிகூடச் சொன்னார்கள். குஜராத் பேட்டர்னில் முதலில் கடனாகக் கொடுத்து விட்டு பின்னர் திட்ட நிதி ஒதுக்கீட்டிலே இருந்து அந்தப் பணத்தைக் கழித்து விடுகிறார்கள். அதைத் தான் நேற்றுக்கூடச் சொன்னேன். 500 பேர்களுக்கு உதவி செய்வதற்காக 500 கோடி பேருக்குத் தீங்கு ஏற்படுத்த முடியாது என்று சொன்னேன். எனவே தான் இந்த குஜராத் பேட்டர்னுக்கு தமிழ்நாட்டில் மட்டும் அல்ல இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் வரவேற்பு இல்லை. யாரும் அதை ஆதரித்து அதன் அடிப்படையில் கடன் பெறவில்லை. தமிழக அரசு தேசிய மயமாக்கும் என்ற பிரச்னையும் தற்போது இதில் இல்லை. ஏனென்றால் பல கோடி ரூபாய் செலவாகும். இந்த ஆலையை மட்டும் எடுத்துக் கொண்டால் கூட 10 கோடி

(முற்பகல் 11—40).

ரூபாய் செலவு ஆகும். 10 ஆலைகள் திறப்பதென்றால் 50 கோடி, 60 கோடி ரூபாய் தேவைப்படும். அதை மாநில அரசின் நிதியாதாரத்திலிருந்து நிச்சயமாக செய்ய முடியாது. எனவே அந்தந்த ஆலைகளைத் தனித்தனியாகப் பரிசீலனை செய்து



சிறிய உதவியோடு, அதே நிர்வாகிகளைக் கொண்டு, அரசினுடைய இயக்குநர்களைக் கொண்டு 'ஜாயின்ட் மானேஜ்மெண்ட்' என்ற அளவில் நடத்த முடியுமா என்று பார்த்து, அந்த ஆலைகளின் நிலைமைகளை ஆராய்ந்ததற்குப் பின்னால் அரசு முடிவு செய்யும்.

திரு. ஆர். ரெங்கசாமி : தலைவர் அவர்களே, இது குறித்து ஒரு கேள்வியைக் கேட்க அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு கட்சிக்கு ஒரு உறுப்பினர் என்று தான் அனுமதிக்கப்படுகிறது, விதி அப்படி இருக்கிறது. உங்கள் கட்சியில் திரு. அன்பழகன் அவர்கள் கேள்வி கேட்டார்கள். பிறகு திரு. சுப்பராயன் அவர்கள் கேள்வி கேட்டார்கள். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில்தான் இதை நடைமுறைப்படுத்தி இருக்கிறேன். (குறுக்கீடு) நான்கு உறுப்பினர்கள் சேர்ந்து எழுதிக் கொடுத்தால் இப்படித் தான் இருக்கும். தனியாகக் கொடுத்திருந்தால் உங்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும். (குறுக்கீடு) 100 கவன ஈர்ப்புகளுக்கு பதில்கள் வந்திருக்கின்றன. இன்றைக்கும் நாளைக்கும் அவற்றை எப்படி எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லுங்கள். இன்றைக்கு 10 கவன ஈர்ப்புகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த 100 கவன ஈர்ப்புகளை எப்படி எடுத்துக்கொள்வதென்று எல்லா உறுப்பினர்களும் சேர்ந்து சொல்வீர்களானால் இன்றைக்கோ நாளைக்கோ எடுத்துக்கொள்ளலாம். அமருங்கள். இப்போது அடுத்த கவன ஈர்ப்பு.

### (ஐ) தென்னாற்காடு மாவட்டத்தில் துணை மின் நிலையங்கள் அமைக்கப்படாததால் விவசாயிகளுக்கு ஏற்படும் இன்னல்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் எஸ். சிவராமன், சு. சிவராஜ் ஆகியோர் ஒரே பொருள் குறித்து ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. எஸ். சிவராமன் : தலைவர் அவர்களே, ''தென்னாற்காடு மாவட்டம், சங்கராபுரம், ரிஷிவந்தியம் ஒன்றியப் பகுதிகளில் துணை மின்நிலையம் அமைக்கப்படாததால் அப்பகுதி விவசாயிகளுக்கு சீரான மின்சாரம் கிடைக்கப் பெறாமல் விவசாயிகள் படும் இன்னல்கள் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

சங்கராபுரம் ஒன்றியம் மற்றும் ரிஷிவந்தியம் ஒன்றியத்தின் ஒரு பகுதியில் மின்னழுத்த நிலையினைச் சீராக்க சங்கராபுரத்தில் ஒரு 110 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைப்பதற்குத் தமிழ்நாடு மின்சார வாரியம் முடிவு எடுத் துள்ளது. இத்துணை மின் நிலையத்தினை அமைப்பதற்கு நிலத்தை கையகப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு வரு கிறது. இதற்கு சில நிலச்சொந்தக்காரர்கள் நிலத்தை அளிக்க மறுத்ததால் மாற்று நிலம் கையகப்படுத்த முடிவு செய்யப் பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்துதலை விரைவில் முடித்து நடப்பு ஆண்டிலேயே 1987–88 துணை மின் நிலையப் பணி யினைத் துவக்கி செப்டம்பர், 1988 வாக்கில் முடிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

திரு. எஸ். சிவராமன் : தலைவர் அவர்களே, இந்தவிவர அறிக்கையிலிருந்து நிலங்கள் கையகப்படுத்தல் பணி தாமதப் படுத்தப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. நிலம் கையகப்படுத்து தலை விரைவில் முடித்து நடப்பு ஆண்டிலேயே 1987–88-ஆம் ஆண்டில் துணை மின் நிலையப் பணியினைத் துவக்கி செப்டம்பர் 1988 வாக்கில் பணியினை முடிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்திருக்கிறார்கள். நிலத்தைப் பொறுத்தவரையில் அங்கேயிருக்கிற விவசாயிகளே தனிப்பட்ட நபர்களிடமிருந்து நிலப் பத்திரம் எழுதி வாங்கி அரசாங்கத்திற்கு ஒப்படைத்து விட்டார்கள். ஆனாலும் இதில் ஏனோ காலதாமதம் ஏற் பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தினுடைய மதிப்பீடு எவ்வளவு, இது எப்போது துவக்கப்படுமென்ற விவரங்களை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர் களே, சங்கராபுரம் ஒன்றியம் மற்றும் ரிஷிவந்தியம் ஒன்றி யத்தின் பகுதியில் மின்னழுத்த நிலையினைச் சீராக்க சங்கரா புரத்தில் ஒரு 110 கிலோ வோல்ட் துணை மின்நிலையம் அமைக்க ஒன்பது ஏக்கர் 45 சென்ட் நிலம் வேண்டியிருக்கிறது. நிலத்தின் உரிமையாளர்களில் நால்வர் தங்கள் நிலத்தைத் தர மறுத்ததால் அரசு வேறு சில நிலங்களை 3 ஏக்கர் 34 சென்ட்டை கையகப்படுத்தியிருக்கிறது. ஆட்சேபணை செய்த வர்கள் அல்லாமல் வேறு ஏற்கனவே கையகப்படுத்தப்பட்ட நிலத்தின் அருகேயுள்ள நிலத்தைக் கையகப்படுத்த, 5 ஏக்கர் 23 சென்ட் கையகப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன் மின்நிலையம் கட்டுவதற்கு நடவடிக்கையெடுக்கப்படும்.

திரு. சு. சிவராஜ் : தலைவர் அவர்களே, சங்கராபுரம் ஒன்றியம் மற்றும் ரிஷிவந்தியம் ஒன்றியத்தின் ஒரு பகுதியில் புதிய துணை மின் நிலையம் துவங்கவிருப்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சங்கராபுரம், ரிஷி வந்தியம் பகுதிகளில் நிலத்தடி நீரை விவசாயத்திற்கு; நம்பி



இன்றைய தினம் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மின் சார மோட்டார்கள் நீரை இறைத்துக் கொண்டிருக்கிறபோது குறைந்த மின் அழுத்தம் காரணமாக மோட்டார்களின் காயில் போன்ற பாகங்கள் எரிந்து விடுகிற நிலைமை இருந்து கொண் டிருக்கிறது. இதனால் அந்தப் பகுதியில் இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்கள் பெரிதும் பாதிப்பிற்கு உள்ளாகியிருக் கிறார்கள். ஆகவே சங்கராபுரம் ரிஷிவந்தியம் பகுதியில் விரைவாக இந்த ஆண்டே துணை மின் நிலையத்தைத் துவக்கு வதற்கு முயற்சி மேற்கொள்ளப்படுமா, இந்தத் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர் களே, மின் அழுத்தக் குறைவினால் விவசாயம் ஓரளவிற்குப் பாதிக்கப்பட்டிருப்பது என்பது உண்மையாகும். நடப்பாண்டில் நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன் துணை மின் நிலையம் அமைக்க நடவடிக்கையெடுக்கப்படும்.

(ஓ) பெரம்பலூர் மதனகோபாலசாமி கோயில் நிர்வாகத்தி லுள்ள குறைபாடுகள்.

டாக்டர் க. நல்லமுத்து : தலைவர் அவர்களே, ''பெரம்ப லூர் அருள்மிகு மதனகோபாலசாமி கோயில் நிலங்கள் விற்கப்படுதல், குறைந்த குத்தகைக்கு விடப்படுதல், கோயிலுக்குச் சொந்தமான வீடுகளுக்கு தனி நபர் வசூல் செய்தல், கோயிலின் சிலை உண்மையானதா ஆகியவை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ் வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர் களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக் கிறேன் :

அறிக்கை.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், பெரம்பலூர் வட்டம் மற்றும் நகர் அருள்மிகு மதனகோபாலசாமி திருக்கோவிலுக்கு கீழ்க்கண்டவாறு நிலங்கள் இருந்தன: —

| | | ஏக்கர். | செண்டு. |
|---|---|---|---|
| நஞ்சை | .. | 22 | 37½ |
| புஞ்சை | .. | 261 | 33 |
| கூடுதல் | .. | 283 | 70½ |

இந்த நிலங்களில் 2.24 ஏக்கர் புஞ்சை நிலம் மட்டும் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்திற்கு இந்துசமய அற நிலைய ஆட்சித்துறை ஆணையர் அனுமதி பெற்று விற்பனை செய்யப்பட்டுள்ளது. மீதி நிலங்கள் அனைத்தும் கீழ்க்கண்ட விவரப்படி குத்தகைக்கு விடப்பட்டுள்ளன:—

| | ஏக்கர் செண்ட். | குத்தகைதாரர். | குத்தகை விபரம் | | |
|---|---|---|---|---|---|
| | | | கலம். | மரக்கால் | படி |
| நஞ்சை | 22.37½ | 28 | 1,266 | 5 | 7 |
| புஞ்சை .. | 259.09 | 112 | ரூ. 9,718.45 | | |

2. மேற்படி திருக்கோவிலுக்குச் சொந்தமான நிலங்கள் யாவும் பொது பொறுப்புக் கழகச் சட்டத்தின் கீழ் (Public Trust Act) பதிவு செய்யப்பட்டு குத்தகைதாரர்கள் வசம் உள்ளன. அவர்களை வெளியேற்ற இயலாது. ஆண்டுதோறும், குத்தகைக்கு நிலங்களை மாற்றி மாற்றி விடமுடியாது. தனிப்பட்ட முறையில் நிலங்கள் யாருக்கும் குத்தகைக்கு விடப்படவில்லை. விடவும் முடியாது. குத்தகைதாரர்கள் பாக்கி வைத்தால், வருவாய்த்துறை நீதிமன்றம் (Revenue Court) மூலம் வழக்கு தொடர்ந்து டிகிரி பெற்று நிறைவேற்று மனு மூலம் நிலம் கைப்பற்றிய பிறகே மறு ஏலம் விடமுடியும்.

3. இத்திருக்கோவிலுக்குச் சொந்தமான 40 கட்டிடங்களுக்கு நியாய வாடகைக் குழுவினரால் நிர்ணயம் செய்யப்பட்ட நியாய வாடகைக்கே விடப்பட்டுள்ளன. இந்த கட்டிடங்களுக்கும் கோவிலுக்குச் சொந்தமான மனைகளுக்கும் வாடகையை திருக்கோவில் பணியாளர்கள் மூலமே வசூல் செய்யப்படுகிறது. தனி நபர்கள் யாரையும் வசூலிக்க ஈடுபடுத்துவதில்லை.

4. மேற்படி கோவிலுக்குச் சொந்தமான நிலங்களில் கீழ்க்கண்ட அமைப்புகளுக்கு தமிழ்நாடு அறநிலைய சட்டம் 22/1959 பிரிவு 34ன் கீழ் நிலம் விற்பனைக்கு கேட்டு விற்பனை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது:—

| | ஏ.செ. |
|---|---|
| 1. பெரம்பலூர் தபால் மற்றும் புறநிலைய ஊழியர் சங்கத்திற்கு .. .. .. .. | 5.50 |
| 2. பெரம்பலூர் வட்ட கூட்டுறவு சங்கம் .. .. | 1.07 |
| 3. பெரம்பலூர் ஊராட்சி ஒன்றிய பணியாளர் சங்கம் .. .. .. .. .. | 3.00 |
| 4. பெரம்பலூர் வட்ட அண்ணா கூட்டுறவு சங்கம் | 2.00 |
| 5. பெரம்பலூர் அஞ்சலக அலுவலகம் .. .. | 1.17 |
| 6. தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகம் .. | 0.75 |
| 7. தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம் .. | 4.40 |
| | 17.89 |



இவைகள் இன்னும் விற்பனை செய்யப்படவில்லை

5. கோவிலில் 16 செப்புத்திருமேனிகள் உள்ளன. இவைகள் உண்மையானவை. மேலும் இவைகள் அனைத்தும் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. அன்றாட பூசை நைவேத்தியங்கள் முறையாக நடைபெறுகின்றன. திருமேனிகள் தொல்பொருள் துறையிலும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவைகளுக்கு புகைப்பட ஆல்பமும் தயார் செய்து வைக்கப்பட்டுள்ளது.

டாக்டர் க. நல்லமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையில் வெகுவாக உண்மைகள் மறைக்கப்பட்டு இருக்கின்றன. உண்மைக்கு நேர் விரோதமான கருத்துக்கள்கூட தரப்பட்டு இருக்கின்றன. அங்கே, பெரம்பலூர் தபால் மற்றும் புறநிலைய ஊழியர் சங்கம், பெரம்பலூர் வட்ட கூட்டுறவுச் சங்கம், பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியப் பணியாளர் சங்கம், பெரம்பலூர் வட்ட அண்ணா கூட்டுறவுச் சங்கம் என்ற பெயர்களில், ஒரு பெரும் புள்ளியினுடைய பின்னணியில் சுயநலக் கும்பல் ஒன்று, சங்கம் என்ற பெயராலேயும், தனிப்பட்ட முறையிலேயும், கோயில் நிலங்களையும், கோயிலின் இதரச் சொத்துக்களையும், அபகரிப்பதற்காக ஒரு திட்டம் வகுத்து அந்தச் சொத்துக்களை அபகரிப்பதற்கு முயற்சிப்பதாக நான் கேள்விப்பட்டுதான், இந்தக் கேள்வியைக் கேட்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைத் தடுத்து நிறுத்துவதற்கு தக்க நடவடிக்கையை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் 4-வது பத்தியில் குறிப்பிட்டுள்ள செய்திகளில் இருந்துதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில விவரங்களைத் தந்தார்கள். இன்னும் நிலம் விற்கப்படவில்லை. உண்மையிலேயே, இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள், பினாமி, அதன் பின்புறம் ஒரு தனி மனிதர் இருக்கிறார் என்று சொன்னால், அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் எழுதிக் கொடுத்தால், அதை ரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

டாக்டர் க. நல்லமுத்து: தலைவர் அவர்களே, அருள்மிகு மதனகோபாலசாமி கோயிலில் இருக்கிற அந்தக் கடவுளே உண்மையான கடவுள் இல்லை என்ற நிலை மக்கள் மத்தியில் நிலவி வருகிறது. ஆகவே இதைப்பற்றி விசாரணை செய்து, ஒரு முடிவு எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இப்படி தவறான தகவல்களைத் தரவேண்டாம் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். கோவிலில் 16 செப்புத் திருமேனிகள் உள்ளன. அவைகள் உண்மையானவை. அவைகள் அத்தனையும் பாதுகாப்பாக வைக்கப்பட்டு, அன்றாடபூஜை, நைவேத்தியங்கள் நடைபெறுகின்றன. திருமேனிகள் பற்றித் தொல்பொருள் துறையில் பதிவு செய்யப்பட்டு உள்ளது. இவைகளுக்கு புகைப்பட ஆல்பமும் தயார் செய்யப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் தொகுதி மக்களுக்கு இதை நம்பும்படியாகச் சொல்லவேண்டும்.

## 6. அரசினர் சட்ட முன்வடிவுகள்

### (அ) சிறுநீரகங்கள் (நோய் தீர்க்கும் நோக்கங்களுக்குப் பயன் படுத்தப்படுதலுக்கான அதிகாரமளிப்பு) சட்டமுன்வடிவு 1987.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு, சிறுநீரகங்கள் (நோய் தீர்க்கும் நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படுதலுக்கான அதிகாரமளிப்பு) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இச்சட்ட முன்வடிவை பரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

### (ஆ) நிதி ஒதுக்க (எண். 2) சட்டமுன்வடிவு, 1987.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன்வடிவு சட்டமன்றப் பேரவை (சட்ட முன்வடிவு எண். 24/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்".

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

***திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவின் மீது நான் பேசுகின்றபோது, மக்களிடையே காவல்துறையானது, மக்களுக்கு பாதுகாப்பான வாழ்க்கையைக் கொடுக்கக்கூடிய ஒரு



நிறுவனமாக, ஒரு அமைப்பாக நான் கருதுகிறேன். ஆனால் நடக்கின்ற பணிகளைப் பார்க்கும்போது, ஏழை மக்களுக்கு உள்ளபடியே எந்த ஒரு பாதுகாப்பும், இந்தக் காவல்துறையிடமிருந்து இல்லை என்றுதான் சொல்லவேண்டியதாக இருக்கிறது. 'அருள் இல்லாதவர்களுக்கு அவ்வுலகம் இல்லை, பொருள் இல்லாதவர்களுக்கு இவ்வுலகம் இல்லை, என்று நம் முன்னோர்கள் சொன்ன வாக்கு, இந்த காவல்துறைக்கு மிகப் பொருத்தமாக, ஏற்புடையதாக இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

காவல் நிலையங்களில் பணம் கொடுத்தால்தான் எதையும் சாதிக்க முடியும் என்ற நிலை தமிழ்நாடு முழுவதும் நீடித்து, நிதர்சனமாக இருந்து கொண்டிருக்கிறது. வழக்குகளில் சேர்க்காமல் இருக்க பணம், வழக்கிலே சேர்த்தவர்களை அதிலேயிருந்து விடுவிக்க பணம், தகராறு செய்து கொண்டு இருவர் சென்றால், இருவரிடமிருந்தும் பணம் வாங்குகின்ற முறையில், ஒருவரை மிரட்டுவது, அதற்குப் பணம் என்று எங்கும் நீக்கமற நிறைந்திருப்பதைப் போல, காவல்துறையிலே இலஞ்சம் அதிகமாக இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-50)

இதில் அரசு ஒரு நடவடிக்கை எடுத்து, இதற்கு ஒரு மாறுதலை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். இதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்பதையும் அறிய விரும்புகிறேன். திருட்டுக் குற்றம் மற்றும் ஏதாவது விசாரணைக்கு அழைத்துச் சென்ற நபர்கள் உயிரோடு திரும்பினால் அது அதிசயப்படக்கூடிய ஒன்றாக ஆகிவிட்டது. உதாரணமாக, வீரகேரளம்புதூர் பகுதியிலே மாரியம்மாள் என்ற பெண் திருட்டுக் குற்றத்திற்காக விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டாள். அங்கே அடித்துக்கொல்லப்பட்டாள். ஆனால் அவள் தூக்கிலே தொங்கியதாக அங்கே இருக்கும் காவல்துறை அதிகாரிகளும் மற்றவர்களும் கதைகட்டினார்கள். அதை அந்த ஊரார் நம்ப மறுத்து, ஊரே நம்ப மறுத்து, ஊரே திரண்டு சென்றது. ஆனால் காவல்துறையினுடைய ஆய்வாளர், மாவட்ட காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் எல்லாம், இங்கிருந்து சென்றவர்களை வசைமாரியாக திட்டிஇருக்கிறார்கள். அதன்பிறகு, அவர்கள் விசாரணை செய்யவேண்டுமென்று சொல்லி ஆர்.டி.ஓ. விசாரணை செய்யும்போது, ஆர்.டி.ஓ. வைக்கூட அவர்கள் மரியாதையாக நடத்தவில்லை என்று கேள்விப்படுகிறேன். அந்த காரணத்தினாலே ரெவின்யூ துறைக்கும் காவல்துறைக்கும் அங்கே ஒரு போராட்டமே நடந்துகொண்டிருக்கிறது என்ற செய்தி வந்திருக்கிறது. இந்த அளவிலே இன்றைக்கு காவல்துறை, வரதட்சணைக்காக எப்படி மருமகளை சாகடித்து அவர்கள் எதிர்பாராமல் தீப்பிடித்து இறந்ததாக கதை கட்டிவிடப்படுகிறதோ அதைப்போல தூக்குப்போட்டு செத்து விட்டார், விசாரணை என்றவுடன் அவமானம் தாங்காமே

விஷம் குடித்து விட்டார் என்றெல்லாம் கதை கட்டிவிடுகிறார்கள். குற்றம் என்னவென்று பார்த்தால் 200 ரூபாய் பொருளை களவாடிச் சென்றார்கள் என்று அவர்கள் சொல்கிறார்கள். 200 ரூபாய் பொருளை களவாடிச் சென்றவர் விசாரணைக்காக அவமானம் தாங்காமல் விஷம் குடித்து விட்டார் என்று சொன்னால் இதை யாராவது நம்ப முடிகிறதா ? அந்த அளவிலேதான் காவல்துறையினருடைய போக்கு ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாக இருக்கிறது. இதுமாதிரி எத்தனையோ அதற்கு உதாரணமாக நான் சொல்ல முடியும்.

இப்போதுகூட, இராஜபாளையத்தில் தகராறு. அதற்குகூட நான் 27-4-1987 அன்று இங்கே ஒத்திவைப்புப் பிரேரணை கொடுத்து இருக்கிறேன். ஆனாலும் கூட வாய்ப்புகள் வரவில்லை. காவல்துறை மானியம் வந்துவிட்டதால் ஒத்திவைப்புப் பிரேரணை மீது பேச வாய்ப்பு வரவில்லை. இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, அங்கே ஏற்பட்டிருக்கிற தகராறு என்னவென்றால், ஒரு சாதாரண சைக்கிள் கடையில் சைக்கிள் கொடுக்கமாட்டேன் என்று சொன்னார்கள். அதற்கு பலபேர் வெட்டிக் கொல்லப்பட்ட சூழ்நிலை. இதெல்லாம் எப்படி வந்தது? அந்தப் பகுதியிலே காவல்துறை செயலற்றதாக இருக்கிறது. ஒருவருட காலமாக இது இருந்து கொண்டிருக்கிறது. பல ரௌடிகளை குண்டர் ஆக்டிலே போட வேண்டுமென்று விருப்பப்பட்டாலும்கூட போடமுடியாமல் இருக்கின்ற நிலையைக் கேள்விப்படுகிறேன். இதெல்லாம் ஏன் ஏற்படுகிறது ? உடனுக்குடன் காவல்துறை இதிலே தலையிட்டு நடவடிக்கை எடுத்திருந்தால் இப்படியெல்லாம் வருமா ? இங்கேயிருந்து ஐ.ஜி. அவர்கள் சென்றுதான் இதை முடிக்க வேண்டுமென்ற சூழ்நிலை , சமாதானம் செய்யவேண்டிய சூழ்நிலை இருக்கிறதென்று சொன்னால் இது எப்படி இருக்கிறது என்று பார்க்க வேண்டாமா ? அதனால் அங்கேயிருக்கிற காவல்துறையினரை கூண்டோடு வேறு இடத்திற்கு மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உண்மையான குற்றவாளி இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை என்று நான் கேள்விப்படுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குண்டர் ஆக்டிலே அவர்களைப் போட இருப்பதாகச் சொன்னார்கள். அதை விரைவாகச் செய்யவேண்டும். அந்தப் பகுதியிலே நிரந்தரமான ஒரு அமைதி வரவேண்டுமென்றால் அதை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, காமராஜ் மாவட்டத்திற்கு ஆட்சித் தலைவர் இல்லை. ஆட்சித் தலைவர் இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் இன்-சார்ஜ்ஜாக டி.ஆர்.ஓ. தான் இருக்கிறார். ஒரு பெரிய மாவட்டத்திற்கு, மாவட்ட ஆட்சித் தலைவர் ஒரு மாதகாலமாக இல்லாமல் இருக்கிறார் என்றால் இது வியப்பாக இருக்கிறது. இந்தமாதிரி ஒரு பெரிய கலவரம் ஏற்பட்டிருக்கின்ற நேரத்திலே மாவட்ட ஆட்சித் தலைவர் இல்லாமல் இருப்பதற்கு என்ன காரணம் ? 1 மாதம், 1½ மாதகாலமாக இல்லாமல் இருப்பதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. அதற்கு உண்டான ஏற்பாடுகளை இந்த அரசு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல சமீபத்திலே, சென்னை பழவேற்காடு பகுதியில் சப்பாணிக்குப்பம், பூனாங்குப்பம் ஆகிய பகுதிகளிலே உள்ள மீனவர்களிடையே தகராறு. அங்கே ராமன் என்பவர் கொலை செய்யப்பட்டார். சாதாரணமாக ஏற்படுகின்ற நிலைமை, ஒரு கொலை ஆகிவிட்டால் அந்தப் பகுதி சூன்யம் ஆகிவிடும். அதுதான் வழக்கம். காவல்துறை அங்கே நுழைந்து காவல் காப்பார்கள். ஆனால் ஒரு நாள் கழித்து மறுநாள் அதே இடத்தில் மறுபடியும் தகராறு, 5 பேரை கவலைக்கு இடமான நிலையில் ஆஸ்பத்திரியில் சேர்த்து இருப்பதாக செய்தி வந்திருக்கிறது. இது சரி தானா ? காவல்துறையின் நடவடிக்கையின் மெத்தனப் போக்கை இது காட்டவில்லையா ? இவ்வாறு நடக்காமல் இருக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்றைக்கு 16 சட்ட முன்வடிவுகளை ஆய்வு செய்யவேண்டும். மற்றும் அப்ரோபிரியேஷன் பில்லில் 8 பேர் பேச வேண்டியிருக்கிறது. எப்படி முடியும் ? நீங்களே சொல்லுங்கள். பேசாமல் இருப்பதைவிட கொஞ்சமாவது பேசியிருக்கிறீர்கள் அல்லவா ? அது போதும். தயவுசெய்து உட்காருங்கள். இவைகள் எல்லாம் கடந்த 20, 25 நாட்களாக பேசியது தானே, சார்?.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு கருத்தைச் சொல்லி முடித்துவிடுகிறேன்.

அறநிலையத் துறையைப் பற்றி ஒரே ஒரு வார்த்தை. நாகை வட்டத்தில் உள்ள அறநிலையத் துறை ஊழியர்கள் எழுதியிருக்கிறார்கள், பரமசிவன்-பார்வதி படத்தைப் போட்டு. அவர்கள் கண்ணீர் வடித்துக் கொண்டு இருக்கிறார்கள். நாடு முழுவதும் இருக்கிற ஆலய ஊழியர்கள் சம்பளம் காணாமல், சாப்பாட்டுக்குக்கூட இல்லாமல் இருப்பதாக நாகபட்டினம், இராமேஸ்வரம், திருச்செந்தூர், கன்னியாகுமரி ஆகிய ஊர்களில் இருப்பவர்கள் எல்லாம் மிகவும் கஷ்டமான நிலையில் இருப்பதாக எழுதியிருக்கிறார்கள். அவைகளை எல்லாம் இந்த அரசு நிவர்த்தி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல ஆசிரியர்களும், அரசு ஊழியர்களும் போராட்டம் செய்கிறார்கள். 1 லட்சம் பேர் ஆர்ப்பாட்டம் செய்து கொண்டு இருக்கிறார்கள் என்றும் அவர்கள் ஊர்வலமாக கோட்டையை நோக்கி வருவதாகவும் செய்திகள் வந்துகொண்டு இருக்கின்றன. ஆசிரியர்களும், அரசு ஊழியர்களும் சேர்ந்து ஒரு போராட்டம் செய்கிறார்கள். அதையும் இந்த அரசு பரிவோடு கவனித்து, அவர்களுடைய கோரிக்கைகளை என்ன என்று பரிவோடு கேட்டு அதை நிவர்த்தி செய்ய வேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

*திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஒரு மாத காலமாக பல்வேறு மானியக் கோரிக்கைகள் இந்த அவையில் விவாதிக்கப்பட்டு ஒவ்வொரு மானிய கோரிக்கைக்கும் நிதி ஒதுக்கீடு செய்து அப்படி ஒதுக்கப்பட்ட நிதியை அந்தந்த துறையினர் செலவு செய்வதற்கு வகை செய்கிற வகையில் மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த சட்ட முன்வடிவை நான் வரவேற்கிறேன். இது சட்டம் ஆக்கப்படுவதற்கு என்னுடைய ஆதரவை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இதிலே பல்வேறு மானியக் கோரிக்கைகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகைகளை நாம் உன்னிப்பாக பார்க்கிறபோது நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் கிட்டத்தட்ட 400 கோடி ரூபாய் அளவுக்கு, எந்த மாநில அரசும் ஒதுக்காத அளவுக்கு சமுதாய நலத் திட்டங்களுக்கு அதிக தொகையை ஒதுக்கி இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னைப் போன்றவர்களுக்கு இந்த 400 கோடி ரூபாய் என்பது பணமாக தெரியவில்லை. இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடைய தாய் உள்ளத்தையும், கருணை உள்ளத்தையும் மனிதாபிமானத்தையும்தான் நான் அந்த ஒதுக்கீட்டில் காண்கிறேன் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், அப்படி சமுதாய நலத் திட்டங்களுக்காக இப்படிப்பட்ட ஒதுக்கீடுகள், இவ்வளவு தொகையை ஒதுக்க வேண்டுமா என்று கூட சில பேர் கேட்கிறார்கள். நான் அவர்களுக்கு சொல்லிக் கொள்ள விருமபுவது, இன்றைக்கு அப்படிப்பட்ட தேவை ஏன் என்பதற்கு சில காரணங்களைச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், இந்த நாட்டிலே தனி நபர் வருமானம் என்று சொல்லுகிற போது தனி நபர் வருமானம் சராசரியாக 2,070 ரூபாய் என்று சொல்லப்படுகிறது. நியாயமாக ஒவ்வொருவரும் அந்த 2,070 ரூபாயை பெற்று ஆக வேண்டும். ஆனால் மாதத்திற்கு ஒரு 100 ரூபாய் கூட பெற முடியாத அளவுக்கு இன்றைக்கு நலிந்த நிலையில் இருக்கிற மக்களை நாம் பார்க்கிறோம். அந்த மக்களை மேம்பாடு படுத்த வேண்டும் என்று யாராவது உயர் நிலையில் இருப்பவர்கள் எண்ணுகிறார்களா என்று சொன்னால், நிச்சயமாக இல்லை. உதாரணத்திற்கு ஒன்றை சொல்லவேண்டுமானால், இன்றைக்கு ஒரு பொறியியல் பட்டதாரி அல்லது மருத்துவப் பட்ட தாரி படிப்பு படித்துவிட்டு வருவதற்கு கிட்டத்தட்ட அரசு 3 லட்சம் ரூபாயை செலவு செய்கிறது. அந்த 3 லட்சம் ரூபாய் யாருடைய பணம் என்பதை தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். குப்பனும், சுப்பனும், தான் வாங்கி உபயோகம் செய்கிற பொருளுக்கு வரியாகக் கொடுத்து சிறுக சிறுக அரசாங்கம் சேர்த்து வைத்த அந்த வரிப் பணத்திலிருந்து தான் ஒரு பட்டதாரியை உருவாக்குகிறோம். ஆனால், அந்த பட்டதாரி சமுதாயத்திற்கு சேவை செய்கிறேன் என்று சொல்லி வேலைக்கு வருகிறபோது அந்த சேவைக்கு தொகையாக சம்பளமாகப் பெறுகிறார். நான் கேட்க விரும்புவது, அந்த பொறியியல் பட்டதாரி வாங்குகிற அந்த சம்பளத்திலிருந்து நேரடியாக அந்த வரி





கொடுக்கிறானே அந்த ஏழைக்கு நேரடியாக ஏதாவது ஒரு பைசாவாவது போகிறதா என்று சொன்னால் நிச்சயமாக இல்லை. எனவே, தாழ்ந்த நிலையில் இருப்பவர்களை யாரும் எண்ணிப் பார்க்காத நிலையில் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் எண்ணிப் பார்க்கிறார், சிந்திக்கிறார், திட்டமிடுகிறார். இன்றைக்கு அவர்களுக்காகச் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறார். இன்னும் கூட சிலர் சொல்லுகிறார்கள், இவ்வளவு தொகையை ஏன் சமுதாய நலத் திட்டங்களுக்காக ஒதுக்க வேண்டும் என்று. ஒரு தொழிற்சாலையை ஆரம்பித்தால் எதிர்காலத்தில் எத்தனையோ பேர் நல்ல வசதி வாய்ப்புகளை பெறுவார்கள் என்று கூட சொல்லுகிறார்கள்.

(நண்பகல் 12-00)

நான் ஒன்றைச் சொல்கிறேன். பசித்தவனுக்குத் தூண்டில் கொடுக்க வேண்டும் என்று சொல்வார்கள். அப்படித் தூண்டில் கொடுக்க வேண்டுமென்பது ஒப்புக் கொண்டதுதான். ஆனால் புரட்சித் தலைவர் அவர்களைப் பொறுத்த வரையில், அந்தப் பசித்தவனுக்குத் தூண்டிலைக் கொடுப்பதற்கு முன்னால், அந்த தூண்டிலைப் பெற்றவன் , தொழிலை நடத்துவதற்கு முன்னால் அவன் வயிற்றுப் பசி ஆறவேண்டும். அதற்காக அவனுக்கு மீனைக் கொடு என்று தான் புரட்சித் தலைவர் அவர்கள் இந்த சமுதாய நலத் திட்டங்களை செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே தான், அடுத்த தலைமுறையினர் காரிலே செல்ல வேண்டும் என்பதற்காக, இந்தத் தலைமுறையினர் காலுக்கு செருப்புகூட இல்லாத நிலையில், கஷ்டப்படுகின்ற நிலையில் விட்டுவிட நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் தயாராக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்த வகையிலே இன்றைக்கு ஒதுக்கீடுகளை எல்லாம் நாம் பார்க்கின்றபோது, சமுதாய நலத் திட்டங்களுக்காக அதிகமான ஒதுக்கீடுகளை செய்து வருகிறார்கள். நான் இதைப் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். அதே சமயத்தில் ஒரேயொரு கருத்தை மட்டும் நிதி மசோதா என்ற வகையில்-துணைத் தலைவர் அவர்களே மணி அடிப்பதற்கு முன் முடித்துக்கொள்வது நல்ல சட்டமன்ற உறுப்பினருக்கு அடையாளம் என்ற வகையில்- நாவலர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த நிதி மசோதாவின் மீது ஒரேயொரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு மாநில அரசாங்கம் பல்வேறு திட்டங்களுக்காக உலக வங்கியிடமிருந்து எவ்வளவோ கடன்களை 'த்ரூ ப்ராப்பர் சேனலாக' நாம் மத்திய அரசின் மூலமாக வாங்குகிறோம். ஆனால் இதில் என்ன முறைகளைக் கையாளுகிறார்கள் என்று சொன்னால், துணைத் தலைவர் அவர்களே, இது உங்களுக்குத் தெரியாதது அல்ல. மத்திய சர்க்கார், உலக வங்கி விதிக்கிற நிபந்தனைகளை மாற்றிக் கொடுக்கிறது. 10 ஆண்டுகள் என்று ஒரு காலவரையறைச் செய்து கொடுக்கிறபோது மத்திய சர்க்கார் காலவரையறையைக் குறைத்து, அதை 3 ஆண்டுக் காலம், 4 ஆண்டுக் காலம், 5 ஆண்டுக் காலம் என்று அந்தக் காலத்தை

குறைத்து விடுகிறார்கள். அதே சமயத்தில் உலக வங்கியிடமிருந்து பெறுகின்ற அந்தக் கடனுக்கு அவர்கள் விதிக்கிற வட்டிக்கு மாறாக மத்திய சர்க்கார் கூடுதல் வட்டியினை விதித்து, மாநில அரசாங்கத்தின் தலையிலே சுமத்துகிறது. இது சரிதானா என்பது ஒரு கேள்வியாக இருக்கிறது. காரணம், மத்திய சர்க்காருக்கும் மாநில சர்க்காருக்கும் இருக்கிற உறவு முறை, வட்டிக்காரனுக்கும், வாடிக்கைக்காரனுக்கும் இருக்கிற உறவு முறையாகத்தான் இருக்கிறது என்று சொன்னால் இது என்ன ஜனநாயகம் என்பதை தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்படிப்பட்ட போக்கை தயவு செய்து மத்திய சர்க்கார் மாற்றிக் கொள்ள வேண்டும். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருவது, அவர்கள் டில்லியிலே நடைபெறுகின்ற கூட்டத்திற்குச் சென்றாலும் சரி, அல்லது திட்டக் குழுக் கூட்டத்திற்குச் சென்றாலும் சரி உலக வங்கி என்ன நிபந்தனைகளை விதிக்கிறதோ, அந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு, அந்தக் கடனை மத்திய அரசு நமக்கு வழங்க வேண்டும். அந்தக் காலவரையறையைக் குறைக்கக் கூடாது. அதே போல் வட்டி வீதத்தை உயர்த்தக் கூடாது. அந்த வகையிலே வட்டி வீதத்தை உயர்த்தாமல் மற்ற மாநிலங்களுக்கு உதவி செய்கிற வகையிலேயும் இப்படி வழங்குகின்ற கடனைத் தர வேண்டும். காரணம், அதிகமான சுமையை மத்திய சர்க்கார் நம் மீது சுமத்துவது, மத்திய சர்க்காருக்கு மாநில சர்க்கார் மீது அக்கறை இல்லையோ என்ற தவறான எண்ணமும்கூட உருவாகும். எனவே, நாவலர் அவர்கள் இதைக் கருத்தில் கொண்டு, மத்திய சர்க்காரிடம் போராடி, அந்த உரிமையைப் பெற்றாக வேண்டும் என்ற வகையிலே இதை மீண்டும் வலியுறுத்திச் சொல்லி இந்த நிதி மசோதாவை வரவேற்று, வாய்ப்புக்கு நன்றிகூறி முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய இந்தச் சட்டமன்றத் தொடரின் இறுதிக் கட்டத்தை அடைந்திருக்கக் கூடிய நேரத்தில், அரசுக்கு அடுத்த ஆண்டு தேவைப்பட்ட நிதியை அனுமதிக்கக் கூடிய இந்த வேளையில் ஒரு சில கருத்துக்களை மாத்திரம் நான் சொல்ல விரும்புகிறேன்.

என்னதான் ஆயிரமாயிரம் கோடி ரூபாய்களை பொது நலத் திட்டங்களுக்காக நாம் ஒதுக்கினாலும், அந்தத் திட்டங்கள் எல்லாம் செம்மையாக அமல்படுத்தப்பட்டு, அதற்குரிய பூரண பயனை நம்முடைய நாட்டு மக்கள் அடைய வேண்டுமானால், நல்ல சமுதாயச் சூழலும், சுமுகமான உறவும் நம்முடைய நாட்டிலே நிலவ வேண்டியது மெத்த அவசியமாகும். அந்தத் துறையிலே நம்முடைய அரசு கவனம் செலுத்தவேண்டுமென்று நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். இந்தியாவில் இருக்கக்கூடிய பல்வேறு மாநிலங்களை நாம் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தமிழகத்திற்கென்று ஒரு சிறப்பான வரலாறு, பெருமைக்குரிய ஒரு வரலாறு நீண்ட நெடிய ஒரு பாரம்பரியம் உண்டு என்ற பெருமிதம் நமக்கு என்றும் உண்டு.



ஆனால், இந்த நெடிய பாரம்பரியத்தைக் குலைப்பதற்குரிய சில நடவடிக்கைகள் அண்மைக் காலத்தில் நம்முடைய நாட்டிலே கூட தலையெடுத்து வருகின்றன. அதையெல்லாம் ஒவ்வொன்றாக நான் குறிப்பிட்டுப் பேசுவதற்கு நேரமில்லை. அதை இயலுகின்ற நேரங்களில் எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நான் தனியாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே நான் இந்தக் கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறேன். ஆகவே, அதனை இங்கே விளக்காமல் குறிப்பாக சமீப காலத்தில் நம்முடைய தலைநகரிலே கூட ஒரு சம்பவம் நடந்துவிட்டது, நீண்ட நெடுநாட்களாக, மிக அமைதியாக சக வாழ்வு நடத்திக் கொண்டிருக்கக் கூடிய இந்த ஊரிலே கூட, ஏதோ ஒரு ஊர்வலத்தின் பெயரால் நடந்த சில நிகழ்ச்சிகள் ஒரு இளைஞனின் படுகொலையிலும், பல்வேறு வணிகர்கள் தங்களுடைய வாழ்க்கை வசதிக்குரிய வருமானத்தைத் தந்து கொண்டிருக்கக் கூடிய பொருள்களை இழக்கக் கூடிய நிலையிலும், ஆகி விட்ட செய்திகள் எல்லாம் மிக வருத்தத்தரத்தக்க செய்திகள். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் எதிர் காலத்தில் நடக்காமல் இருப்பதற்கு (குறுக்கீடு).

**திரு. வை. பாலச்சந்திரன்** : துணைத் தலைவர் அவர்களே சென்னையிலே நடைபெற்ற அந்த சம்பவம் இரண்டு இனகளுக்கு இடையே நடைபெற்ற சம்பவத்தினால் நடைபெற்ற கொலை அல்ல. நம்முடைய காவல் துறையில் பதிவு செய்துள்ள வழக்கைப் பார்த்தாலும் கூட ஒரே இனத்தைச் சார்ந்த இருவர், இரு கோஷ்டிகளாகப் பிரிந்து ஒருவர் மீது ஒருவர் தாக்கியதினால், ஒரே இனத்தைச் சார்ந்தவராலே அதே இனத்தைச் சார்ந்தவர் கொல்லப்பட்டிருக்கிறார். அதே இனத்தைச் சார்ந்தவரால் அதே இனத்தைச் சார்ந்தவருடைய கடைகள் உடைக்கப்பட்டு இருக்கின்றன. ஆகவே தவறான தகவலைத் தந்து அது இன வேறுபாட்டால் வந்தது என்று சொல்வது ...... (குறுக்கீடு).

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சமத் அவர்கள் பேசும்போது ஒரு இனம், இன்னொரு இனம் என்று இனத்தைப் பிரித்துச் சொல்லவில்லை. கொலை நடந்துவிட்டது என்று தான் சொன்னார். சொன்னதிலே தவறு இல்லை.

**திரு. ஆ. கா. அ. அப்துல்சமத்** : துணைத் தலைவர் அவர்களே, அப்படி நடந்த கொலையை யார் செய்தார்கள் என்று நான் சொல்லாமல் இருக்கும் போதே என்னுடைய அருமைச் சகோதரர் ஏன் இப்படித் துள்ளி எழுகின்றார் என்று என்னாலே சொல்லிக் காட்டாமல் இருக்க முடியவில்லை. நான் சொல்ல வருவதெல்லாம் இது தொடர் கதையாக நடக்காமல் இந்த நிகழ்ச்சிகள் நம்முடைய நாட்டிலே முற்றாக தவிர்ப்பதற்குரிய வகையிலே இங்குள்ள நாம் எல்லோரும் சேர்ந்து முயற்சிக்க வேண்டும் என்று விரும்புகிறேனே தவிர ஒரு குற்றத்தை

யார் செய்தார்கள் என்று சொல்வதற்கு அல்ல; யார் செய்தாலும் அது கண்டிக்கப்படத்தக்கது. இந்த நாட்டினுடைய பண்பாட்டிற்கு முற்றும் முற்றும் முரண்பட்டது என்பதை நான் வருத்தத்தோடு சொல்ல விரும்புகிறேன். என்ன இருந்தாலும் பாதிக்கப்பட்ட அந்த இளைஞருடைய குடும்பத்திற்கு பரிவுணர்ச்சி காட்ட அரசு ஒரு தொகையை வழங்குவதும், சூறையாடப்பட்ட கடைக்காரர்களுக்கு உதவி வழங்குவதும் இந்த அரசு கடைபிடித்து வரக்கூடிய கொள்கைகளுக்கு ஏற்புடையதாக இருக்கும் என்று நான் நினைவூட்ட விரும்புகிறேன். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடக்கும் போதெல்லாம் சமாதான குழுக்கள் ஏற்படுத்தப்படுகின்றன. ஆனால் நீங்கள் தொடர்ந்து பார்த்தீர்களானால் ஒரு ஒரு சாரார் குறிப்பிட்ட ஒரு சிறுபான்மை சமுதாயத்தை அல்லது மற்ற சமுதாயங்களைப் பற்றி மிகவும் தரங்கெட்ட முறையிலே அவர்களுடைய மத உணர்வுகளை எல்லாம் குத்தி கிளரக்கூடிய முறையிலே தொடர்ந்து பேசுவதன் காரணமாகத் தான் இத்தகைய விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் தமிழகத்திலே நடக்கின்றன என்பதை காவல் துறை நண்பர்களைக் கொண்டு நீங்கள் அறிந்து கொள்ள முடியும். இன்னும் சுருக்கமாகச் சொல்வோமேயானால் ஒரு இயக்கத்தைச் சார்ந்தவர்கள்—அத்தனை பேர்களும் என்று கூட நான் சொல்ல மாட்டேன்—தலையெழுத்து அப்படி ஆகிவிட சில பேர்கள் தொடர்ந்து எந்த ஊருக்குச் சென்றாலும் ஒரே விதமான பேச்சை, ஒரே விதமான மிக தரங்கெட்ட குற்றச்சாட்டுகளை சொல்லி வருகிறார்கள். அவர்கள் மீது இந்த அரசு ஏன் நடவடிக்கை எடுக்கத் தயங்குகிறது என்பதைத் தான் என்னாலே புரிந்துகொள்ள முடியவில்லை. ஏற்கனவே இருக்கின்ற சாதாரண சட்டங்களைக் கொண்டு இப்படிப்பட்ட மதமாச்சரியங்களை தூண்டக் கூடிய பேச்சுக்களைத் தடுப்பதற்கு போதுமான அதிகாரம் உங்களிடத்தில் இருக்கும் போது அதன் துணை கொண்டு இதை நீங்கள் தடுத்து நிறுத்துவீர்களானால் நாமெல்லாம் எதிர்பார்க்கக் கூடிய இந்த சுமூக சூழல் இந்த நாட்டிலே நீடிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மற்றொன்று வஃக்ப் வாரியத்தைப் பற்றி இந்த அவையிலே தொடர்ந்து பேசுவதற்குரிய வாய்ப்பை ஏற்படுத்தித் தரவில்லை. அறநிலையத் துறையைப் பற்றி நாம் இங்கு ஆராய்வது போல கொஞ்ச நேரமாவது ஒதுக்கப்பட்டு இருக்குமானால் அது சிறப்புடையதாக இருந்திருக்க முடியும். இந்த வஃக்ப் வாரியத்திற்கு ஒரு தலைவர் உண்டு. அந்தத் தலைவருக்கு மற்ற வாரியத் தலைவர்களுக்கு ஏற்படுத்தித் தந்திருக்கக் கூடிய ஏதாவது வசதி வாய்ப்பை இந்த அரசு சார்பாக தரப்பட்டிருக்கிறதா என்றால் முற்றாக இல்லை என்று தான் சொல்ல வேண்டும். ஆகவே மற்ற வாரியத் தலைவர்களுக்கு என்ன அங்கீகாரம் அளிக்கப்பட்டிருக்கிறதோ, என்ன அந்தஸ்து தரப்பட்டிருக்கிறதோ அவை எல்லாம் தருவது அந்த வாரியம் சிறப்பாக செயல்படுவதற்கு துணை செய்யும் என்று தெரிவித்துக் கொண்டு ஒரு கருத்தை நான் முன் வைக்க விரும்புகிறேன். நம்முடைய அண்டை மாநிலமான கர்நாடகத்தில் சிறுபான்மை மக்களுடைய இந்த குறைகளை ஆய்ந்து, அரசுக்கு



பரிந்துரைத்து, அதனுடைய அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதற்காக ஒரு கமிஷன் நியமித்திருக்கிறார்கள். அது அங்கே சிறப்பான முறையிலே செயல்பட்டு வருகிறது என்று நான் தெரிவித்துக் கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடிக்கின்றேன்.

(பிற்பகல் 12-10.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இன்று பேரவையினுடைய காலை நிகழ்ச்சிகள் 1.30 மணிக்கு முடிவுற்று, மீண்டும் பேரவை மாலை 4-00 மணிக்குக் கூடும். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ரகுமான்கான்.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, 1987 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்டத்தின் மீது சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். நேற்று பேசிய நாவலர் அவர்கள் எதிர்க்கட்சி அகப்பையைப் போன்றது; அரசாங்கம் சட்டியைப் போன்றது; அகப்பை சட்டியை உடைத்துவிடக் கூடாது என்று சொன்னார். ஆனால் நான் நாவலர் அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். அடுப்பிலே அரிசி இருக்கும் போது, அந்த அரிசியைக் கிளறினால் தான் அரிசி வேகும். அது வெந்தால் தான் சமையல் செய்யப்பட்ட, அந்த அரிசி சாப்பிடுவதற்குச் சரியாக இருக்கும். எனவே, அரிசியைக் கிளறுவது சட்டியை உடைப்பது அல்ல என்பதை நாவலர் அவர்களின் கவனத்திற்கு....

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவையின் துணைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு உதாரணத்தை பேரறிஞர் அண்ணா அவர்கள் இங்கே சொன்னார்கள் என்று நான் ''கோட்'' பண்ணினேனே தவிர, வேறல்ல. இப்படி ஒரு உதாரணத்தைச் சொன்னார், அதைப் பதம் பார்ப்பதற்குப் பயன்படுத்த வேண்டுமே தவிர, சட்டியை உடைத்து விடக் கூடாது என்று சொன்னார் என்று நான் சொன்னேன். அதைப் புரிந்து கொண்டால் சரி, வேண்டாம் என்று நீங்கள் விட்டாலும் சரி தான்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** காலம் கொஞ்சம் தான் இருக்கிறது. எனவே, எல்லோரும் 5, 6 நிமிடங்களில் பேசி முடித்து விட்டார்கள். (குறுக்கீடு) பில்லையொட்டிப் பேசுங்கள். தேவையில்லாததைப் பேச வேண்டாம். (குறுக்கீடு) அட்டுராப்ரியேஷன் பில்லைப் பற்றி மட்டும் பேசுங்கள்.

**திரு. அ. ரகுமான்கான் :** பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, கிளறுவது சட்டியை உடைப்பதாக ஆகாது. துணியை வெளுப்பதற்கு காரணம் அழுக்கு போவதற்காக. எனவே, துணியைக் கிழிப்பதற்காக அல்ல. எதிர்க்கட்சியின் வேலை அழுக்கைப் போக்குவது, துணியைக் கிழிப்பது அல்ல. எனவே, நான் இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த

நிதி ஒதுக்கச் சட்டத்தில் சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். 4 கோடி ரூபாய் இந்த அரசாங்கம், மக்களுடைய பணத்திலிருந்து திரட்டி இலங்கை வாழ்த்தமிழர்கள காயம் பட்டவர்களுக்கு உதவுவதற்காக ஏற்பாடு செய்து இருக்கிறது. ஆனால் இலங்கை அதிபர் ஜெயவர்த்தனே அதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்கள். வேறு மாதிரியான குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, கேட்க விரும்புகிறேன். அந்தத் தொகை அவர்களுக்கு இலங்கையிலே போய்ச் சேருமா, மத்திய அரசு அதற்கு அனுமதி கொடுத்திருக்கிறதா ?

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையிலும், அதை ஆதரிக்கிறோம். பங்களாதேஷ் யுத்தத்தின் போது கூட, 6 கோடி ரூபாயை எங்கள் தலைவர் திரட்டிக் கொடுத்திருக்கிறார். ஆனால் நான் கேட்பது எல்லாம், இது குறித்து அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? அதோடு பிரச்சினை தீரவில்லை. பங்களாதேஷ், தென்னாப்பிரிக்கா, பாலஸ்தீனம் போன்ற பிரச்சினைகளில் என்ன முடிவு எடுக்கப்பட்டதோ, மத்திய சர்க்கார் என்ன அணுகுமுறையை செய்ததோ, அத்தகைய அணுகுமுறைதான் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்னொன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன்—இண்டர்—ஸ்டேட் கவுன்சில் பற்றிய முதலமைச்சர்கள் மாநாட்டில், தெற்கே இருக்கக் கூடிய எல்லா மாநில முதலமைச்சர்களும், ஜோதிபாசு, திரிபுரா முதல்வர், ஹெக்டே, என். டி. ஆர். ஆகியோர் கலந்து கொள்கிறார்கள். மாநில சுயாட்சிக்காக குரல் கொடுப்பதாகச் சொல்கிறோம். இன்றைக்கு மாநில வளர்ச்சிக்காக இண்டர்-ஸ்டேட் கவுன்சில் மிக முக்கியமானது. ஆனால் நம்முடைய முதலமைச்சர் அவர்களும், நிதி அமைச்சர் அவர்களும் இது குறித்து மௌனம் சாதிக்கிறார்கள். அவர்கள் மாநில வளர்ச்சிக்காக கான்பரன்ஸ் கூட்டுகிறார்கள். ஆனால் இந்திரா காங்கிரசை ஆதரிப்பதற்காக கேரளாவுக்குப் போகிற நம்முடைய முதலமைச்சர் அவர்கள், இந்த இண்டர்-ஸ்டேட் கவுன்சில் உருவாவதற்கு என்ன முயற்சி எடுத்து இருக்கிறார் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அதைப் போலவே, துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாவட்டம் சம்பந்தப்பட்ட ஒரு பிரச்சினை, நீங்களும், நானும் ஒரே மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். உங்களுக்குத் தெரியும். மங்கலதேவி கோயில் என்று அழைக்கப்படும் கண்ணகி கோயில் மதுரை மாவட்டத்தினுடைய தமிழக எல்லைப் பகுதியிலே இருக்கிறது. அது தமிழகத்திற்குச் சொந்தமானது. 11-வது நூற்றாண்டில் ராஜராஜ சோழன், 12-ஆம் நூற்றாண்டில் வல்லப பாண்டியன், 13-ஆம் நூற்றாண்டில் மாற வர்மன்—இவர்களுடைய கல்வெட்டுக்கள் எல்லாம் இருக்கின்றன. 1883-ஆம் ஆண்டு ஆங்கிலேய ஆட்சி வனத்துறை நோட்டிபிகேஷனில் அந்தப் பகுதி வண்ணாத்திப்பாறை ரிசர்வ் பாரஸ்ட்டாக



நோட்டிபை பண்ணப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட, தமிழகத்திற்குச் சொந்தமான அந்தக் கோயிலை கேரள அரசு உரிமை கொண்டாடுகிறது, பூங்ஞாயற்றுத் தம்பிரான் என்பவரால் அது கட்டப்பட்டது. எனவே, அது கேரளாவுக்குத்தான் சொந்தம் என்று1983 ஆம் ஆண்டு பிப்ரவரி 15-லே இடுக்கி கலெக்டர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள்.

இன்னும் சொல்லப்போனால், அங்கே கேரள சர்க்கார் ரோடு போட்டிருக்கிறது. சித்திரைத் திருவிழா கொண்டாடுவதற்கு அனுமதியில்லை. மக்கள் வந்தால் சுடவேண்டும் என்று கூட உத்தரவு போட்டார்கள். எனவே, நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்—மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கம் ஆரம்பிக்கிறபோது, நம்முடைய முதல்வர் அவர்கள் சொன்னார்கள்—கண்ணகி கோயில் நமக்கே உரிமையானது. அந்த உரிமையினை விட்டுக் கொடுக்கமாட்டோம் கேரளாவிற்கு என்று சொன்னார்கள். இப்போது, அந்தக் கண்ணகி கோயில் என்னவாயிற்று? நமக்குச் சொந்தமானது என்று தெரியவில்லை. மாறாக, இப்போது வந்திருக்கிற அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், புதிய கண்ணகி கோயிலை கம்பம் பகுதிக்குப் பக்கத்திலே கட்டுவோம் என்று சொல்லுகிறார்கள். நம்முடைய சொந்தமான பகுதியை கேரளாவிற்கு தாரை வார்த்து விட்டீர்களா? என்னவாயிற்று அது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, ஒரு முக்கியமான பிரச்சினையைச் சொல்ல விரும்புகிறேன். வகுப்புவாரியாக பிரதிநிதித்துவம் மிக முக்கியமானது. தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்களை மேலே உயர்த்துவதற்காக தமிழ் நாட்டிலே மொத்தம் 34 இன்ஜினீயரிங் காலேஜ்கள், அரசாங்கக் கல்லூரிகள் 4; அரசாங்க உதவி பெறும் இன்ஜினீயரிங் காலேஜ்கள் 300, ரீஜினல் இன்ஜினீயரிங் காலேஜ் 1, அதுபோல் சுய நிதிக் கல்லூரிகள் 26 இன்ஜினீயரிங் காலேஜ்கள் இருக்கின்றன. அதிலே, என்ன கொடுமை என்று கேட்டால் ஆதி திராவிடர் பழங்குடிர் மக்களுக்கு ஒதுக்கப்பட்ட கோட்டாவை இன்றைக்கு பலபேர் தவறாகப் பயன்படுத்தி, பொய் சான்றிதழ் பெற்று, இடம் பெற்று இருக்கிறார்கள். உயர் நீதி மன்ற நீதிபதி மோகன் அவர்கள் அது குறித்து விசாரித்து, இந்த அரசாங்கம் உடனடியாக ரிப்போர்ட் அனுப்ப வேண்டும் என்று அவர்கள் 1985–86‘ 1986–87—அட்மிஷன் ரிப்போர்ட்டிலே இந்த முறை கேடு நடந்திருக்கிறதா என்று அறிவிக்க வேண்டும் என்று 16-3–1987-லே டைரக்ஷன் கொடுத்திருக்கிறார்கள்.

இங்கே என்னிடத்தில் மிகத் தெளிவான ஆதாரங்கள் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டால் கொடுக்கிறேன். ஏறத்தாழ 100, 124 பேர்களுக்கு மேல் இது மாதிரி பொய்ச் சான்றிதழ் பெற்று இடம் வாங்கியிருக்கிறார்கள். இது சரிதானா ? இதன் பின்னாலே இருக்கின்ற பின்னணி என்ன ? என்ன தவறு நடைபெற்றிருக்கிறது என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அதைப் போலவே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர்களாக இருந்த சிலபேர் பதவி நீக்கம் செய்யப்பட்டார்கள். அதற்குப் பிறகும் அவர்கள் அரசாங்க வீடுகளில் இருக்கிறார்கள். அவர்கள் அங்கே தங்குவதற்கான கிரேஸ் டைம் முடிந்து விட்டது என்று கருதுகிறேன். இப்போது பி.டபிள்யூ. டி. அந்த வீடுகளுக்கு ரூ. 10,000 வாடகை நிர்ணயித்திருக்கிறது என்கிறார்கள். அவர்கள் மாதம் ரூபாய் 10,000 கொடுத்துக் கொண்டிருக்கிறார்களா அல்லது அவர்கள் மீண்டும் தாங்கள் அமைச்சர்களாக ஆக்கப்படுவோம் என்ற எண்ணத்திலே அங்கே இருக்கிறார்களா ? அதைக் குறை சொல்லவில்லை. இந்த அணுகுமுறை எல்லோருக்கும் இருக்குமா என்றுதான் நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அதைப் போலவே, ஃபார்மர் ஸ்பெஷல் ரெப்ரசென்டேடிவ்டு கவர்மெண்ட் பதவி போய் கூட இந்த மாதிரி வீட்டில் இருக்கிறார். எங்களைப் போன்றவர்கள் இருந்தால் மார்க்கெட் ரேட் போடுகிறீர்கள். அவர்களுக்கும் போடுகிறீர்களா என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அப்படிப் போட வேண்டும் என்பதுகூட என்னுடைய வாதமில்லை. இந்த அணுகுமுறை சரியானதா என்றுதான் நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். மற்றவர்களுக்கும் இதே அணுகுமுறை உண்டா என்றுதான் கேட்கிறேன்.

அதைப்போலவே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் சிலை ஒன்றை குமரிக் கோட்டத்தில் வைக்கப்படுவதை நான் வரவேற்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். திருக்குறளுக்கு ஒவ்வொருவரும் ஒரு பொருளைச் சொல்லுகிறார்கள். எனவே, திருக்குறள் தேசியமயமாக்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். அந்தத் 'திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறதா? திருக்குறள் தேசியமயமாக்கப்படும் என்று சொல்வதற்கு என்ன அர்த்தம் என்று எனக்கு விளங்கவில்லை. கலித் தொகை கற்ற நாவலர், புறநானூறு படித்த நாவலர், அகநானூறு அறிந்த நாவலர் அவர்கள் அதற்கு விளக்கம் சொல்லுவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.) இன்னொன்றையும் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஒருவர் 2,000 குறள்களை எழுதியிருக்கிறார். அவர் பெயர் வெண்பா வீராச்சாமி. தஞ்சைப் பல்கலைக் கழகத்தின் மூலமாக கோவி. மணிசேகரன் அவர்களுக்கு......

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அருமைத் தோழர் திரு. ரகுமான்கான் அவர்கள் குமரிக் கோட்டத்தில் வள்ளுவர் சிலை வைக்கப்படுவதாகச் சொன்னார்கள். அது எங்கே இருக்கிறது என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.



திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தைத்தான் நான் குமரிக் கோட்டம் என்று சொல்லிவிட்டேன். தவறுதலாகச் சொல்லி விட்டேன். அதைத் திருத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்தச் சிலையை குமரி முனையில் வைப்பதாக அரசாங்கம் அறிவித்திருக்கிறது. அடுத்து ஒருவர் 2,000 திருக்குறளை எழுதியிருக்கிறார். அவருடைய பெயர் வெண்பா வீராச்சாமி. தஞ்சைப் பல்கலைக் கழகத்தில் திரு. கோவி. மணிசேகரனுக்கு ஒரு லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறார்கள், வரவேற்கிறேன். இந்த வெண்பா வீராச்சாமியின் குறளைப் பார்த்தார்களா ? வேங்கையின் மைந்தன் என்ற புத்தகத்திற்கு அந்தத் தொகை கொடுக்கப்பட்டிருக்கிறதே. நான் கேட்க விரும்புகிறேன். 2 ஆண்டுக் காலமாகக் கஷ்டப்பட்டு அந்த வெண்பா வீராச்சாமி 2,000 குறள் எழுதியிருக்கிறாரே ? அதற்கு என்று ஒரு குழு கூட போடப்பட்டதே ? அது அந்தப் புத்தகத்தைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டதா? அந்தப் புத்தகம் பரிசீலனைக்கு வந்த பிறகு அந்தக் குழு கூட்டப்பட்டதா? இது போன்ற தமிழ் அறிஞர்களைப் பாராட்டுவதற்குப் பதிலாக புறக்கணிப்பது எந்த வகையிலே நியாயம் ? வெண்பா வீராச்சாமி என்று பெயர் வைத்திருக்கிற காரணத்தாலே வீராச்சாமி என்ற வார்த்தையே இந்தச் சர்க்காருக்கு ஒரு மாதிரியாக இருக்கிறதா என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

சென்னையிலே வள்ளுவர் கோட்டம் இருக்கிறது. அங்கே வேடிக்கை என்னவென்றால் அங்கே சிறுநீர் கழிக்கிறார்கள். அது மட்டுமல்ல அங்கே கெட்ட வார்த்தைகளை எல்லாம் சுவற்றில் எழுதி வைத்திருக்கிறார்கள். கலைஞர் அவர்கள் காலத்திலே கட்டப்பட்ட வள்ளுவர் கோட்டம் என்பதற்காக வள்ளுவருக்கு இந்தக் கொடுமையா? வள்ளுவர் கோட்டத்திற்கு இந்த அவமானமா என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர்களே, நானே வேகமாக முடித்துக் கொள்கிறேன். உங்களைப் பார்க்கிறபோது முடிக்க வேண்டும் என்ற படபடப்பில் சொல்ல வேண்டிய வார்த்தைகளைக்கூட சரியாகச் சொல்ல முடியாத சூழ்நிலை. சட்டமன்றத்தின் கடைசி நாள் இன்றைக்கு. எனவே ஒரு இரண்டு நிமிஷம் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்னும் 16 பில்கள் இருக்கின்றன. சீக்கிரம் முடியுங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : அரசாங்கத்தின் கவனத்திற்குத் தான் கொண்டு வருகிறேனே தவிர தாங்கள் நினைப்பதுபோல கான்ட்ரவர்சி பிரச்சினைகள் எதுவுமில்லை.

[திரு. அ. ரகுமான்கான்] [1987 மே 8

அடுத்து பஞ்சாயத்து யூனியன், நகராட்சி மன்றம் ஆகிய
வற்றின் பிரதிநிதிகளின் காலத்தை 5 ஆண்டுகளாக இருந்ததை
4 ஆண்டுகளாக்கி, அதுவும் பிறகு 3 ஆண்டுகளாக ஆக்கப்பட்டது.
முன்பு கடிதங்கள் தலைவர்களுக்குத்தான் வரும். இப்போது
கமிஷனர்களுக்குத்தான் அரசாங்கம் கடிதம் எழுதுகிறது. அதி
காரம் எப்படிப் பறிக்கப்பட்டிருக்கிறது என்பதற்காகச் சொல்லு
கிறேன். கடைசியாக நிதி ஒதுக்கீடு குறைக்கப்பட்டிருக்கிறது.
அவர்களிடமிருந்து, கல்வி, விவசாயம், ஹெல்த் எல்லாம் எடுக்கப்
பட்டுவிட்டது. மத்திய சர்க்காரின் நிதி ஒதுக்கத்தில் வரும்
காலனிகளுக்கான ஒதுக்கீடு இப்போது நிறுத்தி வைத்து விட்டார்
கள். ஏனென்றால் யூனியன் முடிவு செய்யக் கூடாது என்
கிறார்கள்.

அதைப் போலவே இன்னொன்றையும் தெரிவிக்க விரும்பு
கிறேன். மதுரையில் கே. கே. நகர் என்ற பகுதி இருக்கிறது.
அங்கே மதுரை கமிஷனர் ஒரு உத்தரவு போடுகிறார். அதாவது
கருணாநிதி என்ற பெயர் இருக்கக்கூடாது. கலைவாணர் என்று
பெயர் வைக்க வேண்டுமென்று சொல்லுகிறார். கலை
வாணர் பாராட்டப்பட வேண்டியவர்தான். கலைத்துறையில்
நகைச் சுவையோடு புரட்சி செய்தவர். அந்தக் கலைவாண
ருக்கு அரங்கம் என்கிற பெயரில் எங்கள் தலைவர் மரியாதை
செய்து வைத்தார்கள். நான் கேட்கிறேன். உயிரோடு
இருப்பவர்களின் பெயரை வைக்கக் கூடாது என்று சொன்னால்
கே. கே. நகர் என்று இருக்கக் கூடாது என்று சொன்னால் என்
னுடைய தொகுதியில் நாவலர் நெடுஞ்செழியன் காலனி என்று
இருக்கிறதே—நாவலர் அவர்கள் நல்ல முறையில் ஆரோக்கியத்
தோடுதான் கம்பீரமாக அமர்ந்து கொண்டிருக்கிறார். எம். ஜி.
ஆர். நகர், சத்தியவாணிமுத்து நகர் என்றெல்லாம் இருக்கிறது.
அதிகாரிகள் பொறுப்பில் காரியம் நடக்கின்றன....

(பிற்பகல் 12-20.)

திரு. இரா. முத்தையா : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்
கான் ஜனநாயகத்தை பெரிதும் மதித்து பேசிக் கொண்டிருக்
கிறார். மதுரையில் இருந்த கருணாநிதி நகர் பகுதியை கலை
வாணர் நகர் என்று பெயர் மாற்ற வேண்டும் என்று தேர்ந்
தெடுக்கப்பட்ட மாநகராட்சியின் மாமன்றம் தீர்மானித்து
அந்த பெயர் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. அப்படி தேர்ந்
தெடுக்கப்பட்டவர்கள் செய்த அந்தத் தீர்மானத்தை இவர்
மறுக்கிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தின் துணைத் தலைவர்
அவர்களே, மதுரை, கோவை சென்னை மாநகராட்சிகளில்
தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கவுன்சில்
இருந்தபோது தீர்மானத்தைப் போட்டது.



1987 மே 8]

**திரு. அ. ரகுமான்கான் :** அப்படியானால் இன்றைக்கு
ஒரு மன்றம் முடிவு எடுத்துவிடுமானால் அதை மாற்றக் கூடாது
என்று நம்முடைய அருமை உறுப்பினர் சொல்லுகிறாரா?
மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு
மாவட்டத்தில் கலைஞர் பெயரால் பஸ் நிலையம் நிறுவப்பட
கனியம்பாடி ஊராட்சி ஒன்றியம் தீர்மானம் போட்டிருக்கிறது.
ஆனால் கனியம்பாடி ஊராட்சி ஒன்றிய ஆணையர்,
ஒரு உத்தரவைப் போடுகிறார். ஊராட்சி ஒன்றியத்
தலைவர்—தட்சிணாமூர்த்தி அவர்களுக்கு டாக்டர் கலைஞர்
பெயரால் நிழற் குடை இருக்கக் கூடாது என்று உத்தரவு
போடுகிறார். அதே நேரத்தில் முதலமைச்சர் எம்.ஜி.ஆர்.
பெயரில் நிழற் குடை ஆற்காடு ஊராட்சி ஒன்றியத்திலே
இருக்கிறது. வாலாஜா ஒன்றியத்தில் சீக்கலாபுரத்தில் இருக்
கிறது. புளியந்தளம் என்ற இடத்திலே இருக்கிறது. தேர்ந்
தெடுக்கப்படக்கூடிய பிரதிநிதிகள் கூடி எடுத்த முடிவு, அந்த
மன்றத்தின் முடிவுதானே இதுவும். இதை மட்டும் ஏன் மறுக்
கிறார்கள். இது என்ன உத்தரவு? முதலமைச்சர் எம்.ஜி.ஆர்.
பெயரில் நிழற் குடை இருக்கலாம் என்றால் எங்கள் தலைவர்
கலைஞர் பெயரில் நிழற் குடை இருக்கக் கூடாது என்று
உத்திரவு போடுவது துரோகம் அல்லவா என்று கேட்க விரும்பு
கிறேன்.

கட்டிடத் திறப்பு விழா, அடிக்கல் நாட்டுதல் ஆகியவற்
றுக்கெல்லாம், ஜனாதிபதி, துணை ஜனாதிபதி, சபாநாயகர்,
துணைத் தலைவர், முதலமைச்சர், மாநில மத்திய அமைச்
சர்கள் ஆகியவர்தான் கலந்து கொள்ளவேண்டும், அரசியல்
வாதிகள் கலந்துகொள்ளக் கூடாது என்று சொல்லுகிறார்கள்.
நான் கேட்க விரும்புகிறேன்—அரசியல்வாதி கலந்துகொண்டால்
என்ன தப்பு? தந்தை பெரியார் எந்தப் பதவியில் இருந்தார்?
அவருக்கு அரசாங்க மரியாதையைக் கொடுத்தோமே, மகாத்மா
காந்தி எந்தப் பதவியில் இருந்தார்? அவருக்கு அரசாங்க
மரியாதையைக் கொடுத்தோமே. அண்ணாவை வேலூர் நகராட்சி
யில் பேசுவதற்கு, காந்தி சிலையைத் திறப்பதற்கு அழைத்
தார்களே! அப்போது அண்ணா அவர்கள் அரசியல்வாதி தானே!
''மற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும்'' என்று
சொன்னாரே! இன்றைக்கு பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனி
யன், நகராட்சித் தலைவர் ஆகியவர்களின் அதிகாரத்தைப்
பறிப்பதற்காக இந்தக் காரியங்கள் நடைபெறுகின்றன.
மக்கள் பிரச்சினையான குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க இந்த
சர்க்கார் முயற்சிக்கவில்லை. வறட்சியைப் போக்க முயற்சிக்க
வில்லை, இலஞ்சத்தை ஒழிக்க முயற்சிக்கவில்லை, சட்டம்
ஒழுங்கை பாதுகாக்க முயற்சிக்கவில்லை, ஜனநாயக அமைப்
பில் தேர்தல்களைக் கொண்டுவர முயற்சிக்கவில்லை, விலை
வாசியைக் கட்டுப்படுத்த இந்த சர்க்கார் முயற்சிக்கவில்லை.
ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவருக்கு விரோத
மாக பல வழக்குகள் போடுவது எப்படி என்ற காரியத்தில்
இந்த சர்க்கார் ஈடுபடுகிறது.

எங்கள் கட்சியைச் சேர்ந்த ஸ்டாலின், நீலநாராயணன், அழகிரி என்ற இந்த மூன்றுபேரும் மிகப் பெரிய தப்பை செய்துவிட்டார்கள் என்று சொல்லி அவர்களைக் கைது செய்து கோபாலபுரம் வீட்டிலிருந்து காவல் நிலையத்திற்குக் கொண்டு போனார்கள். இரவு முழுவதும் வைத்திருந்தார்கள். பகல் முழுவதும் வைத்திருந்தார்கள். எங்கள் வக்கீல் சோம. கணபதி சந்தித்துக் கேட்கிறார்கள்—அவர்கள் செய்த தப்பு என்ன? எந்தெந்த செக்ஷன்கள்? அவர்களை கோர்ட்டுக்குக் கொண்டு வாருங்கள் என்று கேட்டால், இவ்வளவு நாள் வைத்து விட்டப் பிறகு இவர்களை கூப்பிட்டுக் கொண்டு போங்கள், ஒன்றும் கிடையாது என்று திருப்பி அனுப்புகிறார்கள். போலீஸ் ஏன் அவர்களைக் கைது செய்தது? ஏன் அவர்களை விட்டது? இதற்குக் காரணம் இருக்கிறதா? கிடையாது.

அதைப் போலவே கலைஞர் பி.ஏ. கோபால். அவர் ஒரு டாக்சியை வைத்திருக்கிறார். அவரையும் கைது செய்கிறார்கள். டாக்சியையும் பறிமுதல் செய்கிறார்கள். அதே நேரத்தில் இன்னுமொன்றைச் சொல்லுகிறேன். 1980 ஆம் ஆண்டு என்று கருதுகிறேன். நான் படித்துவிட்டுத்தான் சொல்லுகிறேன். ஆதாரத்தோடு தான் சொல்லுகிறேன். 1980 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2 ஆம் தேதி அண்ணா சாலையில் அ.தி.மு.க.—வின் ஊர்வலம் வருகிறது. அப்போது அ.தி.மு.க. அரசாங்கம் கலைக்கப்பட்ட நேரம். அந்த நேரத்தில் தடியடிப் பிரயோகம் நடைபெற்றது. அப்போது கடற்கரையில் பேசிய முதலமைச்சர்—அப்போது அவர் முதலமைச்சர் அல்ல—வன்முறையைக் கண்டிக்கிறார். அது தப்பானது, போலீஸ் அடக்கு முறை என்று சொல்லுகிறார். பிறகு தேர்தல் வருகிறது. அவர் முதலமைச்சராக ஆகிறார். 1980 ஆம் வருஷம் நடைபெற்ற போலீஸ் மானியத்தின்போது போலீஸ் மந்திரியான முதலமைச்சர் எம்.ஜி.ஆர். சொல்லுகிறார்—(பக்கம் 69)—தனியார் பொதுச் சொத்து நாசமானது. வன்முறையில் ஈடுபட்டார்கள். காவல் துறையினர் தாக்கப்பட்டார்கள் பி2 காவல் நிலையம் தாக்கப்பட்டது. பி2 காவல் நிலையத்தில் செண்ட்ரியாக இருந்த இராமனை கொல்ல, துப்பாக்கியை பறிக்க முயற்சி செய்தார்கள். தற்காப்புக்காக வானத்தை நோக்கிச் சுட்டார். மீண்டும் காவல் நிலையத்தில் மேசை நாற்காலி நாசம் செய்யப்பட்டன என்று சொல்லிவிட்டு, தங்களுடைய கட்சிக்காரர்களுக்கு எதிராக அப்போது தடியடிப் பிரயோகம் நடந்தது தப்பு என்று போலீசைக் கண்டித்து விட்டு, போலீஸ் மந்திரி ஆனவுடனே இவ்வளவு பேர்களின்மீது போடப்பட்ட வழக்குகளை, அவர்கள் அத்தனை பேர்களும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் காரர்கள் என்பதற்காக, இன்று நீதியைப் பற்றிப் பேசுகிறவர்கள், நியாயத்தைப் பற்றிப் பேசுகிறவர்கள் நீதிக்குத் தண்டனை கொடுக்கும் காரியத்தைச் செய்திருக்கிறீர்களே; வழக்கு வாபஸ் வாங்கப்பட்டிருக்கிறதே சொந்தக் கட்சி காரர்களுக்காக! அதே நேரத்தில் எதிர்க்கட்சிக்காரர்களை இப்படிச் சொல்லுகிறீர்களே, பொய் வழக்கு போடுகிறீர்களே, இது என் நியாயம்?





மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, திரு. ரகுமான்கான் அவர்கள் பேசும்போது குறுக்கிட வேண்டாமென்று இருந்தேன். உண்மைக்குப் புறம்பான செய்தி ஒன்று சொன்னார்கள். வள்ளுவர் கோட்டத்தில் சிறுநீர் கழிக்கிறார்கள், வள்ளுவனுக்கு வந்த அசிங்கமா, அவமானமா என்று சொன்னார்கள். அப்படிச் செய்கின்ற சண்டாளன் எவனாக இருந்தாலும் அவன் தமிழனாக இருக்க மாட்டான்; தமிழகத்தைச் சார்ந்தவனாக இருக்க மாட்டான்; தமிழச்சிக்குப் பிறந்தவனாக இருக்க மாட்டான். இப்படி அநியாயமாக, உண்மைக்குப் புறம்பான செய்தியைச் சொல்லி, எங்களைப் களங்கப்படுத்துவதாக எண்ணிக்கொண்டு, வள்ளுவனைக் களங்கப்படுத்த வேண்டாம். கடைசியில் உண்மைக்குப் புறம்பான ஒரு செய்தியைச் சொன்னார்கள். அண்ணா தி.மு.க. என்பதற்காக வழக்கு வாபஸ் பெறப்படவில்லை. அப்போது அடித்தது காவல் துறை. அப்போது இருந்த அரசாங்கம் போட்ட உத்தரவு தவறான உத்தரவு. அநியாயமாக வழக்கில் சிக்க வைக்கப்பட்டார்கள் என்பதற்காக முதலமைச்சராக வந்தவுடன் அந்த வழக்கைத் திரும்பப் பெற்றார்கள். முதலமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்டவர், மீண்டும் முதலமைச்சராக மக்களால் ஆக்கப்பட்டார் என்ற ஓரே சாட்சியம் போதுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் சொல்லி இருக்கிறீர்கள், அதை அமைச்சர் மறுக்கிறார். வள்ளுவர் கோட்டத்தில் அப்படி நடக்கவில்லை, அபாண்டம் என்கிறார். அவ்வளவுதான். (குறுக்கீடு) அப்ரோப்பிரியேஷன் பில்லில் 75 சதவிகிதம் பொருத்தமில்லாமல் பேசுகிறீர்கள். (குறுக்கீடு) ரிபடிஷனை அவாய்ட் பண்ண வேண்டும். It is the duty of the Chair அதனால் பேசியதையே மீண்டும் அனுமதிக்க முடியாது. போன தடவை காவல்துறையில் பேசியதை அப்படியே திரும்பப் பேசுகிறீர்கள். Repetition cannot be allowed in the House. (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, தடிப்பான வார்த்தைகளை அவையில் பயன்படுத்துவதன் மூலம் எல்லாம் தெரிந்ததாகக் கருதிவிட முடியாது. நாங்கள் மெதுவாக, மெல்லிய குரலில் பேசுகின்ற காரணத்தால் நாங்கள் தவறான தகவலைச் சொல்லுகிறோம் என்று கருதக்கூடாது. தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன். இப்படி அவையிலே நீங்கள் உட்கார்ந்திருக்கும்போது, அவைக்குத் தலைவராக இருக்கிறீர்கள்**. **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

என்றெல்லாம் பேசுவது நாகரீகமல்ல, முறையுமல்ல. தினமும் இதையே வேலையாக வைத்துக்கொண்டு, தரக் குறைவான வார்த்தைகளைப் பேசுவதும் தடிப்பான வார்த்தைகளைப் பயன்படுத்துவதும் ஒரு கட்சியில் இருக்கிற ஒருவருக்கு வாடிக்கையாகப் போய்விட்டால், இதை வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க முடியாது என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு பதில் கடுமையாக வரும் காலம் சீக்கிரம் வரும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது அவைக் குறிப்பில் ஏறவில்லை. (குறுக்கீடு) உட்காருங்கள். ஒரு உறுப்பினரைப் பேச அனுமதித்தால் மற்றவர் உட்கார வேண்டும். விதிகள் தெரியுமென்கிறீர்கள். விதிகளின் அடிப்படையே தெரியவில்லை. (குறுக்கீடு) ஓர் உறுப்பினர் பேச ஆரம்பித்ததும் உட்காரவில்லை. விதி தெரியும் என்று சொல்லுகிறீர்கள். ஆனால் விதியின் அடிப்படையே தெரியவில்லை. (குறுக்கீடு) ஒன்று சொல்கிறேன். பேசியதையே திரும்பப் பேசக் கூடாது. உள்ளாட்சித் துறை ஆணை பற்றி அமைச்சரவர்கள் தெளிவாகப் பதில் சொல்லி, மற்ற மாநிலங்களைப் பற்றி சொல்லி, உதாரணங்கள் எல்லாம் சொன்னார்கள். புதிதாக விஷயம் இல்லையா? பேசியதையே திரும்பப் பேசுகிறீர்கள். பேசியதையே பேச அனுமதிக்க முடியாது. சபையினுடைய நேரம் முக்கியம். (குறுக்கீடு) தனிப்பட்ட உறுப்பினர் திரு. ரகுமான் கானை விட சபையினுடைய நேரம் எங்களுக்கு முக்கியம். (குறுக்கீடு) பதில் சொன்னதைப் பற்றியே திரும்பப் பேசுகிறீர்கள். உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் தெளிவாகப் பதில் சொன்னார்கள். திரு. உத்திராபதி, பேசுங்கள்.

(பிற்பகல் 12-30)

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிற சட்ட முன்வடிவிலே 3,841 கோடியே, 50 லட்சத்து 71 ஆயிரம் ரூபாய்க்கு 59 இனங்களில் அங்கீகாரம் பொதுவாக இங்கே கேட்டிருக்கிறார்கள். இன்றைக்கு சட்ட மன்ற கூட்டத் தொடர் நிறைவு பெறக்கூடிய சூழ்நிலையில் இந்த நிதி ஒதுக்க சட்டமுன்வடிவை நிறைவேற்ற இருக்கிறோம். இங்கே 40 நாட்களாக விவாதம் நடைபெற்றிருக்கிறது. 59 இனங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்து வேலைகளைத் தொடங்க இருக்கிறோம். எதிர்காலத்திலே என்ன செய்ய வேண்டுமென்றால் அந்தந்தத் துறைகளைப் பொறுத்தமட்டிலும் வேலைகள் தீவிரமாக, நல்லமுறையில் துரிதமாக நடைபெற மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.



அடுத்து, இன்றைக்கு குடிநீர் வழங்கல், போக்குவரத்து வசதி, வறட்சி நிலை நிவாரணம் போன்ற பல்வேறு துறைகளுக்கு உலக வங்கி மூலமாக கடன் வாங்கக் கூடிய நிலை இருக்கிறது. தமிழ் நாட்டிலே இத்தகைய நிலை வளர்ந்து வருகிறது. இந்நிலை நீடித்தால் காலப்போக்கில் தமிழ்நாட்டு மக்கள் உலக வங்கியிடம் கடனாளிகளாக ஆகி, அந்தக் கடனை கொடுக்கக் கூடிய மக்களாக ஆகிவிடக் கூடாது என்பதால் இது பற்றி தமிழக அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சட்டமன்றத்தில் பணியாற்றுகின்ற காவலர்களுக்கு தினப்படியாக நாள் ஒன்றுக்கு 6 ரூபாய் வழங்கப்படுகிறது. இவர்களுக்கும் வெளியிலே பணியாற்றுகின்ற காவலர்களுக்கும் வேறுபாடு இருக்கிறது. இவர்கள் காலையில் வேலைக்கு வந்தால் சில சமயங்களில் இரவு 9 மணிவரை வேலை பார்க்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே அவர்களுக்கு இந்த தினப்படியை உயர்த்திக் கொடுத்து, அவர்களுடைய நியாயமான கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பாசனத்தைப் பொறுத்தவரையில் ஒவ்வோராண்டும் ஜூன் மாதம் தஞ்சை மாவட்டம் தண்ணீரை விவசாயத்திற்கு எதிர்பார்க்கிற மாவட்டமாக இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரைவில் டெல்லிக்குச் சென்று இடைக்கால ஏற்பாடாக கர்நாடக அரசோடு பேச்சுவார்த்தை நடத்தி, நடுவர் தீர்ப்பு வருவதற்கு காலதாமதம் ஆனாலும், தஞ்சாவூருக்கு தண்ணீர் கிடைக்க துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சாலைகளைப் பொறுத்தவரையில் அவைகளைச் செப்பனிட ஊராட்சி ஒன்றியங்களுக்கும், ஊராட்சி மன்றங்களுக்கும் விசேஷமாக நிதி ஒதுக்கீடு செய்து சாலைகளை நல்ல முறையில் செப்பனிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து, வறட்சி மேலும் மேலும் கடுமையாகிக் கொண்டிருக்கிறது. குடிப்பதற்கு தண்ணீர் இல்லாமல் குடி தண்ணீர் பற்றாக்குறை மேலும் மேலும் வளர்ந்து வருகிறது. ஆகவே, குடி தண்ணீர் எல்லோருக்கும் கிடைக்க துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தஞ்சை மாவட்டத்திலுள்ள மன்னார்குடி தாலுக்கா
ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் கல்யாண சுந்தரம் என்பவரை
உள்ளூர் பிரச்சினை காரணமாக ஒரு பிரமுகர் சொல்லி 8 காவ
லர்கள் சேர்ந்து அடித்ததன் காரணமாக கால் முறிந்து இன்
றைக்கு அவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.
பொதுமக்கள் கண்டித்த பிறகு இரண்டு காவலர்கள் தற்காலிக
மாக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆகவே
அதற்குக் காரணமான காவலர்கள் மீது நடவடிக்கை எடுத்து,
அவர்கள் தண்டிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. பொ. உத்திராபதி] [1987 மே 8

அடுத்து, தஞ்சையிலுள்ள புறம்போக்கு நிலத்தில் 50 பேர் குடிசை போட்டிருந்தார்கள். இன்றைக்கு அங்கே 35 பேர்களுடைய குடிசைகளை பிரித்துப் போட்டு அவர்கள் மீது வழக்கு போட்டிருக்கிறார்கள். அந்த வழக்கை தள்ளுபடி செய்வதுடன் அவர்களுக்கு குடியிருப்பு மனைகளை வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சிறை காவலர்களுக்கும் மற்ற காவலர்களுக்கும் இடையே சம்பளம், படி, குறைந்த விலையில் உணவுப் பொருள்கள் வழங்குவது; இப்படி அனைத்திலும் வேறுபாடு இருக்கிறது. சிறைகளில் வேலை பார்க்கிற காவலர்கள் கடுமையாக வேலை செய்யக் கூடிய நிலையில் இருப்பவர்கள். ஆகவே இரு பிரிவு காவலர்களுக்கும் இடையே எந்தவிதமான வித்தியாசமும் இல்லாமல் அவர்களுக்குரிய சலுகைககளை இவர்களுக்கும் அளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தஞ்சை மாவட்டத்தில் நிரந்தரமாக நெல் கொள்முதல் செய்யும் நிலை இருந்தது. இடையிலே அம்முறை நீக்கப்பட்டு லெவி முறையை அறிவித்ததால் வசதி படைத்தவர்கள் இருப்பு வைத்து 100 ரூபாய், 125 ரூபாய் என்கிற விலைக்கு விற்கிற வாய்ப்பு இருக்கிறது. ஆகவே. அந்த நிலையை போக்க முழுமையாக சர்க்காரே கொள்முதல் செய்ய வேண்டும்.

அடுத்து, இன்றைக்கு ஜாக்சாட்டோ (JACSATO) என்கிற அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் இணைந்த இயக்கங்கள் ஒரு லட்சம் பேருக்கு மேல் ஊர்வலமாக வந்து கோரிக்கை மனு கொடுக்க இருக்கிறார்கள். மத்திய அரசு கொடுக்கக்கூடிய சம்பளத்துக்கும், மாநில அரசு கொடுக்கக்கூடிய சம்பளத்துக்கும் இடையே நிறைய வேறுபாடு இருக்கிறது. பல்வேறு மாநிலங்களில் மத்திய அரசுக்கு இணையாகவும், கேரளா போன்ற மாநிலங்களில் கூடுதலாகவும் ஊதியம் வழங்கப்படுகிறது. அதனால்தான் இந்த இயக்கங்கள் இன்றைய தினம் கோரிக்கைகளை வைக்கின்றன. மத்திய அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்ற ஊதியத்திற்கும், மாநில அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்ற ஊதியத்திற்கும் இடையே இடைவெளி அதிமகமாக இருக்கிறது. 230 ரூபாயிலிருந்து 2,500 ரூபாய் வரை இந்த வேறுபாடு அதிகமாக இருக்கிறது. தமிழ்நாடு அரசில் பணியாற்றுகின்ற ஒரு கடைநிலை ஊழியரின் அடிப்படைச் சம்பளம் 530 ரூபாய் என்றால் மத்திய அரசில் பணியாற்றுகின்ற கடைநிலை ஊழியரின் அடிப்படைச் சம்பளம் 750 ரூபாய். ஏற்கனவே 7 மாநிலங்களில் மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக சம்பளம் வழங்கப்படுகிறது. மேலும் 12 மாநிலங்களைப் பொறுத்தவரை மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக ஊதியம் வழங்குவதாக கொள்கையளவில் ஏற்றுக்கொண்டு, அதற்குரிய குழுக்களை அமைத்து, உரிய நடவடிக்கைகளிலும் இறங்கியிருக்கின்றன. அந்த வகையில் தமிழ்நாடு அரசிலே பணியாற்றுகின்ற அரசு ஊழியர்கள் மட்டும் மிகவும் குறைந்த ஊதியம் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1987 மே 8] [திரு. பொ. உத்திராபதி]

மைய அரசின் இணையான ஊதியம் வழங்குவதால் ஏற்படும் கூடுதல் செலவில் எண்பது சதம் மைய அரசு ஏற்றுக்கொள்ளும் என்று தெரிவித்திருக்கிறார்கள்.

ஒரு மாத ஊதியம் போனஸாக வழங்கப்பட வேண்டும். மைய அரசு அனைத்து மாநில அரசுகளுக்கும் பதினைந்து நாள் ஊதியத்திலிருந்து முப்பது நாள் ஊதியம் வரை போனஸாக வழங்கப்படுகிறது. அதையும் மாநில அரசு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழக அரசு ஊழியர்கள் சிலபேர் டிஸ்மிஸ் செய்யப்பட்டிருக்கிறார்கள். சிலபேர் தற்காலிகப் பணி நீக்கத்தில், இருக்கிறார்கள். ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அனைத்துப் பழிவாங்கும் நடவடிக்கைகள் ரத்து செய்யப்பட வேண்டும். மதிய வேளைக் கூட்டம், உண்ணா நோன்பு, தர்ணா போன்ற சங்க நடவடிக்கைகள் அனுமதிக்கப்பட வேண்டும். 17 மாதங்களுக்கு முன்பு பறிக்கப்பட்ட தலைமைச் செயலகத்தின் சங்க அங்கீகாரத்தை மீண்டும் வழங்கி, அதிலேயிருந்து இன்னும் ஒரு சில பேர் வேலை நீக்கம் செய்யப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கும் மீண்டும் வேலை கொடுத்துச் சங்கத்தையும் அங்கீகரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று கல்லூரி ஆசிரியர்கள் ஊதிய மாற்றம். 14 ஆண்டுகளாக ஊதிய மாற்றம் இல்லாமல் இருக்கும் கல்லூரி ஆசிரியர்களுக்கு, ஊதிய மாற்றம் உடனடியாகச் செய்யப்பட வேண்டும் என மைய அரசைத் தமிழக அரசு வற்புறுத்த வேண்டும்.

இரண்டரை இலட்சத்திற்கும் மேற்பட்ட ஊழியர்கள், மதிப்பூதியம், தொகுப்பூதியம் பெறும் ஊழியர்கள் இருக்கிறார்கள். குறிப்பாகச் சத்துணவு மையத்தில் பணியாற்றும் ஊழியர்கள்—சத்துணவை எப்படி நாம் நிரந்தரமாக ஏற்றுக்கொண்டிருக்கிறோமோ அதேபோல இப்பிரிவில் இருக்கின்ற அனைவரையும் நிரந்தரப்படுத்தி, அவர்களுக்கும் அரசு சலுகை அளிக்க வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக, இந்த நிதி 3,800 கோடி ரூபாயை நாம் வழங்குகின்ற பொழுது, இந்நிதி முழுமையாக, முழுமையான காரியத்திற்குப் போய்ச் சேரக்கூடிய அளவிற்கு நமது நிதியமைச்சரவர்கள் எதிர்காலத்தில், எதிர்க்கட்சிகளைச் சேர்க்காமல் இருந்தாலும் கூட, கூட்டணிக் கட்சிகளைக் கொண்ட ஒரு அமைப்புக் குழுவை தாலுக்கா, மாவட்ட அளவில் அமைத்து, இந்த நிதி அந்தத் துறையின் மூலமாகச் சரிவரச் செலவழிக்கப்படுகிறதா என்று கண்காணித்து, ஒரு ரிப்போர்ட்டை அரசுக்குக் கொடுக்கக்கூடிய அளவிற்கு ஒரு அமைப்புக் குழுவை ஏற்படுத்த வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமைகின்றேன்.

திரு. கு. ரமணி : மதிப்பிற்குரிய துணைத் தலைவரவர் களே, நாம் எல்லா மானியங்களின் பேரிலேயும் விவாதத்தை முடித்து, 3,841½ கோடி ரூபாய்க்கான இந்தச் சட்டத்தை நிறை வேற்றுவதற்கான ஒரு விவாதத்தை இப்பொழுது நாம் செய்து கொண்டிருக்கிறோம். விரிவான விவாதங்கள் ஒவ்வொரு அம் சத்திலேயும் ஏற்கனவே நாம் பேசியாகிவிட்டது. ஆகவே, சில பொதுப் பிரச்சினைகள் சம்பந்தப்பட்டதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவது மிகமிக அவசியம் என்று கருதுகிறேன்.

இந்த விவாதம் நடக்கும்பொழுதே அரசாங்கத்தினுடைய ஊழியர்கள், ஆசிரியர்கள் ஒருவர், இரண்டுபேர் அல்ல; பல இலட்சக்கணக்கான ஊழியர்களுடைய முக்கியமான பிரச்சினை களின்மீது அரசாங்கம் எடுத்துள்ள முடிவுகள் அவர்களுக்குத் திருப்தியளிக்கவில்லை, நியாயம் வழங்கவில்லை என்று இன்றைய தினம், சென்னை நகரத்திலே அவர்களுடைய பிரம்மாண்டமான ஊர்வலம், பல்லாயிரக்கணக்கான ஆசிரியர்களும் மற்ற பகுதி அரசு ஊழியர்களும் கொண்ட, இந்த ஜேக்சாட்டோ என்ற ஸ்தாபனத்தின் சார்பிலே மாநிலம் முழுவதிலுமிருந்து வந்து அந்தப் பெரிய கிளர்ச்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

நான் ஏன் சொல்கிறேன் என்றால், அரசாங்கம் இதை ஒரு தவறான கண்ணோட்டத்தோடு அணுகக் கூடாது. அவர்கள் அவர்களுடைய பிரதிநிதிகளை அழைத்து வைத்து, என்ன நியா யம் வழங்க வேண்டுமென்பதையும், அரசாங்கத்தினுடைய சக்தி என்ன என்பதையும் அவர்களிடத்தில் எடுத்துச் சொல்லி, ஒரு நியாயமான தீர்வுக்கு வரவேண்டும்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

ஏற்கெனவே, இந்த செக்ரட்டேரியட் ஊழியர்கள் சஸ்பென்ட் பண்ணி வைக்கப்பட்டு, ஒன்றரை வருடங்களுக்கு மேலாகிவிட் டது என்று நினைக்கிறேன். அவர்களை இப்பொழுது மறுபடியும் பணியிலே சேர்த்திருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய அந்த ஒன்றரை வருட காலத்தினுடைய சஸ்பென்ஷனை தண் டனையாக மாற்றி, அவர்களுடைய சர்வீஸ் கன்டியூனிடி இல்லாத ஒரு நடவடிக்கை வந்திருக்கிறது என்பது எனக்குக் கிடைத்த செய்தி. அது உண்மையாகுமானால் அதுவொரு நியாயமான நடவடிக்கையாகாது. ஒரு ஸ்தாபனத்தின் சார்பிலே இவர்கள் எடுத்த ஒரு நடவடிக்கை— அந்த நடவடிக்கைகளில் குறையிருக் கிறது என்று சொன்னால் அவர்களை எச்சரிக்கலாம். ஆனால் இப்படிப்பட்ட நடவடிக்கைகள்—அவர்களுடைய சர்வீஸ், அவர் கள் சேமித்த சர்வீசையே ஒரு தண்டனைக்கு உட்படுத்தி வெட்டு வது என்ற இடத்திற்கு வரக்கூடாது அரசாங்கமே என்பதும் என் னுடைய வேண்டுகோள். அதற்கு நமது அரசாங்கமும், நமது



நிதியமைச்சரவர்களும் முதல்வரவர்களிடத்திலே எடுத்துச் சொல்லி, அவர்களை கூப்பிட்டுவைத்துப் பேசி, ஒரு நியாயமான நிலை ஏற்பட்டு, ஒரு சுமுகமான தொடர்பு, ஒரு உறவு அவர்களுக்கு மத்தியிலே உருவாக்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-10)

அதே மாதிரி இன்றைக்கு இந்த மன்றத்தில் நாம் மிகுந்த கவலையோடும், கவனத்தோடும் கவனிக்கவேண்டிய விஷயம் என்னவென்றால் வறட்சி. அதற்கான நிவாரணப் பணிகள் நடக் கின்றன. இப்போது வந்திருக்கிற பிரச்சினை என்னவென்றால், அநேகமாக ஜூன் முடிகிற வரையில் கூட மழை பெய்து அதன் காரணமாக வறட்சி தீரும் என்று எதிர்ப்பார்க்கக்கூடிய நிலைமை இல்லை. கடுமையான உஷ்ணம் தொடர்கிறது. 347 கோடி ரூபாய் நமக்குத் தேவை இந்த நிவாரணப் பணிக்காக என்று இந்த அரசு மத்திய அரசினிடத்தில் கேட்டு இருக்கிறது. ஆனால் மதிப் பிற்குரிய பிரதமர் அவர்கள் பாராளு மன்றத்திலே என்ன பேசி யிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பார்த்திருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். The State Gov rn- ments should not expect large Central assistance for drought and flood relief. இப்போது இருக்கக்கூடிய வறட்சிக்கு மட்டுமல்ல, நாளைக்கு வெள்ளம் வந்தால் கூட அதற்கும் சேர்த்து பெரிய அளவிலான தொகைகளை மத்திய சர்க்காரிலிருந்து மாநிலங்கள் எதிர்பார்க்கக் கூடாது; எதிர்பார்க்க முடியாது என்று ஒரு ஃபுல் ஸ்டாப் வைத்துப் பேசி இருக்கிறார்கள் பாராளுமன்றத்தில்.

We have to be very strict with the States coming to us for extra money.

அதிகப்படியான பணத்திற்காக நம்மை நாடி மாநிலங்கள் வரும்போது நாம் மிகவும் கண்டிப்பாக இருக்கவேண்டும் என்று அவர்கள் அங்கே சொல்கிறார்கள். நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். நீங்கள் என்னதான் அவர்களின் கொள்கையைப் பூராவும் ஏற்றுக்கொண்டு தமிழ்நாட்டில் அதை அமல்படுத்த முற்பட்டாலும் அவர்கள் மாநிலத்திற்காக நியாயமாகச் செய்ய வேண்டிய காரியத்தைச் செய்ய மறுக்கிறார்கள். அதுதான் யதார்த்தமான உண்மை. மாநிலங்களின் கையில் இவ்வளவு பணம் செலவழிப்பதற்கு என்ன சக்தி இருக்கிறது? என்ன நிதி வாயில்கள் இருக்கின்றன? 50,000 கோடி, 60,000 கோடி பணத்தை எடுத்துச் செலவழிக்கக்கூடிய மத்திய சர்க்கார் — என்னைக் கேட்டால் — இப்படிப்பட்ட கடுமையான நிலைமை யில் முழுப் பொறுப்பையும் அவர்கள் ஏற்றுக்கொண்டு மாநிலங் களுக்கு முடிந்த அளவுக்கு என்ன செய்ய முடியுமோ அதைச் செய்யலாம். ஆனால் மத்திய சர்க்கார் முழுப் பொறுப்பு ஏற்க வேண்டும். யாரும் திட்டம் போட்டு வரக்கூடியதல்ல. இந்த வறட்சியும், வெள்ளமும். எனவே இதிலே இந்தமாதிரியான ஒரு கண்ணோட்டத்தை மத்திய சர்க்கார் கொண்டிருப்பது ரொம் பத் தவறானது. எதிர்த்து நின்று போராட வேண்டிய விஷயம்

இது. போராட்டம் என்ற உடனே பயப்படவேண்டிய அவசியம் இல்லை. தமிழ்நாட்டினுடைய மக்களின் ஒன்றுபட்ட சக்தி, மனக்கருத்து என்ன என்பதை நாம் எடுத்துச்சொல்லியாக வேண்டும். இதுதான் இந்தியா முழுவதிலும் இருக்கக்கூடிய சூழ்நிலை. அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எப்படி பணம் கிடைக்கும்; எப்படி வறட்சி நிவாரணப் பணிகளைத் தொடர்ந்து செய்ய முடியும் என்பதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது எடுத்துக்காட்டவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அங்கே இருந்து கிடைக்கும், அங்கே இருந்து கிடைக்கும் என்று சொல்லிக்கொண்டே இருந்தோம். ஆனால் வறட்சி நிலைமையைப் பற்றிப் பார்ப்பதற்காக வந்த குழு—நாங்கள் கூட போய் இருந்தோம், அந்தக் குழுவினைச் சந்திப்பதற்காக—பார்த்துவிட்டுத் திரும்பிப் போயும் ஒரு பைசா கூட வந்து சேரவில்லை என்று தெரிகிறது. இப்படி இருந்தால் பிறகு மிகவும் நெருக்கடியான நிலைமையில் கொண்டுபோய் விட்டுவிடும் என்று நான் கருதுகிறேன். தமிழ்நாட்டு மக்களின் ஒன்றுபட்ட சக்தியைத் திரட்டி மத்திய அரசினிடத்திலே வற்புறுத்தியாவது நமக்கு வரவேண்டிய நியாயங்களைக் கேட்கவேண்டும். இது எல்லா மாநிலங்களும் ஒத்துக்கொள்ளக்கூடிய ஒரு விஷயம் என்று நான் கருதுகிறேன்.

அடுத்து தொழில் துறையில் இன்றைக்கு இருக்கிற கடுமையான நெருக்கடி மேலும், மேலும் வளர்ந்துகொண்டிருக்கிறது. மத்திய சர்க்காருடைய கொள்கையும் இதற்கு ஒரு காரணம். ஏற்றுமதி, இறக்குமதி விஷயங்களில் கையாளப்படக்கூடிய கொள்கையின் விளைவாக இந்திய நாட்டினுடைய வர்த்தகமும், தொழில் வளர்ச்சியும் பாதிக்கப்படக்கூடிய நிலைமை மேலும், மேலும் நீடித்துக்கொண்டே இருக்கிறது. எத்தனை தொழிற்சாலைகள் இன்றைக்கு மூடிக் கிடக்கின்றன ? இதன் விளைவு என்ன ? அவர்களும் தேசியமயமாக்க மாட்டார்கள்; இங்கே நாம் சொன்னால் நமக்கு ப்ராம்ட் ரிப்ளை வருகிறது, நாங்கள் தேசியமயமாக்கமாட்டோம் என்று. இங்கே இருக்கின்ற மாநில அரசுக்கு சொத்துக்களைத் தேசியமயமாக்குவதற்கான அதிகாரம் இல்லை என்பது தெரியும். நாம் என்ன கேட்கிறோம் ? ரொம்பச் சீரழிந்துள்ள நிலைமை ஏற்பட்டு, பல்லாயிரக்கணக்கான மக்கள் தெருவில் தள்ளப்படும்போது, அத்தகைய கம்பெனிகளின் நிர்வாகத்தை, மிஸ்மேனேஜ் பண்ணி பல கோடிக் கணக்கில் பணத்தை எடுத்துக்கொண்டு போய்விடக்கூடிய நிலைமையைத் தடுக்கின்ற வகையில் அந்த நிறுவனங்களின் மேனேஜ்மென்டை அரசு எடுத்துக்கொள்ளவேண்டும். அதற்குரிய வகையில் அரசு வங்கிகளுக்கும், மற்றவற்றிற்கும் உத்தரவாதம் கொடுத்தால் பணம் கொடுப்பார்கள். தொழிலாளர்களும் திட்டவட்டமாக ஒத்துழைக்கிறோம் ; அதிலே சந்தேகமே இல்லை. அதற்குத் தயாராக இருக்கின்றன தொழிற் சங்கங்களும். அப்படிப்பட்ட நிலைமையில் நடத்தினால்தான் இலாபம் கிடைக்கும். எந்தவிதமான நஷ்டமும் வரக்கூடிய நிலைமை இல்லை. கொள்ளை அடிப்பதனால் வரக்கூடிய நஷ்டம்தான் இது. இந்த நிலைமை எங்கே கொண்டுபோய்விடும் என்று கேட்டால்—தொழிலாளர்களுக்கான



ஒரு சட்டத்தைக் கூட இன்றைக்கு அமலாக்க முடியவில்லை. அத்தனை சட்டங்களும் சீரழிந்துபோய்விட்டன. முதலாளிகள் அவற்றை மதிப்பதில்லை. அரசாங்கத்தின் துறையில் இருக்கக்கூடிய தொழிற்சாலைகள் கூட அவற்றை அமலாக்கவில்லை. அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. இந்த நெருக்கடியில் தொழிற்சாலைகள் மூடப்பட்டு, தொழிலாளர்கள் வெளியேற்றப்பட்டு, அவர்கள் பரம்பரையாகப் போராடிப் பெற்றிருந்த உரிமைகள் பூராவற்றையும் குறைத்து, குறைத்து கடைசியில் பஞ்சப்படி வேண்டாம், சம்பளம் மட்டும் வாங்கிக்கொள் என்று அந்தத் தொழிலாளர்களிடம் சொல்லக்கூடிய நிலைமை உருவாகும். போனஸ் கேட்காதே, ஏதாவது சோற்றுக்குக் காசு கிடைக்குமா என்று பார் என்று சொல்லக்கூடிய பயங்கரமான ஒரு சீர்கெட்ட நிலைமை வளர்ந்துகொண்டு இருக்கிறது. இதை எந்தக் காரணத்தைக் கொண்டும் அனுமதிக்கக்கூடாது. தேர்தல் காலத்தில் இப்படி ஒரு விஷயம் நடக்குமா ? மத்திய சர்க்கார் எதையும் செய்ய மாட்டார்கள், நாங்களும் செய்ய முடியாது என்று சொல்வோமேயானால் நம் கதி என்னவாகும் ? நலிந்து போகக் கூடிய நிர்வாகத்தை எடுத்து அதில் ஆலை முதலாளிகளோ மற்றவர்களோ தலையீடு இல்லாமல், யாரும் தலையிட முடியாதபடிக்கு எடுத்து வேலைக்கு உத்தரவாதம் தந்து உற்பத்தியை செய்யும்படியான நிலைமையை உருவாக்கவேண்டும். அந்த ஆலை கடன்காரர்களுக்கு கொடுக்கவேண்டிய பணத்தைக் கூட பின்னால் கொடுத்துக் கொள்ளலாம் என்ற வகையில் இதை எடுத்துச் செய்ய வேண்டும்.

அடுத்து ஊராட்சி ஒன்றியத் தேர்தல்களை நடத்தினீர்கள். ஆனால் நான் கேட்கிறேன். இந்த மூன்று மாநகராட்சிகளுக்கும் அரசாங்கத்திற்கும் என்ன தகராறு ? ஏன் மாநகராட்சிக்கு தேர்தல் நடத்தக் கூடாது? அதே மாதிரியான ஜனங்கள் தானே இன்றைக்கும் ஓட்டு போடப் போகிறார்கள். அதிலே என்ன சங்கடம் உங்களுக்கு? எதற்காக பயப்படுகிறீர்கள்? தேர்தல் என்று சொன்னாலே ஒரு மாதிரியான அலர்ஜி. இந்த அலர்ஜி வரவேண்டிய அவசியம் இல்லை. நாம் எல்லாவற்றிலும் நல்லது தானே செய்திருக்கிறோம் என்ற நம்பிக்கை இருந்தால் எதற்காக தேர்தல் நடத்த பின்வாங்க வேண்டும். எனவே உடனடியாக இந்த 3 மாநகராட்சிகளுக்கும் தேர்தலை நடத்த வேண்டும். அதே மாதிரி கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு தேர்தல் நடத்தாமல் ஒத்திப் போட்டுக் கொண்டே வருவது சரியல்ல. அதற்கும் தேர்தலை நடத்த வேண்டும். விவசாயிகள் இருக்கக் கூடிய மார்கெட்டிங் கமிட்டிகளில் எல்லாம் தேர்தல் நடத்தாமல் இருக்கிறது. அதேபோன்று கூட்டுறவுச் சங்கங்களிலேயும் தேர்தல் நடத்தாமல் இருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. இப்படி தேர்தல் நடத்தாமல் இருக்கக் கூடிய நிலைமையை கொஞ்சம் கூட அனுமதிக்கக் கூடாது. ஆகவே உடனடியாக இந்த அமைப்புகள் எல்லாவற்றிற்கும் தேர்தலை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும்.

இறுதியாக நான் சொல்ல விரும்பக் கூடிய ஒரு விஷயம் நம்முடைய நாட்டினுடைய ஒற்றுமை மிகவும் சீரழியக் கூடிய ஒரு காலம்இது. நாடு முழுவதும் இருக்கக் கூடிய பிரச்சினையை நான் எடுத்துச்சொல்ல விரும்பவில்லை. தமிழ்நாட்டில் பெரிய அளவில் அப்படிப்பட்ட தகராறுகள் சங்கடங்கள் இல்லை. பஞ்சாப் மாதிரி, அஸ்ஸாம் மாதிரி அல்லது பீஹார் மாதிரியோ அல்லது மற்ற மாநிலங்கள் மாதிரியோ நமக்கு பிரச்சினை இல்லை என்பது ஒரு வகையில் ரிலீப் தான். ஆனால் அப்படி மட்டும் இந்த விஷயத்தை பார்த்தால் போதாது. தமிழக மக்கள் மத்தியில் தீய சக்திகள், பிளவு சக்திகள் ஜாதி மத எண்ணங்களை தூண்டி விட்டு கலகங்களை கிளப்பக் கூடிய சக்திகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு உதவக் கூடிய வகையில் ரெளடிகளும், சமூக விரோதிகளும் இருக்கிறார்கள். அது ஒரு ரியாலிட்டி, உண்மை. இதிலே அரசு சரியான கவனத்தோடு இயங்கவில்லை என்பது என் கருத்து. இதிலே கட்சி பேதம் இல்லாமல் ஒன்றுபட்டு ஜனநாயக விரோத சக்திகளை எதிர்த்து நிற்க வேண்டும். அது இல்லை என்று சொன்னால் என்ன கதி ஏற்படும்.

நம்முடைய காவல் துறை மானியத்திலே பேசும்போது சொன்னார்கள். 26 இடங்களிலே துப்பாக்கிப்பிரயோகம் நடந்தது என்று சொன்னார்கள். இது ஒன்றும் மனத்திற்கு நிம்மதி கொடுத்து விடக்கூடிய சங்கதி அல்ல. நம்முடைய நாவலர் அவர்கள் பேசும் போது கூட இது ஒன்றும் விரும்பத்தக்கது அல்ல எனறு சொன்னார்கள். பொதுவாக தமிழ்நாட்டின் ஜனங்கள் ஜாதி வெறி மத வெறி கொண்டு இருப்பவர்கள் அல்ல. மக்கள் ஒன்று சேர்ந்து வாழக் கூடியவர்கள் தான். தீய சக்திகள் தூண்டி விட்டு இது மாதிரி செய்கிறார்கள். அதன் மூலம் மக்களை கொள்ளை அடிக்கிறார்கள், சுரண்டுகிறார்கள். அப்படிப்பட்ட சக்திகளை தடுத்து நிறுத்த வேண்டிய நடவடிக்கைகள் வேண்டும். அதற்கு அனைத்து ஜனநாயக சக்திகளோடும் ஒன்று பட்டு, ஒன்று படுத்தி இருக்க வேண்டிய பொறுப்பு இந்த அரசாங்கத்திற்கும் இருக்கிறது; இந்த அரசாங்கத்தை நடத்துகிற ஆளும் கட்சிக்கும் பொறுப்பு இருக்கிறது. அது இல்லை என்று சொன்னால் நிலைமை இன்னும் மோசமாக போகும்.

அடுத்து ஒரு பிரச்சினை நினைவிற்கு வருகிறது. ஆனால் அதை இந்த அவையில் எந்த முறையில் பேசுவதற்கும் கஷ்டமாக இருக்கிறது. லஞ்ச ஊழல் என்பது நாட்டிலே உண்மையிலேயே வளர்ந்திருக்கிறதா இல்லையா? இதைப்பற்றி நாங்கள் பொதுவாகப் பேசினால்; பொதுவாக பேசக் கூடாது எல்லோரையும் அது குறிக்கும் என்கிறீர்கள். சரி வேண்டாம் என்று குறிப்பிட்டு பேசினால், நீங்கள் யாரைப் பற்றி குறிப்பிடுகிறீர்களோ அவர்கள் இங்கே இல்லை, எனவே அவருக்கு பதில் சொல்ல முடியாது என்று சொல்லுகிறீர்கள். இந்த இரண்டிற்கும் மத்தியில் நாங்கள் என்ன செய்வது என்று தெரியாமல் இருக்கிறோம். அப்படி என்றால் லஞ்ச ஊழல் என்பதைப் பற்றி பேசவே கூடாதா? இன்றைக்கு பார்லிமெண்டிலே விவாதிக்கக் கூடிய சட்டம் என்ன? பிரதம அமைச்சர் என்ன சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்? அவர்கள்



சொல்வது போல் நடத்தப்போகிறாரா என்பது வேறு பிரச்சினை. ஆனால் அது உண்மை. அதை நாம் மறுக்கக் கூடாது. ; மறைக்கக் கூடாது. கீழ் மட்டத்திலேயிருந்து அரசு அலுவலகங்களில் பல இடங்களில், தனிப்பட்ட முறையில் பல இடங்களில் என்று இந்த மாதிரி நடக்கக் கூடிய லஞ்ச ஊழல்கள் மேலும் மேலும் வளரக் கூடிய வகையில் இருக்கிறது. சமூகத்தை சீர் குலைக்கும் சக்திகளும், மிகவும் மோசமான தீய சக்திகளும் இதற்கு உள்ளே புகுந்து விடுகிறார்கள்.

(பிற்பகல் 12-50)

அவர்களுக்கு அதிலே ஒரு இண்டரஸ்ட். ''ஆற்றிலே நின்று அரோகரா என்றாலும் சோற்றிலே இருக்குதடா தம்பி சொக்க லிங்கம்'' என்பதைப் போல தகராறை உருவாக்கிவிட்டால் நாமும் உள்ளே புகுந்து சம்பாதிக்க முடியுமா என்பது தான் கேள்வி. அப்படிப்பட்ட நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அதற்கு இந்த அரசு முன்னுக்கு வர வேண்டும். லஞ்ச லாவண்யம், ஊழல் பற்றி பேசக்கூடாது என்று வாயை அடைப்பதனால் மட்டும் பிரயோஜனம் இல்லை. ஆதாரம் காட்டு, ஆதாரம் காட்டு என்று சொல்கிறீர்கள். லஞ்சம் வாங்குபவர்கள் யாராவது ரசீது கொடுப்பார்களா? அல்லது பத்திரம் எழுதித் தருவார்களா? விசாரணை கோர்ட் வைப்பதனால் சாட்சி சொல்வதற்கு ஜனங்கள் வருவார்கள். ஆனால் அப்படிப்பட்ட விஷயத்திற்கு நீங்கள் விசாரணை கோர்ட் வைக்க மாட்டீர்கள். ஆகவே இந்த மன்றத்தில் போகப் போக ஒரு ஜனநாயக முறையில் இதை வற்புறுத்தி குறைத்து, லஞ்ச லாவண்யம், ஊழலைத் தடுப்பதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை எடுக்க முடியாமல் போகிறது. இது எங்களுடைய கருத்து. இதையும் கருத்தில் கொண்டு நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் இந்த பணம் முழுவதையும் பயன்படுத்துகிற காலத்தில், அவர் முறையாக பயன்படுத்தக் கூடிய அமைச்சர் ஆவார்கள். அதில் ஒன்றும் பிரச்சினையில்லை. ஆனால் எல்லா இலாக்காக்களிலும் என்ன சொல்கிறார்சள் என்றால் பணச் செலவு என்று அதிகமான கோரிக்கையை கொண்டு வந்து விடாதீர்கள். நம்முடைய நாவலர் அவர்கள் கொடுக்க மாட்டார் என்று. அவர் சொந்தமாக பிடித்து வைப்பதில்லை. இருக்கிற பணத்திலிருந்து எதற்கு டைவர்ட் பண்ணுவதென்று, எதற்கு அதிகமாகக் கொடுப்பதென்று பார்க்க வேண்டும். எப்படியிருந்தாலும் வாங்கக்கூடிய பணத்தோடு நிற்கப் போவதில்லை. இன்னும் அதிகமாகத்தான் ஆகப் போகிறது. கடுமையான நெருக்கடி வரக்கூடிய குடிநீர் சப்ளை, விவசாயிகள் பிரச்சினை, தொழிலாளர் பிரச்சினை, கல்வி இப்படிப்பட்ட தேவையான கொஞ்சம் அதிகமாகசெலவு ஏற்படக் கூடியவைகளுக்கு பண நெருக்கடி என்ற பெயரால் மக்களுக்கு கிடைக்கிற சௌகர்யத்தை தடுக்காதீர்கள். 'அதற்கு வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. கி. ராமன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நிதியொதுக்க சட்டமுன்வடிவில், போலீஸ் மானியம் சம்பந்தமான ஒரு பொருளை மட்டும் பேச விரும்புகிறேன். 5—5—1987 அன்று செவ்வாய்க்கிழமை, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் காவல்துறை மானியக் கோரிக்கை பதிலுரையில் இராஜபாளையத்தில் நடந்த கலவரம், கொலைகள் பற்றி அரசு தரப்பில் சில விவரங்களைக் கொடுத்தார்கள். அதிலே எனக்கு கருத்து வேறுபாடு ஒன்றுமில்லை. ஆனால், மக்கள் சார்பில் நான் சில விவரங்களை, அந்தத் தொகுதி எம்.எல்.ஏ., என்ற முறையில், சொல்ல வேண்டுமென்று வேண்டியதற்கிணங்க பேரவைத் தலைவர் அவர்களும், அவை முன்னவர் அவர்களும் இந்த வாய்ப்பினைக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு, என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

படுகொலை செய்யப்பட்டு இறந்தவர்களுக்கு என்னுடைய கண்ணீர் அஞ்சலியைச் செலுத்தி என்னுடைய கருத்துக்களை. சாதக பாதகமற்ற நிலையில் சொல்ல ஆசைப்படுகிறேன். சரித்திரம் காணாத இந்த துரதிருஷ்டவசமான சம்பவம், நாடார் சமுதாயத்திற்கும், அரிசன மக்களுக்கும் இடையில் ஏற்பட்ட எந்தவிதமான மோதல் காரணமாகவும் இல்லையென்றும், சில சமூக விரோதிகளுடைய பாதகச் செயல்தான் என்றும், மிக அழுத்தமாக கூறிக்கொள்ள விரும்புகிறேன். சமுதாயப் பெரியவர்கள், பொது மக்கள், காவல் துறையினர், பத்திரிகையாளர்கள் ஆகியவர்களின் ஏகோபித்த கணிப்பும் இதுதான். இரு சமுதாயத்தினரும் என்றைக்குமே சுமுகமாக வாழ்ந்தவர்கள். என்றைக்கும் அவர்கள் இருவருக்கும் பிரச்சினைகள் என்பது கிடையாது. என்றைக்கும் சுமுகமாக வாழ விரும்புகிறார்கள். கலவரத்திற்குப் பின்னால், மூன்று நாட்கள் நான் இராஜபாளையத்தில் தங்கியிருந்தேன். மக்கள் பலரைச் சந்தித்தேன். 27—4—1987 திங்கட் கிழமையன்று தாலூகா ஆபீசில் திரு. பாஸ்கரன், மாவட்ட ஆட்சியாளர் (பொறுப்பு) அவர்கள் தலைமையில் சர்வ கட்சிக் கூட்டமும், சமாதானக் குழுக் கூட்டமும் நடந்து, இருதரப்பினரும் என்றும்போல் சுமுகமாக வாழ வேண்டும், அமைதி காக்க வேண்டும், கொலைகளுக்குக் காரணமான சமூக விரோதிகளை விரையில் அடையாளம் காண அரசோடு ஒத்துழைக்க வேண்டுமென்று துண்டு பிரசுரங்கள் மூலமாகவும், பத்திரிகைகள் மூலமாகவும் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். நாடார் சமூகத்தினர் சமபந்தி போஜனம் ஏற்பாடு செய்வதாகவும் சொல்லியிருக்கிறார்கள். உண்மையில் என்ன நடந்திருக்கிறது என்றால், 18—4—1987 அன்று சைக்கிள் கடை ஒன்றில் அரிசன வகுப்பைச் சார்ந்த ஒருவர் வாடகை சைக்கிள் எடுக்கப் போன போது....

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை): கேஸ் ரெஜிஸ்டர் பண்ணி இன்வெஸ்டிகேஷனில் இருந்தால் நீங்கள் சொல்லும் கருத்து அந்த விசாரணைக்கு குந்தகமாக அமைந்து விடக்கூடாது. உண்மையாக என்ன நடந்தது என்று**



குறிப்பிடும்போது, வேறு ஏதோ இன்னொன்று அங்கே நடந்திருப்பதைப்போலவருகிறது. விசாரணைக்கு உங்கள் கருத்து பாதகமாக இருந்து விடக் கூடாது. உங்கள் கருத்தை சொல்ல வேண்டிய இடத்தில் சொல்லலாம். இந்தச் சட்டமன்றத்தில் தான் சொல்ல வேண்டும் என்பதல்ல. விசாரணையில் கூட சொல்லலாம். ஆகவே, விசாரணைக்கு குந்தகம் இல்லாத அளவிற்கு கருத்துக்களைச் சொல்லுங்கள்.

திரு. கி. ராமன் : உண்மையாக நடந்தது என்னவென்றால், 18—4—1987 அன்று, அரிசன வகுப்பைச் சேர்ந்த ஒருவர், சைக்கிள் கடையில் வாடகைக்கு சைக்கிள் ஒன்றை எடுக்கப் போனபோது, கள்ள மரங்களை வெட்டிக்கொண்டு வருவதற்கு வாடகைச் சைக்கிள்களைப் பயன்படுத்துவதால், போலீசார் சைக்கிள்களைப் பறிமுதல் செய்கிறார்கள். ஆகையினால், சைக்கிள் கொடுக்க முடியாது என்று மறுக்கப்பட்டதால், வாக்குவாதமும், கைகலப்பும் ஏற்பட்டு இருக்கிறது. இந்தச் சம்பவம், அன்றோடு முடிந்துவிட்டதாகவும், தெரிகிறது. ஆனால், இந்தச் சம்பவத்திற்குப் பின்னால், இரண்டு தரப்பிலும் உள்ள சமூக விரோதிகள், தீய சக்திகள், சமூகப் போர்வையைப் போர்த்திக்கொண்டு, சைக்கிள் விவகாரத்தைப் பயன்படுத்தி, பலாத்காரத்திலே இறங்கியிருக்கிறார்கள். இராஜபாளையத்திலிருந்து மேற்கே உள்ள காடுகளில் ஒளிந்து கொண்டு, கொரில்லா பாணியில் கொடூரமான கொலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஒரே ஒரு கொலை மட்டும் இராஜபாளையம் நகரத்தின் நடு ரோட்டில் 25—4—1987 சனிக்கிழமை இரவு சுமார் 8½ மணிக்கு நடந்திருக்கிறது. இதிலே, முக்கியமான பிரச்சினை என்னவென்றால், காவல் துறையினர், இந்தக் கொடுமைகளைத் தடுத்து நிறுத்தியிருக்க முடியுமா, மேலும் திறம்படச் செயல்பட்டு கணிசமான முறையில் குறைத்திருக்கவாவது முடியுமா என்பதுதான். முடியும் என்பதுதான் பொது மக்களுடைய உறுதியான அபிப்பிராயம். முதலாவதாக, கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், கள்ள மரம் வெட்டுவோர், சூதாடுவோர் என்ற பட்டியலுக்குட்பட்ட சமூக விரோதிகளை வளர விட்டது காவல் துறையினரின் முதல் குற்றமாகும். உள்ளூர் போலீசார் அவ்வப்போது தேவைப்படும் போதெல்லாம் கடுமையான நடவடிக்கை எடுத்திருந்தால், சமூக விரோதிகளின் சாம்ராஜ்யம் அழிந்திருக்கும். ஆனால் அரசியல்வாதிகள், பெரிய மனிதர்களின் தலையீடு, தடையாக இருக்கிறது. இரண்டாவதாக, இந்தச் சம்பவத்திற்கு அப்புறமாவது, இரு தரப்பிலேயும் உள்ள சமூக விரோதிகள் யார், யார் என்று அடையாளம் கண்டு, அவர்களைக் கைது செய்திருக்கவேண்டும். உள்ளூர் போலீஸ் அதிகாரிகளுக்குத் தெரியாத சமூக விரோதிகள் இருக்க நியாயமில்லை. அவர்களைக் கைது செய்வதற்கு முடியாவிட்டால், அவர்களை போலீசாரிடம் ஒப்படைக்கும்படி, அவர்களுடைய குடும்பத்தினரைக் கட்டாயப்படுத்தியிருக்கவேண்டும். இதையும் செய்ய காவல் துறையினர் தவறிவிட்டார்கள்.

25—4—1987 சனிக்கிழமை அன்று, போலீஸ் கண்ணெதிரிலேயே திரு. மாரியப்ப நாடார், கொலை செய்யப்பட்டு இருக்கிறார். கொலை நடந்த இடம், தென்காசி சாலையின் கீழ்ப்புறம். சாலையின் மேற்புறம் பெருமளவில் போலீசார் நிறுத்தப்பட்டிருந்தனர். போலீசார் இதை ஏன் தடுக்கவில்லை. பயந்து ஓடிவிட்டார்களா என்ற கேள்வி மக்கள் மனதிலே எழுந்திருக்கிறது. சமூக விரோதிகளால் கொலை செய்யப்பட்டவர்கள் அப்பாவி மக்கள். விசாரணை என்ற பெயரில், காவல் துறையினரால் கைது செய்யப்பட்டவர்களும், கலவரத்தில் எந்த விதத்திலேயும் சம்பந்தப்படாத அப்பாவி மக்கள். நகர மன்ற உறுப்பினர், நாடார் வகுப்பைச் சேர்ந்த திரு அனந்த கிருஷ்ணன் அவர்களைக் காரணமெதுவுமின்றி கைது செய்திருக்கிறார்கள். அரிசன வகுப்பைச் சேர்ந்த நகர மன்றத் துணைத் தலைவர் திரு. முத்துசாமி அவர்களுடைய வீட்டிற்கு சேதம் உண்டாக்கி, 25—4—1987 இரவு 12-1/2 மணிக்கு 10, 15 போலீசார் மின்சாரக் கம்பம் வழியாக அவர்களுடைய வீட்டிற்குள் இறங்கி காலட்டா செய்து, மாடியில் உறங்கிக் கொண்டிருந்த அவருடைய மகனைக் கைது செய்திருக்கிறார்கள். கொலை செய்யப்பட்டு இறந்து போனவரின் சடலத்தை எரிக்கப்போன அரிசனங்களை, ''பாதுகாப்பாக டவுனுக்குள் கொண்டுபோய் விட்டுவிடுகிறோம், மிகவும் பதட்ட நிலையாக இருக்கிறது என்று சொல்லி, ஆண்களை ஒரு வேனிலேயும் பெண்களை ஒரு தனி வேனிலேயும் ஏற்றி, பெண்களை மட்டும் டவுனிலே கொண்டு போய் விட்டுவிட்டு, ஆண்களை அப்படியே கைது செய்து திருவில்லிப்புத்தூருக்கு கொண்டு போயிருக்கிறார்கள். சுந்தரராஜபுரம் கிராமத்தில் கிணறு வெட்டும் இடத்திலேயே தங்கி, கிணறு வெட்டும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த ஜமீன் நத்தம்பட்டியைச் சேர்ந்த கிராமவாசிகளைக் கைது செய்து. இருக்கிறார்கள். இவர்களுக்கும், கொலைகளுக்கும் என்ன சம்பந்தம்? இராஜபாளையத்தை சேர்ந்த, சோமியாபுரத்தில் வாழும் அரிசன மக்களில் வேறு ஒரு பிரிவினரைக் கைது செய்து, இருக்கிறார்கள். போலீசாருக்குப் பயந்துகொண்டு, இராஜபாளையத்தைச் சேர்ந்த சில அரிசன மக்கள் பக்கத்திலுள்ள சோழபுரத்திற்குச் சென்றிருந்தபோது, அந்தக் கிராமத்தை ரெய்டு செய்து, அங்குள்ள மக்களை, மாணவர்கள் உட்பட கைது செய்து இருக்கிறார்கள். இவற்றில் எல்லாம் போலீசார் நிதானமாக பொறுப்போடு, கண்ணியமாக செயல்பட்டிருக்கலாம். சந்தேகத்தின் பேரில், யாரை வேண்டுமானாலும் கைது செய்யலாம் என்ற வாதத்தை ஒப்புக்கொள்ள இயலாது. ஏற்கனவே வறட்சியின் கொடுமையால் வாடிக்கொண்டு இருக்கும் மக்களுக்கு மேலும் ஏற்பட்ட அவதியைத் தடுத்திருக்கலாம். தடுத்திருக்க முடியும் என்பது மக்களுடைய குமுறலாகும். சம்பந்தம் இல்லாத மக்கள், கைது செய்யப்பட்டு அவதிப்பட்டது, '' பனைமரத்திலே தேள் கொட்டினால், தென்னை மரத்திலே நெறிகட்டிய'' கதையாக உள்ளது. தவிர்த்திருக்கக்கூடிய இத்தனை சம்பவங்கள் நடந்துவிட்டாலும், வெளி மாவட்டங்களிலிருந்து எல்லாம் போலீசாரை பெருமளவில் கொண்டு வந்து, அமைதியை நிலைநாட்ட எடுத்துக்கொண்ட பெரு முயற்சிக்காக துணை





இன்ஸ்பெக்டர் ஜெனரல். திரு. கோவிந்த். மாவட்ட போலீஸ் அதிகாரி. திரு, ரத்னசபாபதி, வெளி மாவட்ட காவல் துறை அதிகாரிகள், மற்றும் அனைத்து காவல் துறையினருக்கும், குறிப்பாக இராஜபாளையத்தில் முகாமிட்டிருந்த இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. ஸ்ரீபால் அவர்களுக்கும் மக்கள் சார்பிலும், என் சார்பிலும் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒவ்வொரு நாளும் என்ன நிலைமை நிலவுகிறது என்பதை தொலைபேசி மூலமாக அறிந்து கொண்டிருக்கிறேன். நேற்று இரவு கூட என்னுடைய வீட்டிலிருந்து தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பேசியபோது, பெருமளவிலே போலீசார் திரும்பிப் போய்விட்டார்கள் என்றும், அநேகமாக சாதாரண நிலை திரும்பிவிட்டதாகவும் அறிந்தேன். மிக்க மகிழ்ச்சி.

கடைசியாக மக்கள் சார்பில் ஒருவேண்டுகோள் விடுக்கிறேன். இராஜபாளையம் வடக்கு காவல் நிலையத்தில் காவலர்களின் எண்ணிக்கையை கட்டாயமாக அவசியம் அதிகப்படுத்தவேண்டும். வருங்காலத்தில் சமூக விரோதிகளைக் கடுமையாக கண்காணிக்கவும். மேலும் இதுபோல அசம்பாவிதங்கள் என்றைக்கும் நடந்து விடாமல் தடுக்கவும். அவசியம்மேற்பட்டால், இராஜபாளையம் வடக்கு, இராஜபாளையம், தெற்கு, சேத்தூர் ஆகிய காவல் நிலையங்களில் தற்போது பணி புரிபவர்களை முழுமையாக மாற்றி. புதிய காவலர்களையும் அதிகாரிகளையும் நியமிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

(பிற்பகல் 1-00)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, சென்ற பல நாட்களாக இந்த அவையின்கண் பல் வேறு துறைகளின் சார்பாக வைக்கப்பட்ட மானியக் கோரிக்கைகள் மீது விவாதங்கள் நடைபெற்று இந்த அவையினுடைய ஒப்புதலோடு மானியங்களெல்லாம் ஒதுக்கீடு செய்யப்பட்டதற்குப் பிறகு இப்போது ஒட்டுமொத்தமாக 3,841 கோடியே 50 இலட்சத்து 71 ஆயிரத்திற்கு மேற்படாத தொகையை நிதி ஒதுக்கீடாக தர வேண்டுமென்று கோருகின்ற இந்மசோதாவின் மீது மாண்பு மிகு உறுப்பினர்கள் இறுதியாக சில பல கருத்துக்களை இங்கே கூறியிருக்கின்றார்கள், பல்வேறு மானியக் கோரிக்கைகள் வருகின்றபோது பல கருத்துக்களைக் கூறியிருக்கின்றார்கள் என்றாலும் இந்த கருத்துக்கள் அத்தனைக்கும் இப்போது விடையிறுப்பது என்பது இயலாத ஒன்று. குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் எ. எஸ். ஏ ஆறுமுகம் அவர்களும் மாண்புமிகு உறுப்பினர் ராமன் அவர்களும் காவல் துறையைப் பற்றியும், இராஜபாளையம் நிகழ்ச்சியைப்பற்றியும் இங்கே நினைவு படுத்தினார்கள். காவல் துறை மானியக் கோரிக்கை இந்த அவையின் முன் வந்தபோது, இராஜபாளையத்திலே ஏற்பட்ட நிகழ்ச்சியைப் பற்றியும் அதைப்பொருத்து மாவட்ட ஆட்சித் தலைவரும், காவல் துறையினரும்

தந்த குறிப்புகளை இந்த அவையின் முன் வைத்தேன். மாண்பு
மிகு உறுப்பினர் ராமன் அவர்களும் கிட்டதட்ட அதனை
யொட்டியே தனது கருத்துக்களை இங்கே வைத்திருக்கிறார்கள்.
இரண்டு சமுதாயத்தாருக்கும் இடையே ஏற்பட்ட போட்டியல்ல
என்கின்ற தன்மையினுடைய அடிப்படையிலேயும் ஆனால்,
அங்கே சமுதாய விரோத சக்திகள், ரெளடிகள் சமுதாய போர்
வையிலே புகுந்து கொண்டு இந்தக் கலவரங்களுக்கெல்லாம்
அடிப்படையாக விளங்கி இப்படி விரும்பத்தகாத நிகழ்ச்சி
களுக்குக் காரணமாக அமைந்து விட்டார்கள் என்ற கருத்தை
யும் அவர்கள் சுட்டிக்காட்டி, இந்த ரௌடிகளையெல்லாம்
அடையாளங் கண்டு சமுதாய விரோதிகளை முன் கூட்டியே
தெரிந்து தக்கபடி காவல் துறையினர் நடவடிக்கை எடுத்திருப்
பார்களேயானால் இந்த அளவிற்கு நிலைமைகள் மோசமாக
ஆகியிருக்காது என்ற கருத்தை அவர்கள் தம்முடைய தரப்பிலாக
எடுத்துத் தெரிவித்து இருக்கிறார்கள். ஆனால் அவர்கள்
சொல்லியது மாதிரி, நானும் இன்றைக்கு எடுத்துத் தெரிவித்த
மாதிரி 10 கொலைகள் நடைபெற்றன என்றால் இது நகர்
புறத்துக்குள்ளாக காவல் துறையினருடைய முழு கண்காணிப்பு
இருந்தது என்றாலும் நகரத்திற்குள்ளாகவே நடைபெற்ற,
இரண்டு சமுதாயத்திற்குள்ளே ஏற்பட்ட போராட்டமாக
இருக்குமேயானால் தடுத்து நிறுத்தியிருக்கலாம். இரண்டு பிரி
வாக வந்து மோதியிருப்பார்களேயானால் தடுத்து நிறுத்தி
யிருக்கலாம். அவர்கள் ஆயுதங்கள், கருவிகள் மற்றவை
களைக் கொண்டு வந்திருப்பார்களேயானால் அவற்றைத் தடுத்
திருக்கலாம். அவர்களில் முக்கியமான சமூக விரோதிகளைக்
கைது செய்திருக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் ராமன்
அவர்கள் கூறியதுபோன்று பிர்க்காவுக்கு வெளியாக ஆங்காங்கே
இருக்கிற காடுகளிலும், வேறு பல இடங்களிலும் நடைபெற்றது
என்ற ஒரே ஒரு கொலையைத் தவிர மற்றவைகளெல்லாம்
சுற்றுப்புறங்களிலே நடைபெற்றதற்கும் இந்த சமூக விரோத
சக்திகளுடைய தூண்டுதலும், மற்றவைகளும் காரணம் என்றும்
அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆகவே, அங்கேயிருக்கின்ற பலரும்
எடுத்துச் சொல்லியதற்கு இணங்க அப்படிப்பட்ட சமூக
விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பவர்களை குண்டர்கள்
சட்டத்தின் கீழ் செய்து உள்ளே தள்ளுவதற்கான
முயற்சிகளை மேற்கொள்ளலாம் என்று மாண்புமிகு முதல்வர்
அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்கான குறிப்புகளை
மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலிருந்து கேட்கப்பட்டிருக்கின்
றன. அவர்களும் அனுப்பியிருக்கிறார்கள் என்று நான் கருது
கிறேன். விரைவிலே அதற்குக் காரணமாக இருப்பவர்கள்
எல்லாம் தக்கபடி தண்டிக்கப்படுவார்கள்; அந்தச் சட்டத்தின்
படி கைது செய்யப்படுவார்கள். ஒரு அமைதியான சூழ்நிலை
ஏற்பட வேண்டுமென்பதுதான் அரசினுடைய முக்கிய நோக்க
மாகும். இராஜபாளையத்தில் எதிர்பாராத வகையில் இப்போது
10 பேர் கொலை செய்யப்படுகின்ற அளவுக்கு ஒரு சூழ்நிலை
ஏற்பட்டது மிக மிக வருந்தத்தக்க ஒன்றுதான். ஆனாலும்
இப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்படாத அளவுக்கு





முன்கூட்டியே சமுதாயத்திலே இருக்கின்றவர்கள், அதற்கான
சூழ்நிலைகள் ஏற்படாத அளவிற்கு தடுத்து நிறுத்தவும் வேண்டும்.
மற்றைய உறுப்பினர்களும் தங்கள் தங்கள் உணர்வுகளை இங்கே
எடுத்துச் சொல்லியதற்கிணங்க, ஜாதி மாச்சரியங்களுக்கும்,
சமய மாச்சரியங்களுக்கும், வேறு பல மாச்சரியங்களுக்கும் இட
மளிக்காமல், யார் எதை எடுத்துச் சொன்னாலும் கூட, அன்பு
நெறிக்கும், அருள் நெறிக்கும், அற நெறிக்கும், பிற நெறிகளுக்
கும் இடமளித்து, அத்தகைய கருத்துக்களுக்கு ஆக்கம்
அளிக்க வேண்டுமென்று எடுத்துச் சொன்னாலும், நடைமுறை
களில் அவைகளுக்கெல்லாம் இடமளிக்காத அளவுக்கு ஊக்கம்
தருவதன் விளைவாகத்தான் சமுதாயத்திலே பல்வேறு பிரச்
சினைகள் ஏற்படுகின்றன. அதற்கெல்லாம், பெரியவர்கள்,
மற்றவர்கள், சமூகத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள்,
பொது நலத் தொண்டர்கள், சமுதாயத்திலே இறங்கி, சமு
தாயத்திலே அமைதி காண விரும்புகிறவர்கள் அனைவரும் மிகத்
தீவிரமாகப் பாடுபடுவதன் மூலமாகத்தான் ஆங்காங்கு நல்லதொரு
சூழ்நிலையை நாம் ஏற்படுத்த முடியும். இனக் கலவரங்கள்
மற்றவைகள் ஏற்படுவதற்கு இடம் அளிக்காத வகையில் ஆங்
காங்கு இருக்கிற பெரியவர்களும், பொது மக்களிடத்திலே
செல்வாக்கு மிகுந்தவர்களும், பொதுமக்களுக்கு அறிவுரை கூறி
அவர்களைத் திருத்தக் கூடிய வலிமை பெற்றவர்களும் உள்ள
படியே முன் வர வேண்டும் என்று எச்சரிக்கை செய்கின்ற அளவு
வுக்குத்தான் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் அமைகின்றன.
இதிலே சிலபல பாடங்களை கற்றுக் கொண்டவர்களாகவும்
இருக்கிறோம். ஆக அரசும், காவல் துறையினரும் இப்படிப்
பட்ட நிகழ்ச்சிகள் ஏற்படாத அளவுக்கு முன்கூட்டி என்ன என்ன
நடவடிக்கைகள் இப்படிப்பட்ட ஜாதி மாச்சரியங்கள், இன
மாச்சரியங்கள், அல்லது சமய மாச்சரியங்கள் ஏற்படுகிற
நேரத்தில், ஏற்படுகிற இடத்தில் மேற்கொள்ள வேண்டுமோ
அதை மேற்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.
அதுபற்றியும் தீவிரமாக கவனம் செலுத்த வேண்டும் என்பதை
யும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்லி
யிருக்கிறார்கள் என்பதையும் இந்த வாய்ப்பில் நான் எடுத்துக்
கூறிக் கொள்ள விரும்புகிறேன். இங்கே அன்றைக்கே நான்
காவல் துறையைப் பற்றி காவல் துறையிலே ஏற்பட்டு இருக்கிற
பல்வேறு சூழ்நிலைகள், மற்றவைகளைப் பற்றி எடுத்துச் சொன்
னேன். பரவலாக நடைபெறுகின்ற பல்வேறு தன்மைகளில் இங்
கொன்றும், அங்கொன்றுமாக பல்வேறு நிலைமைகள் ஏற்படு
கின்றன.

லஞ்ச ஊழல் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு.
ரமணி அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அது உள்ளபடியே
யாரும் விரும்பத்தகாத ஒன்று தான். லஞ்சம் வாங்குவதும்
தவறுதான், லஞ்சம் கொடுத்து காரியத்தை முடிக்க
விரும்புவதும் தவறுதான், குறுக்கு வழியில் சென்று
தங்களுடைய காரியத்தை பணத்தை வைத்து எப்படியாவது
தாங்கள் முடித்துக் கொள்ள வேண்டும் என்று சிலர் விரும்பு

கிறார்கள். விரும்பி அதற்கான முயற்சியும் செய்கிறார்கள். அதற்கு சில பேர் இரையும் ஆகிவிடுகிறார்கள். இதை தடுத்து நிறுத்த வேண்டும் என்பதுதான் அரசினுடைய எண்ணம். ஆகவேதான் இதற்கு என்று லஞ்ச ஒழிப்புத் துறை என்றே ஒரு துறையை வைத்து அதற்கு உயர்மட்ட காவல் துறை அதிகாரியையும், வல்லுநர்களையும் மற்றவர்களையும் வைத்து குற்றவாளிகளைப் பிடிக்கிறோம் . இதில் அரசாங்கத் துறையைச் சேர்ந்த அதிகாரியை மற்றவர்களைத்தான் இந்த லஞ்ச ஒழிப்புத்துறை பிடித்து கடைசியில் பல்வேறு வகைகளில் விசாரணை செய்து வந்து, கடைசியில் வருகின்றபோது அவர்கள் சொல்லியது போல் இதிலே காரணங்கள் ஆதாரங்கள் மற்றவைகள் இல்லாத வகையில் கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆனது மாதிரி சிலபல வகைகளில் வந்து சேர்ந்து விடுவதன் காரணமாக அதனுடைய நெளிவு, சுளிவுகளில் பல பேர் நுழைந்து தப்பித்துக் கொள்கிறார்கள். ஆக அது போல் தப்பித்துக் கொள்ளுவதை தடுக்கப்பட வேண்டும். அது சமுதாயத்தில் இருக்கின்ற அத்தனை பேரும் உணர்வோடு கொள்ள வேண்டும் என்ற உணர்வை நாம் அத்தனை பேரும் கொள்ள வேண்டியவர்களாகத்தான் இருக்கிறோம். அதற்கான நடவடிக்கைகளுக்கு ஊக்கம் தராத வகையிலும், ஆக்கம் பயக்காத வகையிலும் அத்தனை பேரும் அதில் முனைப்புள்ளத்தோடு ஈடுபட வேண்டியவர்களாகவும் இருக்கிறோம். அதற்கு என்று தனியாக ஒரு இலாகா வைத்து இருக்கிறோம். அதில் வருகின்ற போது கடைசியில் சட்டத்திலே போய் சட்டத்தின் இண்டு இடுக்குகளில், சந்து பொந்துகளில் புகுந்து அதிலே இடம் இல்லை. கமா இல்லை, செமிகோலன் இல்லை, புல்ஸ்டாப் இல்லை என்று எல்லாம் பொருள் கண்டு அதன் காரணமாக தப்பித்து வந்து விடுகிறவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். இதை எல்லாம் கூட தடுத்து நிறுத்துகிற அளவுக்கு சமுதாயம் நன்கு இருக்க வேண்டும். மக்கள் வஞ்சிக்கப்படாமல் இருக்க வேண்டும். நியாயங்கள் நன்கு நடைபெறுவதற்கு உள்ளபடியே வழிவகை செய்ய வேண்டும் என்பதுதான் நம்முடைய முக்கிய நோக்கமாகும். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை கூறியதை நான் இங்கே நினைவு படுத்தியிருக்கிறேன். மறுபடியும் நான் நினைவு படுத்த விரும்புகிறேன். அவர்கள் சுருக்கமாகவும் சொன்னார்கள், அழகாகவும் சொன்னார்கள். நியாயங்கள் எக்காரணம் கொண்டும் காயப்படுத்தப்படக் கூடாது என்பதும், காயங்கள் எக்காரணம் கொண்டும் நியாயப்படுத்தப்படக் கூடாது என்பதும் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். Justice should not be wounded என்றும் Wounds should not be justified என்றும் எடுத்துச் சொன்னார்கள். சுருக்கமான வார்த்தைகளில் எடுத்துச் சொன்னார்கள். அதைத்தான் அதிகாரத்தில் இருப்பவர்களும் உணர வேண்டும். பொது வாழ்க்கையில் இருப்பவர்களும் உணர்தல் வேண்டும். அதை நன்கு உணர்ந்து பணியாற்றுவோமானால் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி, போன்றவர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களுக்கு நல்ல ஆக்கமும் மற்ற நிலைமைகளும் ஏற்படக் கூடும்.





ஆகவே அது மட்டுமல்லாமல் வக்ப் வாரியத்தைப் பற்றி பேச வாய்ப்பு இல்லை என்று சொன்னார்கள். அதற்கான மானியக் கோரிக்கை வருகின்றபோது இதற்கு என்று உள்ள அந்தத் துறையைப் பற்றி மானியக் கோரிக்கை வரும்போது, அது தனி அமைச்சரின் கீழே வருகிறது. அப்போது அவர்கள் பேசுவதற்கு வாய்ப்பு கேட்டு இருப்பார்களானால் தந்து இருக்கலாம்.

[பிற்பகல் 1–10]

மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசுகின்றபோது மாநில சுயாட்சியைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். இந்த அரசு பல தடவை எடுத்து தெரிவித்து இருக்கிறது. இங்கே முக்கியமான முற்போக்கு எண்ணம் கொண்ட எதிர்க்கட்சிகள் அத்தனையும் அதை பல தடவை வற்புறுத்தி வந்து இருக்கின்றன. இந்தியாவை பொறுத்த வரையிலும் குடியாட்சி முறை வேண்டும் என்பதும், உள்ளபடியே இருக்கிற குடியாட்சி தன்மை காப்பாற்றப்பட வேண்டும் என்பதும் அதே நேரத்தில் மாநிலங்களுக்கு இருக்கிற தன்னாட்சி உரிமைகள் இருந்தால்தான் மிக சிறப்பாக அமையும் என்பதும் இவைகள் எல்லாம் வேண்டும் என்பதற்கான காரண காரிய விளக்கங்களை பல தடவை மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துத் தெரிவித்து இருக்கிறார்கள். அரசு சார்பாக நானும் எடுத்துத் தெரிவித்திருக்கிறேன். ஒவ்வொரு ஆண்டு நிதிநிலை அறிக்கையிலும் அதுபற்றிய விளக்கக் குறிப்புகளில் நாம் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அந்த வகையிலே ஒவ்வொரு உடல் உறுப்பும் வலுவாக இருந்தால்தான் உடல் முழுவதும் வலுவாக இருந்ததாக ஆகுமே தவிர. ஒரு '' ஸ்ட்ராங் சென்டர் '' வேண்டுமென்றாலும்கூட, அதனுடைய பகுதிகள் எல்லாம் வலுவாக இருந்தால்தான்.. சென்டர் வலுவாக இருக்க முடியும். ஆக பகுதிகள் எல்லாம் பலஹீனமாக இருந்தால், உடல் முழுவதும் வலுவாக இருக்கும் என்று சொல்ல முடியாது. அதுமட்டுமல்லாமல், ஒரு குறிப்பிட்ட இடம் மட்டும் வலுவாக இருந்து, மற்றைய பகுதிகள் எல்லாம் வலுவு குறைந்துவிடுமேயானாலும்கூட, அதுவும் சிறந்த செயல்களுக்கு ஆக்கம் ஆகாது. மக்கள் என்று சொன்னால், இந்தியாவில் இருக்கிற 22 மாநிலங்களுக்கு மட்டும் தான் சொந்தம். மத்திய அரசுக்குச் சொந்தமேயில்லை என்று ஆகாது. இந்தியாவில் வாழ்கிற, 76, 77 கோடி மக்களும் இந்திய அரசுக்கு முழுக்க முழுக்கச் சொந்தம். அதே நேரத்தில், மாநில அரசுகளுக்கும் முழுக்க முழுக்கச் சொந்தம்.

" இன்றைக்கு வெள்ளத்தால் பாதிக்கப்பட்டாலும், வறட்சியால் பாதிக்கப்பட்டாலும், பொருளாதாரத்தால் பாதிக்கப்பட்டாலும், நலிவு ஏற்பட்டாலும், அதைக் காப்பாற்ற வேண்டிய முழுப் பொறுப்பு மாநில அரசுக்கு மட்டும் தான் என்று அல்ல

மத்திய அரசுக்கும் ஏற்படுகிறது. அப்படிப்பட்ட நேரங்களிலே
தான் பெரும் பெரும் வருமானத்திற்குக் காரணமாக இருக்கின்ற
மத்திய அரசை மாநில அரசு அணுக வேண்டிய ஒரு அவசியம்
ஏற்படுகிறது. மாநில அரசுகள் எல்லாம், தன்னுடைய நிதி
நிலைமை, நிதியாதாரம், தன்னுடைய வரி வசூலிக்கின்ற தன்மை,
தங்களுடைய ஆதாரத்தினுடைய அடிப்படையில் செய்து பார்த்து
முடியாத கட்டத்தில், அதை நிறைவேற்றுவதற்கு வேண்டிய கட்
டத்தில் மத்திய அரசிடத்திலே செல்ல வேண்டிய கட்டம் ஏற்
படுகிறது. நான் அடிக்கடி எடுத்துச் சொன்னேன். வறட்சியைப்
பொறுத்த வரையில் மத்திய அரசு கொடுக்கின்ற நிதியைக்
கொடுத்தாலும், அதிலே 70 சதவீதம் கடனாகவும், 30 சதவீதம்
மானியமாகவும் தரப்படும். அது அதிகமாக வரும் வரும் என்று
நான் எதிர்பார்க்கவே இல்லை. மாண்புமிகு திரு. ரமணி அவர்கள்
கூடச் சொன்னார்கள், அதிகமாக வரும் வரும் என்று. அது
சிலபேரை வைத்துப் பார்த்துத்தான் சொல்கிறார்களே தவிர,
அனுபவத்தினுடைய அடிப்படையில் பார்த்தால் வருகின்ற மாதிரி
யும் இருக்காது. இருந்தாலும் நாம் தான் பொறுப்பேற்க
வேண்டியவர்களாக இருக்கிறோம். மாநிலம் தான் பொறுப்
பேற்க வேண்டியதாக இருக்கும்.

நான் சென்ற ஆண்டு சொன்னேன். 1986 ஆம் ஆண்டு
ரூ. 105 கோடி வறட்சிக்காக நாம் செலவழித்தாலும், மத்திய
அரசினுடைய மானியம் என்று நமக்குக் கிடைத்தது, ரூ. 72
கோடி தான். கிட்டத்தட்ட ரூ. 26, ரூ. 27 கோடியைக் கட
னாகத் தந்திருக்கிறார்கள். அதை நாம் திருப்பித் தந்திட
வேண்டும். அது நம்முடைய பொறுப்பு. மீதிச் செலவு முழு
வதும் நம்முடைய பொறுப்புதான். இதுவரையில் கிட்டத்தட்ட
ரூ. 45 கோடியை நாம் வறட்சி நிவாரணப் பணிகளுக்காக ஒதுக்
கித் தந்திருக்கிறோம். இது மேலும், மேலும் வளர்ந்து கொண்டு
தான் போகிறது. இந்த மாதம், அடுத்த மாதம், அடுத்த மாதத்
திற்கு இறுதி வரையிலும், ஆக வறட்சி நிவாரணப் பணிகளை
நாம் மேற்கொள்ள வேண்டும். மேற்கொண்டு ஆழ்துளைக்
கிணறுகளை ஆங்காங்கே போட வேண்டிய அவசியம் நமக்கு
ஏற்படுகிறது. அதுமட்டுமல்லாமல், அடுத்த மழை பெய்து, பரு
வங்கள் வந்து, பயிர் செலவுகள் எல்லாம் நடைபெற்று, ஆக
வேலைவாய்ப்பு ஏற்படுகின்ற வரையிலும், வேலைவாய்ப்பு உரு
வாக்க வேண்டிய அவசியம் நமக்கு ஏற்படுகிறது. சென்ற ஆண்டு
ரூ. 100 கோடியை வறட்சி நிவாரணப் பணிகள் தாண்டிய நிலை
யில், இந்த ஆண்டும் எட்டினாலும் கூட நாம் ஆச்சரியப்படுவதற்
கில்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு ரமணி அவர்கள் குறிப்பிட்டதுபோல்
எல்லா மாநிலங்களுக்கும் சேர்ந்து வறட்சி, வெள்ளம் இவற்றுக்குத்
தருவதற்கு மத்திய அரசாங்கத்தினுடைய அவ்வளவு பெரிய பட்
ஜெட்டில் ஒதுக்கியிருப்பது ரூ. 500 கோடிதான். ஆக 10
மாநிலங்கள் இப்போது கேட்டுக்கொண்டிருக்கின்றன, வறட்சி
வறட்சி என்று. இந்த ரூ. 500 கோடியிலிருந்து தான் அவர்கள்



பிரித்துக் கொடுக்க வேண்டும். ஆக நாம் கேட்க வேண்டிய
கடமைக்குக் கேட்கிறோம் என்றால் கூட, அவர்கள் எந்த அள
விற்குக் கொடுக்கப் போகிறார்கள் என்பது பின்னால்தான் தெரி
யும். இருந்தாலும் நாம் கேட்க வேண்டிய கடமையில்
கேட்டுக்கொண்டுதான் இருக்கிறோம்.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையிலும் ஏற்கெனவே வறட்சி
நிவாரணப் பணிகள் மட்டுமல்லாமல், எதிர்காலத்தில் நம்முடைய
வறட்சிப் பணிகள், மற்றவைகள் எளிதாகத் தாக்காத அளவிற்கு
ஒரு முன்னேற்பாடான வகையில் பணிகளைச் சேர்த்துச் செய்
கின்ற வகையில்தான் ரூ. 347.25 கோடிக்கு ஒரு விவர அறிக்
கையை மத்திய அரசுக்கு நாம் அனுப்பி வைத்தோம். இது
தவிர, மதுரை மாநகருக்கு குடிநீர் மேம்பாட்டிற்காக ரூ. 1.20
கோடியும், துரிதமாக ஆழ்துளைக் கிணறுகளை அமைக்க 90
ரிக்குகள் வாங்க ரூ. 20 கோடியும் கோரி மத்திய அரசுக்கு
ஒரு அறிக்கையை 5—5—1987 அன்று அனுப்பிவைத்திருக்கிறோம்.
மேலும், மத்திய அரசினுடைய நிதியுதவியை ஆராய்ந்துப்பார்த்து,
ஒரு அறிக்கை வைத்து, ஒரு நிதியைத் தருவதற்கு முன்னால்,
முன் பணமாக, ''அட்வான்சாக'' ரூ. 100 கோடியைத் தமி
ழகத்திற்குத் தரவேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள்
பிரதமருக்கு அண்மையிலே ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள்.
தமிழகம் சமாளிப்பதற்கு அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை ஏற்
பட வேண்டுமென்று ரூ. 100 கோடியை அளிக்க வேண்டுமென்று
அண்மையில் அவர்கள் கேட்டிருக்கின்றார்கள்.

ஆனாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்து
கூறியதற்கிணங்க அந்த பணத்தை மட்டுமே எதிர்பார்த்து இந்த
நிவாரணப் பணிகளைச் செய்கின்றோம் என்று அல்ல. ஆனால்,
நாட்டினுடைய பல்வேறு பிரச்சினைகளையும் மற்றவைகளையும்
நாம் கூர்ந்து கவனித்து அவற்றைச் செய்கின்றோம். மற்றைய
மாநில சுய ஆட்சித் தன்மைகள் அதற்கு தன்னாட்சி உரிமைகள்
பெறவேண்டும் என்பதையும் சர்க்காரியா கமிஷனிடத்திலே நாம்
தெளிவாக எடுத்துச் சொன்னோம். இன்டர் ஸ்டேட் கௌன்
சிலைப்பற்றி சொன்னார்கள். ஆக இப்படிப்பட்ட விவகாரங்
களைப் பொறுத்த வரையில் கூட்டப்பட வேண்டும் என்ற கருத்
தைத்தான் நாம் எடுத்துச் சொல்கின்றோம். அந்த மாநாட்
டைப்போய் கூட்டினோமா இல்லையா என்பதை அந்த மாநாட்
டிலே கூடுகின்றவர்கள் எடுத்துச் சொல்கிறார்கள். அந்தக் கருத்
திலே வேறுபாடு இல்லை. நமக்கு ஒன்றிய கருத்துதான்.
நமக்கு வாய்ப்பு ஏற்படுகின்ற காலத்தில் வாய்ப்பு ஏற்படுகின்ற
நிலையில் நாமே எடுத்துச் சொல்கின்றோம். அவர்களும் எடுத்
துச் சொல்கிறார்கள். மற்றைய எதிர்க்கட்சிகள் காங்கிரஸ் அல்
லாத மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் அதை வற்புறுத்தி வரு
கிறார்கள். நாமும் சர்க்காரியா கமிஷனிடத்திலே இதை வற்
புறுத்தி வருகிறோம். அரசியல் அமைப்புச் சட்டம் நாம் கோரு
கின்ற அளவிற்கு விரும்புகின்ற காலம்வரையிலும், விரும்புகின்றபடி
மாநிலங்களுக்கு அதிக உரிமைகள் தந்து மத்தியிலே கூட்டாட்சி,
மாநிலங்களிலே தன்னாட்சி உரிமையையும் பெறுகின்ற ஒரு

நிலைமை ஏற்படுகின்ற காலம் வரையிலும் இப்படிப்பட்ட இன்டர் ஸ்டேட் கௌன்சில் போன்றவைகள் இருந்தால்தான் பிரச்சினைகளை தீர்க்க முடியும் என்பதை நாம் வற்புறுத்தியும் இருக்கிறோம். அதுமட்டுமல்லாமல் கண்ணகிக் கோயிலைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். கண்ணகி கோயிலைப் பற்றி பல ஆண்டுகளாக வருவாய்த்துறையைப் பொறுத்த வரையிலும் பல்வேறு எல்லைத் தகராறு இருந்துகொண்டிருக்கிறது. அது தீர்க்கப்படாமல் அந்த மாநிலத்திற்கும், இந்த மாநிலத்திற்கும் பல வகைகளிலே, பல ஆண்டுக்காலம் முந்தைய காங்கிரஸ் ஆட்சியிலிருந்து, அதற்குப் பிறகு தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இருந்து, அதற்குப் பிறகு நெருக்கடி காலத்திலிருந்தும், அதற்குப் பிறகும் கரஸ்பாண்டன்ஸ் நடந்து கொண்டிருக்கிறது. நமக்கு உரியது என்று நாம் வரைபடத்தை வைத்து காட்டுகிறோம். அதனுடைய எல்லைக்கோடு அந்த கோயிலினுடைய பாதையிலே செல்கிறது என்று அவர்களும் வாதாடுகிறார்கள். இது எப்படியாவது தீர்க்கப்பட வேண்டும் என்று இருக்கிறது. அந்த உரிமையை நாம் விட்டுக் கொடுக்க வில்லை. ஆக, அந்தக் கண்ணகி கோயில் நமக்கு உரியதுதான் என்ற உரிமையைப் பற்றி கடிதப் போக்குவரத்து மற்றவைகளும் ஒரு பக்கம் நடந்துகொண்டிருக்கிறது. ஆக அந்த உரிமையை விட்டுக் கொடுக்காத நிலையிலேதான் மற்றொரு கண்ணகி கோயிலை கம்பம் பள்ளத்தாக்கின் அடிவாரத்திலே கட்டலாமா, கட்டுவதற்கு, கோயில் எழுப்புவதற்கு ஒரு முயற்சி நடைபெறுகிறதே தவிர, அந்த உரிமையை அடியோடு விட்டுவிட்டு இதைச் செய்யவில்லை. பல்வேறு இடங்களிலே, பல்வேறு சூழ்நிலையிலே ஏற்படுவதை ஒட்டி இது ஒரு தனி முயற்சி. அதற்காக அந்த உரிமை விட்டுக்கொடுக்கப்படவில்லை என்பதை மட்டும் இந்த வாய்ப்பிலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். திருக்குறள் தேசியமயமாக்கப்படுவதல்ல. யாருக்கும் உரிமை உடையதல்ல. ஆனால், தேசீய நூலாக ஆக்க வேண்டும் என்பதுதான். ஆக தேசத்திற்கு என்று நாட்டிற்கு என்று ஒரு பறவை இருக்கிறது. நாட்டிற்கு என்று ஒரு மிருகம் இருக்கிறது. நாட்டிற்கு என்று ஒரு பாடல் இருக்கிறது. அந்தப் பாடலை பொறுத்தவரையில் ரவீந்திரநாத் தாகூர் அவர்கள் எழுதிய வங்க தேசப் பாடல் '' ஜன கன மன '' வைத்திருக்கிறார்கள். தேசீய பறவை என்பது மயில். தேசீய மிருகம் என்பது புலி. அது மாதிரி தேசத்திற்கென்று தேசீய நூல் ஒன்று இருக்க வேண்டும். அந்த நூல் திருக்குறளாக இருக்க வேண்டும் என்பதை திருக்குறள் மாநாட்டிலும்/ மற்றவைகளிலும் வற்புறுத்தி வருகிறோம். நாமும் தீர்மானம் நிறைவேற்றி வருகிறோம். தேசீயமயமாக்கப்படுவது பற்றி எல்லோரும் தீர்மானம் போடலாம். யாருக்கும் உரிமை உடையது அல்ல என்பதால். அது ஏற்கனவே ஆகியிருக்கிறது. சங்க இலக்கியங்களைப் பொறுத்த வரையில் 50 ஆண்டுகள் ஆகிவிட்டாலே உள்ளபடியே ஒரு நூலை ஒருவர் எழுதினாலே பிறகு யாருக்கும் சொந்தம் உடையதாக ஆகாது. அதை யார் வேண்டுமானாலும் பதிப்பிக்கலாம். யார் வேண்டுமானாலும் போடலாம் என்று உரிமை இருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் அது நாட்டிற்கு உரிமை உடையதாக ஆகவேண்டு





மென்று எழுதினோம். அதற்கு கூட ஒரு தடவை அவர் பதில் எழுதினார். ஒவ்வொரு மாநிலத்தாரும், ஒவ்வொரு மொழியினரும் தங்கள் தங்கள் மொழி நூலை தேசிய நூலாக்க வேண்டுமென்று கிளர்ச்சிகளை கிளப்புவார்கள் என்றெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். நாம்எல்லோரையும் கேட்டாலும்கூடஒவ்வொருமாநிலத்திற்கும் இருக்கின்ற பெருமைகளை, மற்றவைகளை உணர்கின்ற அளவிற்கு இந்தியாவிலே இருக்கின்ற நூல்களிலே மிகச் சிறந்த நூல் என்று எல்லோரும் போற்றத்தக்க, பாராட்டத்தக்க நூலாக இருப்பதன் காரணமாக இதை ஆக்கலாம். எப்படி தாகூர் இயற்றிய அத்தகையப் பாடலை இந்தியாவே ஏற்றுக்கொண்டு இருக்கிறதோ அதே மாதிரி சாரநாத்திலே இருக்கின்ற அசோகனுடைய தூணிலே இருக்கின்ற 4 சிங்கங்கள் பொதித்து அந்த தூணினுடைய முகட்டுப் பகுதியை எப்படி தேசத்தினுடைய அடையாளமாக ஏற்றுக்கொண்டிருக்கிறோமோ அது மாதிரி ஒரு பகுதியிலே இருக்கின்ற மயிலை ஏற்றுக்கொண்டிருக்கிறோமோ அது மாதிரி இந்த நூலை ஏற்றுக் கொள்ளலாம் என்பதை மீண்டும் மீண்டும் வற்புறுத்தி வருகிறோம். அதே போன்று, நகரைப்பற்றி அவர்கள் சொன்னார்கள். அது என்ன நிலைமை என்பதை உள்ளாட்சித்துறையைக் கேட்டால்தான் தெரியும். சென்னையிலே இருக்கின்ற கே. கே. நகர், கே. கே. நகராகத்தான் இருக்கிறது என்று நான் கருதுகிறேன். பல இடங்களிலே அதே பெயரிலேதான் இருக்கிறது. கலைஞர் பெயரிலே இருக்கின்ற நகர் அப்படியேதான் இருக்கிறது. என்னுடைய பெயரால் நகர் இருக்கிறது. அதை மாற்றிக்கொள்வதைப் பற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை.

(பிற்பகல் 1-20)

அதை நான் கேட்டு வாங்கவும் இல்லை. என் பெயரால் இருக்க வேண்டும் என்று நான் விரும்பவும் இல்லை. அதை வேண்டுமானால் வேறு பெயரிலே மாற்றிக்கொள்ளலாம். அதை நாவலர் சோமசுந்தர பாரதியார் நகர் என்று வேண்டுமானால் வைத்துக்கொள்ளட்டும். அதை ஆறுமுக நாவலர் நகர் என்று வைத்துக்கொண்டாலும்கூட, நானே வேண்டுமானாலும் அதை வந்து திறந்து வைத்துவிட்டு வருவதற்குத் தயாராக இருக்கிறேன். ஆனால் இப்படிப்பட்ட, ஒருவருக்கு வைக்கப்பட்ட பெயர், ஒருவருக்கு வைக்கிற நியதி எல்லோருக்கும் உண்டு என்ற நியதியின் அடிப்படையிலே தான்—அவர்கள் சொன்ன மதுரை நகரினுடைய விஷயம் என்ன என்பதை உள்ளாட்சித் துறை அமைச்சரைக் கேட்டால் தான் அதனுடைய நிலைமைகள் தெரியும். இப்போது அதனுடைய நிலைமைகளை விளக்குகிற நிலைமையில் நான் இல்லை என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். ஆனால், பொதுவாக, வைக்கப்பட்ட பெயர்கள்—ஏற்கனவே தெருப்பெயர்கள் மற்றவைகள் வைப்பதில், நகர் பெயர்களைப் பொறுத்தவரையில் மாற்றுகின்ற அத்தகைய நிலை இல்லை. கட்டிடங்களைப் பொறுத்துத் தான் ஏற்கனவே முடிவெடுக்கப்பட்டதே தவிர, மற்றவைகளைப் பற்றி எதுவுமில்லை என்பதை இந்த வாய்ப்பிலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பல கருத்துக்களை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். 3 மாநக ராட்சிகளுக்கும் தேர்தல் நடத்துவதைப் பற்றியெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். எல்லாவற்றிற்கும் ஒட்டுமொத்தமாக, ஒரேவிதமான ஒரு சட்டத்தை உருவாக்கிக் கொண்டு வரவேண்டும் என்ற கருத்தை உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை மசோதா வரும்போது, உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் இன்னும் தெளிவுபட எடுத்துச் சொல்வார்கள்.

கூட்டுறவுத் துறைகளுக்கு தேர்தல் நடத்த வேண்டியதுபற்றி எடுத்துச் சொன்னார்கள். அதை நான் கூட்டுறவு மானியக் கோரிக்கை வந்தபோதே சொன்னேன். 29 ஆயிரத்து சில்லறை கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடத்த வேண்டும். அவைகளுக்கு தேர்தல் நடத்தவேண்டும் என்ற முனைப்புள்ளத்தோடு அதற்கான சட்டதிட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. உறுப்பினர் சேர்த்தல், மற்றவைகளுக்கு அவகாசம் கொடுத்து, ஓராண்டு காலத்திற்குள்ளாக, படிப்படியாக—49 வகையான கூட்டுறவுச் சங்கங்கள் இருப்பதால்—படிப்படியாக நடத்த வேண்டும். அடிமட்டம், மாவட்ட மட்டம், மாநில மட்டம் என்று நடத்துகின்ற அளவுக்கு அதற்கான நாட்கள் மற்றவைகள் எல்லாம் குறிக்கும் படியாகவும், உறுப்பினர்கள் சேர்ப்பதற்கான காலம், அதற்குப் பிறகு அடிமட்டத்தில் நடப்பதற்கான காலம், எந்தந்த வகையில் எந்தந்த சங்கங்கள் நடத்தலாம் என்ற அளவிற்கும், முதற்படியாக, பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு எல்லாம் நடத்தலாம் என்ற அளவிற்கும் மற்றவைகளை வைத்து இருக்கிறோம். கிட்டத்தட்ட 10,000 கூட்டுறவுச் சங்கங்களுக்கு 10 ஆண்டுக் காலத்திலே ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான் தொடர்ந்து இருந்து கொண்டு வருகிறார்கள்.

தொடர்ந்து இருந்துகொண்டு வருகிற நிலையும் கூடாது. தனி அலுவலர்கள் இருக்கிற நிலைமையும் கூடாது. எல்லாவற்றிற்கும் சேர்த்து, இங்கே இருக்கின்ற புது உறுப்பினர்கள், பழைய உறுப்பினர்கள் எல்லாம் சேர்ந்து அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இருக்கிற ஒரு சூழ்நிலை ஏற்பட வேண்டும் என்பதுதான் அரசினுடைய கொள்கை. அந்த அளவிலே நடைபெறவேண்டும் என்கின்ற நோக்கத்தை அடிப்படையாக வைத்து தான் இந்த அரசு பணியாற்றி வருகிறது என்பதையும் இந்த வாய்ப்பிலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையிலும், மாண்புமிகு உறுப்பினர்கள், எல்லோருடைய ஒத்துழைப்பின் அடிப்படையிலேயும், சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்கின்ற சீரிய யோசனைகள், கருத்துக்கள் ஆகியவற்றினுடைய அடிப்படையிலேயும் நாம் பணிகளை மிகச் சிறப்புற நடத்திக் கொண்டு வர முடிகிறது. அதுமட்டுமல்லாமல், எல்லாத் துறைகளைச் சேர்ந்த செயலாளர்கள், அந்தந்தத் துறைகளிலே பணியாற்றுகின்ற பணியாளர்கள் மற்றவர்களுடைய நல்ல ஒத்துழைப்பு, ஆதரவினுடைய அடிப்படையிலேதான் இந்த அரசு தன்னுடைய பணிகளைச் செம்மையுறச்செய்ய முடிகின்றது.



இந்தியாவிலே இருக்கக்கூடிய மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது நம்முடைய மாநிலம் கடுமையான வறட்சி நேரத்தில்கூட ஓவர்டிராஃப்ட் வாங்க வேண்டிய அவசியம் இல்லாத அளவுக்கு 1982–83, 1983–84-லே கூட நாம் ஓவர்டிராஃப்ட் வாங்காத அளவுக்கு சமாளிக்கக்கூடிய அளவிற்கு நிதிநிலைமையில் நாம் ஒரு தனி நிர்வாகத்தைச் சிறப்பாக நடத்த முடிந்தது என்று சொன்னால்—தனிப்பட்டவர்கள் என்று அல்ல—இந்த அரசுத் துறையிலே இருக்கிற அத்தனை துறைகளுடைய ஆதரவும், அதற்கு ஆதரவு தருபவர்களுடைய எல்லோருடைய ஒத்துழைப்பின் அடிப்படையிலேதான் இவற்றையெல்லாம் சிறப்பாக நம்மால் நிறைவேற்ற முடிந்தது.

அப்போது நிதியமைச்சராக இருந்த திரு. பிரணாப் முகர்ஜி அவர்கள் பாராட்டியிருக்கிறார். அப்போது இந்தியாவினுடைய ரிசர்வ் வங்கியின்கவர்னராக இருந்த திரு. மன்மோகன்சிங்அவர்கள் ஹைதராபாத்திலே இருந்தபோது ஒரு மாநாட்டிலே பாராட்டி இருக்கிறார்கள். தமிழகத்தைப் பற்றி—தமிழகத்திற்கு வந்த போதும் பாராட்டியிருக்கிறார்கள்.

5, 6 தினங்களுக்கு முன்னால் வந்த கம்ப்ட்ரோலர் அண்டு ஆடிட்டர்ஜெனரல் ஆஃப் இந்தியா அவர்கள் சொல்லும்போது, வரி வசூல் செய்வதில் மற்ற எந்த மாநிலத்தைக் காட்டிலும் தமிழக அரசு திறம்பட தன் சாதனைகளைப் புரிந்து இருக்கிறது என்றும், 1984–85, 1985–86-இல் பாராட்டுவதற்குரியதாக அது அமைந்திருக்கிறது என்றும், 1,572 கோடி வசூல் செய்வதில் அது சிறந்ததொரு இடத்தைப் பெற்று இருக்கிறது என்றும் பாராட்டி விட்டு, அதுமட்டுமல்லாமல், வரி விதிப்புக் கொள்கையை வகுத்து, எவ்வளவு வரும் என்று எதிர்பார்க்கிறதோ தமிழக அரசு, அதற்குப் பிறகு வசூலிக்கும், வரி விதிப்பினுடைய எதிர்பார்ப்பிற்கும் அதிக 'கேப்'—வேறுபாடு இல்லாத அளவிற்கு திட்டத்தை வகுத்து நடைமுறைப்படுத்துவதில் மிகத் திறம்பட, இந்தியாவில் இருக்கிற வேறு எந்த மாநிலத்தினையும் விட மிகச் சிறப்பான முறையில் தமிழகம் இருக்கிறது என்றும், கம்ப்ட்ரோலர் அண்டு ஆடிட்டர் ஜெனரல் ஆஃப் இந்தியா சில நாட்களுக்கு முன்னாலேகூட பாராட்டு தெரிவித்திருக்கிறார்கள் என்றால் தனிப்பட்ட நிதித் துறைக்கு மட்டுமல்ல அந்தப் பாராட்டு. எல்லாத் துறைகளுக்கும் சேர்த்து, எல்லோருக்கும் சேர்த்து பாராட்டு தெரிவித்திருக்கிறார்கள். எல்லோரும் ஒத்துழைப்பு தந்தமைக்கு நான் என்னுடைய நன்றியையும்; வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்வதோடு இன்னொன்றையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

குடிசைகள் தீ மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுவிட்டால் தற்போது ரூ. 300 அவர்களுக்கு தருவது என்று ஒரு திட்டத்தை வகுத்து உதவி செய்கிறோம். இனிமேல் அதற்கு ரூ. 400 தருவது என்றும் பாதியாக—அறைகுறையாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ. 150 என்றிருந்ததற்குப் பதிலாக இனி ரூ. 200 வழங்குவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது என்று கூறி இந்த நிதி ஒதுக்க மசோதாவுக்கு முழுமையான ஆதரவைத் தர வேண்டும் என்று கோரி, மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரையும் வேண்டிக் கேட்டுக்கொண்டு, அரசுத்துறையைச் சார்ந்த அத்தனை பேருக்கும் நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

'' தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 24/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 மற்றும் அட்டவணை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 2 சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 24/1987) நிறைவேற்றப்பெறவேண்டும்''.

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(இ) வேளாண் வருமான வரி (திருத்த) சட்டமுன்வடிவு 1987.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்டமுன் முடிவு எண் 20/1987) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

*1987 ஆம் வருடம் மே மாதம் 7 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.





திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாய வருமான வரி (திருத்த) சட்டம் என்கிற இந்த சட்டத்தைப் பற்றி இந்தச் சட்ட முன்வடிவின் நோக்க—காரண விளக்கவுரையில் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது அதில் ''விவர உரை எதிலும் அல்லது தாக்கல் செய்யப்பட்ட கணக்குகள் அல்லது ஆவணங்கள் எவற்றிலும் அடங்கியுள்ள விவரங்கள் எவற்றையும் வெளிப்படுத்துவதைத் தடை செய்கிறது'' என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவே அதைத் திருத்துவதற்காக இந்தத் திருத்தச் சட்டம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு கண்காணிப்பு மற்றும் ஊழல் ஒழிப்பு இயக்கத்தின் அலுவலர்களுக்கு அத்தகைய விவரங்கள் எவற்றையும் வெளிப்படுத்துவதற்கு மேற்சொன்ன சட்டத்தில் வகைமுறை இல்லாததால், இதைக் கொண்டுவருவதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இதை முழுமையாக விளக்கியிருந்தால் எங்களுக்கு உதவியாக இருந்திருக்கும்.

என்ன ரகசியத்தை அவர்கள் மறைக்கிறார்கள்? என்ன கொடுக்க மறுக்கிறார்கள் என்ற விவரங்களை அந்த விவசாய வருமான வரித்துறை பெறமுடியாமல் போகிறது என்ற விவரங்களை அவைக்குத் தெரிவித்திருந்தால் அதன் மீது கருத்துக்களை சொல்லுவதற்கு உதவியாக இருந்திருக்கும். எனவே அவைகளை வெளியிடாமல் இருப்பது பொருத்தமானதல்ல. குறிப்பாக விவசாய வருமான வரி இன்றைக்கு வசூலிக்கப்படுகிறது. என்றால் அந்த வரியை வசூலிப்பதற்காக அந்தத் துறைக்கு எவ்வளவு செலவாகிறதோ அதைக் கணக்கிட்டுப் பார்த்தால் இந்த இனத்தில் வருகிற வருவாயை விட அது அதிகமாக ஆகிறது என்ற ஒரு கருத்தும் சொல்லப்படுகிறது. விவசாய வருமான வரி விதிக்கப்படுவது எவ்வளவு? அதை வசூலிப்பதற்காக ஆகிற செலவு எவ்வளவு? இதை ஈடு கட்டுகிற அளவுக்கு அதாவது வருவாய்க்கும் செலவுக்கும் சரியாக இருக்கிறதா என்பதைப் பார்த்து தீர்மானிக்க வேண்டும். இன்னும் சொல்லப் போனால் நாட்டில் பசுமைப் புரட்சியைப் பற்றி பேசுகிறோம். எங்களைப் பொறுத்த வரையில் அடி மட்டத்தில் இருப்பவர்களுக்கு இந்த வரியை அடியோடு ரத்து செய்து கிராப் சிஸ்டத்தில் வரியை மாற்றி அமைக்க வேண்டும்.

நில வரி, விவசாய வருமான வரி என்று இரண்டாக இல்லாமல் நில வரியை ரத்து செய்து விட்டு அதிக நிலம் வைத்திருப்பவர்களுக்கு கிராப் சிஸ்டத்தில் வரி முறையைக் கொண்டு வருவது பற்றி அரசு பரிசீலனை செய்யவேண்டும் என்றும், அதற்காக முயற்சிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்வதோடு, கண்காணிப்புத் துறைக்கு இது மாற்றப்படுவதன் மூலமாக பல

தவறான நிலைமைகள் உருவாகி அடிப்படை நோக்கத்திற்கே எதிர்காலத்தில் இது மாறாக அமைந்து விடுமோ என்ற அச்சம் இருக்கிறது.

(பிற்பகல் 1-30)

அப்படி விருப்பு, வெறுப்பு அடிப்படையில் அந்த நடவடிக்கைகள் அமைவதற்கு இந்தச் சட்டம் வழி வகுத்து விடக்கூடாது என்ற முறையில் என்னுடைய கருத்தைக் கூறி அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவையின் துணைத் தலைவர் அவர்களே, சாதாரணமாக மைய அரசு விதித்துள்ள வருமான வரியாக இருந்தாலும், தமிழக அரசால் நிறைவேற்றப் படுகிற வேளாண்மை வருமான வரி சட்டமானாலும், அதனுடைய குறிப்புகள் இரகசியமாக வைக்கப்பட வேண்டும் என்று சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. ஏனென்றால் பலருடைய வருமானம் என்ன என்பது இந்தத் துறைக்கு மட்டும் தெரிய வேண்டும் என்பது இந்தச் சட்டத்தின் முக்கியநோக்கம். அந்த வகையிலே வேளாண்மை வருமான வரிச் சட்டத்தின் பிரிவு 52(1) இல் வரி நிர்ணயம் செய்வது அனைத்தும் இரகசியமானது என்று கூறுகிறது. இருந்தாலும் பிரிவு 52(3)-ல் குறிப்பிட்ட காரியங்களுக்குக் கேட்கப்படும் போது குறிப்புகளை கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. அந்த வகையிலே இந்திய தண்டனை சட்டத்தின்படி வேளாண்மை வரி என்ன வருகிறது என்று ஒரு வழக்கில் கோர்ட் கேட்டால் அப்போது அந்த தகவலைக் கொடுக்க வேண்டும். வேளாண்மை வரிச் சட்டத்தை செயற்படுத்த கேட்டால் அந்தத் தகவலைக் கொடுக்கலாம். வேளாண் வரிச் சட்டத்தைப் பொறுத்த வரையில் தொடரப்படும் சிவில் வழக்கில் நீதிமன்றம் எவ்வளவு வருமானம் என்று கேட்டால் அப்போது தரலாம். இப்படி விவசாய அதிகாரிகளுக்கு உள்ளபடியே எவ்வளவு வருமானம் என்று கொடுக்காமல்மறைத்தால் பிறகு அவர்கள் கேட்கும்போது அவர்களுக்குக் கொடுக்கலாம். இப்படி 14 இனங்களில் தகவல் கொடுக்கலாம் என்று இருக்கிறது. வழக்கறிஞர்கள் வழக்கு சம்பந்தமாகக் கேட்டால் கொடுக்கலாம். ஆனால் லஞ்ச ஒழிப்புத் துறை கேட்டால் தகவல் தர வேண்டும் என்று இதிலே இல்லை. குறிப்பிட்டதொரு வழக்கிலே அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. ஒரு குறிப்பிட்ட அதிகாரி லஞ்சம் வாங்கினார் என்று லஞ்ச ஒழிப்புத் துறை வழக்கு தொடுத்தது. அவர் நான் லஞ்சம் வாங்கவில்லை, அது என்னுடைய வருமானம். எனக்கு விவசாய நிலங்கள் உண்டு. அதிலிருந்து வந்த வருமானத்தை வைத்து நான் கட்டினேன் என்றார். அப்போது வருமானம் எவ்வளவு என்று கேட்போம். சட்டப்படி அதை உங்களுக்குத் தருவதற்கு வேண்டிய அவசியமில்லைஎன்று சொல்லிவிட்டார். சட்டத்தைப் பார்க்கும் போது லஞ்ச ஒழிப்புத் துறைக்கு வருமானத்தை காண்பிக்கத் தேவையில்லை, சட்டப்படி கோர்ட்டுக்குப் போனாலும் அவரைக் கேட்க முடியாது என்று





சொல்லிவிட்டார்கள். 14 இனங்களில் தகவல் தர வேண்டும் என்று சொல்லும் போது லஞ்ச ஒழிப்புத் துறைக்கு அவர்கள் கேட்டால் தகவல் கொடுக்க வேண்டும் என்று இல்லை. ஆகவே, குறிப்பிட்ட அதிகாரி தனக்கு விவசாய நிலங்கள் இருக்கின்றன. தனக்கும் மனைவிக்கும் நிலம் இருக்கிறது, அதன் மூலம் அதிக வருமானம் வருகிறது, அதிலிருந்து வாங்கியது இந்தச் சொத்து என்று சொல்லி தப்பித்துக் கொள்ளாமல் இருக்க லஞ்ச ஒழிப்புத் துறையினர் கேட்டால் அவர்களுக்கும் இந்த வேளாண் வருமான வரி கணக்கை வேளாண் வருமான வரித் துறை கொடுக்கலாம் என்பதுதான் இந்தச் சட்டத்தினுடைய நோக்கம். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீரய்யன் சொல்லுவது மாதிரி இந்த விளக்கத்தையெல்லாம் தந்திருந்தால் உறுப்பினர்களுக்குத் தெளிவாக இருந்திருக்கும் என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். ஏனென்றால் யாரும் படித்த மாத்திரத்தில் இதை புரிந்து கொள்ள முடியாதுதான். இந்த விளக்கத்தையும் சேர்த்து தந்திருந்தால் எல்லோருக்கும் எளிதாக புரிந்திருக்கும் என்பதை நான் உணர்கிறேன். ஒரு சின்ன விஷயத்தால் பலபேர் தப்பித்துக் கொள்ள வழி இருக்கின்ற காரணத்தால், இரண்டொரு வழக்குகளில் இந்த நிலை கோர்ட்டில் வந்ததால், இந்தத் திருத்தத்தைக் கொண்டு வர வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆகவே இதை ஏற்றுக் கொள்ளும்படியாக கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி :

''1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் வருமான வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/1987) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1 முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் வருமான வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/1987) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மாலை 4-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-34 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

பிற்பகல் 4-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) இயக்கூர்திகள் (மோட்டார் வண்டிகள்) வரிவிதிப்பு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு 1987 (ஆ.இ)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (மோட்டார் வண்டிகள்) வரிவிதிப்பு (இரண்டாம்திருத்த)சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஈ) இயக்கூர்திகள் (மோட்டார் வண்டிகள்) வரிவிதிப்பு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு 1987.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்;—

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (மோட்டார் வண்டிகள்) வரிவிதிப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஈ-1). சென்னை மாநகர்காவல் (மதுரை மாநகருக்கும் கோயம்புத்தூர் மாநகருக்கும் நீட்டிப்பு) சட்ட முன்வடிவு, 1987

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—



"1987 ஆம் ஆண்டு சென்னை மாநகர் காவல் (மதுரை மாநகருக்கும் கோயம்புத்தூர் மாநகருக்கும் நீட்டிப்பு) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இச்சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(உ) விளம்பரப் பொருள்களின் கட்டாயத் தணிக்கைச் சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு விளம்பரப் பொருள்களின் கட்டாயத் தணிக்கைச் சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இச்சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஊ) இந்திய முத்திரைத் தாள் மற்றும் பதிவு செய்தல் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு. 1987.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1987 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் மற்றும் பதிவு செய்தல் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: இச்சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

### 4. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

#### (ஆ) பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 4—அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்) என்ற தலைப்பின் கீழுள்ள உள் இனம் (13) 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (மோட்டார் வாகனங்கள்) வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1987) மற்றும் உள் இனம் (15) 1987 ஆம் ஆண்டு இயக்கூர்திகள் (மோட்டார் வண்டிகள்) (வேலை நிறுத்தம் அல்லது ஆர்ப்பாட்டம் அல்லது கண்டனத்தின்போது, வேண்டுமென்றே போக்குவரத்திற்கு இடையூறு விளைவிக்கின்றமைக்காக, ஊர்தியோட்டும் உரிமங்களை நீக்கும் (ரத்துசெய்தல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/1987) ஆகியவற்றை உள் இனம் (3) 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப்பேரவை சட்டமுன்வடிவு எண் 8/1987)க்கு முன் எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

### 6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

#### (எ) இயக்கூர்திகள் (மோட்டார் வாகனங்கள்) வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

'' 1987– ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (மோட்டார் வாகனங்கள்) வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும். ''

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, இன்று அமைச்சர் அவர்கள் வரி வசூலிப்பது சம்பந்தமாக ஒரு புதிய முறையை அமுலுக்கு கொண்டு வர சட்டத் திருத்தம் கொண்டு வந்துள்ளார். அதாவது, ஒரு பேருந்திற்கு அல்லது ஒரு மோட்டார் வாகனத்திற்கு உரிமம் புதுப்பிப்பதற்காகக்





கொண்டு செல்கிற நேரத்தில், ஏற்கனவே ஏதேனும் வரி மீதி இருந்தால், அல்லது மற்ற ஏதேனும் முறையில் பெனால்ட்டி என்ற முறையில், ஏதாவது பாக்கியிருந்தால், அது கட்டப்பட்டால்தான் இது புதுப்பிக்கப்படும் என்ற முறை இந்தச் சட்டத் திருத்தம் மூலம் கொண்டு வரப்படுகிறது.

நமது நாட்டிலே பெரிய வசதி உள்ளவர்கள் அல்லாமல், வாழ்க்கையை ஓரளவிற்கு நடத்துவதற்கு வசதியுள்ளவர்கள் சி.சி போட்டோ அல்லது மற்ற முறையிலோ, ரூ. 5,000 அல்லது ரூ. 10,000 முதலீட்டிலே அதிகமான வட்டிக்கு டாக்சி வாங்குபவர்கள் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருவதன் வழியாக, அவர்கள் ஏதேனும் அரியர்ஸ் பணம் கட்ட வேண்டியிருந்தால் அது முழுவதுமாகக் கட்டப் படுமானால் அது புதுப்பிக்கப்படும் என்ற முறையைக் கொண்டு வருகிறது. சாதாரண மக்களுக்குச் சிரமத்தை கொடுப்பது இது. நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்வது எல்லாம் அந்தப் பணத்தைத் தவணையாகச் செலுத்த வசதி ஏற்படுத்தவேண்டும். இன்றைக்கு வரி நிறைய பாக்கி வைத்திருப்பவர்கள் இருக்கலாம். அதை வசூலிப்பதற்கு மற்றுமுள்ள நடவடிக்கைகளை எடுப்பதற்கு இன்றைக்குச் சட்டத்திலே இடம் இருக்கிறது. இந்தச் சட்டத்தைச் சரிவர இம்பிளிமென்ட் செய்ய வேண்டிய மோட்டார் வாகன சட்டத்தை அமுல்படுத்தக்கூடிய ஆர். டி. ஓக்கள் போன்று, இலாகாவைச் சேர்ந்தவர்கள், காலாகாலத்திலே எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை, காலாகாலத்திலே செய்ய வேண்டிய வேலைகளைச் செய்யாததன் காரணமாக, இன்று இப்படிப்பட்ட பாக்கி ஏற்படக்கூடிய நிலை ஏற்பட்டிருக்காது. அதைச் சரிக்கட்டுவதற்கு இப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டு வருவது என்பது சரியாக இருக்குமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் யோசிக்க வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கோள்கிறேன்.

இன்று ஒரு வாகனத்தினுடைய எப்.சி.யை ரினியூ பண்ண கொடுக்கக் கூடிய காலத்தில், அவர்கள் முழுமையாகப் பணம் கட்டினால்தான் ரினியூ பண்ணமுடியும் என்ற முறையை, இரண்டு தவணை அல்லது 4 தவணைகளாகக் கட்டுவதற்கு அவர்களுக்கு அவகாசம் கொடுக்க வேண்டும். இன்றைக்கு மோட்டார் வாகனம் வைத்திருக்கக் கூடியவர்கள் அல்லது அதைத் தொழிலாக நடத்தக்கூடியவர்கள் பணக்காரர்கள் அல்ல; ஏழைகள் நடுத்தர மக்களும் அதிலே உண்டு என்ற உணர்வோடு அந்த விஷயத்தை அணுக வேண்டுமென்று மட்டும்தான் இந்த நேரத்திலே பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

(மாலை 4-10)

ஆகவே தவணைகளாகக் கொடுக்க இந்தச் சட்டத்தில் இடம் கொடுக்க வேண்டுமென்றுகேட்டு, அந்த முறையிலேதிருத்தத்தைக் கொண்டு வருவதற்கு அமைச்சரவர்கள் முன்வர வேண்டுமென்று கேட்டு, இந்தச் சட்டமுன்வடிவு சம்பந்தமான கருத்துக்களைத் தெரிவித்து, அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லிய உணர்வுகளை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் தவணை முறையில் கட்ட வேண்டுமென்ற கோரிக்கை வராமல் இருக்க வேண்டும் என்றுதான் இந்தத் திருத்தம் கொண்டுவரப்படுகிறது. கடன் சுமையைச் சேர்த்து வைத்துக் கொண்டால், கடனைத் தவணையில் கட்ட வேண்டுமென்று கேட்க வேண்டிவரும். இப்போதிருக்கும் நிலைமையில் அனேகமாக தகுதிச் சான்றிதழ்கள் கேட்கும்போது முடிந்தவரை கட்ட வேண்டிய பாக்கிகளைக்கட்டிவிட வேண்டுமென்று வாய்மூலமாகச் சொல்லும்போது, அதற்கு வாகனச் சொந்தக் காரர்கள் எந்த மறுப்பும் தெரிவிப்பதில்லை என்றாலும், சட்டப்படி இது இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் இந்தத் திருத்தம் கொண்டு வரப்படுகிறது. வாகனங்கள் வைத்திருக்கிறவர்களுக்குக்கூட இது நன்மையாகத்தான் இருக்கும். அந்த நேரத்தில் நிர்பந்தப் படுத்தப்படுகிறார்கள் என்றாலும் எதிர்காலத்தில் கடன் சுமை இல்லாமல் தூண்டிவிட இது வாய்ப்பாக அமையும் என்று கருதுகிறேன். எனவே இந்தத் திருத்தம் அவசியமான ஒன்றாக இருக்கிறது.

இன்னொரு திருத்தத்தையும் கொண்டு வருகிறோம். அவர்களுக்குத் தண்டனைத் தொகை என்று வழங்கிவிட்டால் அதைத் திருப்பித்தர வேண்டுமென்று சொன்னால் அதை அவர்களுக்குத் திருப்பிக் கொடுக்க வாய்ப்பு இந்தச் சட்டத்திலே இல்லாமல் இருக்கிறது. அதற்காக திருத்தம் கொண்டு வருகிறோம். இருக்கின்ற சட்டத்தை இன்னும் சிறப்பாக அமைத்து, அரசுக்கும் வாகனச் சொந்தக்காரர்களுக்கும் பயனுள்ளதாக இருக்க வேண்டுமென்று இது கொண்டுவரப்படுகிறதே தவிர, வேறு எந்த நோக்கத்திற்காகவும் அல்ல என்று குறிப்பிட்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தத்திருத்தத்தை ஆதரித்து, நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைமுன் உள்ள கேள்வி :

''1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (மோட்டார் வாகனங்கள்) வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும் ''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2, மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.



மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1987—ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (மோட்டார் வாகனங்கள்) வரிவிதிப்பு (திருத்த)சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/1987) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(எ) இயக்கூர்திகள் (மோட்டார் வண்டிகள்) [வேலைநிறுத்தம் அல்லது ஆர்பாட்டம் அல்லது கண்டனத்தின் போது வேண்டுமென்றே போக்குவரத்திற்கு இடையூறு விளைவிக்கின்றமைக்காக ஊர்தியோட்டும் உரிமங்களை நீக்கம் (ரத்து) செய்தல்] சட்டமுன்வடிவு 1987.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1987 ஆம் ஆண்டு இயக்கூர்திகள் (மோட்டார் வண்டிகள்) [வேலை நிறுத்தம் அல்லது ஆர்ப்பாட்டம் அல்லது கண்டனத்தின்போது வேண்டுமென்றே போக்குவரத்திற்கு இடையூறு விளைவிக்கின்றமைக்காக ஊர்தியோட்டும் உரிமங்களை நீக்கம் (ரத்து) செய்தல்] சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/1987)* ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.''

Thiru J. HEMACHNDRAN; Mr. Deputy Speaker, Sir, I move the following amemdment starding in my ame;

"That the Tamil Nadu Motor Vehicles (Cancellation of driving licences for wilful obstruction of traffic during strike or demonstrasion or protest) Bill, 1987 (L. A. Bill No 22 of 1987) be referred to the Select Committee of the House consisting of ......Members List of Members will be given later)''.

திரு. கோ. வீரய்யன் : நான் வழிமொழிகிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிக ஆபத்தான ஒரு சட்டத்தை முன்மொழிந்திருக்கின்றார்கள் என்பது என்னுடைய கருத்து. ஏனென்றால் இந்த சட்டப்படி ஒரு ஓட்டுநருடைய லைசென்சை பிடுங்குவதற்கு மட்டுமல்ல அவர்களுடைய வேலையை பிடுங்குவதற்குமுள்ள சரத்துக்கள் இதிலே சேர்க்கப்பட்டுள்ளன என்று சொல்லிக்கொள்கிறேன். இப்படிப்பட்ட சட்டம் இன்றைக்குத் தேவையா என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

*1987 ஆம் வருடம் மே மாதம் 7 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

இன்றைக்கு ஒரு விஷயத்தைச் சொல்லவேண்டுமென்றால், அடிப்படையான ஒரு ஜனநாயக உரிமையை, தொழிற்சங்க உரிமையை பறிமுதல் செய்வதற்கான நோக்கம்தான் இந்த சட்டத்தில் உண்டாகியிருக்கிறது. என்று நான் எண்ணுகிறேன். ஏனென்றால் இன்று இந்த நாட்டிலே நாடாளுமன்றத்திலே நிறைவேற்றிக் கொடுக்கப்பட்ட சட்டம் தொழில் தகராறு சட்டம். அந்த சட்டப்படி ஒரு வேலை நிறுத்தம் என்று அறிவித்து நிர்வாகத்திற்கு கோரிக்கை கொடுக்கப்பட்டு, அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள வலியுறுத்தப் போராடுவது என்பதுதான் வேலைநிறுத்தம் என்ற வடிவத்திலே அந்த பேராட்டத்தை நடத்துவது என்பது இன்றைக்கு இந்த நாடு ஏற்றுக்கொண்டிருக்கின்ற ஜனநாயக உரிமை. அந்த முறையிலே அது தொழிலாளர்களுடைய உரிமை தொழிற்சங்க உரிமை என்ற முறையிலேதான் அந்த வேலைநிறுத்தம் அமைகிறது. ஆனால் இன்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய சட்டம் ஒரு வேலைநிறுத்தம் நடைபெறுகிற நேரத்தில் அந்த வேலை நிறுத்தத்திலே ஈடுபடக்கூடிய ஊழியர்களைப் பழிவாங்குவதற்கு இந்தச் சட்டம் இன்றைக்கு வழி வகுக்கிறது என்பது என்னுடைய கருத்து. இந்த சட்டத்திலே என்ன சொல்லப்படுகிறது என்றால் ஒரு வேலை நிறுத்தம் ஏற்படக்கூடிய நேரத்தில் அந்த வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டிருக்கக்கூடிய தொழிலாளர்களை பணிய வைக்க அவர்களுடைய வேலை நிறுத்தத்தை உடைப்பதற்காக மற்ற ஆட்களை வைத்து வண்டியை எடுப்பது, அந்த நேரத்திலே அந்த பேருந்தை மறிக்கிறது என்பது இன்றைக்கு சாதாரணமாக போராட்டங்களிலே நாம் பார்த்துக்கொண்டிருக்கின்ற உண்மை. நாங்கள் கூட அந்த முறையிலே மறித்திருக்கிறோம். ஜெயில் தண்டனை வாங்கியிருக்கிறோம். ஆக அப்படி ஒரு உரிமையை நிலை நாட்டுவதற்கு போராட்டம் நடக்கிற நேரத்தில் வண்டியை மறித்தால் இன்று என்ன இந்த சட்டம் சொல்கிறது என்றால் அந்தக் காரணத்தைக் காட்டி அவர்களுடைய லைசென்சை பறிமுதல் செய்யலாம் என்பதற்கு இடம் கொடுக்கப்படுகிறது. இன்னொரு பக்கத்திலே அதாவது 5-வது சரத்து அப்படி லைசென்ஸ் பறிமுதல் செய்யப்படுகின்ற அல்லது அப்படி நடைமுறைக்கு ஆளாக்கப்படுகின்ற தொழிலாளர்களை, டிரைவர்களை பற்றி சம்பந்தப்பட்டவர்கள் அந்த நிர்வாகத்திற்கு, கார்ப்பரேஷன், கவர்ன்மென்ட், லோகல் அத்தாரிட்டி நிர்வாகத்திற்கு, அது யாராக இருந்தாலும் அவர்களுக்கு தகவல் கொடுத்தால் அந்த காரணத்திற்காக வேலை நீக்கம் செய்துகொள்வதற்கும் இந்த சட்டத்திலே இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புவது என்னவென்றால், இப்படி மறியல் செய்யக்கூடிய தொழிலாளர்களை கைது செய்வதற்கும் அப்படி அவர்கள் சட்ட விரோதமாக நடந்திருந்தால், தண்டிப்பதற்குரிய ஒரு குற்றம் அவர்களால் செய்யப்பட்டிருக்கிறது என்றால், எந்த முறையிலே அந்த குற்றத்தை தடுக்கவேண்டும் என்று இந்தியன் பீனல் கோடும், நீதி மன்றங்களும் இருக்கின்றன. அந்த நீதிமன்றங்களில் நிரூபிக்கப்பட்டால் அந்த தண்டனை வழங்கப்படும். அப்படி தண்டனை வழங்கப்பட்டால், அந்த தண்டனை வேலை நீக்கத்திற்கு





உரிய குற்றம் என்றால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க ஸ்டான்டிங் ஆர்டர் இருக்கின்றது. மறியல் என்பது சட்டத்திற்குக் உட்பட்டு வந்திருக்கிறது. ஸ்டான்டிங் ஆர்டர் படி நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்கும் மேலே இந்த அவையிலேகூட நிறைவேற்றப்பட்ட சட்டம் இருக்கிறது. அதாவது பேருந்துகளின்மீது கல் எறிந்தால், பேருந்தை உடைத்தால், பேருந்துக்கு சேதத்தை ஏற்படுத்தினால் அவர்களைத் தண்டிப்பதற்கு இன்றைக்கு சந்தர்ப்பம் கொடுக்கக்கூடிய ஒரு சட்டம் இந்த நாட்டிலே நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இன்று இப்படி வேலைநிறுத்தம் நடத்துகிற நேரத்தில் காவல் துறையைச் சேர்ந்தவர்களுக்கும், டாக்சி டிரைவர்களுக்கும், பிரைவேட் பஸ் ஓட்டுபவர்களுக்கும் இடையே தகராறுகள் வருகின்றன. டாக்சி ஓட்டுபவர்களுக்கும் காவல் துறையைச் சேர்ந்தவர்களுக்கும் தகராறு வருகிறது.

(மாலை 4-20)

அந்த நேரத்திலே ஆட்டோ டிரைவர்களும், டாக்சி டிரைவர்களும் அவர்களுடைய வண்டிகளை ரோட்டிலே நிறுத்தி போராடுவது என்கிற முறையை கையாளுகிறார்கள். எதற்காக அவர்கள் அப்படி செயகிறார்கள் என்கிற உணர்வை குறித்து சற்று பரிசீலிக்க வேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. இச்சட்டம் முக்கியமான ஒன்று. இச்சட்டம் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களை பாதிக்கக்கூடிய ஒரு சட்டம். (மணி அடிக்கப்பெற்றது) ஆகவே, இப்படிப்பட்ட முக்கியமான சட்டத்தைப் பற்றி பேசுவதற்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் நியாயமாக அதிக நேரம் சந்தர்ப்பம் தர வேண்டும்.

இன்றைக்கு காவல் துறையை நல்ல முறையிலே நாட்டிலே செயல்படுத்திக்கொண்டு வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட சொல்லமாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். பல இடங்களில் காவல் துறையினர் தவறான அணுகுமுறையை கையாள்வதன் காரணமாக ஆட்டோ டிரைவர்களுக்கும், டாக்சி டிரைவர்களுக்கும், காவல் துறையினருக்கும் இடையே தகராறுகள் ஏற்படுகின்றன. அந்த நேரத்தில் அவர்களிடம் இருக்கிற ஓரே ஒரு ஆயுதம் தங்களுடைய வண்டிகளை ரோட்டின் குறுக்கே நிறுத்தி விடுவது என்கிற நிலைமையைப் பார்க்கிறோம். அப்படி செய்கிற நேரத்தில்தான் நியாயம் வழங்க வேண்டிய அதிகாரிகள் அங்கே வந்து சமரசம் ஏற்படுத்துகிற ஒரு யதார்த்த நிலை இருக்கிறது. இதனை நாம் மூடி மறைத்துப் பேசுவதில் பிரயோஜனம் இல்லை. அதேநேரத்தில் காவல் துறையைச் சார்ந்தவர்கள் இப்படிப்பட்ட தொழிலாளர்களைத் திட்டினால், தேவையில்லாமல் நடவடிக்கை எடுத்தால் காவல் துறையைச் சார்ந்த அதிகாரிகளிடம் போய் சாதாரணமாக ரிப்போர்ட் கொடுக்கும்போது அது என்ன என்று கூட அவர்கள் பார்ப்பதில்லை. அதற்கு எடுத்துக்காட்டுகள் பல இருக்கின்றன. அப்படிப்பட்ட நேரங்களில் எல்லாம், காவல் துறையினர் நியாயமான அணுகுமுறையோடு அணுகாததன் காரணமாக பிரச்சினைகளுக்கு

தீர்வு காணப்படாத நிலைமைகள் ஏற்படும்போது எல்லாம்
இந்தத் தொழிலாளர்கள் தங்களிடம் இருக்கின்ற ஒரே
ஆயுதத்தை பயன்படுத்துகின்றனர். ஆகவேதான் இப்படிப்பட்ட
ஒரு சட்டம் இன்றைக்கு தேவையில்லை. இதனுடைய நோக்
கத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
ஒன்றை சொல்லலாம். அதாவது வேலை நிறுத்தம் மற்றும்
ரோட்டிலே, ஆட்டோ, டாக்சி மற்றும் பேருந்து போன்றவை
களைக் குறுக்கே கொண்டு வந்து நிறுத்தி வழியை மறிப்பவர்
களை என்ன செய்வது என்று அவர்கள் கேட்கலாம். அப்படிப்
பட்ட நிலைமையில் 'பப்ளிக் நியூசன்ஸ்' என்கிற கேஸை போடு
வதற்கு இந்த நாட்டிலே ஏற்கெனவே சட்டத்திலே வழிவகை
செய்யப்பட்டிருக்கிறது. இச்சட்டத்தின்கீழ் அவர்கள் மீது
வழக்கு போடலாம். நீதிமன்றத்தில், யதார்த்தமாக அவர்கள்
குற்றம் செய்திருப்பதாக நிரூபிக்கப்பட்டால் தண்டனைக்
கொடுக்கவும் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே,
ஏற்கெனவே இருக்கிற சட்டத்திலேயே அதற்கான அம்சங்கள்
இருக்கின்றன. அச்சட்டத்தை நடைமுறைப்படுத்தினாலே குற்ற
வாளிகள் என்று நிரூபிக்கப்பட்டால் தண்டனை கொடுக்க வழி
வகை இருக்கிறது. இச்சட்ட முன்வடிவு ஒரு கடுமையான ஒன்று.
மிசா மற்றும் என். எஸ். ஏ. போன்ற சட்டங்களைப் போல
தோற்றமளிக்கக்கூடிய ஒரு சட்டம். தமிழக அரசின் சட்டப்
புத்தகத்திலே இச்சட்டம் இருந்துகொண்டிருப்பது இடம்பெற
செய்வது ஒரு நல்ல அரசுக்கு அழகல்ல. மாண்புமிகு அமைச்சர்
அவர்களை கேட்டுக்கொள்கிறேன், ஜனநாயக உரிமைகளும்,
தொழிலாளர்களின் மற்றும் தொழிற் சங்கங்களின் உரிமைகளும்
பாதிக்கப்படக்கூடிய முறையிலே இச்சட்டம் அமைந்துவிடுமோ
என்கிற சந்தேகம் எனக்கு ஏற்படுவதால் தயவு செய்து இதனை
ஆய்வுக் குழுவுக்கு அனுப்பி, விவரமாக, விரிவாக பரிசீலனை
செய்து அதற்குப் பிறகு இச்சட்டத்தை நிறைவேற்றுவதுதான்
இந்த நாட்டிலுள்ள எல்லா தரப்பு மக்களுக்கும், குறிப்பாக
ஆட்டோக்களையும், டாக்சிகளையும், பேருந்துகளையும் [illegible]
துக்கொண்டு தொழில் நடத்துபவர்களுக்கும்., மற்றும் சம்பந்தப்
பட்டவர்களுக்கும் நியாயம் வழங்குவதாகவும், நீதி வழங்குவ
தாகவும் அமையும் என்பதை இந்த நேரத்தில் [illegible].
அதற்கேற்ற வகையில் இந்த அரசு நடவடிக்கையை [illegible]
கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்
சர் அவர்கள் கொண்டுவந்திருக்கக்கூடிய இந்த சட்ட முன்வடிவு
பற்றிய விவாதத்திலே கலந்துகொண்டு ஒருசில கருத்துக்களை
இந்த நேரத்தில் நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.
நாணயத்திற்குக்கூட இரண்டு பக்கங்கள் உண்டு. அதுபோல
தொழிலாளர்களுக்கு கடமை, உரிமை என்கிற இரண்டு பக்கங்கள்
உண்டு. தயவு செய்து தொழிலாளர்களுக்காக வாதாடுகிற
பிரதிநிதிகள் முதலில் ஒன்றைத் தெரிந்துகொள்ள வேண்டும்.
[illegible] முன்னர் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. [illegible]
[illegible] தொழிலாளர்களின் [illegible]



னாரே தவிர அந்தத் தொழிலாளர்கள் தங்கள் கடமைகளை
எந்த முறையில் செய்ய வேண்டும் என்பது பற்றிய கருத்துக்களை
இங்கே சொல்லவில்லை என்பதை நான் வருத்தத்துடன் சொல்
லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அவருக்கு நான் சொன்
னால் அந்தப் பதிலை அவர் நிச்சயமாக ஏற்றுக் கொள்ள
மாட்டார். அவர், யார் சொன்னால் ஏற்றுக்கொள்வாரோ
அந்தத் தலைவர் சொன்ன ஒரு கருத்தை இந்தச் சபையின் முன்
னாலே எடுத்துச் சொல்வதற்கு நான் விரும்புகிறேன்.

அவர் உரிமை உரிமை என்று சொன்னார். அந்த உரிமையை
எப்படிப் பெற வேண்டுமென்பதை மேற்கு வங்கத்தினுடைய
மரியாதைக்குரிய முதல்வர் ஜோதிபாசு அவர்கள் சொல்லியிருக்
கின்ற கருத்துக்களைச் சொன்னால் அதுவே அவருக்குப் பதிலாக
அமையும் என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு மேற்கு வங்கத்தினுடைய முதல்வர் ஜோதிபாசு
அவர்கள் உரிமையைப் பெறுவதற்கான அறிவுரையைச் சொல்
பொழுது, "The workers might have demands and difficulties.
But those should be solved through meaningful discussion and in a
disciplined manner''. அதைத்தான் அவர் சொல்கிறார். நான்
இப்பொழுது சொல்கிறேன். மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு ஹேமச்சந்திரன் அவர்களைக் கேட்
கிறேன். இப்படிப் போக்குவரத்தை இடையூறு செய்கின்ற
வகையில் அல்லது பொது மக்களைப் பாதிக்கின்ற வகையில்
வாகனங்களை நடுரோட்டில் நிறுத்திவிட்டு அவர் சொன்னதைப்
போல சமரசத்திற்கு வருவதுதான் டிசிப்ளின்ட் மேனரா
என்பதை நான் முதலிலே கேட்டுத் தெரிந்துகொள்ள
விரும்புகிறேன்.

எனவே, இதையெல்லாம் பார்க்கின்றபொழுது தேவையான
நேரத்தில் பொதுமக்களுடைய நன்மை கருதி, இந்தச் சட்டமுன்
வடிவு இப்போது தேவைப்படுகிறது. எனவே அதை நான்
வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னமும் மாண்புமிகு மேற்கு வங்க முதல்வரவர்கள் சொல்
கிறார்கள். Trade unionism எப்படியிருக்க வேண்டுமென்று சொல்ல
வருகின்ற பொழுது அவர் சொல்கிறார். "Irresponsible trade
unionism affecting growth of industries will not be tolerated''.
தயவு செய்து இதை அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.
அந்தத் தலைவர் எந்த நோக்கத்தோடு சொல்லியிருக்கிறார்கள்
என்பதையும் நாமெல்லாம் கருத்திற்கொள்ள வேண்டும். அவர்
மேலும் சொல்கிறார். "The said workers should have equal interest
with the Government in the economic development of their resp ctive
units and areas.."

இதை நான் வலியுறுத்திச் சொல்வதற்குக், காரணம்......

**திரு. கு. ரமணி :** துணைத் தலைவரவர்களே, நமது மதிப்பிற்குரிய திரு. செம்மலை அவர்கள் trade unionism-ஐப் பற்றி லெக்சர் பண்ணுகிறதாக இப்பொழுது இந்த சப்ஜெக்ட் மாறுகிறது. நான் என்ன சொல்கிறேன் என்றால், trade unionism-ஐப் பற்றி irresponsible trade unionism எது, responsible trade unionism எது என்பது அல்ல இங்கே இப்பொழுது டிஸ்கஷன். இந்த டிஸ்கஷன் இங்கே ரோட்டிலே கண்டபடி வெகிகிளை நிறுத்தினால் அவர்களுடைய லைசென்ஸை கேன்சல் பண்ணலாமா, கூடாதா என்பதுதான்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அது அவருடைய கருத்து. அந்தக் கருத்து, எசன்ஷியல் சர்வீசிலே ஸ்ட்ரைக்கே இருக்கக்கூடாது, பேச்சுவார்த்தை மூலம்தான் தீர்க்க வேண்டுமென்பதை வலியுறுத்துகிறார்கள். அதுதானே ?

**திரு. செ. செம்மலை :** அதுவேதான், அதுவேதான். நான் தெளிவாகத்தான் பேசுகிறேன் (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மேற்கு வங்கத்தினுடைய முதலமைச்சர் சொன்ன விஷயத்தை அப்படியே ஆங்கிலத்திலே படித்தார். only through mediation it should be ettle என்று சொல்லியிருக்கிறார்.

**திரு. கே. சுப்பராயன் :** எசன்ஷியல் சர்வீசிலே ஸ்ட்ரைக்கே பண்ணக்கூடாது என்றால்........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அது உங்கள் கருத்து. பண்ணக்கூடாது என்பது அவருடைய கருத்து. ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்குக் கருத்து சுதந்திரமே இல்லையா ? ஸ்ட்ரைக் பண்ணலாம் என்று, பர்த் ரைட் என்று நீங்கள் சொல்கிறீர்கள். எசன்ஷியல் சர்வீஸ் மக்களை அஃபெக்ட் பண்ணாமல் இருப்பதற்காக ஸ்ட்ரைக் பண்ணக்கூடாது என்று அவர் சொல்கிறார். இது அவருடைய கருத்து. அவர் கருத்தையும் அனுமதிக்கிறேன். உங்கள் கருத்தையும் அனுமதிக்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் பேசும்பொழுது சொல்லுங்கள். உங்களைப் பேச அனுமதிக்கிறேன் கடைசியிலே.

**திரு. செ. செம்மலை :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நானும் அதைத்தான் சொல்கிறேன். தொழிலாளர்களுடைய உரிமைக்கு நான் எந்த வகையிலும் குறுக்கே நிற்கவில்லை தொழிலாளர் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும். அவர்கள் போராடுவதற்கும் உரிமையிருக்கிறது. போராட்டத்தை நான் குறையாகச் சொல்லவில்லை. திரு. ஹேமச்சந்திரன் பேசும்பொழுது ஒரு கருத்தைச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர்க கவனித்திருப்பார்கள் என்று கருதுகிறேன். இன்றைக்கு இருக்கின்ற சமுதாய அமைப்பில் இப்படி வாகனங்



களைக் குறுக்கே நிறுத்திய பிறகுதான் காவல்துறையே ஒரு சமரசத்திற்கு வருகிறது என்று கருத்தைச் சொன்னார்கள். அதுதான் முறையான அணுகுமுறையா என்று நான் அவரைக் கேட்டுத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். போராட்டத்தைக் குறைத்துச் சொல்லவில்லை. போராட வேண்டியதைப் போராடி உரிமைகளைப் பெற வேண்டியது தொழிலாளர்களுடைய உரிமை. நான் அந்த உரிமையை மறுக்கவில்லை. ஆனால் அதை கையாள்கின்ற முறையிருக்கிறதே, அந்த அணுகுமுறை சரிதானா என்பதை நாம் இந்த நேரத்திலே தெரிந்துகொள்ள வேண்டும். அதைத்தான் irresponsible manner என்று நம்முடைய திரு. ஜோதிபாசு அவர்கள். குறிப்பிட்டிருக்கிறார்கள்.

நான் இன்னொன்றையும் சொல்கிறேன். இந்தச் சட்டமுன்வடிவு ஏன் வருகிறது ? தயவுசெய்து எண்ணிப்பார்க்க வேண்டும். அதுவும் அரசாங்கம் வேண்டுமென்றே கொண்டு வரவில்லை. திரு. ஜோதிபாசு அவர்கள் ஏன் அப்படிச் சொல்கிறார்? அவரே ஒரு தொழிலாளர் வர்க்கத்தினுடைய தலைவராக இருக்கின்றவரே பொறுக்க முடியாமல் அந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள்.

[மாலை 4–30]

எனவே, இந்த அரசு வேறு வழியில்லாமல் இப்படிப்பட்ட ஒரு கட்டாயத்தின் காரணமாக, இப்படிப்பட்ட ஒரு சட்டம் கொண்டு வர வேண்டியிருக்கிறது. இது பொதுமக்களின் பாதுகாப்புக்காகத்தான் கொண்டுவரப்படுகிறது. இதைக் கண்டு யாரும் பயப்படத் தேவையில்லை. போலீசைப் பார்த்தால் திருடர்கள்தான் பயப்பட வேண்டும். இது பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களைப் பாதிக்கிற சட்டம் என்று சொன்னார்கள். ஒரு சில பிரச்சினைகளிலே 10 பேர் முன்னே நிற்பவர்கள் ஒரு காரியத்தைச் செய்யப் போக மற்றவர்களும் அதனால் பாதிக்கப்படுகின்ற நிலைமையைத் தடுப்பதற்காகத்தான் அதாவது ஒரு பாதுகாப்புக்காகத்தான் இந்தச் சட்டம். அதாவது மற்ற தொழிலாளர்கள் விரும்பவில்லை என்ற சூழ்நிலையில்—10 பேர் இந்தப் போராட்டத்தை நடத்தி வண்டிகளை நிறுத்தினால் ஓட்டுவதற்கு விருப்பமுள்ள அந்தத் தொழிலாளர்கள்கூட தங்களுடைய கடமைகளைச் செய்ய முடியாமல் போகிற நிலைமை ஏற்படுகிறது. இதை எல்லாம் கருத்தில் கொண்டுதான் இந்தச் சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் பணிவோடு இந்த மன்றத்தின் உறுப்பினர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

எனவே, இந்தச் சட்டத்தினைப் பொறுத்த வரையில் இது ஒரு பாதுகாப்புச் சட்டமாகத்தான் கொண்டுவரப்பட்டிருக்கிறது. தேவையான சட்டமாக, தொழிலாளர்களைப் பாதுகாக்கக்கூடிய சட்டமாகத்தான் கருத வேண்டும். தொழிலாளர்களைப் பாதிக்கக்கூடிய சட்டமாக அந்தக் கண்ணோட்டத்தோடு இதை யாரும் பார்க்கவேண்டிய தேவையில்லை. பாதுகாப்புக்காகத்தான்

கொண்டுவரப்படுகிறது. இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசைப் பொறுத்த வரையில் எவ்வளவோ சட்டங்களை, இன்னும் சொல்லப்போனால் இங்கே இருக்கின்ற இரண்டு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும் பாராட்டக்கூடிய, வரவேற்கக் கூடிய அளவுக்கு பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களையும், விவசாயக் கூலி நலச் சட்டத்தையும் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தச் சட்டம் எந்த வகையிலும் தவறான முறையில் கையாளப்படும் என்ற அச்சம் வேண்டாம். காரணம் இந்தச் சட்டத்தை கையாளுபவர் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள். எனவே, சந்தேகப்பட வேண்டிய அவசியம் இல்லை. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் சொன்னதுபோல் அத்தியாவசிய பணிகளை முடக்குவதைத் தடுக்கின்ற வகையில், தேவையில்லாமல் அப்படிப்பட்ட ஒரு நிலையை உருவாக்காமல் தடுக்கின்ற வகையில்தான் இந்தச் சட்ட முன் வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது என்ற வகையில் இதனை வரவேற்று என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. வீரய்யன் : துணைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்கள் பேசும்போது ஜோதிபாசு தொழிலாளர்களின் கடமையை வலியுறுத்துவதற்காகத்தான் சொன்னார்கள் என்ற வகையிலே விளக்கினார்கள். அப்படிப் பொருத்திப் பார்க்கின்ற அதே நேரத்தில் காவல் துறையினர் தங்கள் கடமையைச் செய்யாததன் விளைவாகத்தான் இப்படிப்பட்ட நிலைமை ஏற்படுகிறது என்ற வகையில் ஏன் பொருத்திப் பார்க்கக்கூடாது? அவ்வாறு பொருத்திப் பார்க்கலாமா என்ற வகையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடமிருந்து விளக்கத்தை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ஆனந்த கிருஷ்ணா அவர்களைப் பேச அழைக்கிறேன்....(குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் நேரடியாகப் பேசிக்கொள்ளக் கூடாது. . (குறுக்கீடுகள்) இங்கே நேரம் முக்கியம். 15 பில்கள் இருக்கின்றன.

திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சட்ட மசோதாவைப் பொறுத்த வரையில் காங்கிரஸ் கட்சியினுடைய கருத்து இது தொழிலாளர் விரோத சட்டம் என்பதுதான். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை எல்லாம் கட்டுப்படுத்துவதற்கு ஏற்கெனவே பல சட்டங்கள் இருக்கின்றன. அதனை மாண்புமிகு அமைச்சர் அவர்களே ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். எம். வி. ஆக்டிலே செக்ஷன் 81-லே அதற்குத் தகுந்த வாய்ப்புகள் இருக்கின்றன. ஐ.பி.சி. இருக்கிறது. எனவே, தனியாக இதற்கென்று ஒரு சட்டம் தேவையா என்பதுதான் எங்களுடைய கேள்வி.



அதுமட்டுமல்ல, சாலைகளில் போக்குவரத்திற்கு இடைஞ் சலாக ஓட்டுநர்கள் ஊர்திகளை விடுகிறார்கள் என்பதற்காக, இதனைக் கொண்டுவருவதாகச் சொல்கிறார்கள். உணர்ச்சிவசப் பட்ட தொழிலாளர்கள் அப்படிப்பட்ட தவறுகளைச் செய்வ துண்டு. அதற்காக இப்படிப்பட்ட ஒரு தண்டனை தேவையா? இந்தச் சட்டத்தினுடைய 5ஆவது செக்ஷனிலே சொல்லப்பட் டிருக்கிறது. அதாவது தவறு செய்கின்ற ஊழியரின் டிரைவிங் லைசன்ஸை ரத்து செய்தல் மற்றும் அவர்களை வேலை நீக்க மும் செய்தல் என்ற வகையில் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி அவர்களுடைய வேலையே போகிறது என்ற அளவுக்கு ஒரு தண் டனை தேவையா? உணர்ச்சிவசப்பட்டு ஏதோ ஒரு வேகத்தில் தவறு செய்வதால் அவர்களுடைய வேலையை இழக்கச் செய் கின்ற அளவுக்கு ஒரு தண்டனை தேவையா? அல்லது இந்தச் சட்டத்தினுடைய இரும்புக் கரத்தினால் யாரை ஒடுக்கப் போகி றார்கள்? தொழிற் சங்கங்களின் உரிமைகள்தான் பறிக்கப்படப் போகிறது என்பதைத்தான் இந்தச் சட்டம் காட்டுகிறது. அப் படிப்பட்ட ஒரு அபாயகரமான முடிவு இது என்று நாங்கள் தெரி விக்க விரும்புகிறோம்.

அதுமட்டும் இன்றி இன்றைக்குச் சாலைகளிலே சில நேரங் களிலே ஓட்டுநர்கள் வண்டிகளை நிறுத்தி வைத்துச் செல்ல வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ரஸ்தா ரோக் என்று சொல் லக்கூடியவர்கள் போராட்டங்களை நடத்துகிறபோது, ஓட்டு நர்கள் வேறு வழி இன்றி, விதி முறைகளையும் பார்க்க முடியாமல் சாலைகளின் ஓரங்களில் ஆங்காங்கே நிறுத்திவிட்டுச் செல்ல வேண் டிய நிலைமை ஏற்படுகிறது. அப்படிப்பட்ட நேரங்களில் கூட அந்தத் தொழிலாளர்களுக்கு, ஓட்டுநர்களுக்கு எதிராக இந்தச் சட்டம் பயன்படாதா என்பது எங்களுடைய ஐயப்பாடாக இருக் கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக் கிறேன்.

மேலும், செக்ஷன் 3-லே " for wilful obstruction of traffic during strike or demonstraction or protest" என்று இருக்கிறது. அதற்கு என்ன டெபினிஷன் என்பது விளக்க மாக இல்லை. இந்த செக்ஷன் 3-ஐ வைத்துக் கொண்டு எந்த ஓட்டுநரையும் வேண்டும் என்றே நிறுத்தி விட்டார்கள் என்று சொல்லி லைசன்ஸை கான்சல் செய்கிற ஆபத்து இருக்கிறது. எனவே, இந்தச் சட்டத்தை வாபஸ் பெற்று இருக்கிற சட்டத்தை வைத்தே, அந்த ஓட்டுநரை வேலை நீக்கம் செய்வதோ அல்லது வேறு தண்டனை கொடுப்பதோ முடியும். தொழிற் சாலைகளின் சட்டங்களே அதற்குப் போதும். அந்த புரொசீடிங்ஸ் மூலமாகவே யார் எந்த தவறுகள் செய்தாலும் அவர்களுடைய லைசன்ஸை பறிக்கும் அதிகாரம் அரசுக்கு இருக்கிறது. எனவே இந்திய தேசிய காங்கிரஸின் சார்பாக இதை வாபஸ் பெற வேண்டும் என்று கேட்டு விடை பெறுகிறேன்.

[1987 மே 8

**திரு. வை. பாலச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல ஆண்டுகளுக்கு முன்னால் வந்திருக்க வேண்டிய ஒரு சட்டம் இப்போது வந்திருக்கிறது. எங்களைப் பொறுத்த வரையில் நாங்கள் எல்லாம் கூட ஒரு போராட்ட இயக்கத்தைச் சார்ந்தவர்கள்தாம். ஆனால் போராட்ட இயக்கத்தைச் சார்ந்த நான் இப்படி ஒரு சட்டம் பல ஆண்டுகளுக்கு முன்னாலேயே வந்திருக்க வேண்டும் என்று கருதுவதற்குக் காரணம் எந்தப் போராட்டமாக இருந்தாலும், அந்தப் போராட்டம் நாட்டு மக்களுக்கு பாதிப்பை உருவாக்காத வகையில் இருக்க வேண்டும் என்று திட்டமிட்டு நடத்துகின்ற போராட்டமாக இருக்க வேண்டும்.

ஆனால் இன்றைக்கு நாட்டிலே நடைபெறுகின்ற போராட்டங்களைப் பார்க்கிற போது பல்வேறு வகையிலே நாட்டு மக்களுக்கு பாதிப்பையும் நாட்டினுடைய உடைமைகளுக்கு சேதத்தையும் உருவாக்குகின்ற போராட்டமாகவே இருக்கிறது என்று நான் கருதுகிறேன். இந்தப் போராட்டங்கள் குறித்த மக்களின் மனப் போக்கு மாறாத வகையில் இத்தகைய நட வடிக்கைகள் பல்வேறு வகைகளில் இடுக்கண்களாக உறுத்திக் கொண்டே தான் இருக்கும்.

ஆகவே இப்போதாவது பிறந்திருக்கிற இந்தக் குழந்தையை காலம் தாழ்ந்து பிறந்திருந்தாலும், அழகான குழந்தையாகவே இருக்கிறது என்ற வகையில் இந்தச் சட்ட முன் வடிவைப் பாராட் டுகிறபோது; இதன் செக்‌ஷன்களில் சொல்லப்பட்டிருக்கிற நடவடிக்கைகள் மிகவும் கடுமையாக இருக்கின்றன என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். எனவே செக்‌ஷன் 3 ஆப் தி பில் It provides for the cancellation of the licence. போராட்டத்தில் ஈடு பட்ட உடனேயே அவருடைய லைசன்ஸ் ரத்து செய்யப்பட்டு விடும் என்று சொல்வது அவ்வளவு ஏற்புடையதாக இருக்காது என்று கருதுகிறேன்.

ஏனென்றால் முதலிலே லைசன்சை ரத்து செய்து விட்டு அதற்குப் பிறகு லைசன்ஸைக் கொடுப்பது என்றாலும் அது புதிய தாக லைசன்ஸ் கொடுப்பதாகத்தான் இருக்குமே தவிர, பழைய லைசன்ஸை தொடர்வதாக அது காட்டாது. எனவே முதலில் லைசன்ஸை சஸ்பென்ஷன் என்ற வகையில் தற்காலிகமாக நிறுத்தி வைத்து பிறகு கொடுக்கின்ற நிலைமையை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

செக்‌ஷன் 3-ல் It also provides for the cancellation of the licence for such period as it may deem fit. எந்தக் குறிப்பிட்ட காலக் கட்டம் என்று தெரிவிக்கப்படவில்லை. ஒரு வாரமா, ஒரு மாதமா, ஒரு ஆண்டா அல்லது 10 ஆண்டு





களுக்கு அந்த லைசன்ஸை கேன்சல் பண்ணப் போகிறீர்களா என்று சொல்லாமல் இருப்பது குழப்பத்தை ஏற்படுத்திக் கொண் டிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதற்குப் பிறகு கேன்சலேஷன் ஆப் லைசன்ஸ் என்பது இருக்குமானால் பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றத்திற்குச் செல்ல முடியாத சூழ்நிலையைக் கூட மறைமுகமாக இது உரு வாக்குகிறது. மேலும் செக்‌ஷன் 4 லே கடைசியாக குறிப்பிட் டிருப்பது An order made by such Appellate Authority shall be final. அந்த அப்பாலிட் அத்தாரிட்டி என்பது நீதிமன்றங்கள் அல்ல. ஆகவே நீதிமன்றங்களுக்குச் சென்று நீதி பெறுகின்ற வாய்ப்பு இல்லாமல்; அப்பாலிட் அத்தாரிட்டியால் அளிக்கப்படுகின்ற தீர்ப்பு கடைசி மேல் முறையீட்டு தீர்ப்பு என்று சொல்வது அவ்வளவாக நேச்சுரல் ஜஸ்டிஸுக்கு ஏற்புடையதாக இருக் காது என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

(மாலை 4–40)

அதற்கு அடுத்தபடியாக ஒருவர் குற்றம் செய்ததாகக் கருதப் பட்டால் அவரை உடனடியாக வேலையிலிருந்து நீக்க வேண்டு மென்று செக்‌ஷன் 5-ல் சொல்லப்படுகிறது '....remove or cause to be removed' நீதிமன்றங்களில் கூட சாதாரணக் குற்றம் செய்பவர் களுக்கு முதல் குற்றம், இரண்டாவது குற்றம், மூன்றாவது குற்றம் என்று குற்றங்களுடைய தன்மைகளைப் பார்த்து அவர்களுக்கு தண்டனை கொடுக்கிறார்கள். தெரிந்தோ தெரியாமலோ யாரோ தவறாக வழி காட்டியதன் காரணமாக தவறான பாதையில் சென்று அந்தக் குற்றத்தை செய்கிற ஒரு அப்பாவி முதல் முறையாக செய்து விட்ட காரணத்தால், திருந்துவதற்கு வாய்ப்பே கொடுக்காமல் அவன் வாழ்க்கையை பாழடிக்கிற வகையில் வேலையிலிருந்து நீக்குவது என்பது சற்று கடுமையானது. ஆகவே தவறான பாதையில் இன்றைக்கு போராட்டம் என்கிற பெயரில் சென்று கொண்டிருக்கிற அந்தப் போராட்ட வீரர்கள் திருந்துவதற்கு வாய்ப்பைத் தருகிற வகையில் சில மாற்றங்களை இதில் கொண்டு வர வேண்டும். தவறான முறையில் செல்கிற வர்கள் திருந்துவதற்கான வாய்ப்பை கொடுக்கவில்லையென் றால் அவர்கள் செல்கிற பாதை தவறான பாதையாக இருந்தா லும், அது நிரந்தரமான பாதையாக அவர்களைப் பொறுத்த வரையில் ஆகி விடக் கூடும். ஆகவே தவறான பாதையை நிரந் தரமான பாதையாக ஏற்றுக் கொள்கிற அந்த வாய்ப்பை ஆயிரக் கணக்கானவர்களுக்கு உருவாக்கிக் கொடுக்கக் கூடாது என்பது என்னுடைய வேண்டுகோள்.

அதுமட்டுமல்லாமல், இந்தச் சட்டம் வருவதற்கு முன்னால் நடுரோட்டில் சாலையில் பேருந்துகளை நிறுத்துவதால் தனிப் பட்ட முறையில் பாதிக்கப்பட்டவர்கள் நாங்கள். எத்தனையோ பேர்களை விபத்தில் மாட்டிக் கொண்டவர்களைக் கூட மருத்துவ

மனைகளுக்குக் கொண்டு செல்ல முடியாமல் சாலைகளில் இந்த வண்டிகளை நிறுத்தி விடுகிற காரணமாக எங்களுடைய உறவினர்களைக் கூட நாங்கள் பலி கொடுத்திருக்கிறோம். இப்படி தமிழ்நாட்டில் பல பேர் இருக்கக்கூடும். நாட்டில் அமைதி விரும்புகிற மக்களுக்கு, சட்டம் ஒழுங்கை விரும்புகிற மக்களுக்கு இந்தச் சட்டம் பயன் கொடுக்கும். போராடுகிற மக்கள் மனம் திருந்தி போராட்டத்தை முறையாக நடத்தினால் இந்தச் சட்டம் பயனற்ற சட்டமாகி விடும் என்ற நிலை போராடுகிற மக்களுக்கு உருவாக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன், நன்றி.

திரு. கே. சுப்பரர்யன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படி ஒரு சட்ட முன்வடிவை இந்தப் பேரவையில் முன் மொழிந்து அநேகமாக அனைத்து எதிர்க் கட்சிகளும் கடுமையாக எதிர்க்க வேண்டிய அவசியத்தை ஏற்படுத்திய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுடைய நடவடிக்கைக்காக நாங்கள் பெரிதும் வருந்துகிறோம்.

பொதுவாக சில பிரச்சினைகளை பேசி முடித்துக் கொள்வதில், பிரச்சினைகளுக்கு சிக்கல் இல்லாமல் தீர்வு காண்பதில் அக்கறை கொண்டுள்ள ஒரு அமைச்சர் இப்படி ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டு வருவது அவருடைய பதவிக் காலத்தில் ஏற்பட்ட ஒரு களங்கப் பொட்டு என்பதைத் தான் குறிப்பாக நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். நாங்கள் எடுத்துச் சொல்வதன் மூலம் இந்தச் சட்ட முன் வடிவை வாபஸ் பெற்றுக் கொள்வீர்கள் என்று போலித்தனமான நம்பிக்கையெல்லாம் எங்களுக்கு இல்லை. ஆனாலும்கூட வருங்காலத்தில் ஜனநாயக வரலாற்றைப் பயில்கிற மாணவர்களுக்கு ஜனநாயகம் கடந்த காலத்தில் எந்த அளவிற்கு சித்ரவதை செய்யப்பட்டிருக்கிறது என்பதையெல்லாம் கண்டு கொள்வதற்கு ஒரு வர்ய்ப்பும், ஜனநாயகம் தொடர்ந்து சித்ரவதை செய்யப்பட்ட காலத்தில் எல்லாம் அதற்கு எதிர்ப்பு குரல் எழுப்பியவர்கள் உண்டு என்பதை உணர்ந்து கொள்கிற வகையில் தான் எங்களுடைய எதிர்ப்பை பதிவு செய்கிறோம். தோற்றத்தில் இங்கே சொல்லப்பட்டிருக்கிற சட்ட முன்வடிவு மக்களுக்கு இடையூறு செய்பவர்களிடமிருந்து மக்களை பாது காப்பதற்காக கொண்டு வருவதைப் போல இருந்தாலும் கூட, தோற்றத்தில் ஜனநாயகத் தன்மையிருப்பதாகத் தெரிந்தாலும், உள்ளே முற்றிலும் ஜனநாயக விரோத அம்சங்கள் இருக்கின்றன என்பதை இங்கே குறிப்பாக சுட்டிக் காட்ட விரும்புகிறேன். விஷம் தடவிய இனிப்பு மிட்டாய் தான் இந்தச் சட்ட முன்வடிவு என்பது என்னுடைய விமர்சனமும் கருத்துமாகும். இனிப்பு அதில் இருக்கிறது என்பதல்ல. இதில் பொதுமக்கள் சிலருக்கு நல்ல அம்சங்கள் இருக்கின்றன என்று சொல்வது இனிப்பை வழங்கிவிட்டு அதிலே துளி விஷத்தையும் வழங்குவதைப் போலவாகும். பல ஆண்டுக் காலம் தொழிலாளர் வர்க்கம் போராடிப் பெற்றிருக்கிற போராடுகிற உரிமையைப் பறிக்க யாருக்கும் உரிமை கிடையாது. ஆயிரக்கணக்கான உயிர்களை பலியிட்டுப் பெற்றிருக்கிற உரிமை



ஒரு சட்டத்தால் போக்குவது, நீக்குவது என்ற நிலை ஏற்பட்டு விடுமானால் தொழிலாளர் வர்க்கத்தின் கதி என்னவாகும்? உழைக்கிற மக்கள் எப்படித்தான் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்துவார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. நாங்கள் ஏதோ மக்களுக்கு இடையூறு செய்வதை ஆதரிக்கிறோம் என்பதல்ல. இதிலே என்ன இடையூறு இருக்கிறது? ஆயிரக்கணக்கான பிரச்சினைகளுக்கு இடையே இந்த விஷயத்தில் இவர்கள் இவ்வளவு அக்கறை காட்ட வேண்டிய அவசியம் என்ன? கள்ளுக்கடை மறியலை காந்தி அடிகள் நடத்தவில்லையா? ஒரு எதிர்ப்பைத் தெரிவிக்க சாத்வீகமான ஜனநாயக முறை தான் போராட்ட முறை. பேருந்தை நிறுத்தி விடுகிறான், கொளுத்தி விடுவதில்லை, அதனை சேதப்படுத்துவதில்லை. அவர்களுடைய எதிர்ப்பை வெளிப்படுத்துவது என்பதற்கு என்ன வடிவம்? நான் இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன். போராட்டக்கால வரலாற்றை புரிந்தவர்கள் புரிந்து கொள்வார்கள். போராட்ட முறைகளில் யுக்திகள், பல கட்டங்களில், பல்வேறு முறைகளில் மாறியிருக்கின்றன, வளர்ந்திருக்கின்றன.

போராட்ட முறைகள் மீறுகிறபோது, அவற்றை சமூகத்திற்கு எதிராக நீங்கள் சித்தரிப்பது என்பது தொழிலாள வர்க்க எதிர்ப்புக் கருத்திலேயிருந்து விளைகிற நிலைதான் அது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இப்போது என்ன நிலைமை ? இங்கே சொல்லப்பட்டிருக்கிற சட்ட முன்வடிவிலே என்ன சொல்லியிருக்கிறீர்கள் ? வேலை நீக்கம் செய்துவிடுவது. வேலை நீக்கம் செய்து விடுவது அல்லது டிரைவிங் லைசென்சை பறித்துக்கொள்வது. இது நல்லது தானா ? ஒரு சின்ன குற்றத்திற்காக சிரச் சேதம் செய்கிறீர்களா? வாழ்க்கையோடு விளையாடலாமா ? உயிரோடு விளையாடலாமா ? வேலையை இழந்து விட்டால், அவன் தெருவிலே அல்லவா சுற்றவேண்டும். அந்தத் தொழிலாளியின் மீது பழிவாங்கும் உள்ளத்தோடு துஷ்பிரயோகம் செய்யப்படக் கூடிய ஒரு தனிக் கருவியாக அரசுக்கும், மற்ற நிறுவனங்களுக்கும் அது பயன்படுத்தப்படும். எனவே இந்தச் சட்டம் என்பது முற்றிலும் ஜனநாயக விரோதமானது என்பதை என்னுடைய சக்தி முழுவதையும் திரட்டி வன்மையாக இதை நான் ஆட்சேபிக்கிறேன். இது நிச்சயமாக இந்தப் பேரவையிலே அரங்கேற்ற அனுமதிப்பது என்பது சரியல்ல என்பதால் தான், அமைச்சர் அவர்கள் இதை வாபஸ் வாங்கவேண்டும். நிச்சயமாக வாபஸ் வாங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கே. சுப்பராயன்] [1987 மே 8

இன்னொரு விஷயத்தை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். நாணயத்திற்கு இரண்டு பக்கம் இருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். நான் கேட்கிறேன். தொழிலாள வர்க்கத்திற்கு என்று நீங்கள் போட்ட சட்டத்தை இந்த மாநிலத்திலே நிறைவேற்றவில்லையே ? நிறைவேற்றாத நிறுவனங்கள் மீது, முதலாளிகள் மீது என்ன நடவடிக்கை ? போட்ட சட்டம், சலுகைகளை, தொழிலாளர் வர்க்கத்திற்கு, அரசு உட்பட, வழங்கவில்லையே, அவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கை என்ன ? தொழிலாளி எந்த ஆயுதமும் இல்லாதவன். எந்த வாய்ப்பும் இல்லாதவன். அவன் தன்னுடைய உரிமையை வலியுறுத்த, கிடைத்திருக்கிற ஒரே ஆயுதம் வேலை நிறுத்தம், ஆர்ப்பாட்டம், தர்ணா, இன்ன பிற விஷயங்கள் தான். அந்த உரிமையிலே தயவுசெய்து கை வைக்காதீர்கள். இதிலே கை வைப்பது என்பது உண்மையிலேயே தொழிலாளர் வர்க்கத்தின் குரல் வளையை நசித்துக் கொல்வதற்குச் சமமாகும். அந்த நிலையை நீங்கள் தயவு செய்து மேற்கொள்ளக்கூடாது. தொழிலாளர் வர்க்கத்திற்கு நீங்கள் பாவம் செய்தவர்கள் என்பதற்குரிய பழி உங்களைச் சூழும் என்பதைத்தான் குறிப்பாக சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இறுதியாக ஒன்று மக்கள் உங்களுக்கு தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள் என்பதற்கு நான் தலைவணங்குகிறேன். அந்த மக்கள் நம்பிக்கையோடு வழங்கிய தீர்ப்பை நீங்கள் துஷ்பிரயோகம் செய்யலாமா ? மக்கள் இத்தகைய நிலைக்கு எதிராக உங்களை பிரயோகம் செய்யச் சொன்னார்களா ? இல்லை. மக்களின் ஒரு பகுதிதான் இந்தத் தொழிலாளர் வர்க்கம் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

அடுத்து நம்முடைய உறுப்பினர் திரு. செம்மலை அவர்கள் குறிப்பிட்டார்கள். திரு. ஜோதிபாசு அவர்கள் சொன்ன விஷயத்தை மேற்கோள் காட்டினார்கள். ஜோதிபாசு மட்டுமல்ல. உலக கம்யூனிஸ்டு கட்சி இயக்கத் தலைவர் முழுவதும் சொல்கிறார்கள். கடமையும் உரிமையும் இரண்டும் ஒன்று. இரண்டும் இணைக்கப்பட்டது. ஆனால் நீங்கள் என்ன சொல்கிறீர்கள். சிலர் சொல்கிறார்கள். எசன்சியல் சர்வீசிலே எப்படி ஸ்டிரைக் செய்யலாம் என்று சொல்கிறார்கள். எசன்சியல் சர்வீசிலே வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு வயிறு இல்லையா ? \ எசன்சியல் சர்வீசிலே இருக்கிற தொழிலாளர்களுக்கு விலைகள் ஏறுவதில்லையா ? எசன்சியல் சர்வீசிலே இருக்கிற தொழிலாளர்களுக்கு சட்ட உரிமைகள் அமலாக்கப்படாதபோது, சட்ட உரிமைகள் பெற்றுக் கொள்ள இன்றைய நீதிமன்றத்திற்குப் போனால், வருடக் கணக்கில் செத்து, அவன் சுடுகாட்டிற்குப் போனதற்குப் பின்னாலே தான் நீதி கிடைக்கும்.



1987 மே 8]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேற்கு வங்கத்திலே டாக்டர்கள் ஸ்டிரைக் நடந்துகொண்டிருந்தது. அப்போது திரு. ஜோதிபாசுவினுடைய முடிவு என்ன ? கம்யூனிஸ்டு கட்சியினர் என்ன முடிவை எடுப்பார்கள் என்டதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. கே. சுப்பராயன் : துணைத் தலைவர் அவர்களே, அப்போது இந்த மாதிரியான சட்ட விரோதமான சட்டம் அங்கே கொண்டுவரப்படவில்லை என்பதை அமைச்சருக்கு நினைவூட்டுகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : சட்ட விரோதமான சட்டம் என்பதல்ல. -தொழிலாளர்கள் போராட்டம் நடத்தும் போது, ஜோதிபாசு அவர்கள் அதை அனுமதித்து, நடத்துங்கள் என்று விட்டுவிட்டாரா ?

திரு. கே. சுப்பராயன் : தொழிலாளர்கள் உரிமைகளைக் கோருகிறபோது இதே திரு. ஜோதிபாசுவும், கம்யூனிஸ்டுகளும் முன்னணியில் நிற்கிறார்கள். தொழிலாளர்கள் உரிமைகளைக் கோருகிறபோது, முன்னணியில் நின்று, அவர்கள் கடமையைச் செய்வதை எப்போதும் நாங்கள் வலியுறுத்துகிறோம் என்பதை நினைவூட்டுகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : துணைத் தலைவர் அவர்களே, நான் கேட்க விரும்புவது சமீபத்திலே மேற்கு வங்கத்திலே நடைபெற்ற டாக்டர்கள் போராட்டத்தின்போது, அந்த மாநிலத்தின் முதலமைச்சர் அந்தப் போராட்டம் சரியான போராட்டம் நியாயமான போராட்டம், நடக்கட்டும் என்று அனுமதித்தாரா?

திரு. கே. சுப்பராயன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கேட்க விரும்புவது, மேற்கு வங்கத்தில் நடப்பது முழுவதையும் அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ளத் தயாரா? மேற்கு வங்கத்தை முன்னுதாரணமாகக் கொண்டிருக்கிறார்கள் என்றால், மேற்கு வங்க முதலமைச்சருக்கு இருக்கிற துணிச்சலோடு மத்திய அரசை வலியுறுத்துவதற்கு இந்த மாநில அரசுக்குத் துணிச்சல் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேற்கு வங்கத்து முதலமைச்சருக்கு இருக்கிற அந்த அளவு துணிச்சல் இருக்கிறதா என்று கேட்டார்கள். அந்த அளவிற்கு இல்லை. அதைவிட அதிகமாக இருக்கிறது.

திரு. கே. சுப்பராயன் : அதனால்தான் * * இருக்கிறார்கள் பரவாயில்லை.

மாண்புமிகு திரு.ப . உ. சண்முகம் : * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்த வார்த்தையை நீக்க உத்தரவிடுகிறேன். இரண்டாவது, பில்லின் மீது பேசுங்கள். நான் முதலிலேயே சொல்லியிருக்கிறேன். 24 மாநிலங்களிலேயே மத்திய சர்க்காரை எதிர்த்து, தைரியமாக உண்ணாவிரதம் இருந்த, தைரியமாக இருக்கிற முதலமைச்சர், ஒரே முதலமைச்சர் நமது புரட்சித் தலைவர் எம்.ஜி. ஆர். அவர்கள்தான். (குறுக்கீடு) அப்படி என்றால் ஏன் வம்பிலே கொண்டு போய்விடுகிறீர்கள். (குறுக்கீடு) கட்டாயம் பேசுவோம். வேறு வழியில்லை. (குறுக்கீடு) முன்னுதாரணமாக இருந்தால் கூட பரவாயில்லை. நீங்கள் தவறான முன்னுதாரணத்தோடு பேசும்போது நாங்கள் பதில் தருவோம். வேறு வழியில்லை. (குறுக்கீடு) —ஒரு நிமிடம் இருங்கள். நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு).

திரு. கே. சுப்பராயன் : ஸ்பீக்கர் சேர் என்பது எவ்வளவு தகுதி மிக்கது!

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒரு வார்த்தை சொன்னீர்கள். அதை நான் நீக்கிவிட்டேன். * * இருக்கிறார் என்று பேசினீர்கள். ஒரு உறுப்பினர் இந்த அவையிலே பேசுகிற வார்த்தையா ? சரியாக வருமா ? உங்களுடைய மனசாட்சியைத் தொட்டுப் பாருங்கள். தயவு செய்து. இது நியாயமில்லை. நீங்கள் டிமாண்டிலே பேசுங்கள் (குறுக்கீடு) தயவு செய்து நீங்கள் வாதம் செய்யாதீர்கள். (குறுக்கீடு) மிகக் கீழே இறங்கி இப்படிப் பேசினால் எதிர் தரப்பிலிருந்து வார்த்தைகள் வரத்தான் செய்யும். (குறுக்கீடு).

(மாலை 4-50)

திரு. கு. ரமணி : தப்பான வார்த்தைகளை நீங்கள் ரெக்கார்டிலிருந்து நீக்குவதில் எந்தவிதமான ஆட்சேபனையும் கிடையாது. ஆனால் நீங்கள் சேரிலேயே உட்கார ஆரம்பித்தால் நீங்கள் எல்லோருக்கும் சமமானவர். (குறுக்கீடு) நீங்கள் வேறு விதத்திலே போக முடியாது. (குறுக்கீடு)

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர்களுடைய உரிமையைப் பாதுகாப்பது இந்தச்சேரினுடைய கடமை. முதலமைச்சர் அவர்களும் இந்த அவையினுடைய உறுப்பினர். முதலமைச்சரை இழித்துச் சொன்னால், நடந்த உண்மையை மறைத்துப் பேசினால், சேரிலிருந்து கட்டாயம் சொல்வோம். அது தவிர்க்கவே முடியாது. அவசியம் சொல்லுவோம்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையை நடத்திச் செல்ல வேண்டிய பொறுப்பு அவைத் துணைத் தலைவர் பொறுப்பாகும். அதில்லாமல், அவைக்கு வேண்டிய அறிவுரையைத் தருவது உங்களுடைய கடமையாகும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் இப்போது சொல்கிறீர்கள், நீக்குங்கள் என்று. அந்த வார்த்தையை திரு. சுப்பராயன் சொல்லவில்லையென்றால் இங்கே இவ்வளவு வேகம் வந்திருக்காது. 5 நிமிடங்களை சேமித்து இருக்க முடியும். (குறுக்கீடு) (கூச்சல், குழப்பம்) இல்லை, இல்லை. அவைக்கு தவறான தகவலைக் கொடுக்கிறார். (குறுக்கீடு) முதலமைச்சர் போராடவில்லை என்று சொல்கிறார். போராடினார் என்று சொல்லுவது என்னுடைய கடமை. (குறுக்கீடு, கூச்சல், குழப்பம்) எதிர்க் கட்சி எதிர்ப்பதால், அவைக்கு தவறான தகவல் கொடுத்தால் அதை அவை அனுமதித்துக் கொண்டிருக்காது. (குறுக்கீடு) நீங்கள் சபைக்கு தவறான தகவலைக் கொடுக்கிறீர்கள். (குறுக்கீடு) மத்திய சர்க்காரை எதிர்த்துப் போராடி இருக்கிறார்கள் (குறுக்கீடு). ஒரு மிகப் பெரிய உண்மையை மறைக்கிறார் திரு. சுப்பராயன். அப்படி மறைக்கிறபோது அந்த உண்மையைச் சொல்லுகிற கடமை இந்தச்சேருக்கு இருக்கிறது. அது தவிர்க்க முடியாதது. வேறு வழி இல்லை. (குறுக்கீடு) உங்களுக்கு, நீங்கள் என்ன வேண்டுமானாலும் பேசலாம் என்று உரிமை இருந்தால், உண்மை மறைக்கப்படுகின்றபோது, விதிகள் மீறப்படுகிறபோது (குறுக்கீடு) we are here to straighten the record. அவர் போராட்டத்தைப் பற்றிச் சொன்னார். நடந்த ஒரு உண்மையை ரெக்கார்ட் பண்ணுவதைத் தவிர வேறு வழி இல்லை. தவறான தகவலை கொடுக்கிறார். (குறுக்கீடு)

திரு. கு. ரமணி : மாண்புமிகு அவைத் துணைத் தலைவர் அவர்களே, அவைத் துணைத் தலைவர் என்ற முறையில் நீங்கள் எங்களுக்கும், ஆளும் கட்சிக்கும், மற்ற கட்சிகளுக்கும் நடுவராக இருந்து செயல்படக் கூடியவர். இப்போது பிரச்சினை ஏன் வருகிறது என்று கேட்டால் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 7 நாட்கள் உண்ணாவிரதம் இருந்ததையெல்லாம் நாங்கள் வரவேற்றவர்கள். (குறுக்கீடு).

[1987 மே 8

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர் சொன்ன வார்த்தை அப்படி இல்லையே. நீங்களே பேசிக் கொண்டிருக் கிறீர்களே, நீங்கள் பேசி முடியுங்கள், நான் பேசுகிறேன். (குறுக்கீடு)

திரு. கு. ரமணி : நான் சொல்வது, நீங்கள் இந்த அவை யில் நடுநிலைமையிலிருந்து மாறினால், அது எங்களுக்கு ஆபத்து, அதைத்தான் நாங்கள் சொல்கிறோம். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர்கள் உண்மைக்குப் புறம்பான தகவலை சபைக்குத் தரலாமா, சொல் லுங்கள். (குறுக்கீடு) அதற்காக சபையிலே தவறான தகவலை ரெக்கார்டாக்கி விட முடியாது. எனக்குத் தெரிந்த உண்மை யைச் சொல்லித்தான் ஆவேன். அதைத் தவிர்க்க முடியாது. வேறு வழி இல்லை. (குறுக்கீடு) முழுக்க முழுக்க ஒரு விஷ யத்தை (குறுக்கீடு) அரசியலுக்காக, ஒரு நடந்த நிகழ்ச்சியை மறைத்து, மிகக் கீழே இறங்கி ஒரு வார்த்தையை உறுப்பினர் சொல்லுகிறபோது, அதை முறைப்படுத்துவது இந்தச் சேரி யினுடைய கடமை என்றுதான் நான் கருதுகிறேன். இதே போல சபாநாயகர் அவர்களே இந்தச் சபையிலே சில தகவல்களைச் சொல்லியிருக்கிறார்கள். இங்கே மட்டுமல்ல, பாராளுமன்றத் திலே கூட. (குறுக்கீடு)

திரு. கு. ரமணி : இந்த அவையை பாதுகாக்க வேண்டிய நீங்களே இப்படி பேசுவதா? (குறுக்கீடு) அந்த வார்த்தையை நீங்கள் நீக்குங்கள். நீங்கள் நடுநிலைமையிலிருந்து மாறினால் எங்களுக்கு ஆபத்து என்றுதான் சொல்கிறோம். (குறுக்கீடு, கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எல்லா உறுப் பினர்ளுடைய உரிமையை பாதுகாப்பது இந்தச் சேரினுடைய கடமை. (குறுக்கீடு) கொஞ்சம் நீங்கள் உட்காருங்கள். இந்த அவையினுடைய உறுப்பினராக இருப்பவர் மாண்புமிகு முதல மைச்சர் அவர்கள். (குறுக்கீடு) (கூச்சல், குழப்பம்) உட்காருங்கள். (கூச்சல், குழப்பம்) (குறுக்கீடு) அதைவிட இது மோசமான வார்த்தை. (கூச்சல், குழப்பம்) அவையிலுள்ள எல்லா உறுப் பினர்களுடைய உரிமையையும் பாதுகாக்க வேண்டும். ஒரு முதலமைச்சரைப் பற்றி அவ்வாறு பேசலாமா ? அப்படி பேசுகிற போது உண்மை வரும். உண்மை வரும் போது ஏன் இப்படி பயப்படுகிறீர்கள்? (குறுக்கீடு) நடந்த போராட்டத்தை சொல் வதற்கு இவ்வளவு கட்டுப்பாட்டை சேருக்கு விதிக்கிறீர்களே, உண்மைக்கு மாறானவைகளைச் சொல்வதற்கு கட்டுப்பாடே கிடையாதா ? இந்த மாநிலத்திலே நடந்த உண்மையை சேர் சொல்லக்கூடாது என்று கட்டுப்பாடு போட்டால், உண்மைக்கு மாறானவைகளைச் சொல்வதற்கு கட்டுப்பாடே கிடையாதா ? (குறுக்கீடு) (கூச்சல் குழப்பம்)



1987 மே 8]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரை, மாண்புமிகு உத்திராபதி அவர்கள் பேசுகிற போது ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். திரு. ஜோதிபாசு அவர் களைப் பற்றி அவர் குறிப்பிட்டுப் பேசுகிறபோது, ஜோதிபாசு சொல்லியிருக்கின்ற நல்ல விஷயங்களை எடுத்து, இந்த அவையின் மூலமாக மக்களுக்குத் தெரிய வேண்டுமென்ற உணர்வோடு குறிப்பிட்டார்கள். அதே போன்று மாண்புமிகு சுப்பராயன் அவர்கள் பேசுகிறபோது நல்ல கருத்துக்களைச் சொல்லி குறிப் பிட்டிருந்தால் இந்தப் பிரச்சினை வருவதற்கு வாய்ப்பு இல்லை. அதற்குப் பின்னாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிற போது கூட ஜோதிபாசுவை குறைத்து ஒரு வார்த்தை யும் சொல்லவில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையிலே முதல மைச்சர் அவர்களை நேரடியாக, அந்தக் கட்சியைப் பாதிக்கின்ற வகையிலே ஒரு வார்த்தையைச் சொல்லுகின்றபோது அதைத் தாங்கிக் கொள்கிற சக்தி யாருக்கும் இருக்க முடியாது. ஆனால், விதி வசமாக, எதையும் பொறுத்துக் கொள்ள வேண்டுமென்று எதிர்பார்க்கிற காரணத்தால், எல்லோரும் பொறுத்துக் கொண்டு உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு துணைத் தலைவர் அங்கேயிருந்து அதைச் சொல்லுவதற்கான காரணமே, இந்தச் சட்டமன்றத்திலே எப்படி ஒவ்வொருவரும் தங்களுக்குப் பாதுகாப்பு வேண்டுமென்று கேட்கிறார்களோ, அதுபோன்று பேசக்கூடாத நிலையிலே நாங்கள் இங்கே இருந்து கொண்டிருக்கிறோம். அதிகமாக பேச முடியாது. மற்றவர்கள் பேசுகிற அளவுக்கு நாங்கள் அதிகமான வார்த்தைகளைச் சொல்லி இங்கே பேச முடியாத நிலை இருக்கின்ற காரணத்தால், உண்மைகளை அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இதை யும் பாதுகாப்பு என்ற முறையில் நீங்கள் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். எனவே உள் நோக்கத்தோடு அது சொல்லப்பட்டது அல்ல. எனவே நம்முடைய பிரச்சினைக்கு வரலாம் என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. சுப்பராயன் அவர்கள் சொன்ன அந்த ஒரு வார்த்தையை நீக்கும்படி உத்திரவிடுகிறேன்.

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கத்தை தங்களிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன். காலையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கிறபோது 'தமிழனுக்கு பிறந்த வனாக இருந்தால்' என்று சொன்னாரே, அது சட்டமன்றத்திலே பயன்படுத்துகிற வார்த்தை தானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வள்ளுவர் கோட்டத்தில் சிறு நீர் பாய்ச்சுகிறார்கள் என்று சொன்னதற்கு நான் பதில் சொன்னதை போய் இதற்கு எடுத்துக் கொண்டு, எதற்கு எதையோ முடிபோட்டு வைத்துப் பேசுகிறார்கள். இது வேறு, அது வேறு விவகாரம். சிறு நீர் பாய்ச்சுகிறார்கள் என்று சொன்ன போது, நான் அதற்கு பதில் சொன்னேனே தவிர, வேறு அல்ல.

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேற்கொண்டு நான் இந்த விவாதத்திற்குள் போக விரும்பவில்லை. ஆனால் இறுதியாக இங்கே குறிப்பிட விரும்புவது, இந்த சட்ட முன்வடிவு என்பது அனேகமாக இதுவரையிலும் தொழிற் சங்க இயக்கம் போராடி தொழிலாளர்களுக்கு பெற்றுத் தந்திருக்கிற முழுமையான ஜனநாயக உரிமையின் மீதான கடுமையான தாக்குதல் என்ற முறையில் இந்தச் சட்ட முன்வடிவை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாபஸ் பெற வேண்டும் அல்லது இதை ஆய்வுக் குழுவுக்கு அனுப்பி பரிசீலித்ததற்குப் பின்னால் தான் மீண்டும் இங்கே அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி கேட்டுக் கொண்டு முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. எ. எஸ. ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்ட முன்வடிவு நாட்டில் இருக்கின்ற மக்களுக்கு பல்வேறு போராட்டங்கள் நடத்தும் உரிமை இருப்பதை அரசு கட்டுப்படுத்துகின்ற நிலையாக இந்தச் சட்ட முன்வடிவு வந்திருக்கிறது. இந்தச் சட்ட முன்வடிவின் மூலம் இந்த அரசு ஒரு அமைதி அற்ற சூழ்நிலையை தமிழ்நாட்டில் உண்டாக்க இருக்கிறது. பிரச்சினையை உண்டாக்கி விட்டு பிறகு முதலமைச்சர் அவர்கள் பேசி முடிவு எடுப்பார்கள் என்று ஆளும் கட்சியின் சார்பாக சொல்லப்படுகிறது. ஊர்தி ஓட்டுநருடைய உரிமம் ரத்து செய்யப்படும் என்று சொல்வது மிகவும் அபாயமான சட்டம். வேலை கிடைப்பதே அரிதாக இருக்கும் தமிழ்நாட்டில் லைசன்சை ரத்து செய்துவிட்டால் அந்தக் குடும்பத்தினுடைய கதி என்ன ஆவது? இன்னும் ஒன்றை சொல்லி இருக்கிறீர்கள். தனியாருடைய ஓட்டுநர் என்றால் அவர்களுக்கு அப்பீல் செய்ய உரிமையுண்டு. அரசு கட்டுப்பாட்டில் உள்ள போக்குவரத்துக் கழகங்களில் உள்ள ஓட்டுநர்களுக்கு அந்த நிலை இல்லாமல் அவர்களை பதவி நீக்கம் செய்வதாகச் சொல்லியிருக்கிறீர்கள். இருக்கின்ற வேலைகளை காவல்துறை சரியாக, நியாயமாக விருப்பு வெறுப்பு இன்றி சரியாக செய்வது இல்லை, என்று இன்றும், நேற்றும், நேற்றைய முன்தினமும் காவல்துறையின் மீது இந்த மன்றத்தில் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சொல்லப்பட்டன. அப்படி இருக்கும் காரணத்தாலே இந்த அதிகாரத்தை வேறு, அவர்கள் கையில் கொடுத்து பல புதிய பிரச்சினைகளை





உருவாக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். உதாரணத்திற்கு சொல்ல வேண்டும் என்று சொன்னால் இப்போது பல்வேறு பிரச்சினைகள் நாட்டில் இருக்கின்றன. நீங்கள் சொல்லுவது வேலை நிறுத்தம் சமயம் அல்லது கண்டன ஆர்ப்பாட்டம் செய்யும் சமயம் என்று சொல்லி இருக்கிறீர்கள். இதிலே இன்னும் பல பிரச்சினைகள் உருவாகலாம். இப்போது ஒரு கிராமத்திலே தண்ணீர் கிடைக்கவில்லை என்று சொன்னால் ரோடில் போகும் பஸ்களை நிறுத்திவிடுகிறார்கள். அவ்வாறு அரை நாள், ஒரு நாள் கூட நின்று விடுகிறது. அதனால் 2 பக்கமும் ஆயிரக்கணக்கான பஸ்கள் நின்று விடுகின்றன. முன்பு எல்லாம் காவலர்கள் அந்த மறியல் செய்பவர்களைத்தான் கைது செய்வார்கள். இனிமேல் அந்த ஊர்தி ஓட்டுநர்களையும் அழைத்துச் சென்று யார் யார் அந்த வண்டியை நிறுத்தி வைத்து இருக்கிறார்கள் என்று சொல்லி அவர்களுடைய லைசன்ஸை பறிக்க இருக்கிறார்கள். அப்படி பறித்தால் இந்த நாட்டில் ஏற்கெனவே இருக்கின்ற வேலையில்லாத் திண்டாட்டத்திலே இப்படி ஒரு திண்டாட்டத்தை வேறு உண்டாக்க வேண்டுமா ? இந்த மாதிரி சிறிய ஊர்களுக்கு பஸ்களை விடவில்லை என்று சொன்னால் கூட பஸ்களை மறிக்கிறார்கள். இப்படி மறிக்கும்போது பல்வேறு இடையூறுகள் இருக்கத்தான் செய்கின்றன. இதற்கெல்லாம் ஏற்கெனவே சட்டங்கள் இருக்கின்றன. உள்ள இந்தச் சட்டங்களை பயன்படுத்தி நீங்கள் சரி செய்யாமல் இப்போது லைசன்ஸை ரத்து செய்வது, பதவி நீக்கம் செய்வது என்று சொல்வது எல்லாம் அபாயமான சட்டம் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இதனால் தொழிலாளர்கள் மத்தியில் அமைதி இன்மை ஏற்பட்டு பல பிரச்சினைகளை இந்த அரசு சந்திக்க வேண்டி இருக்கும். ஏற்கெனவே பல்வேறு பிரச்சினைகளை சந்தித்து இந்த அரசு பல சிக்கல்களில் மாட்டிக் கொண்டு இருப்பது எல்லாம் உங்களுக்குத் தெரியும். ஆகவே, இந்தச் சட்டத்தை நீங்கள் கொண்டு வந்து இதன் மூலம் சிக்கல்களில் மாட்டிக் கொள்ள வேண்டாம் என்று கேட்டு இந்த சட்டமுன்வடிவை வாபஸ் பெறவேண்டும் என்று சொல்லி நான் இந்தச் சட்டமுன்வடிவை எதிர்த்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

(மாலை 5–00.)

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் அவர்கள் பேசும்போது இந்த அரசாங்கம் பல சிக்கல்களிலே மாட்டிக்கொண்டிருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட சிக்கல்கள் எதெதிலே மாட்டிக் கொண்டிருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா ?

[1987 மே 8

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆசிரியர் போராட்டத்தில் 50,000, 60,000 ஆசிரியர்கள் சிறையில் அடைக்கப்பட்டார்களே, பிறகு பார்த்தார், முடித்தார். அதுமாதிரி மீனவர்கள் விவகாரங்களில் வலைகள் எல்லாம் கொண்டுவந்து ......(குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; இத்தோடு போதும்.

திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மாநில அரசு, வேலைநிறுத்தம் அல்லது ஆர்ப்பாட்டம் அல்லது கண்டனம் ஏதேனும் நடைபெறும் போது வேண்டுமென்றே போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கின்றமைக்காக, இயக்கூர்தி ஓட்டுநர்களுடைய ஊர்தி ஓட்டும் உரிமங்களை நீக்கம் செய்கின்ற சட்டமுன்வடிவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இந்தச் சட்டமுன்வடிவை அரசாங்கம் திரும்பப் பெறவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறோம். பல்வேறு தரப்பு வாதங்களையும் இங்கே எடுத்து வைத்தார்கள். வேலைநிறுத்தம் என்பதும், ஆர்ப்பாட்டம் என்பதும் ஒரு ஜனநாயக நாட்டிலே இருக்கக் கூடிய ஒரு உரிமை. அந்த உரிமையைப் பறிக்கக் கூடிய வகையில் இன்றைய தினம் அரசாங்கம் ஏதோ ஊர்தி ஓட்டுநர்களுக்காக மட்டும் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவது, தொழிலாளர்களுடைய போராட்டத்தை, அவர்களுடைய கழுத்தை நெறிக்கின்ற வகையில், முதல் கட்டமாக ஓட்டுநர்கள் மீது ஒரு தாக்கீதை இந்த அரசாங்கம் நடத்துகிறது. இது ஒரு தவறான முன்மாதிரியாக இருக்குமென்பதை இந்த நேரத்தில் நான் வலியுறுத்தித் தெரிவித்துக் கொள்கிறேன். ஆர்ப்பாட்டம், வேலை நிறுத்தம் என்பது தொழிலாளிகள் விரும்பி அவர்களுடைய கோரிக்கையாக நடத்துவது ஒரு கட்டம். அது மட்டுமல்லாமல், பல்வேறு கட்டங்களிலே ஒரு தலைவர் மறைந்து விட்டாலோ, அல்லது ஒரு சம்பவம் நடந்துவிட்டாலோ, அந்தச் சம்பவத்தினுடைய தொடர்பாக பல்வேறு போராட்டங்கள் நடைபெறுவதை நாம் பார்க்கிறோம். எனவே, அந்த நேரத்தில் ஓட்டுநர்களை தண்டிப்பது என்பது நியாயமாக இருக்காது. பல கட்டங்களில், பல நேரங்களில் நாம் பார்த்திருக்கிறோம். உடுமலைப் பேட்டையில் போக்குவரத்துத் தொழிலாளி ஒருவர் இறந்தபோது அங்கே வேலை நிறுத்தம் ஏற்பட்ட சூழ்நிலையை எல்லாம் நாம் பார்த்தோம். இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், தொழிலாளர்கள் விரோதக் கொள்கையைக் கொண்ட அரசாங்கம் என்பது கொஞ்சமும் சந்தேகமில்லை. பல்வேறு கட்டங்களில் நீங்கள் இதைக் கடுமையாக நிரூபித்திருக்கிறீர்கள். எனவே அந்த அடிப்படையிலே இந்தச் சட்டத்தையும் கொண்டு வருவதை, தொழிலாளிகள் நலன் காணும் அரசாங்கம் என்று நீங்கள் சொல்வது, உங்களுடைய போக்குக்கு மாறாக இருக்கிறது. எனவே, இந்தச் சட்டத்தை எதிர்த்து, இதைத் திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.



1987 மே 21

திரு. கு. ரமணி : மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய இந்தச் சட்டம் உண்மையிலேயே பொதுமக்களுடைய நலனைக் காப்பாற்றும் என்று அவர் நினைத்திருந்தால், அதுவும் அப்படியே அந்த நிலைமை முற்றிலும் மாறுபட்ட தன்மையாகத்தான் தமிழ்நாட்டில் ஏற்படக் கூடும். எங்களுக்குத் தெரிந்த விஷயங்களை நாங்கள் சொல்கிறோம். அவர்களும் உத்தேசித்துத்தான் இதைச் செய்கிறார்கள். தொழிலாளி வர்க்கத்தினுடைய உரிமைகளைப் பறிக்கின்ற ஒவ்வொரு அரசாங்கமும், அந்த முறையில் தான் சொல்வது வழக்கம் ஜனங்களுக்கு. அவர்கள் செய்யக் கூடிய நடவடிக்கையால் சமுதாயம் கெட்டுப் போயிற்று. உரிமைகள் மற்றவர்களுக்கு மறுக்கப்படுகிறது. தொழிலாளி வர்க்கத்தினுடைய உரிமைகளைப் பிடுங்குவது அப்படித்தான். நல்லதைச் செய்யவில்லையா என்ற வாதம் இங்கே வந்திருக்கிறது. நல்லதை ஒன்றுமே செய்யாமல் இருக்கமுடியாது. ஒரு சட்டம் என்று சொன்னால், இரண்டு பக்கமும், கூர்மையுள்ள ஒரு கத்தி மாதிரித்தான் முதலாளித்துவ சமுதாயத்தில் இருக்க முடியும். தொழிலாளி வர்க்கம் மெஜாரிட்டி பெற்று, தொழிலாளிகள் உட்கார்ந்து இங்கே அரசாங்கம் நடத்தவில்லை. இந்தச் சட்டத்தில் நீங்கள் என்ன சொல்லியிருக்கிறீர்கள்? ஒரு தொழிலாளி மோட்டார் வண்டி ஓட்டுவதற்கு பயிற்சி பெற்று ''ட்ரயல்'' கொடுத்து, அவர் ஒரு லைசன்ஸ் வாங்குகிறார். அந்த லைசன்சைப்பிடுங்குவது தான் உங்களுடைய சட்டத்தின் நோக்கம். நான் கேட்கிறேன். ஒரு வக்கீல் ஒரு கேசைத் தவறாக நடத்தினார் என்று சொன்னால், அவருடைய சன்னத்தைப் பிடுங்க முடியுமா ? ஒரு டாக்டர் தவறான முறையில் ட்ரீட்மெண்ட் பண்ணி, ஒரு ஆள் இறந்துவிட்டால் அவருடைய டிகிரியைப் பிடுங்க முடியுமா ? நானே கேட்டுப் பார்க்கிறேன் நியாயத்தை. இதை நீங்கள் சொன்னால், நான் ஏற்றுக்கொள்ளத் தயாராகயில்லை. அப்படியென்றால், ரொம்ப பேர்கள் டாக்டர்களாக இருந்திருக்க மாட்டார்கள். எனக்கே தெரியும். அன்றைக்கு மாண்புமிகு மன்றத் தலைவராக இருந்தவர் என்ன சொன்னார் என்று தெரியுமா ? 302 செக்‌ஷனில் நீங்கள் ஏன் கேஸ் போடக் கூடாது என்று நாங்கள் கேட்டபோது, சாத்தியமல்ல. அவருக்காக 307 போட்டுத்தான் அந்தக் கேஸை நடத்த முடியும் என்று சொன்னார்கள். கரெக்ட் புரொபெஷனை அவர் உண்மையாகத்தான் செய்கிறார். ஆனால் அதிலே சாவும் வருகிறது. மனுஷன் பிழைக்கவும் செய்கிறான். உதாரணத்திற்காகத்தான் நான் இதை இப்போது சொல்கிறேன். ஒரு கோர்ட் பார்த்து சில தண்டனைகளை கொடுக்கும். அது விஷயம் வேறே. ஒரு அரசாங்கமே இந்த உரிமையைப் பறிக்கின்றது என்றால் என்ன நினைப்பது ? இந்த பூரா சட்டங்களையும் இந்தச் சபையிலே நிறைவேற்ற வேண்டிய சட்டங்கள் எல்லாவற்றையும் ஒரு சில மணி நேரத்திற்குள்ளே நாம் செய்யப் போகிறோம் என்று சொல்கிறீர்கள் என்றால் இவற்றில் எத்தனை படித்து, இதிலே என்ன புரிந்து செய்யப் போகிறோம் என்பது பிரச்சினை அல்ல. இந்தச் சட்டத்தை நீங்கள் சர்குலேட் பண்ண

வேண்டும். தொழிற்சங்கங்கள் பார்க்கட்டும். தொழிலாளிகள் பார்க்கட்டும். உண்மையிலேயே அவர்கள் தவறு செய்யக்கூடிய நிலையில் இருந்தால் அதற்கு ஆதரவு கொடுக்கக் கூடியவர்கள் இருந்தால் மாண்புமிகு உறுப்பினர் பாலசந்திரன் சொன்ன மாதிரி இந்த தொழிலாளிகள் செய்வதெல்லாம் தப்பு என்று ஆதரவு கொடுக்கக் கூடியவர்கள் இருந்தால் கொடுக்கட்டும். நான் அதை வேண்டாம் என்று சொல்லவில்லை. அப்படி ஒரு காரியத்தை செய்யச் சொல்லித்தான் நாம் கேட்கிறோம். என்ன செய்யப் போகிறார்கள் என்று சொன்னால் அவர்களுடைய லைசென்சைப் பிடுங்கப் போகிறார்கள். உண்மையிலே நான் கேட்கிறேன். எந்த ஒரு சட்டமாவது இதுவரையில் நீங்கள் வந்த 10 ஆண்டுக் காலத்திற்குள்ளே இப்படி நிறைவேற்றப்பட்டிருக்கிறதா? நிறைவேற்றப்படவில்லை. பகுதி பகுதியான முறையிலே நிறைவேற்றியிருக்கிறீர்கள. ஆனால் இப்படி நிறைவேற்றவில்லை. நான் இன்னொன்றை கேட்க விரும்புகிறேன். இது அந்தத் தொழிலாளியினுடைய ஃபண்டமெண்டல் ரைட்டை மறுக்கிறதா இல்லையா? இரண்டாவது அவன் தொழில் செய்து வாழலாம் என்று கான்ஸ்டிடியூஷனில் கொடுத்திருக்கக்கூடிய உரிமையை அது மீறுகிறதா இல்லையா? அவன் தானே படித்து அதற்குத் தகுதி பெற்று அவன் லைசென்ஸ் வாங்குகிறான். அவன் என்ன செய்றான்? வண்டிகளை தாறுமாறாக நிறுத்திச் செல்கிறான். இதிலே சொல்லப்பட்டிருக்கின்ற காண்டெக்ஸ்ட் என்ன? சூழ்நிலையை குறிப்பிட்டு இதிலே சொல்கிறார்கள். ஸ்டிரைக் நடக்கும்போது, ஆர்ப்பாட்டம் நடக்கும்போது அல்லது பெரிய ஊர்வலங்கள நடக்கும்போது கண்ட பக்கத்தில் வண்டிகளை நிறுத்தி வைத்தார்கள். இதை முற்றிலும் மறுக்கிறேன். உண்மை அல்ல. ஸ்டிரைக் நடத்துகின்றபோது வண்டி ஷெட்டில் தான் இருக்கும். ஊர்வலம் ஆர்ப்பாட்டம் நடக்கின்றபோது வண்டியை எங்கேயாவது பிடித்துக்கொண்டுபோய் அங்கே ஊர்வலத்திலே எடுத்துக் கொண்டுபோவது இல்லை. ஆக எப்படி இந்தப் பிரச்சினை வருகிறது என்றால், வண்டி ஓட்டக்கூடிய தொழிலாளி தெருவிலே நிற்கிறான். அவனுடைய வேலை தெருவிலே ஜனங்கள் மத்தியிலே நடக்கின்றது. வண்டி எடுக்கின்ற டிரைவரை யாராவது ரௌடிகள் தாக்கும்போது, போலீசாரோடு தகராறு ஏற்பட்டு திடும் பிரவேசமாக அவர்கள் பெயரால் தாக்குதல் நடக்கும்போது அல்லது பொது ஜனங்கள் வண்டியிலே பிரயாணம் செய்யும்போது, டிரைவர், கண்டெக்டர்களுக்கிடையே பொது ஜனங்கள் மத்தியிலே தகராறு வரும்போது திடும்பிரவேசமாக ஏற்படக்கூடிய கோபதாபத்தின் விளைவாக எங்களை இப்படி தாக்கிவிட்டார்கள் அல்லது எங்களை அவமானப்படுத்திவிட்டார்கள் என்று சொல்லி அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களிலே முன்பின் யோசிக்காமல் பல வண்டிகளை ரோடுகளிலே நிறுத்தி வைத்து தகராறு ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட பிரச்சினை பல கார்ப்பரேஷன்களிலே ஏற்பட்டிருக்கிறது. நானே அமைச்சர் அவர்களுக்கு சில ரிப்போர்ட்டுகளை எழுதிக் கொடுத்து அதன் பெயராலே நீங்கள் கடுமையான



நடவடிக்கை எடுத்து, நடவடிக்கையால் மட்டும் இதை தீர்க்க முடியாது. அந்த தொழிலாளிக்கு இப்படிப்பட்ட நடைமுறை தவறு என்பதை எடுத்துச் சொல்ல வேண்டும். அதை நாங்களும் சொல்லத் தயார். நீங்களும் சொல்லி செட்டில் பண்ண வேண்டும் என்று சொன்னோம். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களிலே தான் அது வருமே தவிர இங்கே கிளீனாக இதிலே என்ன கொடுத்திருக்கிறது? வேலை நிறுத்தம் நடக்கும்போது, ஆர்ப்பாட்டம் நடக்கும்போது, ஊர்வலம் நடக்கும்போது வண்டிகளை கண்டபக்கம் நிறுத்தி வைத்தால் அவருடைய உரிமையை பிடுங்கலாம், அந்த லைசென்ஸைப் பிடுங்கலாம் என்று சொல்லியிருக்கிறது. அப்படி ஊர்வலம், ஆர்ப்பாட்டம், வேலை நிறுத்தம் செய்யும் போது வண்டிகள் முழுவதையும் தெருவிலே நிறுத்தி வைத்திருப்பார்கள். கண்டபடி மோஸ்ட் இண்டிசிப்ளிண்ட் வே எங்கே வேண்டுமானாலும் சிதறவிட்டு இருப்பார்கள் என்ற ஒரு கேரக்டரைசேஷன் வருகிறது. அப்படி ஒரு பிக்சரை கொடுக்கிறீர்கள். இதுதான் தொழிலாளி வர்க்கத்தினுடைய டிசிப்ளின் என்கிற மாதிரி. இது முற்றிலும் தவறானது. எப்படித்தான் நம்முடைய அமைச்சருக்கு இப்படிப்பட்ட எண்ணங்கள் ஏற்பட்டதோ என்று எனக்குத் தெரியவில்லை. ஏனென்றால் அவரும் வண்டியை வைத்து ஓட்டியவர். ஆகவே தான் நான் சொல்கிறேன். வேறு விஷயத்தில் நாம் இதைப் பார்க்கவில்லை. நீங்கள் அடக்குமுறையை உபயோகிப்பதைப் பற்றி நாங்கள் பிரமாதமாக கவலைப்படவில்லை. அடக்குமுறை என்ற அந்த சமுத்திரத்தில் குளித்து மேலுக்கு எழுந்து வந்தவர்கள் நாங்கள். நாங்கள் அதைப்பற்றி கவலைப்படவில்லை. இத்தனை பேர்களை நீங்கள் அந்தமானுக்கு அனுப்ப முடியாது. எங்கே வேண்டுமானாலும் அனுப்பலாம். இப்போது நீங்கள் செய்வது இருக்கிறதே அவன் படித்து பெற்றிருக்கக்கூடிய ஒரு திறமையை அடிப்படையிலே ரத்து பண்ணுவது என்பது எப்படி உங்களுக்கு அந்த அதிகாரம் ஏற்படுகிறது? ஏற்பட முடியாது. ஆகவே தான் நான் சொல்கிறேன் It is against fundamental rights. அப்படி அந்த நிலைமை வரும். இரண்டாவதாக நீதி முறையில் எடுத்துப் பார்த்தாலும் நிச்சயமாக இது மிகப் பெரிய வறல்ல. அப்படியென்றால் இருக்கிறவன் பேரில் ஆக்ஷன் டுக்க வேண்டும். ஏனென்றால் சஸ்பெண்ட் அல்லது வேறு தமோ அல்லது வேலையிலிருந்து நீக்குவதோ a dismissal is mething like or equal to capital punishment. ஒரு தொழிலாளி ஸ்மிஸ் ஆனால் வேலை கிடைக்குமா? வேலை கிடைக்காத வரையில் அவனுக்கு என்ன வழி?

[திரு கு. ரமணி] [1987 மே 8

அப்படிப்பட்ட பல நடவடிக்கைகள் எடுக்கலாம். அது இல்லையென்று சொன்னால், என்ன ஆகும் என்று சொன்னால் நான் சொன்ன கதை தான் வரும். டாக்டர் வந்து அவர்கள் டிகிரியை இழப்பார்கள். வக்கீல்கள் அவர்கள் பட்டத்தை இழப்பார்கள். ஒரு இன்ஜினீயராக இருந்தால் அவர்களுடைய டிப்ளமா பட்டத்தைப் பிடுங்கி விட வேண்டியது. இன்ஜினீயரிங் சர்டிபிகேட்டை பிடுங்கி விட வேண்டியது—எப்படி இதைச் செய்ய முடியும்? அப்படி, அந்த டிரைவருக்கு அந்த உயர்ந்த தன்மை இல்லாவிட்டாலும், அவன் படித்து அக்கொயர் பண்ணியதை—நீங்கள் அவனுக்கு உண்டாக்கிக் கொடுத்தது அல்ல. அது அவனாக அக்கொயர் பண்ணியது. அப்படிப்பட்ட முறையில் இந்தச் சட்டத்தில் வகைசெய்யப்பட்டு இருப்பதைத்தான் நாங்கள் கடுமையாக ஆட்சேபிக்கிறோம். இது 'It is an Anti Working Class Act.' ஒரு தொழிலாளி வர்க்க எதிர்ப்பான, முற்றிலும் தவறான ஒரு சட்டம். தொழிலாளி வர்க்கத்தை எதிர்க்க வேண்டும் என்கிற எண்ணத்தோடு அவர் இதை செய்ய முற்பட்டார் என்று குற்றம் சாட்டவில்லை. ஆனால் அவர் செய்கிற வேலை அந்த இடத்திலே போய் முடிந்து விடும். That is the logical end. ஆகவே, ஒன்று இந்தச் சட்டத்தை குறைந்தபட்சம் இங்கே தொழிலாளிகள் அத்தனை பேரும் புரிந்துகொள்ள வேண்டும். இல்லையெனில் சட்டம் பாஸாகி வெளியிலே வந்தால்தான் நம்முடைய 'லைசென்சு'-க்கு ஆபத்து இருக்கிறது என்று புரிந்துகொள்வானே தவிர—ஜனங்களுக்கும் புரியக்கூடிய முறையில் இதை சர்க்குலேட் பண்ணி, இதன் பேரில் 'ஒப்பீனியன்' எலிஸிட் பண்ணி கருத்துக்களைப் பெற்றுக் கொண்டு, விவாதம் செய்து—உங்களுக்கோ பரிபூரண மெஜாரிட்டி இருக்கிறது. எத்தனை சட்டங்கள் வேண்டுமானாலும் பாஸ் பண்ணலாம். உங்களுக்கு சந்தர்ப்பம் இருக்கிறது. தயவுசெய்து கொஞ்சமாவது ஒரு அடிப்படை ஜனநாயகம், ஒரு சுரண்டப்பட்ட வர்க்கத்தில் இருப்பவர்களுக்கு கொடுப்பது என்ற முறையில் அதைச் செய்யுங்கள். அதை நீங்கள் செய்யவில்லை என்று சொன்னால், இந்தச் சட்டத்தை நாங்கள் திட்டவட்டமாக எதிர்ப்பதைத் தவிர வேறு வழியில்லை. எங்களுடைய குரல் சின்னதாக இருக்கலாம். ஆனால், அது இருக்கும்.

(மாலை 5.10)

தலைவர் அவர்களே, இரண்டே இரண்டு வார்த்தையிலே முடித்துக் கொள்கிறேன். ஜோதிபாசு—அடிக்கடி முக்கியமான ஒரு நபராக இந்தச் சபையிலே விளங்குகிறார். சபைக்குள்ளே வரவில்லை. இன்றைக்கு நமது மாண்புமிகு நிதியமைச்சர் கூட கோட்' பண்ணினார். அதை நான் ரொம்ப ரசித்தேன். அவர், எப்படி—போலீசார்கள் துப்பாக்கிச் சூட்டை நடத்தாமலேயே இருந்தால் நல்லதுதான். அதைத் தான் நாம் ஆசைப்படுகிறோம்.



1987 மே 8] [திரு. கு. ரமணி]

நடத்த வேண்டிய சூழ்நிலைகள் ஏற்படுகின்ற சமுதாயத்தில்—என்று ஜோதிபாசு, தன்னுடைய பட்ஜெட்டு ஸ்பீச்சிலே பேசுகிற போது எப்படிப் பேசினார்என்று எடுத்துக் காட்டினார். அதிலே நமக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை. கல்கத்தாவிலே துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது இல்லையா என்று கேட்டால் நடந்திருக்கிறது. அவர் சோவியத் ரஷ்யாவினுடைய சமுதாயத்திலே குடிகாரத்தனம் எப்படி வீட்டுக்குள்ளேயே நடந்தது, நடக்கிறது என்று எடுத்துக் காட்டினார். அதிலே நாம் தப்பு சொல்லவில்லை. பிரச்சினை அப்படி இல்லை. இப்போது இங்கே என்ன வருகிறது என்றால், ஒரு 'இர்ரெஸ்பான்ஸிபிள் டிரேட் யூனியனிசம்'—நாங்கள் இது பற்றி டிபேட் பண்ணத் தயார். ஆனால் அசெம்பிளி அல்ல அதற்கு, டிபேட் பண்ண—ஃபோரம். 'இர்ரெஸ்பான்ஸிபிள் டிரேட் யூனியனிஸம்' எங்கே இருந்து வருகிறது என்று கேட்டால், தொழிலாளி வர்க்கத்தினுடைய கண்ணோட்டமும், தொழிலாளி வர்க்கத்தினுடைய அடிப்படையான தத்துவத்திலே நம்பிக்கையும் இல்லாமல், பூஷ்வா தொழிற்சங்க வாதிகள் தான் இந்த மாதிரி ஆட்கள், தொழிலாளிகள் பூராவும் அப்படிப்பட்ட தத்துவத்தை முதலிலே கற்றுக் கொள்ள வேண்டும். அதுதான் பிரச்சினை. அப்படிப்பட்ட நிலையிலே இர்ரெஸ்பான்ஸிபிள் டிரேட் யூனியனிஸம் வருகிறது. அங்கே எலக்ட்ரிசிட்டி டிபார்ட்மென்ட்டிலே இருக்கிற ஜெனரேட்டரிலே மண்ணை அள்ளிக்கொண்டு போய் போட்டான், அன்றைக்கு அப்படிப் பண்ணினார்கள். அதனாலே தான் ஜோதிபாசு சொன்னது, 'இர்ரெஸ்பான்ஸிபிள் டிரேட் யூனியனிஸம்' என்பதை.

அப்போது 'இர்ரெஸ்பான்ஸிபிள் டிரேட் யூனியனிஸம்' கரெக்டா என்றால் கரெக்ட் அல்ல. 100 தரம் தப்பு. ஒரு இர்ரெஸ்பான்ஸிபிள் ஒர்க்கர், ஒரு இர்ரெஸ்பான்ஸிபிள் டிரேட் யூனியன், how can they fight for freedom or power? They can't, அதுதான் எங்களுடைய நிலை. நம்முடைய நண்பர் செம்மலையினுடைய அஸ்திவாரம் அதுவல்ல. இப்போது அவர் இந்தச் சட்டத்திற்கு இந்த விவாதத்திலே ஒரு சமாதானத்திற்கு என்ன வழி என்று வாதாடி, சொன்னார். சொல்லட்டும். அடுத்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்—டாக்டர்கள் ஸ்டிரைக் பண்ணினார்கள் என்று. என்ன பண்ணினார்கள்? அந்த டாக்டர்கள் ஸ்டிரைக்கை எல்லாம் சட்ட விரோதமாக்கி, போலீசை விட்டு துப்பாக்கிப் பிரயோகம் நடத்தி, டாக்டர்களையே ஆஸ்பத்திரிக்கு அனுப்பினார்களா? அனுப்பவில்லை. அங்கே ஆஸ்பத்திரியிலேயிருந்து நோயாளிகள் இருக்கிறார்களே, அந்த நோயாளிகள் முழுவதும் செத்துப் போகக்கூடாது; அவர்கள் வைத்து இருந்த பல கோரிக்கைகள் நியாயமான கோரிக்கைகள் அல்ல, அதன் பேரில் அவர்கள் போராடுகிறார்கள். ஆனால் ஒரு அசோசியேஷன்—அவர்களுக்கு ஒரு ரைட் இருக்கிறது என்று சொல்லி, தவறான கோரிக்கையாக இருந்

தாலும் அவர்கள் போராடுகிறார்கள். அந்த நோயாளிகள் இறந்து போகக்கூடாது; அவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற நல்லெண்ணம் படைத்த சகோதர டாக்டர்களுக்கும், நர்சுகளுக்கும் மற்றவர்களுக்கும் அப்பீல் விட்டார்கள்.

அப்படி அந்த நோயாளிகளைப் பாதுகாப்பதற்கு முயற்சி எடுத்தார்கள். அதற்குப் பிறகு நாளாவட்டத்தில் அங்கு மற்ற டாக்டர்களும் அவர்களோடு கலந்து பேசி, அந்த முறைகள் தப்பு என்று—வேறு காரணங்கள் இருக்கிறது, அந்தக் காரணங்களைச் சொல்ல விரும்பவில்லை. சொல்லக்கூடாது....... (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதெல்லாம் வேண்டாம். நீங்கள் சொல்லி, இங்கேயிருந்து எழுந்திருந்தால் சொன்னால் என்ன ஆகும்? எனவே, வேண்டாம். மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள்,

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் பேசுவதைக் கூர்ந்து கேட்டுக் கொண்டிருந்தேன். அவருக்குப் பணிவன்போடு ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏன் திரு. ஜோதிபாசுவைத் தனியுடைமை ஆக்குகிறீர்கள்? அவரும் நம்முடைய நாட்டுக்குப் பொதுவுடமைதான். ஆகவே நாங்கள் சொல்லிக் கொள்வதில் என்ன தப்பு? ஆகையால், அதற்குப் போய் விளக்கம் சொல்லி நம்முடைய அவையின் நேரத்தை நீங்கள் ஏன் செலவழிக்க வேண்டும் என்றுதான் கேட்க விரும்புகிறேன்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு திறமைசாலி—டைவர்ஷனில்! திரு. ஜோதிபாசுவை உங்களுடைய உடமையாக சாத்தியப்பட்டால்—தைரியம் இருந்தால் செய்யுங்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த நாட்டில் இருக்கிற குடிமகன் ஒவ்வொருவரையும் இந்த நாட்டில் இருக்கிற உழைக்கிற மக்களுக்காகப் பாடுபடுகிற ஒவ்வொருவரையும் நாங்கள் அப்படித்தான் கருதுகிறோம். இங்கேயே பொதுவுடமை இயக்கத்தை ஆரம்பித்து நடத்திய திரு. சிங்காரவேலு அவர்களைக் கூட நாம் அப்படித்தான் நினைக்கிறோம். ஆனால் நீங்கள் எங்களை விடுவதில்லை. அவர்களையெல்லாம் உங்களுடைய சொந்த உடமையாக ஆக்குகிறீர்கள். முதலில் தலைவர்களைப் பொதுவுடமையாக்குவோம். பிறகு மற்றவர்களைப் பொதுவுடமை ஆக்குவோம் (கரவொலி).



திரு. கு. ரமணி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சருடைய ரெயிலில் நான் ஒரு இஞ்ச் கூட வரத் தயாராக இல்லை. அவர் பொதுவுடைமைக்காரர் அல்ல. நான் அவரை பொதுவுடைமைக்காரராக அங்கீகரிக்கவும் இல்லை.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் திரு.ரமணி அவர்களிடம் அங்கீகாரம் கேட்டதைப்போலவும், அவர் தரமாட்டேன் என்பதைப் போலவும் பேசுகிறார். அவருடைய அங்கீகாரம் எனக்குத் தேவையில்லை. இந்த நாட்டின் உழைக்கிற மக்களின் அங்கீகாரம்தான் எனக்குத் தேவை.

திரு. கு. ரமணி : திரு. ஜோதிபாசுவை இந்த நாட்டுக்கே தலைவர் என்று சொல்லுங்கள். உழைக்கிற மக்கள் சரியாக அங்கீகாரம் தருவார்கள். நீங்கள் இங்கே அவரைக் கோட் பண்ணுவது எதற்காக என்றால், அவர் அங்கே என்ன செய்தாரோ அதைத்தான் நாங்கள் இங்கே செய்கிறோம் என்று ஒரு சிமிலாரிட்டியை உண்டாக்கப் பார்க்கிறீர்கள். அப்படியில்லை. திரு. ஜோதிபாசு செய்த ஒத்தைக் காரியத்தைக் கூட உங்களால் செய்ய முடியாது. நீங்கள் அப்படிச் செய்தால் நல்லது. அப்படிச் செய்ய வேண்டும் என்பதுதான் எங்கள் வேண்டுகோள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : திரு. ஜோதிபாசு அவர்களுக்கு நல்ல பெயரைத் தேடித் தரவில்லை நீங்கள், இப்படிச் சொல்வதன் மூலம். அவர் நல்லவர் என்று நாங்கள் உங்களுக்கு எடுத்துச் சொல்கிறோம். ஆனால் நீங்கள்தான் பிரித்துப் பேசுகிறீர்கள். அதன்மூலம் நீங்கள் அவருக்கே ஒரு நல்ல பெயரை வாங்கித் தரவில்லையே....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ரமணி அவர்கள் 3 நிமிஷம் என்றீர்கள். 15 நிமிஷம் ஆகிறது. பில்லைப் பற்றி பேசி முடியுங்கள். (குறுக்கீடு) அதற்கு வெளியே பேசி பதில் சொல்லுங்கள் (குறுக்கீடு). பில்லைப் பார்த்து பேசி முடித்துவிடுங்கள். டாக்டர் போராட்டம் எல்லாம் வேண்டாம் (குறுக்கீடு).

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் என்னைப் பாதுகாக்க வேண்டும். அவருக்கு விளக்கம் சொல்ல....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. செம்மலைக்கு நீங்கள் விளக்கம் சொன்னீர்கள். அப்புறம் அவர் உங்களுக்கு விளக்கம் சொல்ல வேண்டும். இதெல்லாம் எதற்கு? பில்லைப்பற்றி மட்டும் பேசி முடித்துக் கொள்ளுங்கள்

திரு. கு. ரமணி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆகவே நாங்கள் என்ன சொல்கிறோம் என்றால் டாக்டர்களுக்கு நாங்கள் கெடுதல் பண்ணவில்லை. போலீஸ்காரர்களுக்கே நாங்கள் சங்கம் வைத்து நடத்தச் சொல்லியவர்கள். அப்படி நீங்கள் அதைக் கூட செய்யவில்லை. ஆகவே இந்தச் சட்டத்தை தம்முடைய அமைச்சர் அவர்கள் நிறைவேற்றுவதற்கு முன்னால் சுற்றுக்கு அனுப்ப வேண்டும். இல்லை என்றால் நாங்கள் எதிர்ப்போம் என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவின்மீது பல்வேறு பிரச்சினைகளை இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

இதிலிருக்கிற உண்மையான நோக்கத்தை அவர்கள் முதலில் தயவு செய்து புரிந்துகொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏதோ தொழிலாளர்களை இந்த அரசாங்கம் பழி வாங்க வேண்டும் என்பதற்காக ஒரு சட்டத்தைச் சிரமப்பட்டு இங்கே கொண்டு வருவதைப் போல் பலரும் கற்பனையாக நினைத்துவிட்டார்கள் என்று கூட நான் சொல்ல விரும்புகிறேன். அந்த உணர்வோடு கொண்டு வரப்பட்டதல்ல இந்தச் சட்ட முன்வடிவு. நீங்கள் நினைப்பதைப்போல் தொழிலாளர்களுக்கு ஆபத்து ஏற்படுத்தக்கூடிய சட்டம் கூட அல்ல இது. ஆகவே என்ன நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தச் சட்டமுன்வடிவின் மூலமாகத் தொழிலாளர்களுக்குத்தான் முதலில் பாதுகாப்பு. அதற்குப் பிறகுதான் பொது மக்களுக்குப் பாதுகாப்பு. அது எப்படி என்பதைக் குறிப்பிடுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

இப்போது எல்லோரும் தொழிலாளர்களைப் பற்றி குறிப்பிடுகிறார்கள், பேசுகிறார்கள். ஒரு போராட்டம் என்று வந்தால் அதை இந்த அரசாங்கம் தடுத்து நிறுத்த வேண்டும் என்று எப்போதும் நினைத்ததே கிடையாது. ஆனால் நாங்கள் எப்படி அதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று நினைக்கிறோம் என்றால், தொழிலாளர்களுடைய கோரிக்கைகள் என்னவோ அவற்றை உடனடியாக நிறைவேற்றித் தந்து அந்தப் போராட்டமே வராமல் தடுத்து நிறுத்த வேண்டும் என்றுதான் நாங்கள் கருதுகிறோமே தவிர, வேறு அல்ல. இருக்கிற சட்டங்களை வைத்து அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து தடுக்கவேண்டும் என்று என்றைக்குமே இந்த அரசு நினைத்ததில்லை.





இங்கே பேசுகிறபோதுகூட உங்கள் மனதில் இருப்பதெல்லாம் போக்குவரத்துத் துறையின் சார்பாக இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வருகிற காரணத்தால் போக்குவரத்துக் கழகங்களில் இருக்கிற தொழிலாளர்களை மனதில் வைத்து அங்கே பணியாற்றுகிற ஓட்டுநர்களை மனதில் வைத்து, நாங்கள் கொண்டு வருவதாக நீங்கள் கற்பனையில் நினைக்கிறீர்கள். உண்மை அப்படியில்லை. அதுமட்டுமல்ல. தொழிலாளர்களைப் பொறுத்த வரையில்—அதிலும் போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றுகிற தொழிலாளர்களைப் பொறுத்த வரையில்-கடந்த 7, 8 ஆண்டுகளாகவே போராட்டம் எதுவும் இல்லாமல் இருக்கிறார்கள் என்றால் இந்த அரசின் அணுகுமுறை மற்றும் தொழிலாளர் கொள்கை எல்லாம் சிறப்பாக இருப்பதால் தான் அப்படி நடந்து கொண்டிருக்கிறது.

(மாலை 5–20)

இங்கே திரு. நடராசன் அவர்கள் கூட சொன்னார்கள், தொழிலாளிக்கு இந்த அரசாங்கம் விரோதி என்று. விரோதிகளாக இருந்து இருந்தால் கடந்த ஏழெட்டு ஆண்டுகளாக போராட்டம் இல்லாமல் நடக்க வாய்ப்பில்லை. அந்த நோக்கத்தோடு இது கொண்டுவரப்படவில்லை. போராட்டம் நடத்த வேண்டுமென்று தொழிலாளர்கள் விரும்பினால் அவர்கள் வண்டிகளை ஷெட்டிலே வைத்துவிட்டு முறையாக சட்டத்திற்குட்பட்டு போராட்டம் நடத்துவதிலே நிச்சயமாக எந்தக் குறையும் இருக்க முடியாது. வண்டிகளை நடுரோட்டில் பொது மக்களுக்கு இடையூறாக, மற்ற வாகனங்கள் போகத் தடையாக நிறுத்தப்படுகிறபோது பிரச்சினை உருவாகும். எனவே அதற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிறதே தவிர, வேறு எதற்காகவும் அல்ல.

குறிப்பாக போக்குவரத்துக் கழகங்கள் சார்பாக சென்னையிலே பல்லவன் போக்குவரத்துக் கழகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்தப் பேருந்துகள் முறையாக இயங்குகிறபோது யாரோ நூறு பேர் போராட்டம் என்ற பெயரில் தங்களுடைய வாகனங்களை—போக்குவரத்துக் கழக வண்டிகளைச் சொல்லவில்லை—தனியாருக்குச் சொந்தமான டாக்சிகள், ஆட்டோக்கள் ஆகியவற்றை ரோட்டின் குறுக்கே போட்டுவிட்டால் போக்குவரத்துக் கழக வண்டிகள் ஓடாமல் தடைப்பட்டுவிடுகிறது. இதனாலே தொழிலாளர்களுக்கு நஷ்டம் இல்லையா என்பதை தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தொழிலாளர்களுக்குச் சம்பளம் கிடைத்தாலும் பேட்டா கிடைப்பது தடுக்கப்படுகிறது. பேட்டா கிடைக்காமல் போகிறது. தொழிலாளிக்கு வேறு வசதி வாய்ப்பில்லை. அந்தத் தொழிலாளிக்கு வர வேண்டிய வருமானம் இந்த முறைகேட்டால் தடுக்கப்படுகிறது என்பது இந்த அரசாங்கத்தின் ஒரு கருத்து.

ஆட்டோ பற்றி சொன்னார்கள். வேறு ஏதாவது போராட்டத்தின் மூலமாக வண்டிகளை ரோட்டின் குறுக்கே நிறுத்தி விட்டால், ஆட்டோ டிரைவர்கள் தங்கள் வண்டிகளுக்கு கட்ட வேண்டிய வாடகை போக மீதியுள்ள தங்களுடைய வருமானத்தை வைத்து குடும்பத்தை நடத்த வேண்டியவர்கள் ஆகியவர்களுடைய நிலைமை என்னவாகும்? இப்படிப்பட்ட சட்டம் இல்லாவிட்டால் தங்கள் முதலாளியிடம் பிரச்சினை என்று சொல்லி பத்து வண்டிகளை நடுரோட்டில் நிறுத்தி விட்டால், மற்ற ஆட்டோக்கள் ஓட முடியாமல் அந்தத் தொழிலாளிகள் பாதிக்கப்படுகிறார்கள். இப்படிப்பட்டச் சூழ்நிலையால் தொழிலாளர்களுக்கு ஆபத்து உள்ளது. இதையெல்லாம் சிந்தித்துதான் இப்படிப்பட்ட முறையை எடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டது. போராட்டம் என்பதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை. வாகனங்களை நடுரோட்டிலே நிறுத்துவதற்குப் பதிலாக அதற்கென்று இருக்கும் இடத்திலே நிறுத்திவிட்டு எங்கே வேண்டுமென்றாலும் அவர்கள் செல்லலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் வண்டியை மறித்துத்தான் காரியங்களைப் பெற்றாக வேண்டிய சூழ்நிலை இருப்பதாகச் சொன்னதை சரியென்று நிச்சயமாக என்னாலே ஏற்றுக்கொள்ள முடியவில்லை. வாகனங்களை குறுக்கே போடக்கூடாது என்பது எங்களுடைய வாதம். அரசுக்குச் சொந்தமான வாகனங்களை, பொதுக் காரியங்களுக்காக பயன்படும் வாகனங்களை குறுக்கே போட்டு தடுக்கும் நிலை வரக்கூடாது. தொழிலாளர்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டுமென்றால், அரசாங்கத்திடமிருந்து அவர்களுடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்றால், முதலாளிகளிடமிருந்து கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்றால், அவர்கள் வண்டிகளை எங்கே நிறுத்த வேண்டுமோ அங்கே நிறுத்திவிட்டு அவர்கள் அத்தனை பேரும் ஒன்றாகச் சேர்ந்து போராட தடையில்லை. எனவேதான் வண்டிகளை குறுக்கே நிறுத்துவதற்குத் தடை விதிக்கப்படுகிறது, வேறு ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. பாலச்சந்திரன் அவர்கள் அவதாரக் குழந்தை என்று சொன்னார். கை சரியில்லை. கால் சரியில்லை, ஆகவே இது ஒரு அவதாரக் குழந்தை என்று அவர் பேசுவதை என்னாலே ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாக இருக்கிறது. திரு. ஆனந்த கிருஷ்ணா கூறியதற்கு ஏற்கனவே தெரிவித்துவிட்டேன்.

நம்முடைய உறுப்பினர் திரு. சுப்பராயன் எப்போதுமே தனக்கே உரிய பாணியில் எதையும் திறமையாக, பெரிய பிரச்சினை இருப்பதைப் போல பேசுவார் இதிலே பிரச்சினை இல்லை என்பதைச் சொல்லிவிடுகிறேன். விஷ எஸென்ஸ் தடவிய மிட்டாய் போல என்று சொன்னார். அப்படியில்லை. கசப்பான மருந்து கொடுக்க நாங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். விஷம் தடவிய மிட்டாய் என்று எடுத்துக்கொள்ள



வேண்டாம். சில நேரங்களில் டாக்சி போராட்டம் நடப்பதைப் பார்க்கிறோம். நிலைமை எப்படியிருந்தாலும் பல வாகனங்களை ''for own use'' என்று போட்டு சாக்பீசில் எழுதி ஓட்டுவதைப் பார்க்கிறோம். அப்போது இந்தத் தொழிலாளியை 'கருங்காலி' என்று சொல்லுவதா? அந்த வண்டி ஓடாவிட்டால் அவருடைய குடும்பத்தில் உள்ளவர்கள் சாப்பிடுவதற்கு வேறு வழியில்லை. அப்படிப்பட்ட தொழிலாளிக்கு பாதுகாப்பு வேண்டும் என்றுதான் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை தயவு செய்து புரிந்துகொள்ள வேண்டும். திரு. சுப்பராயன் தன் முழுச் சக்தியை பயன்படுத்தி இதை எதிர்ப்பதாகத் தெரிவித்தார். நான் என்னுடைய முழுச் சக்தியைப் பயன்படுத்தி, நியாயமான வழியில் கொண்டு வரப்பட்டிருக்கிறது, எந்த தொழிலாளியையும் பழிவாங்கும் நோக்கத்தோடு இந்தச் சட்டம் ஆலோசிக்கப்படவில்லை என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து, நம்முடைய திரு. ஆறுமுகம் அவர்கள் காவல் துறையினர் யாருமே சரியாக இருப்பதில்லையோ என்றும், எனவே அவர்கள் செயல்படாத காரணத்தால் இந்தப் பிரச்சினைகள் எல்லாம் வருகிறதோ என்றெல்லாம் தெரிவித்தார்கள். நாம் சில உண்மைகளை ஒப்புக்கொள்ள வேண்டும். சட்ட திட்டங்களைப் பொறுத்தவரையில் எல்லோரும் ஏற்று, நடத்த வேண்டும், எல்லோரும் கடைப்பிடிக்க வேண்டுமென்ற முறையை வைத்துக்கொண்டால், காவல் துறையைக் குறை சொல்லும் கட்டாயம் வராது. இன்றைக்குப் பார்க்கிறோம், எத்தனை பேர்கள் சாலை விதிகளை மீறி வண்டிகளை இயக்குகிறார்கள், நடந்து போகிறார்கள் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி இருக்கும் சமுதாயத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த முயற்சி எடுப்பதை விட்டுவிட்டு, காவல் துறைதான் இதற்குக் காரணம் என்று சொல்வது ஏற்றுக்கொள்வதாக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே எந்தக் காரணத்தைக் கொண்டும், தொழிலாளர்களுடைய உரிமைகளைப் பறிப்பதற்கு இந்தத் திருத்தத்தை, இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டுவரவில்லை. அவர்களுக்கு இருக்கின்ற உரிமையைப் பாதுகாக்க, பொது மக்களுக்கு ஏற்படும் இடையூறுகளைத் தடுக்கத்தான் இது கொண்டுவரப்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்கள் ஜோதிபாசு அவர்களைக் குறிப்பிட்டுக் காட்டினார்கள். அவர்கள் சொல்லிய நல்ல கருத்தும் பயன்படக்கூடியதாக இருந்தால், அது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்பதை யாரும் மறுக்க முடியாது. அந்த அடிப்படையிலே தெரிவித்தார்கள்.

அடுத்து திரு. பாலச்சந்திரன் அவர்கள் அவருடைய அனுபவங்களைச் சொன்னார்கள். அவருடைய உறவினரை இழந்துவிடக் கூடிய நிலை ஏற்பட்டது என்று சொன்னர்கள். அவர் சட்ட மன்றத்திற்கு வந்ததால் நம் முன்னாலே சொல்ல முடிகிறது. சட்டமன்றத்திற்கு வர முடியாமல் வெளியில் இருக்கிறவர்கள் சொல்ல வாய்ப்பு இல்லாமல், எவ்வளவு பிரச்சினைகள் நடந்திருக்கின்றன என்பது தெரியாது. சக தொழிலாளிக்கு ஏற்படும் பிரச்சினை தடுக்கப்பட வேண்டுமென்பதற்காக அந்தத் தொழிலாளி ஈடுபடும்போது, அந்தத் தொழிலாளிமீது எப்படி வேண்டுமானாலும் நடவடிக்கை எடுக்கலாம், பழி வாங்கலாமென்று சொன்னார்கள். பழி வாங்கவேண்டுமென்று சொன்னால் சட்டதிட்டம் தேவையில்லை. தொழிலாளர்களுக்காகப் பேசும் கட்சிகள், தலைவர்கள் இருக்கும்போது, அந்தப் பிரச்சினை வர வாய்ப்பே இல்லை. இன்றைக்கு இருக்கும் இந்த அரசும், தமிழகத்தின் முதல்வரவர்களும் தொழிலாளர்களுக்கு மிக அதிகமான சலுகைகளை இந்தத் துறையில் மட்டுமல்ல, ஒவ்வொரு துறையிலும் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். எனவே எந்தக் காரணத்தைக் கொண்டும் இது தொழிலாளர்களைப் பாதுகாக்கத்தான் பயன்படுமே தவிர, தொழிலாளர்களுக்கு எதிர்த்த வகையில் பயன்படுத்த வாய்ப்பில்லை என்பதால் இதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் நான் விளக்கம் தருவதற்கு முன்னால் எதிர்த்திருந்தாலும், இப்போது நான் அளித்த விளக்கத்தின் காரணமாக இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டு, முடிக்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஒரு கிளாரிபிகேஷன். மதுரை நகரிலே ஒரு வாரத்திற்கு முன்னாலே பெண்கள் தண்ணீர் கிடைக்கவில்லை என்று சொல்லி, பேருந்துகளை மறித்து, பேருந்துகளை ஆங்காங்கே நிறுத்தும் நிலை ஏற்பட்டது. அந்த ஓட்டுநர்கள் மீது நடவடிக்கை எடுக்க இந்தச் சட்டம் இடம் கொடுக்கவில்லையா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஒரு வண்டி பிரேக்டவுன் ஆகி நின்றுவிட்டால் அல்லது தொழிலாளர்களே வேண்டுமென்றே நிறுத்தாமல் யாராவது தடுத்து நிறுத்தினால், அவர்கள் பாதிக்கப்பட மாட்டார்கள். யாராவது போராட்டம் நடத்தி, ஆயிரம் பேர் வந்து வாகனத்தைத் தடுத்து நிறுத்தினால், அதனால் தொழிலாளி பாதிக்கப்படுவார் என்பது நிச்சயமாக அல்ல. தொழிலாளிக்கு நிச்சயமாக பாதுகாப்பு இருக்கிறது. அந்தத் தொழிலாளி தானாக நிறுத்தக்கூடாத இடத்தில் வண்டியைக் குறுக்கே நிறுத்தி, மற்ற வாகனங்கள் போவதைத் தடுக்க நிறுத்தினாலொழிய, அவர்கள் பாதிக்கப்பட மாட்டார்கள். நீங்கள் ஆட்சியில் இருக்கிறீர்கள், பழி வாங்க மாட்டீர்களா



என்று கேட்கலாம். பழி வாங்குவது என்பதை எப்படி வேண்டுமானாலும் அர்த்தம் கொள்ளலாம். எனவே தொழிலாளர்களை ஒடுக்க வேண்டுமென்று, அடக்க வேண்டுமென்று கொண்டுவருவதாகக் கருதாதீர்கள். அதற்கு இந்தச் சட்டம் தேவையில்லை. பழி வாங்க வேண்டுமென்று நினைத்தால் செய்யலாம். அப்படி நினைக்கவும் இல்லை, செய்யப் போவதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் :இப்போது வாக்கெடுப்பு

(மாலை 5-30).

திரு.ஹேமச்சந்திரன் அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி : '' 1987 ஆம் ஆண்டு இயக்கூர்திகள் (மோட்டார் வண்டிகள்) [வேலைநிறுத்தம் அல்லது ஆர்ப்பாட்டம் அல்லது கண்டனத்தின்போது வேண்டுமென்றே போக்குவரத்திற்கு இடையூறு விளைவிக்கின்றமைக்காக ஊர்தியோட்டும் உரிமங்களை நீக்கம் (ரத்து) செய்தல்] சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 7 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1 முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' 1987 ஆம் ஆண்டு இயக்கூர்திகள் (மோட்டார் வண்டிகள்) [வேலை நிறுத்தம் அல்லது ஆர்ப்பாட்டம் அல்லது கண்டனத்தின் போது வேண்டுமென்றே போக்குவரத்திற்கு இடையூறு விளைவிக்கின்றமைக்காக ஊர்தியோட்டும் உரிமங்களை நீக்கம் (ரத்து) செய்தல்] சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1987) நிறைவேற்றப்பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, குறைந்த பட்சம் இந்தச் சட்டத்தை சர்குலேட் பண்ணுவதைக் கூட அனுமதிக்க வில்லை என்ற நிலை வந்ததால் இந்தச் சட்டத்தை நிறை வேற்றுவதை நாங்கள் எதிர்த்து வெளிநடப்பு செய்வது தவிர, வேறு வழியில்லை.

*[கம்யுனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) உறுப்பினர்கள் வெளி நடப்பு செய்தனர்—இந்திய கம்யுனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.]*

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். இதிலே இரண்டு முக்கியமான பிரச்சினைகளை எழுப்பினார்கள். அதில் ஒன்று வேலைநிறுத்த உரிமை வேலை நிறுத்த உரிமை அப்படியே தான் இருக்கிறது. ஆனால் பேருந்துகளை குறுக்கே நிறுத்துவது தப்பு. பிரசவ வேதனையினால் அவதிப்படும் கர்ப்பிணிகள் மருத்துவமனைக்குப் போகிறபோது, வண்டிகள் குறுக்கே நிற்கு மானால், அவர்கள் உரிய காலத்தில் போய்ச் சேரமுடியாது. இன்றியமையா பணியாக இருந்தாலும் கூட, இன்றியமையா பணிகளில் வேலை நிறுத்தம் செய்யும் உரிமை எடுக்கவில்லை. அந்த உரிமையைப் பயன்படுத்தி பொதுமக்களுக்கு, அதுவும் குறிப்பாக எந்தச் சம்பளமும் இல்லாத மக்களுக்கு எந்தவிதமான முகாந்திரமும் இல்லாமல் ஆபத்து விளைவிக்கக் கூடிய நிலைமையை அனுமதிக்கிறோமா என்பதை அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இரண்டாவது கடமையைச் செய்யும் உரிமை இங்கே டாக்டர்கள் மீது நடவடிக்கை எடுக்கிறீர்களா, இன்ஜீனியர்கள்மீது நடவடிக்கை எடுக்கிறீர்களா, வக்கீல்கள் மீது நடவடிக்கை எடுக்கிறீர்களா என்று கேட்டார்கள். அவர்களை நாடிச் செல்கிறவர்களிடத் திலே கடமை தவறுவது என்பது ஒன்று. ஆனால் சம்பந்தம் இல்லாத சாதாரண மக்கள் ஒரு அவசரமான காரியத்திற்குச் செல்ல வேண்டும் என்றால், ஒரு முக்கியமான வேலைக்குப் போக வேண்டும் என்றால் அவர்கள் தண்டனைக்கு ஆளாவது என்பது வேறு ஒன்று அதுமட்டுமல்ல. இந்தச் சட்டத்தில், அவர்களுடைய உரிமம் ரத்துச் செய்யப்பட்டாலும், அவர்கள் அதன்மீது மேல் முறையீடு செய்ய வாய்ப்பு இருக்கிறது. அந்த மேல் முறை யீட்டை விசாரித்த பிறகுதான் உரிமம் ரத்து செய்யும் அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. இப்படி எல்லாவகையான பாதுகாப்பும் தரப்பட்டிருக்கிறது. மக்களுடைய நன்மையைக் கருதி, அதுவும் பேருந்துகளைப் பயன்படுத்தும் சாதாரண மக்களின் நன்மையைக் கருதி கொண்டு வரப்பட்டுள்ள இந்தச் சட்டத்தை எதிர்த்து வெளிநடப்பு செய்வது சரியல்ல. ஜனதா கட்சித் தலைவர் வெளிநடப்பு செய்ய வேண்டாம். வெளியே போயிருக்கிறவர்கள் உள்ளே வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் குடும்பங்களுக்கு பாதகம் அளிக்கக் கூடிய சட்டத்தை நிறைவேற்ற வேண்டாம் என்று சொல்லியும் அமைதிக்குப் பங்கம் வரும் என்று சொல்லியும் இச்சட்டத்தை நிறைவேற்றுவதால், ஜனதா கட்சி இதை எதிர்த்து வெளி நடப்பு செய்கிறது.

*(ஜனதா கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்) குறுக்கீடு).*

திரு. ஆ. நடராசன் : பேரவைத் துணைத் தலைவர் அவர் களே, அரசாங்கம், இச்சட்டம் தொழிலாளர்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் என்று எதிர்க் கட்சிகள் எடுத்துச் சொல்லியும், வெள்ளைக்காரர் காலத்தில் கூட கொண்டுவராத சட்டத்தை கொண்டு வந்து அதை நிறைவேற்றியதைக் கண்டித்து நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம்.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்)*

**(ஐ). கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு 1987.**

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 8/1987) ** ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டத்தை பிரிக்கப்படும் மாவட்டங்களுக்கும் அமல்படுத்துவது குறித்த சட்ட முன்வடிவு, மேற்படி கேளிக்கை வரிச் சட்டத்தை கன்னியாகுமரி, திருநெல்வேலி கட்டபொம்மன் மற்றும் சிதம்பரனார் மாவட்டங்களுக்கும் நீட்டிக்கப்படுவது குறித்த சட்ட முன்வடிவின் மீது கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இதிலே இருக்கிற ஒருசில குறைபாடுகளை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து இந்தச் சட்டத் திருத்தத்தை நிறைவேற்றுகிறபோது கீழ்க்கண்ட விவரங்களைக் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

---

** 1987 ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 7ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

கேளிக்கை வரி டிக்கட்டின் மேலே வரி விதித்தபோது தவறுகள் நடைபெறுகின்றன என்ற காரணத்திற்காக அதை கம்பௌண்டிங் முறையாக மாற்றிக் கொண்டு வந்தோம். ஆனால் இப்போதும் பல தவறுகள் நடைபெறுகின்றன. 15 காட்சிகள் நடத்துகிற திரையரங்குகள், 10 காட்சிகள் என்று கணக்குக் கொடுத்து வரி ஏய்ப்பு செய்கிற நிலை இருக்கிறது. சாதாரண ஏழை எளிய மக்கள் கொடுக்கக்கூடிய கேளிக்கை வரியை அரசினுடைய கணக்கிலே சேர்க்காமல் இடையில் இருக்கிறவர்கள்........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : இந்தச் சட்ட முன்வடிவு பிரிக்கப்பட்ட திருநெல்வேலி மாவட்டத்தையும் ஷெடியூலில் சேர்ப்பது பற்றியது. டிஸ்டிரிக்ட்டை பைஃபர்கேட் செய்து, அந்த பைஃபர்கேட் செய்யப்பட்ட மாவட்டத்தையும் ஷெடியூலில் சேர்த்து, ஏற்கனவே இருக்கிற சட்டத்தின் ஆளுகைக்குள் கொண்டு வருவதுதான் இந்தச் சட்ட முன்வடிவின் நோக்கம். அதன் மேல் கருத்துத் தெரிவிக்காமல், கேளிக்கை வரி ஏய்ப்பு, காட்சிகள் கணக்கு தவறாகக் கொடுப்பது என்று பேசிக்கொண்டு போனால் என்ன ஆவது? எனவே ஸ்கோப் ஆஃப் தி பில்லில் பேசுங்கள்.

**திரு. கோ. வீரய்யன்** : துணைத் தலைவர் அவர்களே, பிரிக்கப்பட்ட கன்னியாகுமரி மாவட்டத்திலே நடைபெறுகிற தவறுகளைத்தான் குறிப்பிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : அது எப்படி 'பில்'லிலே வரும். சட்ட முன்வடிவு 'டாக்ஸை'ப்பற்றி இருந்தால் பேசலாம். இது டிஸ்டிரிக்ட் பைஃபர்கேஷன் பற்றியது. வேறு ஒன்றும் இல்லை, இதிலே, அடுத்த பில்லில் நீங்கள் வேறு விஷயங்களைப் பேசலாம். இதில் வரியைப் பற்றியெல்லாம் பேசினால் நேரம்தான் வீணாகும்.

**திரு. கோ. வீரய்யன்** : நேரம் இல்லையென்ற காரணத்திற்காக பேசக்கூடாது என்றால் இதில் உள்ள தவறுகளை எப்படிச் சுட்டிக்காட்ட முடியும்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : நேரம் இல்லையென்று சொல்லவில்லை. ஸ்கோப் ஆஃப் தி பில்லை விட்டு வேறு விவரங்களைப் பேசுவதால் நேரம் வீணாகும் என்றுதான் சொன்னேன். நான் உறுதியாகச் சொல்கிறேன், நீங்கள் இப்போது பேசுவது வித்தின் தி ஸ்கோப் ஆஃப் தி பில், இல்லை. இன்னும் சொல்லப்போனால் இந்த பில்லில் பேசுவதற்கே ஒன்றும் இல்லை.



**திரு. கோ. வீரய்யன்** : துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொல்வது போலப் பார்த்தால் இதில் பேசுவதற்கு ஒன்றுமே இல்லை. இந்தச் சட்ட முன்வடிவில் சில ஊர்களை மேம்படுத்துவது பற்றியும், சில ஊர்களுக்கு இதை விஸ்தரிப்பது பற்றியும்தான் சொல்லி இருக்கிறது. இதிலே பேசுவதற்கு ஒன்றும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : அதைத் தான் நானும் சொல்கிறேன். கேளிக்கை வரிபற்றி இருக்கிற இன்னொரு சட்ட முன்வடிவையும் சேர்த்து எடுத்துக் கொண்டால் நீங்கள் கருத்துக்களைச் சொல்லலாம்.

**திரு. கோ. வீரய்யன்** : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த சட்ட முன்வடிவையும் சேர்த்து எடுத்துக் கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : அந்தச் சட்ட முன்வடிவை எடுத்துக்கொள்வதற்கு ஒரு மோஷன் மூவ் செய்ய வேண்டும்.

THIRU A. RAHMANAKAN: Sir, it is not proper. This Bill may be passed and the other Bill may be taken separately.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : வேறு என்ன செய்வது, இந்த பில்லில் ஸ்கோப்பிற்குள் பேசினால் ஏற்றுக் கொள்ளலாம். பைஃபர்கேஷன் ஆஃப் டிஸ்டிரிக்ட், அன்ட் அதை ஷெடியூலில் சேர்த்துக் கொள்வது என்ற சட்ட முன்வடிவில் கேளிக்கை வரிபற்றி எப்படிப் பேசமுடியும்?

**திரு. அ. ரகுமான்கான்** : இந்த பில்லைப் பொறுத்த வரையில் பிரச்னை இல்லை. மற்ற பில்லில் டீடெயில்டாக பேச வேண்டும். எனவே தனித்தனியாகவே எடுத்துக் கொள்ளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : அப்படியானால் இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றி விடலாம்.

(மாலை 5–40)

**மாண்புமிகு திரு. சு. இராமசாமி** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

'' 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண், 8/1987) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஒ) கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1987) ** ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.

திரு. எம். செல்லமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த கடன் நிவாரணச் சட்ட திருத்தம் என்பது 1986 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 23-ந் தேதிக்கு அப்பால் மேலும் ஓராண்டு காலம் நீடிக்கப்படுகிறது. இப்படி நீடிக்கப்படுவதை நான் என் கட்சியின் சார்பில் வரவேற்றாலும் இதன் காரண காரிய நோக்கங்களிலே கூறப்பட்டிருப்பதை பற்றி கருத்து சொல்லவிரும்புகிறேன். இந்த சட்டத்தினுடைய

** 1987 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



நோக்கத்தின்படி இதைப் பயன்படுத்த வேண்டிய ஏழையெளிய மக்களுக்கு அது இன்னும் போய் சேரவில்லை என்பதுதான். அவர்கள் உரிய முறையில் மனு செய்ய முடியாத காரணத்தினாலே தான் இது மேலும் நீடிக்கப்படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இந்தச் சட்டம் வந்து 5 ஆண்டுகள் முடிவுற்ற பின்னாலேயும், எவ்வளவோ வாய்ப்புகள் அரசுக்கு இருந்தும் கூட, இந்தச் சட்டத்தினுடைய தன்மைகளை எடுத்துசொல்வதற்கு ஏழையெளிய மக்களுக்கு எடுத்துச் சொல்வதற்கு வழி வகுக்கப்படாமல் குறைபாடுகள் இருக்கின்ற காரணத்தினாலே தான் இந்த நீடிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. எனவே இந்தச்சட்டத்தினை எல்லா மக்களும் புரிந்து கொள்கின்ற அளவுக்கு, முக்கியமாக இதனால் பயன்பெறக்கூடிய ஏழையெளிய மக்கள் புரிந்து கொள்ளக்கூடிய அளவுக்கு அரசு நிர்வாக இயந்திரம் முடுக்கிவிடப்படவேண்டும். இந்தச் சட்டத்தின் நோக்கத்தை விளக்கிச் சொல்லக்கூடிய அளவுக்கு காரியங்களைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

குறைந்த அளவுக்குத்தான் மனுக்கள் வந்திருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இந்த 5 ஆண்டுகளில் கடன் நிவாரணத்திற்காக எவ்வளவு மனுக்கள் வரப்பெற்றிருக்கின்றன, எவ்வளவுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது, கடன் நிவாரணம் எத்தனை பேர்களுக்கு அளித்திருக்கின்றார்கள் என்பதை அறிவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல இந்தச் சட்டத்தின்படி மனு செய்தாலும் நிவாரணம் கிடைக்காத நிலை இருக்கின்றது என்ற மன உணர்வு இன்றைக்கு சாதாரண மக்கள் மத்தியிலே இருப்பதால் இந்த மனுக்கள் கூட குறைந்து இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அது மட்டுமல்ல, கடன் நிவாரண சட்டம் இருந்தாலும்கூட இன்றைக்கு அடகு கடைகளிலே ஏலம் போடுவது பத்திரிகைகளிலே வந்துகொண்டு இருக்கின்றது. பத்திரிகைகளிலே ஏலம் விடுவதற்கான அறிவிப்புகள் வந்துகொண்டிருக்கின்றன. எனவே அவைகளை எல்லாம் தடுத்து நிறுத்துவதோடு சட்டத்தினுடைய நோக்கங்களை அனைத்து மக்களுக்கும் எடுத்துச்சொல்ல வேண்டும். கிராமத்தில் உள்ள அலுவலர்கள் மூலம், ஊராட்சி ஒன்றியங்கள் மூலம், ரெவின்யூ இலாகா மூலம், செய்திப்படம் மூலம் விளம்பரம் செய்யவேண்டும். இந்த முறைகளிலே விளம்பரம் செய்து மக்களுக்கு எடுத்துச்சொல்லி, இந்தச் சட்டத்தைப் பற்றி சரியான முறையிலே எடுத்துசொல்லி, எந்த நோக்கத்திற்காக இந்த சட்டத்தைக் கொண்டுவந்தோமோ அதை நிறைவேற்ற முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்று கூறி அமைகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த கடன் நிவாரணத் திருத்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் ரூபாய் 4,800-க்குக் குறைவாக வருமானம் உள்ள ஏழைகள் பட்டிருக்கின்ற கடனிலிருந்து அவர்களுக்கு நிவாரணம் கிடைக்க இச்சட்டம் கொண்டு வரப்பட்டது. இங்கே மாண்புமிகு உறுப்பினர் பேசியபோது போதிய விளம்பரம் இல்லாத காரணத்தால் ஏழைகளின் செவிகளுக்கு இச்சட்டம் எட்டாத நிலைமை இருக்கிறது என்கிற ஐயத்தை சொன்னார். குறிப்பாக கடன்பட்டிருக்கின்ற எல்லா ஏழைகளுக்கும் இச்சட்டம் எட்ட வேண்டுமென்கிற எண்ணத்தில் நல்ல முறையில் விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது. இச்சட்டத்தின் பிரதான நோக்கம் என்னவென்றால், இச்சட்டத்திற்கு நீட்டிப்பு தரப்படவில்லையென்றால், 4,800 ரூபாய்க்குக் குறைவாக வருமானம் பெறுகின்றவர்கள் அடகு கடைக்காரர்களிடம் கடன் பட்டிருந்தால், ஏற்கெனவே இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியது போல, அவர்களுடைய நகைகளை ஏலம் விடக் கூடிய சூழ்நிலை ஏற்படும். இச்சட்டத்திற்கு கால நீட்டிப்பு இருக்கும்வரை தான் ஏழைகளுக்கு அடகு கடைக்காரர்களிடமிருந்து பாதுகாப்பு கிடைக்கும். அதனால் தான் கால நீட்டிப்பு கோரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் இங்கே குறிப்பிட்டதைப் போல விளம்பரம் செய்வதைப் பொறுத்த வரையில் இன்னும் அதிக அக்கறை செலுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடன் நிவாரணம் கேட்டு 25,571 மனுக்கள் வந்ததில் 24,924 மனுக்கள் மீது தீர்ப்பு வழங்கப்பட்டு, டிஸ்போஸ் செய்யப்பட்டு, ஏழைகளின் நலன் பேணப்பட்டிருக்கிறது. ஆகவே, இச்சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரும்படி மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரண (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.



மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரண (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1987) நிறைவேற்றப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஏ) மாநகராட்சி சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு 1987.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சி சட்டங்கள் (திருத்த)சட்ட முன்வடிவு(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1987) **ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை எதிர்த்து எதிர்த்து கடுமையாக களைத்துப் போய்விட்ட காரணத்தினால் மேற்கொண்டு இதிலே ஒன்றும் பேச இல்லை என்கிற நிலையிலும் ஒரே ஒரு வார்த்தை கூறி முடித்துவிடுகிறேன். மாநகராட்சிகளுக்கான தேர்தல் எப்போது நடைபெறும் என்பதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே அறிவிப்பார்களா என்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

*திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி சட்ட திருத்தத்தைப் பொறுத்தவரையில் தனி அதிகாரிகள் மேலும் நிர்வாகத்தை நடத்த ஓராண்டு கால நீட்டிப்பு கேட்டு இங்கே சட்ட முன்வடிவை கொண்டு வந்திருக்கிறார்கள். சென்னை மாநகராட்சியிலே கடந்த 13 ஆண்டுகளாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லை. கோயம்புத்தூர் மாநகராட்சியில் கடந்த 7 ஆண்டுகளாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லை. மதுரை மாநகராட்சியிலே கடந்த 4 ஆண்டுகளாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்சிலர்களும், மேயரும் இருந்திருந்தாலாவது இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற தண்ணீர் கஷ்டத்தைப் போக்குவதற்கு, அரசிடம் போராடி நிறைய சாதித்து இருப்பார்கள். இப்போது இருக்கின்ற தனி அதிகாரிகள் அமைச்சர்களிடமும், அரசிடமும் இருந்து என்ன சாதிக்க முடி

---

**1987 ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 28-ந் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

யும் ? தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருந்திருந்தால் வார்டுகளில் அவர்கள் போராட வாய்ப்பு இருந்திருக்கும். அப்படிப்பட்ட வாய்ப்புகள் இல்லாததால் பல வசதிகள் இல்லாமல் போய்விட்டன என்று பல ஆண்டுகளாக இதைப்பற்றியே சொல்லிக்கொண்டிருக்கிறோம். சென்னை மாநகராட்சி கலைக்கப்படும்போது 5 வயது பையனாக இருந்தவன் இன்றைக்கு ஓட்டு போடுகின்ற உரிமையைப் பெற்றிருப்பான். அவன் மாநகராட்சி மேயரை பார்த்திருக்க மாட்டான். அப்படிப்பட்ட நிலையில் இன்றைக்கு நாடு சென்றுகொண்டிருக்கிறது. ஆகவே, எப்போது தேர்தலை நடத்த இருக்கிறீர்கள் என்று நான் அறிய விரும்புகிறேன். கோவை நகராட்சியை மாநகராட்சியாக ஆக்காமல் இருந்திருந்தால் கவுன்சிலர்கள் இருந்திருப்பார்கள், முனிசிபாலிட்டி சேர்மனும் இருந்திருப்பார். ஆனால் 7 ஆண்டுகளாக அங்கே மேயரே இல்லை. மாநகராட்சியாக அது ஆனதற்குப்புறம் தேர்தலே நடைபெறவில்லை, அதனால் அங்கே மேயரும் இல்லை. பிறகு எதற்காக அதனை மாநகராட்சியாக ஆக்கினார்கள் என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

(மாலை 5-50)

மதுரையிலே உங்களுடைய ஆட்சிதானே நடந்து கொண்டு இருந்தது ? பிறகு ஏன் உங்களுக்குத் தயக்கம் என்று எனக்குத் தெரியவில்லை. நாம் இதைப் பற்றிப் பேசிக் கொண்டே தான் இருக்க வேண்டியிருக்கிறது. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்கள் கூட ஒரு சமயம் சொன்னார்கள், பேசியதையே பேசுவது பற்றி. ஆனால் செய்யப்பட வேண்டியதைச் செய்யாததாலே தானே திரும்பத் திரும்பப் பேச வேண்டியிருக்கிறது. வேறு வழியில்லை. மாநகராட்சியில் மரியாதைக்குரிய முத்து இருந்தார்கள். கடைசியாக பட்டுராஜன் இருந்தார். இந்த மாநகராட்சித் தேர்தலை எடுத்து நடத்துவதற்கு உங்களுக்கு என்ன தயக்கம் ? ஏதோ சொல்கிறீர்கள், அனைத்து மாநகராட்சிகளுக்கும் பொருந்தக் கூடிய, இந்தியா பூராவும் இருக்கின்ற மாநகராட்சிகளுக்கு இருக்கின்ற சட்டத்தை நீங்கள் கொண்டு வரவிருப்பதாக. எந்தக் காலத்தில் கொண்டு வரப்போகிறீர்கள் என்று தெரியவில்லை. மறுபடியும் ஒரு ஆண்டு கேட்கிறீர்கள். இது முடிவதற்குள்ளே கவர்னர் அவசரச் சட்டத்தைப் போட்டாலும் போடுவீர்கள். மாநகராட்சித் தேர்தலை நடத்துவதில் என்ன தயக்கம் ? எல்லாத் தேர்தல்களையும் நடத்தி விட்டீர்கள். உள்ளபடியே உள்ளாட்சித் தேர்தலிலே, 376 பஞ்சாயத்துக்கள், 98 நகராட்சிகள், 12,200 ஊராட்சிகளுக்கெல்லாம் நடத்தினீர்கள். இந்த மூன்று மாநகராட்சிகளுக்கும் தேர்தல் நடத்துவதில் உங்களுக்கு இதனால் என்ன அரசியல் நஷ்டம் என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். ஆகவே, மாநகராட்சித் தேர்தலை நடத்த வேண்டுமென்று சொல்லி, இந்தச் சட்டமுன்வடிவை நான் எதிர்த்து அமைகிறேன்.



திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கோவை மாநகராட்சி திருத்தச் சட்ட முன்வடிவை வரவேற்று, இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, சில தேவைகளை மாண்புமிகு அமைச்சரவர்களுக்கும், துறைக்கும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். முதலில் மாநகராட்சியினுடைய தேர்தல் நடக்கின்ற வரை, இந்த மாநகராட்சியினுடைய மிக முக்கியமான திட்டங்களை ஆய்வு செய்வதற்கும், வரவு-செலவுத் திட்டங்களை, குறிப்பாக ஆண்டு வரவு செலவுத் திட்டங்களை, முக்கியமான பணிகள், எடுத்துக் கொள்ள வேண்டிய பணிகளைப் பற்றி ஒரு ஆலோசனை சொல்வதற்கும்; பொது மக்களுடைய பிரதிநிதிகளைக் கொண்ட அல்லது வரி செலுத்துகின்ற முக்கிய பிரமுகர்களைக் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்றை நல்ல முறையிலே அந்த மாநகராட்சிக்கு அவசியம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதன் மூலம் ஒரு தனி அதிகாரியோ, ஆணையாளரோ அரசாங்கத்தினுடைய நல்ல திட்டங்களை நிறைவேற்றுகின்ற பொழுது, கோவை மாநகராட்சியைப் பொறுத்த அளவிலே பல கோடி ரூபாய்களை அரசாங்கம் மாநகராட்சியினுடைய வளர்ச்சிப் பணிகளுக்காக ஒதுக்கிக் கொடுத்திருக்கிறது என்பதையும், அதன் மூலம் நல்ல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்பதையும் நான் இங்கே அந்த மக்கள் சார்பிலே நன்றியோடு தெரிவிக்க விரும்புகிறேன். ஆனால், அந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்ற பொழுது, குறிப்பாக மிக முக்கியமான கட்டிடங்கள் கட்டப்படுவதோ அல்லது திட்டங்கள் மிகப் பெரிய செலவிலான திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றபொழுதோ பொது மக்களுடைய பிரதிநிதிகள் இருந்து ஆலோசனை பெற்றுக் கொண்டால் இன்னும் அது சிறப்பாக அமையும் என்பதற்காக அந்த ஆலோசனைக் குழுவை அமைத்துத் தரவேண்டுமென்று முதலில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்று இன்னொரு முக்கியமான பிரச்சினை. கோவை மாநகராட்சிப் பள்ளிகளை—ஆரம்பப் பள்ளி, உயர்நிலைப் பள்ளிகளை அரசு எடுத்துக் கொள்ளும் என்ற கொள்கை ரீதியிலான ஒரு அறிவிப்பு செய்யப்பட்டிருக்கிறது. கோவை மாநகராட்சியைப் பொறுத்த அளவிலே, அங்கேயிருக்கின்ற உயர்நிலைப் பள்ளிகள் பல காலம் மிகச் சிறந்த கட்டுப்பாடுகளுடனும், நல்ல மதிப்பெண்கள், நல்ல ரிசல்டைக் கொடுக்கின்ற பள்ளிகளாக ஆக்கப்பட்டிருக்கின்றன. அதிலே கட்டுப்பாட்டோடு ஆசிரியர்களும் இருக்கிறார்கள், ஆகவே, மாநகராட்சி கட்டுப்பாட்டில் இருக்கின்ற காரணத்தால், அந்தப் பள்ளிகள் நல்ல முறையிலே நிர்வகிக்கப்பட்டு வருகிறது என்பதையும், நல்ல கவனத்தோடு அதற்கான கட்டிடங்கள் மற்ற வசதிகளை மாநகராட்சி இது வரை செய்து வந்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால், இங்கே சுட்டிக் காட்டியபடி அரசு எடுத்துக் கொள்ளுகின்ற காரணத்தினால் ஆயிரக் கணக்கான மற்ற பள்ளிகளினுடைய தேவைகளை நிறைவேற்றுகின்ற பொறுப்பு அரசுக்கு வருகின்ற பொழுது, இந்தப்

பள்ளிகளின் பராமரிப்பிலே, அதற்கு அக்கறை எடுத்துக்கொள்கின்ற வாய்ப்பு இருக்காது என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டி, ஆகவே, மாநகராட்சியைப் பொறுத்த அளவிலே இருக்கின்ற ஆரம்பப் பள்ளிகளையும், உயர்நிலைப் பள்ளிகளையும் மேல்நிலைப் பள்ளிகளையும் மாநகராட்சியினுடைய கட்டுப்பாட்டிலும், பராமரிப்பிலும் விட்டுவிட வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அதன் மூலம் தொடர்ந்து அந்தப் பள்ளிகள் நல்ல நிலையிலே பராமரிக்கப்படுவதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆசிரியர்களின் கட்டுப்பாடும் இருக்கும். பெரும்பாலான ஆசிரியர்களும் அரசாங்கம் எடுத்துக் கொள்வதை விட, மாநகராட்சியிலே இருப்பதை, இட மாற்றம் வராது என்கிற காரணத்தால் இப்பொழுது ஆதரிக்கிறார்கள். ஆகவே, அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய கோவை மாநகராட்சியினுடைய குடிநீர்த் திட்டம். சிறுவாணி குடிநீர்த் திட்டம் பல ஆண்டுகளாகியும் இன்னும் முடிவுக்கு வராமல் இருக்கிறது. அதற்கு ஒரு காலக்கெடு கொடுத்து, லேடர் ஏரியா என்று சொல்லப்படுகின்ற மாநகராட்சியோடு இணைக்கப்பட்ட கிராமப் பகுதிகளில் நிறைவேறுகின்ற திட்டத்தை, குறிப்பிட்ட காலத்திலே நிறைவேற்ற வேண்டுமென்று மாநகராட்சி குடிநீர் வடிகால் வாரியத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கிற திட்டத்தை, முடிக்கிற நேரத்தைக் குறித்துக் கொடுக்க வேண்டும் ; காலக் கெடு குறித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து வரி விதிப்பில் மாநகராட்சியினுடைய செயல்பாடுகள் ......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சீக்கிரம் முடித்து விடுங்கள். நேரம் இல்லை.

**திரு. மா. சின்னராசு :** துணைத் தலைவர் அவர்களே, ஃபங்ஷன்ஸ் ஆஃப் தி ஸ்பெஷல் ஆஃபீஸர்ஸ் அன்ட் கமிஷனர்ஸ் என்ற முக்கியமான பிரச்சினை குறித்து....... (குறுக்கீடு) முக்கியமான பிரச்சினையை மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன். ஒரே ஒரு பிரச்சினை தான்.' சிதம்பரம் பூங்கா விளையாட்டு மைதானம் முழுவதையும் ஸ்போர்ட்ஸ் கவுன்சிலினுடைய பராமரிப்புக்கும், நிர்வாகத்திற்கும் கொடுக்க வேண்டும். ஸ்போர்ட்ஸ் கவுன்சில் உடைய, அதாவது விளையாட்டுத் துறையில் அக்கறை கொண்டிருக்கிற பொது மக்களின் கோரிக்கை இது என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து சிறைக் காம்பவுண்டிற்குள் சில்ட்ரன்ஸ் தியேட்டர் கட்டப்படுவதாக அறிவிப்பு செய்யப்பட்டும் கூட அது துவக்கப் படாமல் இருக்கிறது. அதனை விரைவில் துவக்கி கட்டுவதற்கான முயற்சியை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொஇறேன். அடுத்து .......(மணியடிக்கப்பெற்றது).



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சீக்கிரம் முடியுங்கள். நேரம் இல்லை.

**திரு. மா. சின்னராசு :** குறிப்பாக நகரத்தைச் சுற்றி இருக்கிற நீர்ப் பிடிப்புப் பகுதிகளைப் பொறுத்த வரையில் பல காலமாகக் காப்பாற்றப்பட்டு வந்த குளங்களில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கிறது. ஆக்கிரமிப்புக்களை உடனடியாகத் தடுத்து தொடர்ந்து அந்தக் குளங்கள் பாதிக்கப்படாமல் இருக்கச் செய்ய வேண்டும். குறிப்பாக இநத வறட்சிக் காலத்தில் குடிநீர் இல்லாத நிலைமை, கிணற்றிலே தண்ணீர் தட்டுப்பாடு போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இவற்றைத் தவிர்க்கின்ற வகையில் ஆக்கிரமிப்புகளைத் தடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அடுத்து மின்சார இலாக்காவைப் பொறுத்த வரையில்........(மணியடிக்கப்பெற்றது).

***திரு. எஸ். வேணுகோபால் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் 1974-க்குப் பின்னால் தேர்தலே நடத்தப்படாமல் ஆண்டுக்காண்டு ஓராண்டு, ஓராண்டு என்று சொல்லி பல ஆண்டுகள் கடந்து கொண்டு வந்திருக்கின்றன. ஒவ்வொரு ஆண்டும், கடந்த ஆண்டு சொன்னதைத்தான் சொல்கின்ற நிலைமை இருக்கிறது. இந்தியாவிலே உள்ள மற்ற மாநகராட்சிகளின் சட்டத் திட்டங்களைப் பற்றி எல்லாம் தெரிந்து கொண்டு அதற்கேற்றாற்போல் சட்டங்களை உருவாக்கி அதன் பின்னர் நாங்கள் தேர்தலை நடத்தப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

சென்னை மாநகரத்திலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் வேலை பார்ப்பதை விட நகர மன்ற வேலையைத் தான் அதிகமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். சென்னையைப் பொறுத்த வரையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் இல்லாத காரணத்தால் பல சம்பவங்கள் நடக்கின்றன. மாநகராட்சியில் இருக்கின்ற பெரிய அதிகாரிகள் சுறுசுறுப்பாகச் செயல்பட்டாலும் கீழே இருப்பவர்கள் சரியாக வேலை பார்க்கவில்லை என்று கடந்த முறை கூட நான் சொல்லி இருக்கிறேன். இங்கு சட்டமன்றத்தில் வந்து சில பிரச்சினைகளைப் பேசுகின்ற நேரத்தில் அதிகாரிகளில் சிலர் வருத்தப்படுகிறார்கள் என்பதை எண்ணிப்பார்க்கிறபோது எங்களுக்கு வருத்தமாக இருக்கிறது. மாநகராட்சிக்கு தேர்தலை நடத்தினால் இந்த எண்ணங்கள் வராது. தேர்தலை நடத்தி விட்டால் அவர்களே மன்றத்தில் கூடி பிரச்சினைகளைப் பேசி தீர்த்துக் கொள்ள முடியும்.

முன்னால் இருந்தவர்கள் ஊழல் செய்தார்கள் என்று காரணம கூறி முன்பிருந்த அரசு அதைக் கலைத்தது. அதன் பின்னர் ஊழலுக்காகத் தண்டிக்கப்பட்டவர்கள் சிறைக்குப் போய் திரும்பி

வந்துவிட்டார்கள் ; வழக்கும் பெண்டிங்—ஆக இருக்கிறது. ஆனால், இதுவரையில் தேர்தல் நடத்தப் படவில்லை. சென்னை மாநகரம் மிகப் பெரிய நகரம் ; புகழ் பெற்ற நகரம். ஆனால், தேர்தல் மட்டும் வரமாட்டேன் என்கிறது. எனவே தேர்தல் எப்போதுதான் வரும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். சென்னை மாநகரத்தை அழகுப்படுத்த வேண்டுமென்று மேம் பாட்டுக் குழு போட்டார்கள். அந்த மேம்பாட்டுக் குழு இப் போது செயலபடவில்லை. கடந்த ஆண்டிலே அமைச்சர் சொல் லும் போது சென்னை மாநகரத்திற்கு ஆலோசனைக் குழு போடப் போகிறோம் என்று சொன்னார்கள். அதையும் போட வில்லை. பின்னர் வந்த புதிய அமைச்சர் அவர்களும் சொல்லி யிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். அதனை சீக்கிரம்போட வேண்டும். சீக்கிரம் போட்டால் தான் சென்னை மாநகரத்தின் பிரச்சினையைத் தீர்க்க முடியும்.

பல பெரிய சாலைகளைப் போட்டார்கள். சிறிய சாலை களைப் பொறுத்த வரையில் பலஇடங்களில் போட்டிருக்கிறார்கள், போடாத இடங்களும் இருக்கின்றன. போட்டதற்காகப் பாராட் டுகிறோம் ; போடாததைப் போட வேண்டும் என்று சொல் கிறோம். இப்படி பல பிரச்சினைகள் இருக்கின்றன. அதிகாரிகள் மட்டத்தில் கீழே போய்ப் பார்க்கிறபோது வேலைகள் வேகமாக செய்யப்படவில்லை. யாரிடத்திலும் கட்டுப்பாடான, நேர்மையான, சுத்தமான செயல்பாடுகள் இல்லை. அதற்குக் காரணம் கேட்பதற்கு ஆள் இல்லாத நிலைமைதான். தேர்ந் தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இருந்தால் உடனடியாகக் கேட்டு உடனடியாக பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்.

(மாலை 6—00)

ஆனால் நான் அரசை வேண்டி விரும்பி கேட்டுக் கொள்வது—நாங்கள் வேண்டாம் என்று சொன்னாலும் இந்தத் தீர்மானம் நிறைவேற்றத்தான் போகிறீர்கள். சட்டமுன்வடிவு, நிறை வேறத்தான் போகிறது. அதிலே ஒன்றும் ஆச்சரியம் இல்லை. ஆனால் இப்படி ஒவ்வோராண்டும் தள்ளி தள்ளி போட்டுக் கொண்டே போவது ஜனநாயகத்திற்கு விரோதமான நிலைமை. ஒரு நல்ல பாரம்பரியம் உள்ள கட்சிக்கு விரோத மான முறை. இன்றைக்கு மூன்று முறை வெற்றி பெற்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் முதல்வராக வந்திருக்கிறார்கள். ஆகவே மாநகராட்சிக்கு தேர்தல் நடத்தி அந்தப் பெருமையும் உங்களுக்கே இந்த அரசுக்கே சேர வேண்டும் என்ற ஆவலின் பெயராலே, அன்பின் பெயராலே இந்த அரசை நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். தயவு செய்து தேர்தலை நடத்துங்கள். தேர்தலை நடத்தினால் நல்ல ஒரு ஜனநாயக மரபை தோற்று வித்த பெருமை உங்களுக்குக் கிடைக்கும் அந்த பெருமை உங் களுக்குக் கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் தான் சொல்கிறேன்.



அத்தோடு உடனடியாக ஆலோசனைக் குழுவைப் போட வேண்டும். இதையே மாற்றி மாற்றி சொல்லிக் கொண்டிருக்க வேண்டியதாக இருக்கிறது. பிரச்சினை தீராது. அலைகள் ஓய்வதில்லை. கடலிலே அலை எப்போதும் இருக்கும். அதனால் பிரச்சினைகள் தீர்ந்த பிறகு தேர்தலை வைத்துக் கொள்ளலாம் என்ற முடிவை மாற்றியாக வேண்டும். ஆகவே தயவு செய்து இங்கே இருக்கின்ற அமைச்சரை துணைத் தலைவர் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன். சென்னை மாநகராட்சிக்குத் தேர்தலை நடத்துங்கள் என்று கேட்டுக் கொண்டு, சென்னை நகரத்திலே காலி இடங்களை இன்று அரசியல் பின்னணி உடையவர்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆக்கிரமிப்பது மட்டு மல்ல, நிறைய பணம் வாங்குகிறார்கள். பணம் வாங்குவது மட்டுமல்ல, சில அரசியல் தலைவர்கள் வாங்குவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். சென்னை நகரத்திலே இப்படி ஏராள மாக நடந்துக் கொண்டிருக்கிறது. இதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்று சொல்லுகிறேன். குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால் முத்துமாரி நகர் என்ற இடத்திலே யாருடைய பெயரையோ சொல்லி பணம் வாங்கிக் கொண்டிருக் கிறார்கள். இந்த நிலைமையை கவனிக்கவில்லை என்று சொன் னால்.சென்னை நகரம் சீரழிந்து விடும் என்று சொல்லி, சில இடங்களிலே நடை பாதைகளில் நடக்கவே முடியவில்லை. என். எஸ். ஸி., போஸ் ரோட்டில் இருக்கும் நடைபாதையில் நடக்கவே முடியவில்லை. ஆகவே நிர்வாகத்தை ஒழுங்கு படுத்த, முறைப்படுத்த, செம்மையாக சீரமைக்க தேர்தலை நடத்த வேண்டும் என்று சொல்லி இந்த தீர்மானத்தை எதிர்க் கிறேன் என்று கூறி உரையை முடிக்கிறேன். வணக்கம்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, இந்த மாநகராட்சிகளுக்கு தேர்தல் நடத்துவது பற்றி நாம் பேசுவது ஒன்றும் புதிய விஷயம் அல்ல. நாம் தொடர்ந்து பேசிக் கொண்டு வருவதுதான். எனவே இதிலே தெரிய வேண்டியது இரண்டு. அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது சேர்த்து சொல்லிவிட்டால் நல்லது. ஒன்று தேர்தல் நடக்குமா இல்லையா என்பது தெரிய வேண்டும். இரண் டாவது இந்த தேர்தலை நடத்தாமல் இருப்பதற்கு என்ன காரணம் என்பது தெரிய வேண்டும். ஏனென்றால் பஞ்சாயத்து நகராட்சி தேர்தல்கள் எல்லாம் நடந்திருக்கிறது. மாநகராட்சி களுக்கு மட்டும் தேர்தல் நடத்த முன் வராததற்கு என்ன காரணம். ஏதோ ஒரு காம்பிரஹன்சிவ் சட்டம். வரவேண்டும் என்று சொல்லுகிறார்கள். அது ஒன்றும் கடினமானது அல்ல. அண்டை மாநிலத்திலிருந்து பெற்று சுலபமாக செய்ய முடிந்தது தான்.

அடுத்து கோவை மாநகராட்சிக்கு தேர்தல் நடத்தாமல் இருந் தாலும் ஒரு ஆலோசனைக் குழுவைப் போடுகிறோம் என்று சொல்லி எனக்கு முன்னால் இருக்கின்ற முன்னாள் அமைச்சர் அவர்கள், அவர் இந்தத் துறைக்கு அமைச்சராக இருந்த போது

அஷ்யூரன்ஸ் கொடுத்தார்கள். அந்த உறுதி நிறைவேறவில்லை. ஆனால், அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். நானும் இருக்கிறேன். மாநகராட்சியும் இருக்கிறது. ஆனால் அந்த உறுதி மொழிதான் நிறைவேற்றப்படவில்லை. துணைத் தலைவர் அவர்கள் கொஞ்சம் கவனித்தால் நல்லது......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நான் கவனித்துக் கொண்டு தான் இருக்கிறேன். அஷ்யூரன்ஸ் கமிட்டி இருக்கிறது. பவர்புல் கமிட்டி. அங்கே பேச வேண்டியதை இங்கே பேசிக் கொண்டிருக்கிறீர்கள்.

**திரு. கு. ரமணி :** தலைவர் அவர்களே எல்லாவற்றையும் மெக்கானிக்கலாக பார்க்கக் கூடாது. இந்த சட்ட சபைக்குள்ளே சொல்ல முடியாத விஷயங்கள் கிடையாது. அப்படி என்றால் அஷ்யூரன்ஸ் கமிட்டியே பெயிலியர் ஆகி இருக்கிறது என்று தான் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அப்படி என்றால் அதற்கு எல்லோரும் ரெஸ்பான்சிபிள். எல்லா கட்சி உறுப்பினர்களும் இதிலே இருக்கிறார்கள்.

**திரு. கு. ரமணி :** அப்படி என்றால் இதற்கு ரெமடி என்ன? அதனால் தயவு செய்து அந்த கமிட்டியை அமைக்க நடவடிக்கையெடுக்க வேண்டும். நாங்கள் சாதாரணமாக சொல்லவில்லை. உறுதியாகச் சொல்கிறோம். உடனடியாக கமிட்டி அமைக்க வேண்டும். ஜனங்கள் மத்தியில் தேர்தல் நடத்தவில்லையென்ற வருத்தமிருக்கிறது. நாங்கள் எம். எல். ஏ., க்கள் வேலையை செய்ய முடியவில்லை. தினசரி ரோடுகளையும், கழிப்பிடங்களையும் பார்க்கச் சொல்கிறார்கள். சட்டமன்ற வேலைகளைச் செய்வதற்கு இது இடையூறாக இருக்கிறது. ஏனென்றால் ஜனங்கள் தங்கள் குறைகளைச் சொல்வதற்கு வேறு இடமில்லை. ஆகவே எங்களிடம் சொல்கிறார்கள். ஒரு வருடம் நீட்டிப்பு என்பது நியாயமல்ல. அன்றைக்குப் பேசுகிற போதுகூட சொன்னார்கள். சட்டத்தை உருவாக்கி விட்டோமென்றால், அதிகாரம் கிடைத்து விட்டதென்றால் அந்த காலத்தைக் கூட குறைத்துக் கொள்வோம் என்றார்கள். அப்படியிருக்கிறபோது இப்பொழுது ஒரு வருடகாலம் கால நீட்டிப்பு எதற்காக கேட்க வேண்டும். மூன்று மாதம், ஆறு மாதம் என்ற அளவில் கேட்கலாம். ஆகவே ஒரு வருட கால நீட்டிப்பு என்பது முடியாமல் இருப்பதால் அல்ல, இது வேண்டுமென்றே செய்வதாகும். ஆகவே உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.



*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர்
அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவைப் பொறுத்தவரையில்
மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய கருத்துக்கள் உடனடியாக
மாநகராட்சித் தேர்தலை நடத்த வேண்டுமென்பதாகும்.
இந்த அரசைப் பொறுத்தவரையில் தேர்ந்தெடுக்கப்பட்ட
மக்கள் பிரதிநிதிகள் தேவையென்று உறுதியாக நம்புகிறது.
ஆகவே தனி அதிகாரிகளை நீட்டித்துக் கொண்டே போவதை
இந்த அரசு நிச்சயமாக விரும்பவில்லை. மாண்புமிகு உறுப்
பினர் சுப்பராயன் அவர்கள் திருக்குறள் போலச் சொன்னார்கள்.
பேசிப் பேசி அலுத்துப் போய் விட்டோம். ஆகவே தேர்
தலை எப்போது வைக்கப் போகிறீர்கள் என்று கேட்டார்கள்.
நான் அவருக்குச் சொல்வது, ஔவையார் சொன்னதைப் போல
'ஊக்கமது கைவிடேல்' என்பது தான்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் அவர்கள் பேசு
கிற போது மாநகராட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி
கள் இல்லையே என்றும், தனி அதிகாரிகள் இருப்பதால்
தாங்கள் நினைப்பதைச் செய்ய முடியவில்லையே என்றும்
வருத்தப்பட்டார்கள். எனக்கு உண்மையிலேயே ஆச்சரியம்.
ஏனென்றால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியப் பெருந் தலை
வர்கள் வந்த பிறகு மாண்புமிகு ஆறுமுகம் அவர்களுக்கு
ஜீப்பே கொடுக்க மாட்டேன் என்கிறார்கள் அவர்கள் பகுதியில்.
இருந்தாலும் கூட ஜனநாயகத்தின்பால் இருக்கிற பற்றின்
காரணமாக அவர்கள் இதைப் பேசினார்கள். மாநகராட்சித்
தேர்தலைப் பொறுத்தவரையில் மூன்று முக்கியமான காரணங்
களால் காலதாமதம் ஆகிறது. ஒன்று சென்னை மாநகராட்சிக்கு
பகுதி தோறும் தேர்ந்தெடுக்கப்பட்ட கமிட்டிகள் May r in Council
மேயருக்கு ஒரு சிறு அமைச்சரவை போன்ற ஒரு அமைப்பு.
அதிகாரங்களை மேயருக்குத் தந்து அந்த அதிகாரங்கள்
கீழேயுள்ள பகுதி கமிட்டிகளுக்குத் தரப்பட்டு நிர்வகிப்பது.
அப்படி ஒரு நிர்வாகம் இப்போது கல்கத்தாவிலும், ஹௌரா
விலும் இருக்கிறது. அதைப்போல சென்னை மாநகராட்சிக்
கும் வைத்துக்கொள்ளலாமா என்பது.. இன்னொன்று தமிழ்
நாட்டில் இருக்கக்கூடிய அத்தனை மாநகராட்சிகளுக்கும் ஒரே
சட்டம் வைத்துக் கொள்ளலாமா அல்லது மிகப் பெரிய நகரங்
களுக்கு, இந்தியா என்று எடுத்துக்கொள்கிற போது டெல்லி,
பம்பாய், கல்கத்தா, சென்னை ஆகியவை மெட்ரோபோலிடன்
சென்டர்ஸ்— ஒரு தனிச்சட்டமும், தமிழ்நாட்டில்
இருக்கிற மற்ற மாநகராட்சிகள் அனைத்துக்கும் ஒரு
தனிச்சட்டமும் கொண்டு வரலாமா என்பதில் நாம் இன்னும்
முடிவெடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். மராட்டிய
மாநிலத்தில் அப்படி இருக்கிறது. பம்பாய்க்கு என்று அப்படி
ஒருஅமைப்பை வைத்திருக்கிறார்கள். மற்ற நகரங்களுக்கு என்று
தனிச்சட்டம் வைத்திருக்கிறார்கள். ஆகவே இதிலே நாம்
ஒரு முடிவையெடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இரண்டாவது, நான் ஏற்கனவே இந்த மானியம் வந்த
போது எடுத்துச்சொன்னதைப் போல உள்ளாட்சி மன்றங்க

'அட்மினிஸ்ட்ரேட்டிவ் பாடிஸ்' நிர்வாக அமைப்புகள், Policy making forum, கொள்கை முடிவு எடுக்கும் மன்றங்கள் அல்ல. கொள்கை ரீதியாக முடிவு எடுக்கவேண்டிய இடமல்ல. ஆகவே நடைபெற இருக்கிற தேர்தல்களில் அரசியல் கட்சிச் சின்னங்கள் கொடுத்து தான் தேர்தல் நடத்த வேண்டுமென்ற நிலையை மாற்றி, கட்சி சார்பற்ற முறையில் தேர்தல் நடத்தி, நகர மக்களுக்கு நல்லது செய்யக்கூடிய நல்லவர்கள் வந்தால் போதும் என்ற முடிவையெடுக்கலாமா என்றும் அரசு பரிசீலித்து வருகிறது.

மூன்றாவதாக இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் ஏழைகள் வாக்களிக்க முடிகிறதே தவிர தேர்தல்களில் நிற்க முடிவதில்லை. ஆகவே ஏழைகள் மக்களின் பிரதிநிதிகளாக தேர்தலில் நிற்கக் கூடிய அளவிற்கு தேர்தல்கள் நடத்துகிற முறையில் செலவைக் குறைத்தும், வாக்காளர்களுக்கு அடையாள கார்டுகள் போன்றவையெல்லாம் கொடுத்து, அந்தத் தேர்தலில் நியாயமாகவும், உண்மையாகவும் தொண்டு செய்கிறவர்களுக்கு வாய்ப்பு அளிக்கிற வகையில் சீர்திருத்தம் செய்யலாம் என்கிற யோசனையும் இருக்கிறது.

(மாலை 6-10)

ஆகவே இந்த மூன்று காரியங்கள் நிறைவேற்றப்பட்டவுடன், நிச்சயமாக மாநகராட்சிகளுக்கு மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதியைப் பொறுத்தளவிலே, அரசியல் வேறுபாடுகள் எதுவும் கிடையாது. என்னுடைய சேப்பாக்கம் தொகுதியிலே ஏராளமான பிரச்சனைகள் இருக்கின்றன. ஆகையினாலே, அமைச்சர் அவர்களும், அதிகாரிகளும் ஒருநாள் என் தொகுதிக்கு வருகை தந்து, குறைபாடுகளைக் களைவதற்கு, எதிர்க்கட்சி என்ற வேறுபாடு இல்லாது, முயற்சி செய்வார்களா, என்பதை உங்கள் மூலம் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, நானே வருவதற்கு பதிலாக, சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாக ஆலோசனைக் குழு அமைக்கவேண்டும் என்று ஏற்கனவே முடிவு எடுத்து, அந்தச் சட்டமும் நிறைவேற்றப்பட்டு, அதற்குரிய ஆணை இன்னும் பிறப்பிக்கப்படவில்லை என்று அறிகிறேன். அந்த ஆணை பிறப்பிக்கப்படுமானால், இந்தப் பிரச்சினைகள் தீரும்.





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சி சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 11/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1 முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சி சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 11/1987) நிறைவேற்றப்பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு, நிறைவேற்றப்பெற்றது.

**(ஔ)** அழகப்பா பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1987 ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக் கழக (திருத்த. சட்ட முன்வடிவு (சட்டமன்றப்பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1987) ** ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்'',

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அழகப்பா யூனிவர்சிடி பில் பொறுத்த அளவிலே, அதனுடைய ஸ்டேட்மெண்ட் ஆப் ஆப்ஜெக்ட்ஸ் அண்ட் ரீசன்ஸ்சிலே என்ன சொல்லப்பட்டு இருக்கிறது என்றால், யுனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷனுடைய சஜஸ்டியன்ஸ், சில நிபந்தனைகள் அல்லது அவர்களுடைய சில ஆலோசனைகளுக்குத் தகுந்த அளவிலே ஒருசில திருத்தங்கள் கொண்டு

**1987 ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 28 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

வரப்படுகின்றன. என்று சொல்லப்பட்டு இருக்கிறது. ஆனால் எனக்கு என்ன சந்தேகம் என்றால், இந்தச் சட்டத்தினுடைய ஷரத்துக்களைப் படித்துப் பார்த்தால், சான்சலர் என்று அந்தப் பதவியை வகிக்கக்கூடியவர்களுக்கு, அதிகமான அதிகாரங் களை வழங்கக்கூடிய முறையில் இந்தச் சட்டம் அமைந்திருக் கிறது என்பதுதான். சான்சலர் என்பது கவர்னர். ஆளுநர் என்ற பதவியைப் பொறுத்தளவிலே அது வேண்டுமா என்ற பிரச்சனை கூட இன்றைக்கு விவாதம் செய்யக்கூடிய பிரச்சனை யாக இருக்கிறது. ஒருவேளை நான் அந்த விஷயத்திற்குச் சென்றால், துணைத் தலைவர் அவர்கள் சொல்லலாம், இந்தச் சட்டத்தினுடைய ஸ்கோப்புக்கு வெளியிலே போகிறீர்கள் என்று. ஆனால் ஒன்றை மட்டும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த ஆளுநர் என்பவர் மத்திய அரசினுடைய பிரதிநிதி என் பதை நாம் மறந்துவிட முடியாது. மத்திய அரசு ஏற்கனவே மாநிலங்களுடைய வரம்புக்கு உள்ளேயிருந்த கல்வியை, ஸ்டேட் சப்ஜக்டாக இருந்த கல்வியை, கன்கரன்ட் சப்ஜக்டாக மாற்றி, இன்றைக்கு மத்திய அரசினுடைய ஆதிக்கத்தை அந்தத் துறை யிலே ஏற்படுத்தி இருக்கக்கூடிய அந்தப் பின்னணியில் ஆளு நருக்கு அதிகமான அதிகாரங்களை வழங்கக்கூடிய ஒருசட்டத்தை அல்லது சட்டத் திருத்தத்தை நாம் கொண்டு வருவதும், அல்லது நிறைவேற்றுவதும் சரிதானா? என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

எடுத்துக்காட்டாக நான் ஒரு சில விஷயங்களை மட்டும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதாவது செக்சன் 7. அதிலே சான்சலர் என்பவருடைய டெசிஷன் பைனல் என்று சொல்லப்பட்டு இருக்கிறது.

ஏற்கனவே இருந்தது என்னவென்றால், Sec.7(2) In case of dispute or doubt, the Syndicate shall determine whether a person is disqualified under sub-section (1) and its decisionshall be final திருத்தம்

என்ன? "In case of dispute or doubt as to whether a person is disqualified under sub-section (1) the Syndicate shall refer suchcase to the Chancellor whose decision shall de final.

அப்படியென்றால், தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பாடியினுடைய அதிகாரத்தை நீங்கள் குறைக்கிறீர்கள். அது University Grants Commission ஆக இருந்தாலும்கூட அவர்களுடைய நிபந்தனையை, அவர்களுடைய ஆலோசனையை, அவர்களுடைய கருத்தாக இருந் தாலும்கூட, மத்திய அரசால் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற கொள்கையின் அடிப்படையில் நாம் பார்க்கிற நேரத்தில் சான்ஸ்,



லர்க்கு இப்படிப்பட்ட ஒரு அதிகாரத்தை கொடுப்பது சரியல்ல. நியாயமல்ல என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதேபோன்று, இன்னொரு விஷயத்திற்கு வரவேண்டுமென்றால் அதாவது Sec. II (3)-ல் என்ன சொல்லப்படுகிறது.?

if in any case it appears to the Chancellor that any such decision or order should be modifi d, annull d, reversed or emitted for reconsideration for the rea on that such decision or order is not in uonfo mity with the provisions of this Act or the Statutes, he may pass o ders accordingly. என்று சொல்லப்பட்டிருக் கிறது. அப்போது, சான்ஸலரைப் பொறுத்தவரையில் அவரே சிண்டிகேட்டில் நிறைவேற்றப்படக்கூடிய அல்லது செனட்டில் நிறைவேற்றப்படக்கூடிய தீர்மானத்தை சரியா இல்லையா என்று முடிவு எடுக்கிறார். சான்ஸலர் என்பது, Governor என்பது இன் றைக்கு அரசியல் சட்டத்திலே எப்படி காப்பாற்றப்படுகிறதோ, அதே முறையில்தான் நாம் காப்பாற்ற வேண்டுமே தவிர, இன்றைக்கு இப்படி சட்ட திட்டங்களைக் கொடுத்து சான்ஸலர் என்பவர் ஒருAutonomcus bcdyயாக இருக்க வேண்டியவர் யூனிவர் சிடியுனுடைய ஒரு சர்வாதிகாரியாக மாற்றப்படக் கூடிய அந்தப் போக்குக்கு இது இடம் கொடுக்கிறது என்பது என்னுடைய கருத்து. ஆகவே, அந்த முறையிலே உள்ள திருத்தங்களை நாம் ஏற்றுக் கொள்வதும், ஏற்றுக்கொண்டு நிறை வேற்றுவதும் சரியாக இருக்காது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். இன்னொரு முக்கியமான விஷயம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** 8 மணிக்கு கைத்தறித் கண்காட்சிக்கு உறுப்பினர்களையெல்லாம் அழைத்து இருக்கிறார்கள். தகவல் வந்திருக்கிறது. ஆகவே சீக்கிரமாக எல்லா பில்லையும் முடிக்க வேண்டும். ஆகவே சீக்கிரமாக முடித்து விடுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** 13(2) -லே என்ன சொல்லப் படுகிறது? ச்சான்ஸலரை இன்றைக்கு கவர்ண்மென்ட் நாமி னேட்பண்ண வேண்டுமென்பது போய் "..one shall be nominat d by the C ancellor, one shall benominat d by the Government.." ஏற்கனவே கவர்ண்மென்ட் நாமினேட் பண்ணவேண்டிய 3 பேர், இன்றைக்கு கவர்னர் நாமினேட் பண்ணக்கூடிய 1 நபர் என்ற முறையிலே கவர்னருடைய ஆதிக்கம் இங்கே வருகிறது. இன் னொன்றை நான் சுட்டிக்காட்ட விரும்புவது என்னவென்றால், 13(4)-லே என்ன சொல்லப்படுகிறது?

"When any temporary vacancy occurs in the office of the vice-Chancollor or if the vice-Chancellor is, by reason of absence or for any other reason, unable to exercise the powers and perform the duties of his office, the Seniormost Professor of the University shall exercise the powers and perform the duties of the Vice-Chancellor till the Syndicate, with the approval of the chancellor, makes the requisite-arrangements.... "

முன்னாலே என்ன? சிண்டிகேட் முடிவு செய்து அந்த முறையிலே வைஸ் ச்சான்ஸ்லர்கள் இதை செய்ய வேண்டியது. இன்றைக்கு என்ன இருக்கிறது? அது ச்சான்ஸ்லருடைய அதிகாரத்திற்கு மாற்றப்படுகிறது. இன்னொரு விஷயத்தை 28, 29-லே நாம் என்ன பார்க்கிறோம் என்னறால் "Government" கவர்ண்மெண்ட் முடிவு செய்ய வேண்டியது என்று இருந்ததை யெல்லாம் மாற்றி "Chancellor and to the Government" என்று மாற்றப்பட்டிருக்கிறது. அப்படியென்று சொன்னால், கவர்ண்மெண்ட்க்கு என்று இண்டிபெண்டண்ட் பெர்பாமென்ஸ் இல்லையா? ச்சான்ஸ்லர் என்பது மட்டுமல்ல, இன்னொரு பக்கத்திலே நாம் என்ன பார்க்கிறோம் என்றால், ஏற்கனவே

"Two Members elected by the Senate from among its membe.s" என்று இருந்ததை இன்றைக்கு என்னவாக மாற்றப்பட்டிருக்கிறது என்றால், "Two members elected by the Senate from among its members" என்று போட்டு "Provided that the member so elected shall not be an employee of the University or any institution or centre recognised by the University"

(மாலை 6-20)

முன்னாலே யுனிவர்சிடியினுடைய ஒரு எம்பிளாயி சிண்டிகேட்டிலோ, செனட்டிலோ தேர்ந்தெடுக்கப்படுவதற்கு உரிமை இருப்பவராக இருந்தார்கள். இந்தச் சட்டத்தை திருத்துவதாலே அப்படி ஒரு எம்பிளாயி தேர்ந்தெடுக்கப்படுவதற்கு உண்டான உரிமை, அதற்கான அவகாசத்தை, சந்தர்ப்பத்தை இந்தச் சட்டம் எடுத்து விடுகிறது. அப்படி என்றால் இன்று இந்த சட்டத்தினுடைய இந்த யூனிவர்சிட்டியினுடைய மிக முக்கியமான நோக்கம் என்ன என்றால் அதில் வேலை செய்யக் கூடியவர்களின் கருத்தை பாதுகாக்க அவர்களுடைய உரிமையை பாதுகாக்க, அதே நேரத்தில் கல்வியினுடைய வளர்ச்சிக்கு இந்த யூனிவர்சிட்டினுடைய நோக்கத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்கு சொல்லப்பட்டு இருப்பதில் என்ன வித்தியாசம் வருகிறது என்றால் ஏற்கனவே Objects and Reasons:



என்று ஒரிஜனலாக இருந்ததிலே 'ஆப்ஜெக்ட்ஸ்' என்ற முறையில் இரண்டைப் போட்டு விட்டு மீதி உள்ளதை எல்லாம் Powers of the University ஆக மாற்றி இருக்கிறீர்கள். அப்படி என்றால் இது எல்லாம் யூனிவர்சிட்டியினுடைய நோக்கம் அல்லவா. ஆகவே இந்த சட்டப்படி நாம் பார்க்கக் கூடிய நேரத்தில் இன்றைக்கு அதிலே வேலை செய்யக்கூடிய ஊழியர்களுக்கு போதுமான பாதுகாப்பு இல்லாத நிலை இருக்கிறது. நான் ஒன்றை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இப்படிப்பட்ட ஒரு சட்டம் ஏற்கனவே அண்ணா பல்கலைக் கழகம் என்றமுறையில் கொண்டு வந்தார்கள். அதிலே தொழில் நுட்பத்துக்கு எல்லாம் அவசியத்தை ஏற்படுத்துவதற்காக இந்தச் சட்டம் வந்தது. அந்தச் சட்டத்தை அமல் செய்யக் கூடிய நேரத்தில் என்ன வந்திருக்கிறது என்றால் தொழிலில் இருந்த அந்த ஊழியர்கள் வேலை சமபந்தமான சில விஷயங்களை எடுத்துச் சொன்னதற்காக இன்றைக்கு சஸ்பெண்டு செய்யப்பட்டு அவர்களை வெளியே நிறுத்தியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட குறைபாடுகளைச் சொல்ல அவர்களுக்கு ஷரத்திலே சொல்வதற்கு அவசியம் எங்கே வருகிறது என்றால் அவர்களுக்கு கொடுத்துள்ள சட்ட ஷரத்திலே இருப்பதால் தான் வருகிறது. ஆனால் இந்த சட்டம் அப்படி ஊழியர்கள் மேல் பழி போடுகிற நிலையில் இருக்கிறது. அப்படி இருக்கக் கூடாது. இன்றைக்கு அந்த முறையில் கொண்டு வந்திருப்பது சரியான சட்டம் அல்ல. இன்றைக்கு ஆளுநருக்கு அதிகமான அதிகாரத்தை கொடுக்க மாநில அரசிலேயும், அதேபோல் யூனிவர்சிட்டியிலேயும் அட்டானமஸ் நேச்சர் என்பதை இன்றைக்குப் பரவலாக செய்யக்கூடிய சட்டமாக இது அமைகிறது. ஆகவே இந்தச் சட்டமுன்வடிவை நான் எதிர்க்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தத்தினுடைய காரண நோக்கங்கள் ஏற்கனவே அவைக்கு தெரிவிக்கப்பட்டு இருக்கின்றன. பல்கலைக்கழகத்தினுடைய மானியத்திலே யூ.ஜி.சி.ஐ பொறுத்தவரைக்கும் அகில இந்திய அளவில் சில அணுகு முறைகளை தற்போது மேற்கொண்டு இருக்கிறார்கள். பல்கலைக்கழகத்தினுடைய Research and Development Programme ஐ பொறுத்தவரைக்கும் யூ.ஜி.சி.யினுடைய உதவி தேவைப்படுகிற காரணத்தால் யூ.ஜி.சி.யினுடைய ரெகக்னிஷன் இல்லாத நேரத்தில் இதனுடைய தன்மைகள் செயல் அற்றதாகி விடுகிற காரணத்தால் அவற்றை நாம் நிறைவேற்ற வேண்டியதை தவிர்க்க முடியாத நிலையில் இருக்கிறோம். இந்தத் திருத்தங்கள் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லிய சில கருத்துக்களோடு அரசும் ஒன்றுகிறது. யூ.ஜி.சி.யினுடைய அணுகு முறை மேல் கல்வியினுடைய, ஹையர் எடுகேஷனுடைய அதிகார வரம்பை படிப்படியாக மாநிலப் பட்டியலில் இருந்து தற்போது பொதுப் பட்டியலுக்குச் எடுத்து சென்று நாளடைவில் மையப் பட்டியலுக்கு எடுத்துச் செல்லக்கூடிய அளவுக்கு இன்று 66 of the union List என்ற முறையில் அங்கே எடுத்துச் செல்லக்கூடிய அளவுக்கு மறைமுகமான நோக்கம் மத்திய அரசினுடைய பொறுப்பின் கீழ்

செயல்படுகின்ற யூ.ஜி.சி. செயல்படுகிறதோ என்ற அச்சம் கூட ஏற்படுகிறது. இதை மத்திய அரசுக்கும், யூ.ஜி.சி.க்கும் நாம் தெளிவாக எடுத்துக் கூறி இருக்கிறோம். யூ.ஜி.சி. இதிலே மாற்றங்கள் கொண்டுவரும் என்று நாம் நம்புகிறோம். பல மாநிலங்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து இருக்கின்றன. அத்தகைய மாற்றங்கள் வரவில்லை என்றால் மாநில அரசைப் பொறுத்த வரைக்கும் தன்னுடைய அதிகாரத்தை விட்டுக் கொடுக்காமல் தக்க காலத்து, தக்க திருத்தங்களைக் கொண்டு வரும் எனக் கூறி இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித்தர வேண்டுகிறேன்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

" 1987 ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 12/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 முதல் 10 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1987 ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1987) நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

**(அ) பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1987.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சட்டமுன்வடிவுகள் 13 மற்றும் 14 ஆகிய இரண்டையும் சேர்த்து விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளலாம். ஆனால், இப்போது மூவ் செய்வது ஒரு பில் தான்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** துணைத் தலைவர் அவர்களே, நேரமாகிவிட்டது. பேசக்கூடாது என்று சொல்வீர்கள். எனவே நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம்.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பில் ஸ்கோப்பிற்குள் பேசினால் நிறைய பேசலாம்.

**மாண்புமிகு திரு. த. இராமசாமி :** மாண்புமிகு பே[illegible] துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண். 13/1987)** ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இரண்டு சட்ட முன்வடிவிற்கும் சேர்த்துக் கருத்துக்களைச் சொல்லுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேல்ஸ் டாக்ஸ் சம்பந்தமாக கருத்துக்களைத் தெரிவிக்கின்ற நேரத்திலே இந்த அரசினுடைய சேல்ஸ் டாக்ஸ் சம்பந்தமான கொள்கை கூட வியாபாரிகள் துறையைப் பாதிக்கக் கூடிய அளவிற்கு இருக்கிறது என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குறிப்பாக இந்த மூன்று முக்கியமான பொருட்களுக்கு " அடிஷனல் சேல்ஸ் டாக்ஸ் " விதிக்கப் பட்டிருக்கிறது. அதாவது ட்ரக்ஸ், பெட்ரோல், பெர்டிலைசர்ஸ். இந்த மூன்று பொருட்களும் மக்களுடைய வாழ்க்கையோடு மிக சம்பந்தப்பட்டிருக்கக் கூடிய இன்றியமையாத தேவையான பொருட்கள். இந்தப் பொருட்களைப் பொறுத்த மட்டில், நாம் என்ன பார்க்கிறோம் என்றால், " எம்.ஆர்.டி.பி. " இது கன்ட்ரோல் செய்யப்பட்டிருக்கக் கூடிய பொருட்கள். அப்படியென்றால், அதற்கு விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அந்த விலைக்கு மேலே எந்த டீலர்சிற்கும் விற்க உரிமை கிடையாது. அப்படி அவர்கள் விற்றால் அவர்கள் தண்டனைக்குரியவர்கள். இதிலே நாம் என்ன பார்க்கிறோம் என்றால், " அடிஷனல் சேல்ஸ் டாக்ஸ் " என்ற முறையில் " டர்ன்-ஓவர் " மீது இன்றைக்கு நீங்கள் விற்பனை வரியைக் கொண்டு வருகிறீர்கள். அப்படியென்றால், இன்றைக்கு இந்த " கன்ட்ரோல் கமோடிடீஸ் " னுடைய விலையைப் பொறுத்தமட்டில், அரசு நிர்ணயித்திருப்பதன் காரணமாக நாம் என்ன பார்க்கிறோம் என்றால், 14 சதவீதம், 12 சதவீதம். இது தான் வித்தியாசம். இரண்டு சதவீதத்தில் தான் அவர்களுக்குக் கிடைக்கக்கூடியது வருவாய். இதிலிருந்து அவர்கள் அந்த வரியை " அடிஷனல் சேல்ஸ் டாக்ஸ் " கட்டவேண்டுமென்று சொன்னால் அந்தத் தொழில்கள், அதிலே வியாபாரம் செய்யக்கூடியவர்கள் அதிலே ஈடுபட்டிருக்கக் கூடியவர்கள் பாதிக்கப்படுகிறார்கள்.

---

**1987 ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 29 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

(திரு. ஜே. ஹேமச்சந்திரன்) [1987 மே 8

In the Drugs Prices Control Order, 1979, no mannfacturer or distributor shall sell a formulation to a wholesaler, unless otherwise permitted under the provisions of this Order or any other order made by an authority, at a higher price. என்று போடப்பட்டிருக்கிறது. இது வரக் கூடிய நேரத்திலேஏற்கனவே ''அடிஷனல் சேல்ஸ் டாக்ஸ் ஆக்ட் 1970-ன்படி '' நீங்கள் இரண்டுஸ்லாப் கொடுத்திருக்கிறீர்கள். இன்றைக்கு அது நான்கு ஸ்லாப்களாக கொடுக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினால் இந்தத் துறையில் அந்தப் பலன் வியாபாரம் பண்ணக் கூடியவர்களுக்குக் கிடைக்காது.

இன்னொரு பக்கத்தில் நாம் என்ன பார்க்கிறோம் என்றால் மூன்று மிக முக்கியமான பொருட்கள், மருந்து, பெட்ரோல், பெர்டிலைசர், இது மூன்றும் பன்னாட்டு நிறுவனங்களோடு, நிர்பந்தததின் காரணமாக மத்திய அரசு அவர்களுடைய விருப்பத்திற்குத் தகுந்த அளவிலே, இன்றைக்கு அந்தத் தொழில்களை நெறித்துக்கொண்டிருக்கிறது. உள்நாட்டில் இந்தப் பொருட்களை உற்பத்தி செய்யக்கூடியவர்கள், இதில் வியாபாரம் செய்யக்கூடியவர்கள், இன்றைக்கு நெறிக்கப்படுவதன் காரணமாக, மத்திய அரசு பணிந்து இந்தத் துறையைப் பொறுத்தவரையில், இந்த உற்பத்தி செய்யக் கூடிய அந்தத் தொழில்களுக்கு பலன் கிடைக்காமல் பாதிக்கப்படக் கூடிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது.

[மாலை 6—30]

சமீபத்திலே நாடாளமன்றத்திலே நடந்த விவாதத்திலே பிரதம அமைச்சர் அவர்கள் ட்ரக் பாலிஸியைப் பொறுத்தவரையில் மாறுதல் இல்லை என்று சொல்லி இருக்கிறார்கள். அப்படியென்றால் உள்நாட்டிலே உரமோ அல்லது மருந்துகளோ, பெட்ரோலோ உற்பத்தி செய்வதை வெளிநாட்டு மூலதனங்களோடு அதிலே ஈடுபட்டிருக்கக்கூடிய கம்பெனிகள் விரும்பவில்லை. இன்றைக்கு அவர்களுடைய நிர்பந்தத்திற்கு பணிந்து இந்த மத்திய அரசு இந்தப் பொருள் உற்பத்தியை நெருக்குவதற்கு ஒரு பக்கத்திலே நடவடிக்கைஎடுத்துக்கொண்டிருக்கின்ற நேரத்திலே, இந்த மாநில அரசு மேலும் இன்றைக்கு ஏதோ ஒரு டர்ன்-ஓவர் டாக்ஸ் என்ற முறையிலே அடிஷனல் சேல்ஸ் டாக்ஸ் என்று போடுவது என்பது நிச்சயமாக இந்தத் தொழிலை கடுமையாகப் பாதிக்கும். இன்றைக்கு சுப்ரீம் கோர்ட்டிலேகூட சொல்லப்பட்டிருக்கிறது. அடிஷனல் சேல்ஸ் டாக்ஸ் என்பது ஒருவருடைய வருவாயின் மேலே போடக்கூடிய வரியாக அமையக்கூடாது. அவருடைய சொந்த வருவாய்க்கு, இன்றைக்கு வருவாய் பெற்றுக்கொண்டு உளளவர், இன்றைக்கு இன்கம்டாக்ஸ் கட்டுகிறார். அப்படி ஒரு பக்கத்திலே இன்கம்டாக்ஸ் கொடுக்கக்கூடிய ஒருவரை, அவர் இந்த மருந்தோ அல்லது பெட்ரோலோ அல்லது உரமோ வியாபாரம் செய்யக்கூடிய தொழிலில் ஈடுபட்டவர் என்பதால் ஏதோ





ஒரு டாக்ஸைக் கொண்டு வந்து, அவர் ஏற்படுத்திக்கொள்ளக் கூடிய சிறு வருவாயிலிருந்து இந்த வரியைக் கேட்பது என்பது நிச்சயமாக அந்தத் தொழிலைப் பாதிக்கும். அவர் அந்தத் தொழிலை மூடிவிட்டு ஓடவேண்டிய நிர்பந்தத்திற்குக் கொண்டு செல்லும். அப்படியென்றால், மத்திய அரசினுடைய இந்தக் கொள்கைகளை—உள்நாட்டிலே இந்த உற்பத்திகளை முடக்கி பன்னாட்டு நிறுவனங்களை வாழவைக்க வேண்டும் என்ற கொள்கையை இந்த அரசு ஆதரிக்கின்றதா ? இந்த அரசு அதற்கு மறைமுகமாக இன்றைக்கு சப்போர்ட் பண்ணப்போகின்றதா என்ற கேள்வி இங்கே எழுப்பப்படுகிறது. இன்றைக்கு சேல்ஸ் டாக்ஸை பொறுத்தவரையில் இங்கே கொண்டுவந்துள்ள திருத்தத்திலேகூட நாம் என்ன பார்க்கின்றோம் ? இன்றைக்கு அவர்கள் ஒரு திருத்தத்தைக் கொடுத்திருக்கிறார்கள். நாப்தால் பேஸ் ஆயில் என்பதிலே நாப்தாக்கு மட்டும் இன்றைக்கு விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த மாதிரி விஷயங்களைப் பொறுத்தளவிலே, நாம் பார்க்கக்கூடிய நேரத்தில் இந்தக் கொள்கையை மத்திய அரசு ஒரு பக்கத்திலே நெருக்குவதும் மாநில அரசு இப்படிப்பட்ட நிலையை எடுத்துக் கொள்வதும் ஏதோ ஒரு டாக்ஸைக் கொண்டு வந்து அப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வதன் காரணமாக உற்பத்தியாளர்கள் நிச்சயமாக அவர்கள் கையிலிருந்து இந்த வரியைக் கொடுப்பதற்கு விரும்ப மாட்டார்கள். இந்த விற்பனை வரியை பொறுத்தளவிலேகூட உச்ச நீதி மன்றத்தினுடைய தீர்ப்பிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், அதை இன்றைக்கு உபயோகிக்கக்கூடியவர்களிடமிருந்து வாங்கிக் கொடுக்கக்கூடிய முறையிலே இந்தக் விற்பனை வரிக் கொள்கை நடைமுறை அமையவில்லை என்றால் அது சரியான கொள்கையல்ல. நடைமுறை அல்ல. இன்றைக்கு அந்த முறையிலே இந்தக் சேல்ஸ் டாக்ஸ் சம்பந்தமான கொள்கை அமைகின்றது என்று சுட்டிக்காட்டி இந்தக் கொள்கைக்கு நாம் மாறுபட்ட முறையிலே இருக்க வேண்டும். மத்திய அரசின் நெருக்கக் கூடிய முறையிலே உள்ள இந்தக் கொள்கைக்கு ஆதரவு நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துக்கொள்ளக்கூடாது என்று சொல்லி, விற்பனை வரியைப் பொறுத்தவரையிலே இன்றைக்கு தொழிலிலே ஈடுபட்டு இருக்கக்கூடியவர்களுக்கு தொழில் நடத்துவதற்கு வாய்ப்பை ஏற்படுத்தக்கூடிய முறையிலே விஷயங்கள் அமைய வேண்டும் என்று கேட்டு அந்த முறையிலே இந்தச் சட்ட திருத்தங்களைக் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. த. இராமசாமி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் கொண்டுவந்திருக்கின்ற சட்டமுன்வடிவுகளை பற்றி அதிலே உள்ளே நுழைந்து தங்களுடைய கருத்துக்களைச் சொல்லாவிட்டாலும்கூட, அதிலே போட்டிருக்கின்ற விற்பனை வரி, கூடுதல் வரி போன்ற வரிகளை எல்லாம் மானியக் கோரிக்கையிலே அதிகமாக விவாதித்திருந்த போதிலும் கூட இப்போது அதை ஞாபகப்படுத்தியிருக்கிறார்கள் நம்முடைய உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள். அதுபற்றிய விவர்

தம் தற்போது இல்லை என்பதை மட்டும் அவர்கள் அறிவார்கள். இருந்தாலும் அரசினுடைய கவனத்திற்கு சொல்ல வேண்டுமே என்று இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தியிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன்.

பொதுவாக, இன்றைய தினம் பொது விற்பனை வரிச் சட்டத்திலே முதல் அட்டவணையிலே உரிய இனம் 51-இல் ஒரு வகை இருக்கிறது. அந்த 51-இலே மணத்திற்குப் பயன்படும் நறுமணப் பொருட்கள் 12 சதவீத ஒரு முனை வரிக்குட்பட்டு இருக்கின்றன. 51-ஏ-யின் கீழ் பற்பசை, பல்பொடி, ஆகியவையும், 51-பி-யின் கீழ் ஷேவிங் செட், பிளேட் ஆகியவையும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

காற்றுத் தூய்மையாக்கிகள், புத்துணர்வூட்டிகள் மற்றும் வீச்சமகற்றிகள்— குறிப்பாக இதில் கூறப்படவில்லையாதலால், இவை தொடர்பான சந்தேகங்களைத் தவிர்க்கவே 51-சி என்ற ஒரு பிரிவை, தனி இனத்தைச் சேர்ப்பதற்கு இந்தச் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அதைப் போல், கண்ணாடிப் பொருட்கள் 10 சதவீத ஒரு முனை வரிக்குட்பட்டு இருக்கின்றன.

கண்ணாடிப் புட்டிகள், கண்ணாடிக் கோலிகள் மற்றும் கண்ணாடி மணிகள் ஆகியவற்றை 102 ஆம் இனத்திலுள்ள கண்ணாடிப் பொருட்கள் என்ற பொதுவான இனத்தின்கீழ் வகைப்படுத்த இயலாது என நடுவர் மன்றம் தீர்ப்பு கூறியது. அது போன்று கண்ணாடி உறிஞ்சு கலன்கள், ''கண்ணாடிப் பொருட்கள்'' என்ற ஒரே இனத்தின் கீழ் வகைப்படுத்த இயலாது என்பதை உச்ச நீதிமன்றமும் தீர்ப்பு வழங்கியுள்ளது.

எனவே, இப் பொருட்களைத் தனியாக் குறிப்பிட்டு. 10 சதவிகித ஒரு முனை வரி விதிக்க 102 வது இனத்திற்குத் திருத்தமும், 102-ஏ என்ற புதிய இனமும் சேர்க்கப்படுகின்றன.

எரிவாயு உலை அடுப்புகள், காற்றழுத்த அடுப்புகள் ஆகியவை போன்ற எரிவாயு அடுப்புகளையும் 123-வது பிரிவில் சேர்த்து ஒரே மாதிரியான பொருட்களுக்கு ஒரே வரி விகிதம் என்று, 8 சதவிகிதத்திற்குத் தக்கவாறு திருத்தம் வகை செய்கிறது.

அதைப்போல், வெல்லத்திற்கும்—நாட்டுச் சர்க்கரைக்கும் 166—ஏ என்று நாட்டுச் சர்க்கரையை ஒரு முனை வரிக்குக் கொணர்கிற வகையில், இங்கே ஒரு திருத்தம் கொண்டு வரப்பட்டு இருக்கிறது.





அதைப்போல், நாப்தா என்ற ஒரு வகையான பெட்ரோலியம், டீசல் போன்ற வகைகளிலிருந்து தயாரிக்கப்படுகிற ஒரு உப பொருள்—அந்த மூலப் பொருளிலிருந்து உரம் தயாரிக்கின்ற ஒரு நிலை இருக்கிற காரணத்தினாலே, இது ஏற்கனவே 10 சதவிகிதம் வரி விதிப்பில் இருந்தது. ஆனால் மக்களுக்கு அது பயன்படும், உரம் விலை குறையும் என்ற அளவில் அந்த 10 சதவிகிதமாக இருந்த அந்த வரியை 4 சதவிகிதமாக அரசாங்கம் குறைத்து சலுகை வழங்கியது.

இருந்தாலும்கூட, உரத்தினுடைய விலை நிர்ணயத்தை மைய அரசே வைக்கிற காரணத்தினாலே சீரான விலை இருக்கிற காரணத்தினால், எவ்வளவு நாம் வரிச்சலுகை செய்தாலும்கூட மக்களுக்கு முறையாக, குறைவான விலைக்குக் கிடைப்பதில்லை. உற்பத்தியாளர்களுக்கே அது போய்ச் சேர்ந்து விடுகிறது என்ற அளவில் மீண்டும் அந்த நாப்தாவிற்கு 4 சதவிகிதம் என்ற வரிக் குறைப்பை மாற்றி மீண்டும் 10 சதவீதம் என்ற நிலைக்குக் கொண்டு வருகின்ற ஒரு திருத்தமும் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

ஆகவே, பொதுவாக இன்றையதினம் நம்முடைய அரசைப் பொறுத்த வரையில் நியாயங்களை உணர்ந்து, வணிகப் பெருமக்களுடைய நிலைகளை உணர்ந்து ஒட்டு மொத்தமாக மக்களுடைய கஷ்டங்களை அறிந்துதான் நம்முடைய அரசாங்கம் வரி விதிப்பைச் செய்து கொண்டு இருக்கிறது என்பதை இந்த நல்ல நேரத்தில் தெரிவித்துக் கொள்வதோடு, கொண்டு வந்திருக்கிற இந்தத் திருத்தத்தின்மீது மாண்புமிகு உறுப்பினர் நம்முடைய ஹேமச்சந்திரன் சொல்லிய கருத்துக்களை அரசாங்கம் தக்க நேரத்தில் ஆலோசனைகளாக எடுத்துக் கொண்டு காரியங்களை ஆற்றும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து, சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

''1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1987) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. த. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 13/1987) நிறைவேற்றப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(மாலை 6–40)

(ஆஆ) பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு, 1987.

மாண்புமிகு திரு. த. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

" 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1987) * ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

பிரிவு 2 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

"In Clause 2, in item (i) of the proviso, proposed to sub-section 3 of Section 3 of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act 1 of 1959) for "naptha base-oil" substitute 'naptha'.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

* 1987 ஆம் வருடம் ஏப்ரல் 29ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



பிரிவு 2, திருத்தப் பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. த. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

" 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1987) திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, சட்ட முன்வடிவு திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப் பெற்றது.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஈ) மருத்துவப் பல்கலைக் கழக சட்ட முன் வடிவு, 1987 (ஆ.இ.).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு:

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக் கழகச் சட்டமுன்வடிவைப் பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தந்துள்ளார்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(இஇ) மருத்துவப் பல்கலைக் கழகச் சட்ட முன் வடிவு, 1987.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 15/1987) ** ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

** 1987 ஆம் வருடம் மே மாதம் 4ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவை வரவேற்று எனது கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

மருத்துவப் பல்கலைக் கழகத்தின் முக்கியமான நோக்கம் "Medical Education and Research with reference to the latest developments and achievements in the field of medicine" என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த வகையில். வளர்ந்து வரக்கூடிய புதிய வியத்தகு அறிவியல் சாதனைகளுக்கேற்ப புதிய மருத்துவப் பல்கலைக் கழகம் காண வழிவகை செய்த மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். அதன் மீது ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

அமையவிருக்கும் பல்கலைக் கழகத்தில் தமிழ்நாட்டில் இருக்கிற 34 மருத்துவக் கல்லூரிகளும் இணைக்கப்படும் என்ற தகவலை இந்தச் சட்ட முன்வடிவில் சொல்லியிருக்கிறார்கள். மருத்துவக் கல்லூரிகள் தங்களின் நிலையை உயர்த்திக் கொள்ளவும், கொடுக்கப்பட்டிருக்கிற ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும் மேலும் புதிய பட்டப் படிப்புகளையும் மேற்கொண்டு நல்ல பணியைச் செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக இன்னொரு கருத்தையும் நான் இங்கே கூற விரும்புகிறேன். உத்தேசித்துள்ள பல்கலைக் கழகத்தில் தரமணியில் உள்ள போஸ்ட் கிராஜுவேட் இன்ஸ்டிடியூட் ஆப் பேசிக் மெடிகல் சையன்ஸ் என்கிற அந்த ஆராய்ச்சி மையத்தை மெடிகல் யூனிவர்சிடி சட்டத்திலிருந்து விடுவித்து அந்தக் கல்லூரியை மெட்ராஸ் யூனிவர்சிடியுடன் — அதன் ஆளுகையின் கீழ் கொண்டு வர வேண்டும் என்றும் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் இந்த நிறுவனமானது மேல்படிப்பு பட்ட நிறுவனமாகும். 1968 ஆம் ஆண்டில் டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்களால் உருவாக்கப்பட்டு ஃபேகல்டி ஆப் சையன்சஸ் என்கிற வகையில் எம.எஸ்.ஸி. எம்.பில், பி,எச்.டி போன்ற பட்ட மேற்படிப்பு படிப்பதற்கு அடிப்படையான மேல் படிப்பு நிலையமாக அது உயர்த்தப்பட்டு, பல்வேறு கால கட்டங்களில் அது பல்வேறு வகையான வியத்தகு அறிவியல் சாதனைகளைக் கண்டு வளர்ந்து வந்திருக்கிறது.

அது மட்டுமல்ல. தரமணியில் உள்ள பட்டப் படிப்பு வளாகத்தை தரம் உயர்ந்ததாக யூனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷனிலிருந்து Department of Atomic Energy, Department of sicence and Technology and Department of Environment ஆகியவற்றுக்காக மானியத்தைப் பெற்று ஆராய்ச்சி படிப்புகளை



யும், ஆராய்ச்சி மாணவர்களையும் வளர்த்து வருகிறது. அங்கே வேலை செய்யும் அலுவலர்கள், பேராசிரியர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் நூற்றுக்கு 80 சதவிதம், 90 சதவிதம் பேர் சென்னைப் பல்கலைக் கழகத்திலே இணைக்கப்பட்டிருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள்.

இந்த தரமணி நிலையமானது புதிய புதிய கண்டுபிடிப்புகளை கண்டுபிடித்திருக்கிறது. உதாரணமாக 'ஜெனடிக்' என்று குறிப்பிடுகிற மனிதனின் மூலக் கூறுகளை ஆராய்கிறது Genetic Engineering, Bio-chemical engineering, psychogenetics, recto-action genetics, molecular genetics போன்ற தன்மை வாய்ந்தவைகளை பேராசிரியர்கள் ஆராய்ச்சி நடத்திக் கொண்டிருக்கிறார்கள் இந்த தரமணி நிலையம் சென்னைப் பல்கலைக் கழகத்தோடு இணைந்திருந்தால் சென்னைப் பல்கலை கலைக் கழகத்திலே படிக்கின்ற அறிவியல் மாணவர்களுக்கு மேல் படிப்பு ஆராயச்சி நிலையமாக, அவர்கள் ஆராய்ச்சி செய்கின்ற இடமாக அமையும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. தரமணி நிலையத்தை மருத்துவப் பல்கலைக் கழகத்தோடு சேர்த்தால் ஏற்கெனவே யூனிவர்சிட்டி கிராண்ட்ஸ் கமிஷன் மூலமாகவும், பல்வேறு அமைப்புகளின் மூலமாகவும் மானியம் வாங்க முடியாமல் மருத்துவப் பல்கலைக் கழகத்தோடு சேர்க்கப்படுகிறது என்ற ஒரே காரணத்தினால் பற்றாக்குறை ஏற்படுகிற நிலைக்கு ஆளாகும் என்பதைக் கூறி தரமணி நிலையத்தையும், அதில் பணிபுரியும் ஆசிரியர்கள் பேராசிரியர்கள் அனைவரையும் சென்னைப் பல்கலைக் கழகத் தோடு இணைக்க வேண்டும் என்றும் உத்தேசிக்கப்பட்டிருக்கிற மருத்துவப் பல்கலைக் கழகத்தோடு இணைக்க வேண்டாம் என்றும் கூறி இந்த மருந்துவ பல்கலைக் கழக மசோதாவை வரவேற்று அமைகிறேன். வணக்கம். நன்றி.

திரு. கு. ரமணி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 68 ஷரத்துக்களைக் கொண்ட இந்தச் சட்டமுன்வடிவை உண்மையாகவே முழுமையாகப் படித்து இதனுடைய தன்மைகளைப் பூராவையும் எடுத்துச் சொல்லக்கூடிய முறையில் விவாதித்து செய்ய முடியாத சூழ்நிலையிலே இருக்கிறோம். நாம் ரொம்ப வேகமாக சட்டங்களை நிறைவேற்றிக் கொண்டு போகிறோம். ஏற்கனவே நான் இதைச் சொல்லியிருக்கிறேன். இதிலே முக்கியமாக நம்மை தலைமை தாங்கி நடத்தக்கூடிய பிரசைடிங் ஆபீசர்களின் கவனத்திலே எடுத்துக்கொள்ள வேண்டிய விஷயம் என்னவென்றால், இந்த மாதிரி சட்டங்களை நிறைவேற்றிக்கொண்டு போக முடியாது. 68 ஷரத்துக்கள் எப்படி அமைக்கப்பெற்றிருக்கின்றன என்ற விஷயத்தை எத்தனை நாட்கள் உட்கார்ந்து படித்து விவாதம் செய்கிறோம்? என்னைப் பொறுத்த வரையில் ரொம்ப, ரொம்பக் குறைவான முறையில், சில பக்கங்களை மட்டும் திருப்பிப் பார்த்திருக்கிறோம் என்று சொல்லுவேன். அப்படிக் கூட பார்க்காத பலபேர் இருந்தாலும்

ஆச்சரியப்படுவதற்கில்லை. இதுதான் நிலைமை. இப்படியொரு பல்கலைக் கழகத்தை அமைப்பது நல்லதுதான் , அமைக்கலாம். வரவேற்கிறேன். ஏனென்றால், 34 கல்லூரிகள் இருக்கின்றன. அந்தக் கல்லூரிகள் முழுவதும் ஒரே மருத்துவப் பல்கலைக் கழகத்தின் கீழ் இணைந்து ஆராய்ச்சியை மேற்கொள்வதற்கும், மருத்துவக் கல்வி வளர்ச்சியடைவதற்கும் ஒரு நல்ல ஏற்பாடாக வருகிறது. அதை நாம் ஏற்றுக்கொள்கிறோம், அப்படிச் செய்ய வேண்டியதுதான், நடத்த வேண்டியதுதான். ஆனால் நாம் ஒன்றை கவனத்திலே எடுத்துக்கொள்ள வேண்டும். மக்கள் எதிர் பார்க்கக்கூடியது அவர்களுக்கு நல்லவிதமான வைத்தியம் கிடைக்க வேண்டும் என்பதுதான். இன்றைக்கு இருக்கக்கூடிய மருத்துவ ஸ்தாபனங்கள், கல்லூரிகள் மருத்துவமனைகள் சாதாரண மக்களுக்கு எந்த அளவிற்குப் பயன்படுகின்றன என்பதுதான் அவர்களுடைய பார்வையில் இருந்து வருகிறது. அவர்களுடைய தேவைக்கும், பார்வைக்கும் இது உதவும் என்று சொல்ல முடியாது. இதனுடைய நோக்கம் அதுவல்ல உயர்ரகத்திலே ஆராய்ச்சி நடத்தினால் அது மக்களுக்குப் பயன்படுமா என்றால், பயன்படாது என்று நான் சொல்லவில்லை.உடனடியாக மக்களுடைய எதிர்பார்ப்பு அதுவல்ல என்பதை நாம் மறந்து விட முடியாது. நல்ல வைத்தியம் கிடைக்க வேண்டும், நல்ல விதமான வசதிகள் கிடைக்க வேண்டும், எந்த ஒரு மருத்துவ மனையிலும் அட்மிஷன் கிடைக்காது என்ற நிலை ஏற்படக் கூடாது, இப்படிப்பட்ட வசதிகள் தேவை என்று மக்கள் எதிர் பார்க்கிறார்கள்.அதற்கு இந்தப் பல்கலைக் கழகத்தின் மூலமாக உடனடியாக தீர்வு காண முடியும் என்று நான் கருதவில்லை. மருத்துவக் கல்லூரி ஏற்பட்டு உயர்ந்த நிலைக்கு மருத்துவக் கல்லூரிகள் வர வேண்டும், அதனுடைய ஆராய்ச்சி வளர்ச்சி பெற வேண்டும் என்பது முக்கியம்

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

[மாலை 6—50]

34 கல்லூரிகளையும் ஒன்றிணைத்து, அது வருவதும் நல்லதுதான். இந்தச் சட்டமுன்வடிவைப் பொறுத்தவரையில் சொல்வதென்றால் பல விஷயங்களைச் சொல்ல வேண்டியிருக்கிறது. பல பல்கலைக் கழகங்கள் நம் தமிழ் நாட்டில் இருக்கின்றன. அந்தப் பல்கலைக் கழகங்களுடைய அதிகார அமைப்புகள் உண்மையாக ஜனநாயகமுறையில் செயல்படுகின்றனவா என்று பார்க்க வேண்டும். வேந்தர், இணை வேந்தர், துணை வேந்தர், பல்வேறு அரசுத்துறைகளிலுள்ள செயலாளர்கள், பல தரப்பட்ட ஸ்தாபனங்களிலே இருந்து நியமிக்கப்படக்கூடியவர்கள் அந்த ஆட்சிப் பேரவையிலே, நிர்வகித்து நடத்தக்கூடிய பெரிய அமைப்பிலே இருக்கிறார்கள். அந்த ஆட்சிப் பேரவையிலே தேர்ந்தெடுக்கப்படுகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கும். நியமனம் செய்யப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும். அப்படித்தான் இந்த அமைப்பும் வந்து சேரும். ஆட்சிப்





பேரவை, ஆட்சி மன்றம், நிதிக் குழு, கல்வி நலக் குழு, கலையியல்கள், திட்டமிடும் குழு, பாடத் திட்டக் குழு—இப்படி பல்வேறு அமைப்புகள் இருக்கின்றன. இந்த அமைப்புகளினுடைய செயல்பாடு எப்படி அமைய வேண்டும், எப்படி அமைந்தால் அது சரியாக இருக்கும் என்ற அம்சங்களை எல்லாம் எடுத்துச் சொல்ல முடியவில்லை. இந்தச் சட்டத்தினுடைய பயன் பெறும் தன்மையைப்பற்றி நம்மால் அதிக விஷயங்களை இன்றைக்கு எடுத்துச் சொல்ல முடியாது. அவைகளை எல்லாம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். இப்போது அமைப்பது புதிய யூனிவர்சிட்டி. இந்த ஆட்சி அதிகாரக் குழுக்கள் எல்லாம் பற்றி பொதுவாகச் சொல்வது என்னவென்றால், மருத்துவக் கல்லூரிகளிலே பணி புரியக்கூடிய ஆசிரியர்களுடைய பிரதிநிதிகள், மருத்துவக் கல்லூரிகளிலே பட்டம் பெறுவதற்காகப் படித்துக் கொண்டிருக்கக்கூடிய மாணவர்களுடைய பிரதிநிதிகள் உள்ள முறையில், பெருவாரியான தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட ஆட்சிக் குழு அமைய வேண்டும். நியமனம் மூலம் வரும் பிரதிநிதிகள் குறைவாக இருக்க வேண்டும். அதைத்தான் பொதுவாகச் சொல்ல முடியும். அப்படிப்பட்ட நிலை ஏற்பட்டால், ஆரோக்கியமான நிலையில் கருத்துக்களைச் சொல்வதற்கும், தவறுகளைக் கண்டுபிடிக்கவும், வளர்ச்சிக்குத் தேவையான ஆக்கபூர்வமான ஆலோசனைகளைக் கொடுக்கவும் அது உதவியாக இருக்கும். அப்படிப்பட்ட முறையில் இதனுடைய அமைப்புகளின் நடவடிக்கைகளை கவனத்தில் கொண்டு செயல்பட வேண்டும். அந்த முறையில் செயல்பட்டால், அது பயன்பெறும்.

இப்போது இருக்கக்கூடிய மற்ற பல்வேறு பல்கலைக் கழகங்களுடைய நடவடிக்கைகளைப் பார்க்கும்போது, பல பல்கலைக் கழகங்களைப் பற்றி எத்தனையோ விதமான ரிப்போர்ட்ஸ் வருகின்றன. பல்கலைக் கழக ஆட்சிக் குழு அமைப்புகளிலே சரியான நடைமுறைகள் இல்லாமல், நமக்கு ரிப்போர்ட்டுகள் வருகின்றன. உதாரணத்திற்கு, தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளைக்கூட சிண்டிகேட்டில் சமர்ப்பிக்காத பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. அதைப் பற்றி ரிப்போர்ட் வருகிறது. இதற்கெல்லாம் என்ன பரிகாரம், என்ன நடவடிக்கை எடுக்கிறோம் ? அந்தக் கமிட்டிகளில் நடக்கும் விவாதத்தில் பல விவரங்கள் வெளியாகின்றன. பத்திரிக்கைகளில் அவைகள் வெளியாகின்றன. கோவை பாரதியார் யூனிவர்சிட்டி சிண்டிகேட்டில் அப்படி நடந்திருக்கிறது. அப்படிப்பட்ட நிலை புதிதாக அமைக்கக்கூடிய இந்த யூனிவர்சிட்டியில் வரக்கூடாது. ஆரம்ப முதற்கொண்டே தவறான முறைகள் உள்புக இடம் அளிக்காமல், முறையான பங்ஷனிங் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆகவே, ஆட்சி அதிகாரக் குழுக்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆசிரியர்கள் மத்தியிலிருந்தும், பட்டம் பெறும் மாணவர்கள் மத்தியிலிருந்தும் வர வேண்டும். தேர்ந்தெடுக்கின்ற பிரதிநிதிகள் அதிகப்படியாக இருக்க வேண்டும். நியமனம் செய்யப்படுகின்ற பிரதிநிதிகள் குறைவாக இருக்க வேண்டும். வேந்தர், துணை வேந்தர், இணை வேந்தர் ஆகியோர் பலவிதமான அதி

காரங்களை வைத்திருக்கிறார்கள். அவர்கள் பல்வேறு உறுப்பினர்களை நியமனம் பண்ண முடியும். இருந்தபோதிலும் அதற்குச் சரியான ஒரு ஏற்பாடாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் வருவது நல்லது. அந்த முறையில் அந்த யூனிவர்சிட்டி அமைப்பு அமுலுக்கு வரட்டும். அது செயல்படும்போது, மேற்கொண்டு நாம் அனுபவத்தின் மூலம் அது பற்றி விமர்சித்து, மாற்றிக்கொள்ள நடவடிக்கைகளை பின்னால் எடுப்போம் என்று கூறி, முடித்துக்கொள்கிறேன்.

திரு. பி. கே. முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அறிமுகப்படுத்தப்பட்டு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்ற இந்த மருத்துவப் பல்கலைக் கழகத்தினுடைய இந்தச் சட்டத்தின்மீது நான் சார்ந்திருக்கின்ற பார்வார்ட் பிளாக் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உள்ளபடியே நம்முடைய மாநிலத்திலே பல காலங்களுக்குப் பின்னாலே இன்றைக்கு ஒரு மருத்துவ பல்கலைக் கழகம் தேவை என்ற கோரிக்கையின் அடிப்படையிலே அதற்கான கருத்துரு உருவாக்கப்பட்டு அது அமைவதற்கு அனைத்து முயற்சிகளும் நடந்து பூர்வாங்கப் பணிகள் எல்லாம் நடந்து முடிந்து இருக்கின்றன. அப்பேர்ப்பட்ட நிலையிலே, இந்த மருத்துவப் பல்கலைக் கழகம் வருவதிலே நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன். இன்றைக்கு தமிழகத்திலே இருக்கின்ற மருத்துவத்துறை சம்பந்தப்பட்ட அனைத்து மருத்துவமனைகள் மற்றும் இருக்கின்ற மருத்துவ கல்வி ஸ்தாபனங்கள் அத்தனையிலும்சரி இன்னும் ஆராய்ச்சி நிலையங்கள் அத்தனையிலும் இன்றைக்கு இந்த மருத்துவ பல்கலைக் கழகத்திற்குத் தகுதியானதுதானா என்ற கேள்வி எழுந்துகொண்டிருக்கின்றது. அப்பேர்ப்பட்ட நிலை இன்றைக்கு இருந்தாலும் கூட மருத்துவப் பல்கலைக் கழகம் அமைந்த பின்னாலேயாவது அப்பேர்ப்பட்ட நிலைகள் மாறி இந்த மருத்துவப் பல்கலைக் கழகம் அமைந்ததன் மூலமாக இந்தத் துறையின் தரங்கள் எல்லாம் உயர்த்தப்பட வேண்டுமென்ற எண்ணத்தைத்தான் நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு நம்முடைய அரசு தரப்பில் இருக்கக்கூடிய மருத்துவ மனைகள் மட்டுமல்லாமல் மற்றும் இருக்கின்ற இன்ஸ்டிட்டியூஷன்கள் மட்டுமல்லாமல், இங்கே தனியார்கள் மருத்துவ மனைகள் எல்லாம் கூட இன்றைக்கு மருத்துவக் கல்லூரிகளிலே இணைக்கப்பட்டு இருக்கின்றன. அப்படி இணைக்கின்ற நேரத்திலே நம்முடைய அரசு மருத்துவ மனைகள் மற்றும் இருக்கக்கூடிய இன்ஸ்ட்டிடியூட்டிலே இருக்கக்கூடிய வசதிகள்கூட இன்றைக்கு குறைவான அளவிலே இருந்து கொண்டிருக்கிறது. அதுபோலவே தனியார்கள் அமைத்துக்கொண்டிருக்கின்ற மருத்துவ மனை மருத்துவக் கல்லூரிகளில் எல்லாம் அரசாங்கம் இன்றைக்கு பல்கலைக்கழகமாக அறிவித்துக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் கல்லூரிகள் எல்லாம் இணைக்கப்பட வேண்டுமென்றால் அதற்காக கடுமையான சட்ட திட்டங்களிலே உட்படுத்தப்பட்டு இன்னின்ன வசதிகள்



பின்பற்றப்பட்டிருக்க வேண்டும், இவ்வளவு சுகாதார வசதிகள் மாணவர்களுக்கு செய்திருக்க வேண்டும், மேற்படிப்பிலே இருக்கக்கூடியவர்களுக்கு இன்னின்ன வசதிகள் செய்து தரவேண்டும் என்று கடுமையான வரைமுறைகளை தெரிவித்து அவர்களுக்கு அதற்குப்பின்னாலேதான் பரிபூர்ணமான ரெகக்னிஷன் தர வேண்டும் என்ற கோரிக்கையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே போல இன்றைக்கு இருக்கின்ற மருத்துவ மனைகளைப் பார்க்கிறபோது அங்கே வெளியிடங்களிலே இருந்து பிளட் பாங்குகளில் இரத்தம் சேகரிக்கவேண்டுமென்று திட்டங்கள் இருந்தாலும், அந்த திட்டத்தின்படி அந்த சேமிப்பு காலத்திலே ரத்தம் சேமிக்கப்படவில்லை என்று வருத்தத்தை தெரிவிக்கக்கூடிய நோட்டீசைத்தான் நான் அங்கே பார்க்க நேரிட்டது. அதற்குக் காரணம் என்னவென்று சொன்னால் இப்போது நம்முடைய தமிழகத்திலே சில காலங்களுக்கு முன்னாலே பீதி ஏற்படுத்திக்கொண்டிருக்கின்ற '' எய்ட்ஸ் '' நோயை டிடெக்ஷன் செய்யக்கூடிய அந்த செட் இல்லை. அந்த செட் இல்லாத காரணத்தினாலே அங்கே அந்த ரத்தத்தை சேமித்து வைக்க முடியவில்லை. எனவே, அவசரமான நோயாளிகளுக்கு ரத்தம் தேவைப்படுகின்ற நேரத்திலே அந்த ரத்தத்தை உறவினர்களிடத்திலேயிருந்து எடுத்துத்தான் கொடுக்க வேண்டிய நிலைமை இருக்கிறது என்ற வருத்தத்தைத் தெரிவித்திருக்கின்றார்கள். இப்படியே நிலைமைகள் இருக்கின்ற நேரத்திலே '' எய்ட்ஸ் '' பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். நான் இங்கே அதைப்பற்றி அதிகமான பீதியைக் கிளப்பவில்லை. அதைப்போன்றே அதை சமாளிப்பதற்கான வசதிகள் தமிழக மருத்துவ மனைகளிலே இருக்கின்றன என்று கூட சொல்லியிருக்கிறார்கள். அதுபோன்ற அறிவிப்பைக் கூட சொல்லியிருக்கிறார்கள். அதை சமாளிக்கின்ற டிடெக்டிங் செட் கோவையிலே கொடுத்திருக்கலாம். அப்படி '' எய்ட்ஸ் '' நோய் டிடெக்ஷன் செய்யக்கூடிய அந்த செட்ஸ் கொடுக்காத காரணத்தினாலே, அவசரமாக நோயாளிகள் அங்கே வருகின்ற நேரத்திலேகூட அவர்களுக்கு அங்கே ரத்தம் கொடுக்கக்கூடிய உடனடியான வசதி இல்லாமல் இருக்கின்றது. எனவே, அந்த மாதிரியான தன்மையில் ஒரு சாதாரண உதாரணத்தை எடுத்துச் சொன்னேன். அது மாதிரியான சின்ன பிரச்சினைகளில் கூட அந்த மருத்துவமனைகளை நாடி வருகிறபோது அந்த நோயாளிகளுக்கு அது பெரிய பிரச்சினையாக ஆகிவிடுகிறது. அப்படி ஆகிவிடக்கூடாது என்று எடுத்துச் சொல்கிறேன். இன்றைக்கு அமைய இருக்கின்ற மருத்துவப் பல்கலைக்கழகம் சென்னையில் அமைப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். உண்மையிலேயே உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் சென்னையிலேயே இருக்கின்ற காரணத்தினாலே உங்களுடைய வசதிக்காக செய்வதாக இருக்கலாம். ஆனால், இங்கே கோவையிலே நம்முடைய வேளாண்மைப் பல்கலைக் கழகம் இருக்கின்றது. அது போல மதுரையிலே மருத்துவப் பல்கலைச் கழகம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை நான் எடுத்துக்

சொல்ல விரும்புகிறேன். அப்படி அமைகின்ற நேரத்திலே, சென்னையிலே மட்டும் அனைத்து இன்ஸ்ட்டிட்டியூஷன்களும் இருந்துவிடாமல் மதுரைக்கும் பார்த்துக் கொடுக்க வேண்டும் என்றும் அதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். இந்த மருத்துவப் பல்கலைக் கழகம் வருகின்ற நேரத்தில் மருத்துவத்துறை இன்னும் மேம்பட்டு வளர வேண்டுமென்று வாழ்த்துக்களைத் தெரிவித்து அமர்கிறேன்.

[இரவு 7—00]

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மருத்துவக் பல்கலைக்கழகம் அமைவதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வரவேற்கிறேன். ஆனால், அதனை நிர்வகிக்கிற அதிகார அமைப்பைப் பொறுத்த வரையில் ஜனநாயக எல்லைகள் வெகுவாக குறுக்கப்பட்டிருக்கின்றன. அது பொருத்தமாக திருத்தப்பட வேண்டும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குறிப்பாக ஆட்சிக் குழுவுக்கு துணை வேந்தர் உட்பட 14 பேர் இருக்கிறார்கள். 14 பேரில் 9 பேர் நியமன முறையில் வந்து விடுகிறார்கள். 5 பேர் தான் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகின்ற பிரதிநிதிகள். 14 பேரில் 9 பேர் நியமன முறையிலும் 5 பேர் தேர்ந்தெடுக்கப்படுகிற முறையிலும் வருகிறார்கள் என்றால் தேர்ந்தெடுக்கப்படுபவர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கிற நிலையில் நிர்வாகத்தின் ஜனநாயகத்தன்மை வெகுவாக குறைக்கப்பட்டிருக்கிறது என்று தானே அர்த்தம்.

இன்னொரு விஷயம் என்னவென்றால, சென்னைப் பல்கலைக் கழகச் சட்டத்தை எடுத்துக்கொண்டால்கூட அக்காடமிக் கவுன்சிலில் இருந்து 6 பேரும், செனட்டிலிருந்து 4 பேரும், ஆகமொத்தத்தில் 10 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறார்கள். ஆனால், மருத்துவப் பல்கலைக் கழகத்திற்கோ 5 பேர் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் வருகிறார்கள்.

அதுபோல ஆசிரியர்களிலிருந்து 2 பேர் தான் ஆட்சிப் பேரவை உறுப்பினர்களாக வருகிறார்கள். 2 பேர் என்பது சரியல்ல, அதுவும் அதிகரிக்கப்பட வேண்டும். ஏராளமான ஆசிரியர்கள் இருக்கின்ற நிலையில் 2 பேர் மட்டும் தேர்ந்தெடுக்கப்படும் முறை சரியல்ல. அதுபோல எண்ணிக்கையில் மிகவும் குறைவாக இருக்கின்ற முதல்வர்களிலிருந்து 2 பேர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அதுபோல பல்கலைக் கழகப் பேராசிரியர் ஒருவர் என்றால் நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் இன்றைக்கு இருக்கிறார்கள். இந்த ஆசிரியர்களுக்கெல்லாம் பிரதிநிதித்துவம் இல்லை. ஆகவே, ஆசிரியர்களிடமிருந்தும் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இங்கே இடம் பெறச் செய்ய ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு பல்கலைக்



கழக ஆட்சிப் பேரவைக்கும், ஆட்சி மன்றத்துக்கும் ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிற, பங்கு பெறுகிற நிலை இல்லை. இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற சட்டத்திலே எழுத்துப் பிழையா அல்லது வேண்டுமென்றே 'பேராசிரியர்' என்று போட்டிருக்கிறார்களா என்று எனக்குத் தெரியவில்லை. அதிலே பேராசிரியர் என்று தான் இருக்கிறது. சென்னைப் பல்கலைக் கழகச் சட்டத்திலே ஆசிரியர்கள் என்று இருக்கும்போது மருத்துவப் பல்கலைக் கழகச் சட்டத்திலே பேராசிரியர்கள் என்று மட்டும் இருக்கிறது. ஆகவே அதிலே பேராசிரியர்கள் என்பதற்குப் பதில் ஆசிரியர்கள் என்று திருத்தப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மாணவர்களுக்கு இதிலே பிரதிநிதித்துவம் இல்லை. இன்றைக்கு கேரளா, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் மாணவர்களும் பிரதிநிதித்துவம் பெறுகின்ற நிலை இருக்கிறது. இவற்றை முன்னோடிகளாகக் கொண்டு நம் மாநிலத்திலேயும் இதனை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பிராக்சி முறை மிகவும் தவறான முறை. அந்த முறை இங்கே அமுல்படுத்தப்படுகிறது. அந்த முறையை அரசு கைவிட வேண்டும். பிராக்சி முறையை காலத்தே கைவிடாவிட்டால் அந்தத் தவறான முன் உதாரணம் மற்ற பல துறைகளுக்கும் பரவிவிடும் என்பதால் உடனடியாக அரசு அதனை தடுத்து நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சென்னைப் பல்கலைக் கழகச்சட்டத்துக்கும் மருத்துவப்பல்கலைக்கழகச் சட்டத்துக்கும் முக்கியமான ஒரு வித்தியாசம் இருக்கிறது. சென்னைப் பல்கலைக் கழகச் சட்டத்திலே, அதிக எண்ணிக்கையுள்ள 'செனட்' தான் மோர் பவர்புல் உடையது என்கிற நிலை இருக்கிறது. ஆனால் இங்கே சின்டிகேட் தான் மோர் பவர்புல் என்கிற நிலை இருக்கிறது. வெள்ளைக்காரன் ஆண்ட காலத்தில் ஏற்படுத்தப்பட்ட சென்னைப் பல்கலைக் கழகச் சட்டத்தில் கூட செனட்டுக்கு அதிக அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நிலையில் இங்கே சின்டிகேட்டுக்கு, குறுகிய நபர்களைக் கொண்ட சின்டிகேட்டுக்கு, அதிகாரத்தின் எல்லை அதிகமாக கொடுக்கப்பட்டுள்ள நிலையை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வெள்ளைக்காரர்கள் கூட செனட்டுக்கு விரிந்த அளவில் அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதையே கூட நாங்கள் போதாது, தவறு என்று சொல்லுகின்ற நிலை இருக்கும்போது இந்த தவறான சட்டம் மற்ற எல்லா பல்கலைக் கழகங்களுக்கும் அமல்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தத் தவறான முறை அகற்றப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது.)

திரு. க. பாரமலை : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்ற 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக் கழகச் சட்டமுன்வடிவை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். இன்றைக்கு இந்தச் சட்டம் சம்பந்தப்பட்ட காரண காரிய விளக்கத்திலே சொல்லியிருக்கிறபடி தமிழ்நாட்டிலேயிருக்கிற மருத்துவக் கல்லூரிகள், மருத்துவ நிறுவனங்கள், தனியார் மருத்துவக் கல்லூரிகள், இப்படிப்பட்ட எல்லாவற்றையும் ஒன்றாக இணைத்து அவற்றின் மேம்பாட்டுக்காக இப்படிப்பட்ட ஒரு மருத்துவப் பல்கலைக் கழகம் இங்கே அமைவது அவசியம் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டிருக்கிறது. குறிப்பாக இன்றைக்கு 3, 4 மருத்துவக் கல்லூரிகளைச் சேர்த்துத்தான் இந்தப் பல்கலைக்கழகம் அமைக்கப்படுகிறது. பல்கலைக் கழகங்களின் வேலைகள் மிகப்பெரும்பான்மையாக வளர்ந்துவிட்ட நிலைமையில் மருத்துவக் கல்லூரிகளை நிர்வகிப்பதிலும், விரிவாக்கம் செய்வதிலும் பல்கலைக்கழகங்கள் போதுமான அக்கறை எடுத்துக்கொள்ள இயலாத நிலையில் அதற்கென ஒரு தனியான பல்கலைக்கழகம் அமைக்க முன்வந்திருப்பது மிக நல்ல ஒரு செயல் ஆகும்.

இந்தப் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சிப் பகுதிக்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும். ஏனென்றால், புதிய புதிய வியாதிகள் வந்து கொண்டிருக்கின்றன. சுற்றுச் சூழல் காரணமாக புதிய வியாதிகள் பல உருவாகி அவை என்ன என்று கண்டுபிடிக்க முடியாத நிலைமை இருக்கிறது.

பல வியாதிகளுக்கு இன்னும் மருந்துகளே கண்டுபிடிக்கப்படாத நிலை இருக்கிறது. என் பகுதியிலே குறிப்பாக ஒரு மூளைக்காய்ச்சல் நோய் பரவி 20 குழந்தைகள் இறந்து விட்டனர். அதைப்பற்றி மருத்துவ வல்லுநர்களிடம் கேட்ட போது ஜப்பானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஒரு வைரஸ் காரணமாக அந்த நோய் வந்திருக்கிறது என்று கூறினார்கள். அதற்கு இங்கு மருந்து இல்லை; ஜப்பானிலிருந்து வரவழைக்கப்படும் ஒரு மருந்தைத்தான் ஊசி மூலம் போட வேண்டும் என்று சொல்கிறார்கள். அந்த மருந்தின் விலை ரூபாய் 1,000க்கு மேல் ஆகும். மேலும் அதை வரவழைத்து பல நாட்கள் பத்திரப்படுத்தி வைக்க இயலாத நிலை இருக்கிறது என்று சொல்கிறார்கள்.

மூளைக்காய்ச்சல் கூட காச நோயோடு சேர்ந்திருந்தால் அதைப் போக்க வசதி இருக்கிறது. ஆனால், ஜப்பானில் பி வைரஸ் மூலம் வரக்கூடியதை, அதனால் பாதிக்கப்பட்டவர்களை காப்பதற்கு முடியாமல் இருப்பதால் ஆராய்ச்சிகள் செய்து அதன் மூலம் இந்த வியாதிக்கு மருந்து கண்டுபிடிக்கப்படவேண்டும்.



இப்படிக் கண்டுபிடிக்கப்படும் மருந்துகள், சாதாரண மக்கள் கூட வாங்கக்கூடிய விலையிலே கண்டுபிடிக்கப்பட வேண்டும். ஆராய்ச்சி செய்வதற்கு பல்கலைக் கழகம் அமைப்பது நிச்சயம் வரவேற்கத் தக்க ஒன்று. இந்தப் பல்கலைக் கழகத்திற்கு பல்கலைக் கழக மானியக் குழுவின் உதவி பெற்று மருத்துவத் துறை புதிய ஆராய்ச்சிகளைச் செய்வதற்கு இந்த மருத்துவப் பல்கலைக் கழகம் உதவும் வகையிலே செயல்பட வேண்டும் என்று கேட்டு இதனை வரவேற்று அமைகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, அவையின் முன்பு கொண்டு வரப்பட்டிருக்கிற மசோதா, தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக்கழகம் அமைப்பது குறித்து. இதன் மீது கருத்துக்களைத் தெரிவித்த உறுப்பினர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக இதை எல்லா உறுப்பினர்களும் வரவேற்றாலும், சில மாற்றங்கள் ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயராமன் பேசும்போது தரமணியிலே இருக்கிற ஆராய்ச்சிக் கூடத்தைத் தனியாக வைத்திருக்க வேண்டும். மருத்துவப் பல்கலைக் கழகத்தோடு இணைக்கக் கூடாது; அப்படி இணைப்பது பொருந்தாத ஒன்று என்று சொன்னார்கள். அவ்வாதம் சரியானதல்ல. ஆராய்ச்சி நிறுவனத்தை அடிப்படையாக வைத்துத்தான் தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக் கழகத்தையே அமைக்க இருக்கிறோம். அது தனியாக இயங்க முடியாது. அதை பல்கலைக் கழகத்துடன்தான் இணைக்க வேண்டியிருக்கும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

மருத்துவப் பல்கலைக் கழகத்தை அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டு, இரண்டு மூன்று ஆண்டுகளாக யோசித்து, அதற்கு ஒரு குழுவையும் போட்டார்கள். அந்தக் குழுவிலே டாக்டர் வேணுகோபால் அவர்கள், டாக்டர் நடராஜன் அவர்கள், டாக்டர் எஸ். காமேஸ்வரன் அவர்கள், நரம்பியல் நிபுணர் டாக்டர் இராமமூர்த்தி அவர்கள், ஆகியோர் எல்லாம் இந்தக் குழுவிலே அங்கம் வகித்தார்கள். அவர்களையெல்லாம் கலந்து ஆலோசித்து, அவர்களின் ஆலோசனையின் பேரில்தான் இந்தப் பல்கலைக் கழகம் உருவாக்கப்பட இருக்கிறது. இதில் உள்ள எல்லா அம்சங்களும் ஆராயப்பட்டன என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பாரமலை சொன்னதுபோல இந்த மருத்துவப் பல்கலைக் கழகம் ஒரு ஆராய்ச்சி நிறுவனமாகத்தான் இருக்க வேண்டும். மற்ற பல பல்கலைக் கழகங்களைத் துவக்கிய பெருமை மாண்புமிகு தமிழக முதல்வருக்கு உண்டு. தமிழ்நாட்டில் பல வகைகளில் அந்தந்த துறைகள் முன்னேற்றம் அடைந்திருக்கின்றன என்பதை உறுப்பினர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

(இரவு 7–10)

அதுபோல் மருத்துவத் துறையிலும் சிறந்த ஆராய்ச்சிகளை நடத்துவதற்கும், அனைத்துப் பல்கலைக் கழகங்களைக் கொண்டு வந்து இதோடு இணைத்து சிறப்புற அதை இயங்கச் செய்வதற்கும், துணையாக இருக்கும் என்று நம்பித்தான் இதைக் கொண்டு வந்திருக்கிறோம்.

தமிழ்நாட்டில் முதன் முதலாக இதைக் கொண்டு வருவதாக இருந்தது என்றாலும், ஆந்திரத்திலே அவர்கள் அறிவித்து விட்டார்கள். ஆனால் தமிழகத்திற்கும், ஆந்திராவிற்கும் இருக்கின்ற சட்டத்தில் ஒரு அடிப்படை மாற்றமே இருக்கிறது. ஆந்திர முதலமைச்சர், அவரே அதற்கு சான்சலராக இருக்க வேண்டுமென்று சட்டத்தில் இயற்றியிருக்கிறார்கள். ஆனால் நமது முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், தான் தேவையில்லை, மற்றைய பல்கலைக் கழகங்களுக்கு இருக்கின்ற விதிமுறையையே இதற்கும் கையாளலாம் என்றும் சொல்லி, இப்பொழுது ஆளுநரே இதற்கு வேந்தராக இருக்கலாம் என்று சொல்லி, அதை அப்படியே போட வேண்டுமென்று சொல்லி விட்டார்கள். எனவேதான் அந்தச் சட்டத்திற்கும் இந்தச் சட்டத்திற்கும் சிறு மாற்றம் இருக்கிறது.

பேசிய உறுப்பினர்களில் உறுப்பினர் ரமணி அவர்களும், சுப்பராயன் அவர்களும் ஒரு கருத்தைத் திரும்பத் திரும்பச் சொன்னார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைவிட நியமன உறுப்பினர்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். நியமன உறுப்பினர்கள் இதிலே அதிகமாக இருப்பது தெரிந்துதான் போட்டிருக்கிறோம் என்பதை ஒத்துக் கொள்கிறேன். ஏனென்று கேட்டால் இது குழந்தை. தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக் கழகம் என்கின்ற குழந்தையைப் பெற்றெடுக்கின்ற தாயாக முதலமைச்சர் இருக்கிறார்கள். பெற்று எடுத்ததற்குப் பிறகு இந்தக் குழந்தையைத் தன் மடியிலே வைத்து வளர்ப்பதுதான் சரியாக இருக்குமே தவிர, மாற்றான் மடியிலே வைத்துவிட்டு பரீட்சை பார்ப்பதற்கு இந்த அரசு தயாராக இல்லை. ஆனால் எதிர்காலத்தில் தேவைப்படுமேயானால் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வரலாம், அதைப் பற்றிப் பின்னால் பரிசீலிக்கலாம். மருத்துவப் பல்கலைக் கழகத்தைக் கொண்டு வர வேண்டுமென்ற அக்கறையோடு கொண்டு வருகின்ற இந்த அரசு, நியமன உறுப்பினர்களை வைத்துக் கொண்டு, மருத்துவப் பல்கலைக் கழகத்திற்கு இருக்கின்ற சிறப்புக்களை ஒருக்காலும் அழித்து விடாது என்பதில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நம்பிக்கையிருக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



மாணவர்களுக்கெல்லாம் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும்; ஆசிரியர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும், கொடுத்திருக்கின்ற பிரதிநிதித்துவம் போதாது என்று மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் சொன்னார்கள். அந்தப் பிரதிநிதித்துவம் கொடுப்பதா இல்லையா என்பதைப்பற்றி ஆரம்ப காலத்திலேயே இத்தகைய ஆராய்ச்சி நமக்குத் தேவையில்லை. முதலிலே பல்கலைக் கழகம் உருவாகி வளர்ந்ததற்குப் பிறகு எப்படியெப்படி, யார்யாருக்குக் கொடுக்கலாம் என்பதைப் பற்றி, பின்னால் பார்த்துக் கொள்ளலாம்.

இந்தச் சட்டம், நாம் நிறைவேற்றியதோடு மட்டும் போகாது; மத்திய அரசாங்கத்தினுடைய அனுமதியையும் பெற்றதற்குப் பிறகுதான் சட்டம் சட்ட வடிவம் பெறப் போகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள், பெருவாரியான உறுப்பினர்கள் வரவேற்றிருக்கிறார்களே தவிர, இந்தப் பல்கலைக் கழகத்தை யாரும் எதிர்க்கவில்லை. அதற்காக நான் அவர்கள் அத்தனை பேர்களுக்கும் அரசுத் தரப்பில் பாராட்டையும், நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மசோதாவை நிறைவேற்றித் தருமாறு தங்கள் மூலம் இந்தப் பேரவையை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஒரேயொரு விளக்கத்தை நான் மாண்புமிகு அமைச்சர் மூலமாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இந்தச் சட்ட முன் வடிவினுடைய முப்பதாவது பிரிவில் ஃபேகல்டீஸ் பயோ மெடிகல் என்ஜினியரிங் பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை. எப்படி அக்ரிகல்சுரல் யூனிவர்சிட்டியிலே, அக்ரிகல்சுரல் என்ஜினியரிங் என்ற ஃபேகல்டி இருக்கிறதோ அதே போல் இதற்கும் இப்படி பயோ மெடிகல் என்ஜினியரிங் கட்டாயம் வேண்டும். காரணம், இந்த மருத்துவத் துறையிலே நிறைய மெடிகல் எக்யூப்மெண்ட்ஸ் அண்ட் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் பயன்படுத்துகிறோம். அதற்காக அப்படிப்பட்ட அந்த 30-வது பிரிவில் பயோ மெடிகல் என்ஜினியரிங் ஃபேகல்டியை உருவாக்குவதற்கு அமைச்சரவர்கள் முயற்சிகளை மேற்கொள்வார்களா என்ற அந்த ஒரு தகவலை மட்டும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இதைப்பற்றி நாம் நிச்சயமாக யோசிக்கலாம். அப்படி மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்ட பயோ மெடிகல் என்ஜினியரிங் ஃபேகல்டி ஆரம்பிப்பதைப்பற்றி உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்கலாம். அதில் ஒன்றும் தவறு இல்லை. எனவே, அப்பொழுது நிச்சயமாக அந்தத் துறையை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கும்,

[1987 மே 8

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1987) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 9 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு—10

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"பிரிவு 10 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்."

THE HON. THIRU P. U. SHANMUGHAM : Mr. Deputy Speaker, I move the following amendment :

"In sub-clause (1) of clause 10, the expression 'of eminent Medical Scientists' shall be omitted"

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 10 திருத்தப் பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு—11.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"பிரிவு 11 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்."



1987 மே 8]

THE HON. THIRU P. U. SHANMUGHAM : Mr. Deputy Speaker, I move the following amendment :

For sub-clause (2) (i) of clause 11, the following shall be substituted ;-

"(i) a salary of Rs. 5,000 (Rupees five thousand only) per mensem or such higher salary as may be fixed by the Government from time to time; and"

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 11 திருத்தப் பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவுகள் 12 முதல் 68 வரை, மற்றும் அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1987—ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக் கழகச் சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1987) திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப் பெற்றது.

**(ஈஈ) தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1987.**

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1987) **ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

** 1987 ஆம் வருடம் மே மாதம் 4 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டே இரண்டு விஷயங்களை மட்டும் சொல்லி முடிக்க விரும்புகிறேன். தனியார் கல்லூரிகளை முறைப்படுத்துகிற நேரத்தில் தனியார் கல்லூரிகளுக்கு இடையில் நிலவுகிற பல்வேறு முறைகேடுகளையும், ஒழுங்கீனங்களையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இதுபற்றி அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். சேலம் சவுடேகர் கல்லூரி மற்றும் சென்னை தியாகராயர் கல்லூரிகளைப் பொறுத்தவரையில் அரசு முயற்சி எடுத்து நோட்டீஸ் கொடுத்தும் கூட சட்டத்தின் சந்து பொந்துகளைப் பயன்படுத்திக் கொண்டு அவர்கள் தடை ஆணைகளைப் பெற்றுக் கொண்டு அரசு தன்னுடைய நிர்வாகத்தை மேற்கொள்ள முடியாமல் தடுக்கக்கூடிய வகையில் பல்வேறுபணிகளைத்தொடர்ந்து செய்து கொண்டே இருக்கிறார்கள். இந்தக் காலதாமதம் தொடர்ந்து நீடிப்பதன் மூலம் அந்த இரண்டு கல்லூரிகளிலும் இருக்கக் கூடிய ஆசிரியர்களும், மாணவர்களும் மிகக் கடுமையாகப் பாதிக்கப்படுகிறார்கள்.

குறிப்பாக சேலம் சௌடேஸ்வரி கல்லூரியைப் பொறுத்த வரையில் அங்கே நடைபெறுவது நிர்வாகம் என்றே சொல்ல முடியாத அளவுக்கு கடுரமான தாக்குதல்கள் பேராசிரியர்கள் மீதும், மாணவர்கள் மீதும் தொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரே ஒரு விஷயத்தை மட்டும் நான் வலியுறுத்த விரும்புகிறேன். நிலைமையின் தன்மையை உணர்ந்து மிக விரைவாகச் செயல்பட்டு தடை ஆணைகளை அகற்றி, இந்த இரண்டு கல்லூரிகளையும் உடனடியாக அரசு மேற்கொள்ள வேண்டுமென்றும், அதற்குரிய நடவடிக்கையை விரைவாக எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

கோவை கொங்கு நாட்டுக் கலைக் கல்லூரியைப் பொறுத்த வரையில் அங்கு சில பிரச்சினைகள் இருக்கின்றன. மாணவர்களின் மதிப்பெண்களை முதல்வர் அவர்கள் மாற்றிப் போட்டார்கள் என்று புகார் கொடுத்ததற்காக இரண்டு பேராசிரியர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். தவறான முறையில் நடந்து கொண்ட ஒரு முதல்வரைப் பற்றி யுனிவர்சிட்டிக்குக் கொடுக்கப்பட்ட புகாரின் மீது நடவடிக்கை எடுக்கின்ற வகையில் குற்றம் புரிந்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் குற்றம் புரிந்ததைச் சுட்டிக் காட்டியதற்காக அந்த இரண்டு பேராசிரியர்களையும் சஸ்பெண்ட்செய்திருப்பது சரியல்ல. ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதுடன் அந்த இரண்டு பேராசிரியர்கள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டு அளிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்ய வேண்டுமென்றும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



தனியார் கல்லூரிகளைப் பொறுத்த வரையில் பரவலாக ஒழுங்கீனங்கள் நடைபெற்று வருகின்றன என்ற அரசின் கருத்தினைப் பொறுத்த வரையில் நான் முழுமையாக உடன்படுகிறேன். அவற்றை முறைப்படுத்துவதற்குரிய வகையில் எடுக்க வேண்டிய இன்னும் தேவையான பொருத்தமான நடவடிக்கைகள் பற்றியும் அரசு சிந்தித்து தனியார் கல்லூரியின் நிர்வாகத்தின் தங்கு தடையற்ற அராஜகப் போக்கைக் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கையை அரசு தொடர்ந்து மேற்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தி, முடிக்கிறேன்.

(இரவு 7-20)

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் முறைப்படுத்தல் திருத்தச் சட்டத்தின் காரண நோக்க விளக்கங்களிலே, 'சில தனியார் கல்லூரிகள் சம்பந்தப்பட்ட கல்வி அமைப்புகள் 1976 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) சட்டத்தினால் (குடியரசுத் தலைவரின் சட்டம் 19/1976) அல்லது அதன் கீழ் தங்கள் மீது விதிக்கப்பட்ட கடமைகளை ஆற்றாமலும் தங்கள்பால் ஒப்படைக்கப்பட்ட பணிகளைப் புரியாமலும் புறக்கணிப்பு செய்ததனால், மேற்சொன்ன சட்டத்தின் 30 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செலுத்தி, அத்தனியார் கல்லூரிகளின்நிருவாகமானது அரசினால் மேற்கொள்ளப்பட்டது. மேலும்அதிக பட்சம் அந்தத் தனியார் கல்லூரிகளின் நிருவாகத்தை மேற்கொள்ள அதிக பட்ச கால அளவு ஆறு ஆண்டுகளிலிருந்து பத்தாண்டுகளாக உயர்த்தவும் அதன்படியே சட்டத்தினைத் திருத்தவும் அரசு முடிவு செய்துள்ளது' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இது முக்கியமாக வரவேற்கத் தக்கது. 6 ஆண்டுகளிலிருந்து 10 ஆண்டுகளாக அவற்றின் நிர்வாகத்தை அரசு எடுத்துக்கொள்ளும் என்பது நிச்சயமாக வரவேற்கத்தக்கது. நிர்வாகம் சீர்கெட்டு மிகவும் பாதிக்கப்பட்டு மோசமான ஒரு நிலைமை ஏற்பட்டதற்குப் பிறகு அதை ஒழுங்கு படுத்துவதற்கு அந்த நிர்வாகத்தை அரசு எடுத்து 6 ஆண்டுகள் நிர்வகிப்பதற்கு பதிலாக மேலும் ஒரு 4 ஆண்டுகள் நிர்வகித்து அந்த நிர்வாகத்தைசீராக்கி செம்மையாக்கி ஒழுங்குபடுத்தியதற்குப் பிறகுஅதைத்தனிநபரிடம் ஒப்படைக்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறது என்பது தவிர்க்கப்பட வேண்டும். அது நீடிக்கக் கூடாது. ஏனென்றால் அப்படி ஒரு சூழ்நிலை ஏற்பட்டதற்குப் பிறகு 10 ஆண்டுகள் மக்களுக்கு வரிப் பணத்திலிருந்து செலவு செய்து செம்மை படுத்தியதற்குப்

பிறகு அந்த நிர்வாகத்தை யார் சீர்குலைத்தார்களோ, நாசப்படுத்தினார்களோ தங்களுடைய கடமைகளை நிறைவேற்றாமல் இருந்தார்களோ அவர்களிடமே திருப்பிக் கொடுக்கக் கூடிய சூழ்நிலை ஏற்படுவது என்பது சரியானது அல்ல, தவிர்க்கப்பட வேண்டும். ஆகவே பத்தாண்டுகள் என்பது இல்லாமல் நிரந்தரமாகவே அரசின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வருவதற்கு அரசு முயற்சிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

ஒன்றிரண்டு நிர்வாகங்கள் சிறப்பாகவும், கடமை உணர்வோடும், நல்ல எண்ணத்தோடும், சமுதாயத்திற்கு சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடும் சிறப்பாக நடக்கின்றன. ஆனால் பெரும் பகுதியினர் அதை ஒரு வியாபாரமாகவே நடத்தி அதிலே வருவாய் வரக்கூடிய அளவுக்கு வருமானத்தை பெற்றுக்கொண்டதற்குப் பிறகு நிர்வாக அமைப்பை சீர்குலைத்துப், போட்டு விட்டுப் போகிறார்கள். எனவே தான் அதை முழுவதுமாக எடுத்துக்கொள்வதோடு நிரந்தரமாக எடுப்பதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டும்.

இன்றைக்கும் கூட கமுதியிலே இருக்கக்கூடிய முத்துராமலிங்கத்தேவர் நினைவுக் கலைக் கல்லூரிக் கட்டிடங்கள் பூராவும் இடிந்து விழக்கூடிய நிலைமை ஏற்பட்டதற்குப் பிறகும் நிர்வாகம் அதை கவனிக்காமல் இருந்ததினால் குடிமக்களே சேர்ந்து அதை எடுக்க வேண்டும் என்று வற்புறுத்தி, அதற்குப் பிறகு அரசாங்கத்தினுடைய வேறு ஒரு கட்டிடத்திற்குச் சென்றாலும் கூட அந்தக்கட்டிடத்தையும் காதி துறையினர் காலி செய்ய வேண்டுமென்று கூறிவிட்டக் காரணத்தாலே கல்லூரியை நடத்துவதற்குக் கூட இடம் இன்றி இருக்கிற நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட கல்லூரிகளை அரசினுடைய நிர்வாகத்தின் கீழ் கொண்டு வருவதற்கான முயற்சிகளை நாம் செய்யும்போது பத்தாண்டுகள் மட்டும் அல்லாது நிரந்தரமாக எடுப்பதற்குரிய முயற்சிகளை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் விசேஷமாக கவனம் செலுத்தி எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். அப்படி எடுக்கப்பட்ட கல்லூரிகளிலே அமைக்கப்பட்ட கமிட்டிகள், அதனுடைய உறுப்பினர்களுடைய எண்ணிக்கை உச்ச வரம்பே இல்லாமல் இருக்கிறது. எவ்வளவு பேர் வேண்டுமானாலும் போடலாம் என்ற நிலை இருக்கிறது. அதற்கு இவ்வளவு பேர்தான் இருக்க வேண்டும் என்ற வரையறையும் நிர்ணயிக்க வேண்டும்.

அதோடு மட்டும் அல்லாமல் ஆசிரியர்களை அதிகப்படுத்திக் கொடுப்பதற்கும்மாணவர்களுடைய பிரதிநிதிகள் அந்தக்குழுவிலே இடம் பெறுவதற்கான முயற்சிகளை செய்வதற்கான முறையில் சட்டத்திருத்தம் கொண்டுவர அரசு முயற்சிக்க வேண்டும்.



அதோடு மட்டுமல்லாமல் அந்தக் கல்லூரிகள் எவ்வளவு மோசமாக செயல்பட்டாலும், பாதிக்கப்பட்டாலும் தங்களது கடமைகளை சரிவரச் செய்யாமல் இருந்தாலும்கூட சிறுபான்மையினர் என்ற நிலையிலே அவர்கள் தப்பித்துக் கொள்வதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஆனால் கல்வி என்பது அனைத்து மக்களுக்கும் பொதுவானது. ஆகவே, அப்படி பாதிக்கப்பட்ட கல்லூரி மூலம் எதிர்கால தலைமுறையினர் உருவாகக்கூடாது என்று பார்க்க வேண்டுமே தவிர சிறுபான்மையினர் என்ற முறையிலே தப்பித்துக் கொள்வதற்கான வாய்ப்பை குறைக்க வேண்டும். அவர்கள்அப்படிதப்பித்துக்கொள்ளாமல்இருப்பதற்கு சமீபத்திலே ஆந்திர உயர்நீதி மன்றத்தினுடைய தீர்ப்பையும் கேட்டு அரசு பரிசீலனை செய்து முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனியார் கல்லூரிகளில் சில நிர்வாகத்தை செம்மையாக நடத்தாத காரணத்தால் பெற்றோர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்களிடமிருந்து அரசுக்குப் புகார்கள் வந்ததன் அடிப்படையில் அரசு அவற்றிடமிருந்து நிர்வாகத்தை மேற்கொண்டது. ஆனால் 5 ஆண்டுகள், 6 ஆண்டுகள் நிர்வாகப் பொறுப்பிற்குப் பிறகும் கூட இன்னும் சில காலம் அவை அரசினுடைய நிர்வாகத்தில் இருக்கிறபோது மாணவர்கள், மக்களுக்கு நல்ல பயனை அளிக்குமென்ற நோக்கத்தோடு இந்தச் சட்டமுன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு சுப்பராயன் அவர்கள் பேசுகிறபோது தியாகராசர் மற்றும் சௌடேஸ்வரி கல்லூரிகளைப்பற்றிச் சொன்னார்கள். சட்டத்தில் இருக்கிற சந்து பொந்துகளை வைத்து அவர்கள் நீதி மன்றத்தை நாடி காலத்தைக் கடத்துகிறார்கள் என்று கோடிட்டுக் காட்டினார்கள். இயற்றப்பட்ட சட்டம் சரியானது என்று தியாகராசர் கல்லூரியைப் பொறுத்தவரையிலும் உச்ச நீதி மன்றத்தில் ரிட்டிலே தீர்ப்பு வழங்கப்பட்டது. ரிட் அப்பீலுக்குச் சென்றார்கள். தடை வாங்கினார்கள். ரிட் அப்பீலிலும் சட்டம் சரியானதென்று தீர்ப்பு வழங்கப்பட்டது. தற்போது உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள்.

சௌடேஸ்வரி கல்லூரியைப் பொறுத்தவரையிலும் உயர்நீதி மன்றத்தில் சட்டம் சரியானது என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. அதற்குப் பிறகு சிட்டி சிவில் கோர்ட்டிலே போய் ஒரு ஸ்டே வாங்கியிருக்கிறார்கள். இது முறையானதல்ல என்பதை எடுத்துச் சொல்லி, நீதிமன்றத்தில் அதை வெகேட் செய்ய நடவடிக்கையெடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சட்டத் திருத்தத்தைப் பொறுத்த வரையிலும் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் நலம் பயக்கும் வகையில் கொண்டு வரப்பட்ட சட்டமென்ற காரணத்தால், இதனை அவை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி :

1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (முறைப் படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1987) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும் .:''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற் றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவை யின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

'' 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1987) நிறைவேற்றப் பெற வேண்டும். ''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(உ) சட்ட முன்வடிவின் மீதான ஆய்வு தள்ளி வைக்கப் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு :

பேரவையின் முன் அனுமதியுடன் சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1987-ம், சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 23/1987-ம் ஒத்திவைக்கப்பெற்று நாளை எடுத்துக்கொள்ளப்படும்.



6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஊ) தொழு நோயாளிகள் (தமிழ்நாடு நீத்தறவு) சட்ட முன்வடிவு, 1987

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்:

''1987 ஆம் ஆண்டு தொழு நோயாளிகள் (தமிழ் நாடு நீத்தறவு) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 18/1987)* ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை வரவேற்கிறோம். ஏற்கெனவே இந்த தொழு நோய் சம்பந்தமாக இருந்த எண்ணங்களை மாற்றக் கூடிய முறை யில் புதிய நவீன மருந்துகளும், நவீன ஏற்பாடுகளும் வந்ததற்குப் பிறகு இப்போது இந்த நோய் பற்றியுள்ள அந்தத் தன்மையே மாறியிருக்கிறது என்று இந்தச் சட்டத்தில் கூறப்பட்டிருக் கிறது. இந்த நோயை மாற்றுவதற்கு என்னென்ன நடவடிக்கை களை அரசு இந்தச் சட்டத்தின் படி எடுக்க விரும்புகிறது, என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைப்பற்றி ஒரு சில விளக்கங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்தால் அது பயனளிக்கக்கூடிய முறையில் அமையும்.

இந்த நோயைப் பற்றி மக்களிடம் ஏற்கெனவே ஒரு தவறான எண்ணம் ஏற்பட்டிருக்கிறது என்ற காரணத்தால் இதற்கு என் னென்ன முறையில் வைத்திய வசதிகள் கிடைக்குமென்றும், அந்த வசதிகளை எங்கெங்கே பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதற்கு விரிவான பிரச்சாரத்தை செய்ய வேண்டும். சில நோய்களைப் பொறுத்த வரையில் பப்ளிக் ஹெல்த் டிபார்ட்மென்டில் சினிமாக்கள் போடப்படுகின்றன.

இந்த நோய் சம்பந்தமாகவும் அப்படிப்பட்ட பிரச்சாரங்களை ஏற்படுத்தி, மக்களிடையே இந்த நோயை வைத்தியம் செய்து மாற்றமுடியுமென்ற எண்ணத்தை ஏற்படுத்துவதற்கும், அந்த முறையில் வைத்தியத்தை நாடுவதற்கும், வைத்திய வசதிகள் கிடைக்கக் கூடிய முறையில் நடவடிக்கைகளை எடுக்க வேண்டு மென்று கேட்டுக் கொண்டு இந்தச் சட்டத்தை வரவேற்கிறேன்.

*1987 ஆம் வருடம் மே மாதம் 5-ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[இரவு 7-30]

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழு நோய் ஒரு காலத்திலே பயங்கரமாக இருந்தது. சிகிச்சையே இல்லை என்று அச்சப்பட்டுக் கொண்டு இருந்த காலம் ஒன்று இருந்தது. ஆனால் மருத்துவம் வளர்ந்திருக்கிற இந்தக் காலத்தில், அது தீர்க்கக்கூடிய வியாதி, குணப்படுத்தக்கூடிய வியாதி என்றெல்லாம் ஆராய்ச்சி மூலம் தெளிவுப்படுத்தப்பட்டு, குணப்படுத்தப்பட்டதற்குப் பிறகுதான் இந்தச் சட்டத்தை நாம் நீக்குகிறோம், சட்டத்திலிருந்து எடுத்து விடுகிறோம். இந்தச் சட்டம் முன்பு நிறைவேற்றப்பட்டது. மத்திய அரசாங்கச் சட்டமாக இருந்தாலும் இது மாநில அரசின் பட்டியலிலே வருவதால், நாம் தான் இந்தச் சட்டத்தை விலக்க வேண்டும். விலக்கியிருக்கிறோம்.

இந்த நோயைப் பொறுத்த வரையில், தமிழ்நாட்டில் தென் ஆர்க்காடு, தர்மபுரி, மற்றும் சேலம் போன்ற மாவட்டங்களில் பரவலாக இருக்கிறது என்பது புள்ளிவிவரங்களிலிருந்து தெரிகிறது. இந்த நோயைத் தீர்ப்பதற்காக, தென் ஆர்க்காட்டிலேயும் சேலம் மாவட்டத்திலேயும் ஏற்கெனவே இருந்து வருகிற டானிடா திட்டத்தின் கீழ் இதற்கு தனியாக மருத்துவ வசதிகள் செய்யப்பட்டு இருக்கின்றன.

இதை விட அடிப்படையாக இருப்பது இன்னொன்று. மாணவப் பருவத்திலேயே இந்தப் பிள்ளைகளுக்கு இந்த நோயின் அறிகுறி இருக்கிறதா என்று பரிசோதிப்பதற்காக, கடந்த ஆண்டு 64 லட்சம் பள்ளி மாணவர்களைப் பரிசோதனை செய்தார்கள். அதிலே 14 ஆயிரம் மாணவர்களுக்கு இந்த நோயின் அறிகுறி இருப்பதாகத் தெரிந்திருக்கிறது. முறையாக அவர்களுக்கு வைத்தியம் செய்வதற்காக அடையாள அட்டைகள் கொடுத்து, வைத்தியம் செய்து கொண்டு வருகிறோம். இந்தப் பரிசோதனை தொடர்ந்து நடக்கும் என்பதை உறுதியாகத் தெரிவிக்கிறேன்.

இதைப்பற்றி ஓர் ஆராய்ச்சி மாநாடு, ஆராய்ச்சிக் கூடம் செங்கற்பட்டுக்குப் பக்கத்திலே இருக்கிற திருமணியிலே நடைபெற்றது. அந்த மாநாட்டிற்குச் சென்று நானும் கலந்து கொண்டேன். ஆராய்ச்சியாளர்கள் சொல்கிற முடிவு, கி.பி. 2000-மாவது ஆண்டு வரும்போது, தமிழ்நாட்டில் ஒரு தொழு நோயாளி கூட இருக்கக்கூடாது, இருக்கமாட்டார்கள் என்ற உத்தரவாதத்தை அளித்திருக்கிறார்கள். அதற்காக மருந்துகள் இலவசமாகத் தரப்பட்டு இருக்கின்றன. தருகிறோம். இந்த நோயின் அடையாளத்தைக் கண்டுபிடிப்பதற்காக கிராமங்கள் தோறும் அங்கேயிருக்கிற பாரா-மெடிக்கல் ஆபிசர்ஸ், அங்கேயிருக்கிற சப்பார்ட்டினேட் ஊழியர்கள், சென்று கண்காணித்து வருகிறார்கள். தேவைப்பட்டால், மருத்துவ, டாக்டர்கள் சென்று பார்த்து வருகிறார்கள்.



the Multi drug theraphy is latest method of treatment and is very effective என்ற குறிப்பை அனுப்பியிருக்கிறார்கள். இப்போது புதிய மருந்துகள் கண்டு பிடிக்கப்பட்டு இருக்கிற காரணத்தால், இது விரைவிலேயே குணப்படுத்தக் கூடிய வியாதி, இதைக் குணப்படுத்தலாம். மடங்கிவிட்ட விரல்களை நிமிர்த்த முடியும். குறைந்து விட்ட விரல்களைச் சரி செய்து, அதை விரலாக, சரியாக ஆக்க முடியும். முகம் எல்லாம் பழுத்துப் போய் இருந்தாலும் கூட, சாதாரணமாக ஆக்குவதற்கு இப்போது வைத்திய வசதிகள் எல்லாம் இருக்கின்றன என்ற தைரியத்தில்தான் இந்தச் சட்டத்தை நாம் திரும்பப் பெறுகிறோம். இந்தச் சட்டத்தைத் திரும்பப் பெறுவதினுடைய அடிப்படை நோக்கமே, இந்த வியாதிக்கு உட்பட்டவர்களுக்கு தைரியம் கொடுக்கவும், வைத்தியம் செய்து கொள்ளவும்,இதை ஒரு தொத்து வியாதி என்று சொல்லி மக்கள் தூரத்திலேயே அவர்களை ஒதுக்கி வைத்துக் கொள்ளத் தேவையில்லை, சமுதாயத்தில் அவர்களை தள்ளி வைக்க வேண்டிய அவசியமில்லை என்று சொல்லி, அவர்களுக்கு எல்லாம் வைத்திய வசதி செய்வதற்கும் இந்தச் சட்டத்தை எடுக்கிறோமோ தவிர, வேறு அல்ல என்பதைத் தெரிவித்துக் கொண்டு, வாபஸ் வாங்குகிற இந்தச் சட்டத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று தங்கள் மூலம் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"1987 ஆம் ஆண்டு தொழு நோயாளிகள் (தமிழ்நாடு நீத்தறவு) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 18/1987) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன் வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1987 ஆம் ஆண்டு தொழு நோயாளிகள் (தமிழ்நாடு நீத்தறவு) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 18/1987) நிறைவேற்றப் பெற வேண்டும்.''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

### (ஊஊ) மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 21/1987)** ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

திரு. வை. பாலச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு தவறைச் சுட்டிக்காட்டுவதற்காக மட்டும் நான் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தச் சட்ட முன் வடிவினுடைய ஆங்கில நகலும், அதனுடைய தமிழ் நகலும் தரப்பட்டு இருக்கின்றன. அதிலே, ஆங்கிலத்திலே சொல்லப்பட்டு இருப்பதற்கும், தமிழிலே சொல்லப்பட்டு இருப்பதற்கும் மொழி பெயர்ப்பிலே ஒட்டு மொத்தமான, அடிப்படையான வேறுபாடு இருக்கிறது. 162ஏ செக்ஷன் இன் இங்கிலீஷ். 162-A "Planting and preservation of avenue trees-- The Municipal Council shall, at the cost of the municipal fund cause trees to bc planted at all convenient places on the sides of all public streets.... என்று இருக்கிறது. அதாவது தெருக்களினுடைய இருமருங்கிலும் வசதியான இடமாகப் பார்த்து மரங்களை நடவேண்டுமென்று இருக்கிறது. ஆனால் தமிழிலே சொல்லப்படுகின்றபோது ஒட்டு மொத்தமாக அந்தப் பொருளே மாறி விடுகிறது. அதிலே சொல்லப்பட்டிருப்பது, மரம் சம்பந்தமானவை நகராட்சி நிதி செலவிலே, எல்லா பொது சாலைகளின் பக்கங்களிலும், எல்லா வசதியான இடங்களிலும் மரங்களை நடப்படசெய்யவேண்டுமென்று இருக்கிறது. ஆக, எல்லா வசதியான இடங்களிலும், பிளஸ் இந்த சாலைகளினுடைய இருமருங்கிலும் என்று இருக்கிறது. ஆனால் ஆங்கிலத்திலே இருப்பதுதான் will be the official version after it is duty passed. என்று இருந்தாலும்கூட What was the intention of the Legislature. என்ற ஒரு கேள்வி நீதிமன்றத்திலே நாளைக்கு வரும் என்றால் அன்றைக்கு intention of legislature--ஐ நாம் சுட்டிக்காட்டுவதற்காக

**1987-ஆம் வருடம் மே மாதம் 7 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



தமிழிலே இருக்கிற் அந்த நகலை நாம் நீதிமன்றத்திலே பயன்படுத்த முடியும். அந்த நிலைமை வருமேயானால் intention of legislature ஒன்று வடக்காவும், ஒன்று தெற்காகவும் இரு வேறு திசைகளில் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே இது ஒரு டோட்டல் கேர்லஸ்னெஸ் வந்த ஒரு தவறாக இருந்தாலும் கூட தமிழிலே இருக்கிற மொழியாக்கத்தை மாற்றவேண்டுமென்ற வேண்டுகோளோடு அதை நான் வரவேற்று அமர்கிறேன்.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நகரங்களில் நாளுக்குநாள் அதிகரித்து வரக்கூடிய வாகனப் போக்குவரத்து, அதனால் வரக்கூடிய சுற்றுப்புற சூழ்நிலை கெடுவதைத் தடுப்பதற்கு, மரங்களை நட்டு ஒரு நல்ல காற்றோட்டத்தைக் கொண்டு வருவதற்கான நோக்கத்தோடு இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அது வரவேற்கத்தக்கது. ஆனால் அதே நேரத்திலே இந்த மரங்களை நகரங்களிலே நடும்போது, பொதுவாக மரங்களை அதிகமாக நட்டுவிடவேண்டுமென்ற ஆர்வத்தில் மரங்களை நட்டு, மேலே இருக்கக்கூடிய மின்சார சாதனங்களுக்கு எதிராக எல்லா இடங்களிலும் நட்டு, பிறகு அது பயனற்றுப் போகக்கூடிய அளவிலே அல்லது அண்டர்-கிரௌண்ட் மின்சார லைன் இருக்கக்கூடிய இடங்களிலே மரங்களினுடைய வேர்களெல்லாம் சென்று அதைப் பாதித்து இதைவிட மோசமான பாதிப்புகளை உண்டாக்கக்கூடிய நிலையும், அந்தமாதிரி போக்குவரத்துக்கு இடையூறு இருக்கக்கூடிய முறையில் எல்லா இடங்களிலும் நட்டுவிடுவது என்பதோடு இல்லாமல் அவைகளை சிறப்பான முறையில் பார்த்துக்கொள்ள வேண்டுமென்பதோடு, இருக்கக்கூடிய மரங்கள் இப்போது ஏராளமாக வெட்டப்படுகின்றன. அவைகளை வெட்டாமல் தடுப்பதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டும். நட்டு பயிரிடுவதைவிட வெட்டாமல் தடுப்பது என்று, இதிலே ஒரு வரியை சேர்த்துக்கொள்வது என்பதுகூட பொருத்தமாக இருக்கும். இதை அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, மேலும் இன்னொன்று. இந்த மரங்களை நடக்கூடிய முழு பொறுப்பையும் அந்தந்த நகராட்சிகள் தங்களுடைய நிதியிலிருந்து செய்யவேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. எப்படி சமூகக் காடுகளை வளர்ப்பதற்கு மத்திய அரசு என். ஆர். ஈ. பி. யிலே நிதி கொடுத்து உதவி செய்கிறதோ அப்படி நகரங்களிலே மரங்களை வளர்ப்பதற்கான நிதி முழுவதையும் மாநில அரசு உதவி செய்து நகரங்களிலே மரங்களை உண்டாக்குவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, நல்ல காற்றை வர வைப்பதற்கு மரங்களை நடக்கூடிய நேரத்தில், வாகனப்போக்குவரத்து மட்டுமல்லாமல், வாகனங்களைப் பழுது பார்க்கக்கூடிய இடங்கள் என்ற முறையில் தெருவுக்கு தெரு நகரங்களில் நடு ரோட்டிலே போட்டு அந்தச் சுற்றுப்புற சூழ்நிலையை கெடுக்கக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. அவைகளையெல்லாம் தடுப்பதன்

மூலமாகத்தான் நகர்ப்புறத்தினுடைய சுற்றுப்புறச் சூழ்நிலையைப் பாதுகாப்பதற்கு முடியும் என்பதை கணக்கில் எடுத்துக்கொண்டு, அரசின் சட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது, நடைமுறைப் படுத்தவேண்டுமென்று கேட்டு நான் முடிக்கிறேன்.

*திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு பேரவையின் துணை நாயகர் அவர்களே, இங்கே மரம் நடுகின்ற விழாவைப்பற்றிப் பேசுகின்ற அருமையான ஒரு பில்லை இணைக்கிறார்கள். இந்த மரம் நடுகின்ற விழாவை நடுவண் அரசு விரும்புகிறது. குறிப்பாக தலைவர் ராஜீவ் காந்தி அவர்களும் விரும்புகிறார்கள். எங்களுடைய காங்கிரஸ் பேரியக்கமும் விரும்புகிறது. சவுண்ட் பொலூஷனை நீக்குகிறது; ஆக்ஸிஜனைத் தருகிறது; நிழல் தருகிறது; அதேநேரத்தில் சமுதாயத்தில் வாழுகின்ற மக்களுக்கு வேண்டிய பொருளையெல்லாம் தரும் மரம் எங்கும் செழிக்கட்டும். 'கோடையிலே இளைப்பாற்றிக்கொள்ளும் வகைகிடைத்த குளிர் தருவே, தெரு நிழலே, நிழல் கனிந்த கனியே, மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றே' என்று வள்ளல் பெருந்தகை பாடிய வளமான உணர்வுக்கு வழிகாட்டும் இந்த அரசையும், இந்த பில்லையும் பாராட்டி, விடைபெறுகிறேன்.

(இரவு 7.40.)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாளுக்குநாள் இய்க்கு ஊர்திகளினுடைய எண்ணிக்கை அதிகமாகிற காரணத்தால் வெளியாகும் நச்சுப் புகையினின்று ஏற்படுகின்ற கெடுதலினின்று மக்களைக் காக்கத்தான் நகர்ப்புறத்திலே மரங்கள் நடவேண்டுமென்ற ஒரு முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. மரங்கள் நடப்படுகின்ற காரணத்தால் கெட்ட காற்றை, நச்சுக் காற்றை அது சரி செய்யக் கூடிய வாய்ப்பு இருக்கிறது என்பது விஞ்ஞான ரீதியாகக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிற காரணத்தால், இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. உள்ளாட்சி அமைப்புகளைப் பொறுத்தவரைக்கும் அவைகளுடைய நிதியிலிருந்துதான் இதை மேற்கொள்ளவேண்டுமென்று அரசு கணித்து இருக்கிறது. காரணம் உள்ளாட்சி அமைப்புகள் 'அட்டானமஸ் பாடி'யாக இயங்குகிறபோது அரசிடமிருந்து இதற்கு நிதி எதிர்பார்ப்பது உகந்தது அல்ல. அவர்கள் சுய நிதியிலிருந்து இதை நடத்த வேண்டும் என்ற நோக்கோடு இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலச்சந்திரன் அவர்கள் பேசுகிறபோது மொழிபெயர்ப்பில் ஒரு குறைபாட்டைச் சொன்னார்கள். அது குறைபாடு அல்ல என்றே நான் கருதுகிறேன். காரணம் "The municipal council shall, at the cost of the municipal fund cause ttees to be planted at all convenient places on the sides of all public srreets and make adequate arrangements to preserve such trees."



என்று இருக்கிறது. அதை இப்படி பொருள் கொள்ள வேண்டும் "The municipal council shall,..at the cost of the municipal fund..cause trees to be planted at all convenient places (comma) on the sides of all public streets and make adequate arrangements to preserve such trees" என்று தான் பொருள் ஆக்க வேண்டும். அதைத்தான் மொழி பெயர்த்து இருக்கிறார்கள். எனவே மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே இந்த சட்டமுன்வடிவை நிறைவேற்றித்தர வேண்டுகிறேன்.

திரு. வை. பாலச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படி என்றால் அது காமாவோ அல்லது 'அண்டோ' ஏதாவது இல்லாமல் இருந்தால் அது பிரச்சினையை உருவாக்கும். அட்லிஸ்ட்டு காமா என்று போடவேண்டும்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,o அதற்குத்தான் நான் ஏற்கனவே சொல்லிவிட்டேன். There shuld have been a Comma. Excep. his, there is no other mistake.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1987) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1987) நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஊ) விற்பனை வரிச் சட்டங்கள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1987 [ஆ.இ.]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு :

" 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டங்கள் (திருத்த) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(எ) அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஏ) ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1987

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."



திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை நான் எதிர்ப்பதாக தயவுசெய்து கருதிவிட வேண்டாம். மனப்பூர்வமாக நான் ஆதரிக்கிறேன். ஆனால், ஆதரிக்கின்ற நேரத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் செய்கின்ற தவறுகளைக் கண்டுபிடிப்பதற்கு இவர்கள் செய்கின்ற தவறுகளை நிரூபிப்பதற்கு பொது மக்களிடமிருந்து....—

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர். : இது அறிமுக நிலைதான். நாளைக்கு டிஸ்கஷன் வரும்போது விரிவாகப் பேசலாம். (குறுக்கீடு) அறிமுக நிலையில் அப்போஸ் செய்து முடித்துவிட வேண்டும். இப்போது ஒரு டிபேட் வரக்கூடாது. (குறுக்கீடு) அப்போஸ் பண்ணவில்லை என்று நீங்களே முதலில் சொல்லிவிட்டீர்கள். பில்லை அறிமுகம் செய்யும்போது அப்போஸ் பண்ணும் வாய்ப்பு இருக்கிறது. நீங்கள் அப்போஸ் செய்யவில்லை, பாராட்டுகிறேன் என்று சொல்லிவிட்டீர்கள். பாராட்டுபவர் நாளைக்கு இன்னும் கொஞ்சம் கூடுதலாக பாராட்டுங்கள் (குறுக்கீடு) நாளைக்குப் பேசும்போது பேசலாம். (குறுக்கீடு) அறிமுக நிலையில் எதிர்க்கிறேன் என்று வேண்டுமானால் சொல்லலாம். அப்படிச் சொன்னால் அதை ரெக்கார்டு செய்யலாம். நீங்கள் பாராட்டுகிறேன் என்று சொல்லிவிட்டீர்கள்.

திரு. மா. மணிமாறன் : பாராட்டுகிறேன் என்று சொன்னால் அதற்காக நான் ஆதரிக்கிறேன் என்று அர்த்தம் அல்ல....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதைப்பற்றி டிஸ்கஷனில் சொல்லலாம். (குறுக்கிடு) கொஞ்சம் நான் சொல்லுவதைக் கேளுங்கள். நீங்கள் எதை, எப்போது வேண்டுமானாலும் பேசலாம் என்று நினைத்தால் எப்படி சில விதி முறைகள் இருக்கின்றன. நீங்கள் டிஸ்கஷனில் பேசும்போது பாராட்டலாம், எதிர்க்கலாம், எல்லாம் செய்யலாம். (குறுக்கீடு) அப்போது டிஸ்கஷனில் பேசுங்கள். இது அறிமுக நிலைதான். (குறுக்கீடு) அறிமுக நிலையில் பேசவே முடியாது. (குறுக்கீடு) அப்ஜெக்ட் செய்வது என்றால் (I object to it at the introduction stage.) என்று சொல்லலாம், அவ்வளவு தான் சொல்லலாம். (குறுக்கீடு) இப்படி விதிகளையும் மரபுகளையும் உங்களுக்காக மாற்றச் சொல்லாதீர்கள். (குறுக்கிடு)

பேரவை முன்னுள்ள கேள்வி :

" 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஐஐ) விற்பனை வரிச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு. 1987.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஒ) மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு. 1987.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்." (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அப்போஸ் பண்ணவேண்டுமென்றால், பண்ணுங்கள். கொஞ்சம் விதிகளையும் படியுங்கள். அப்போஸ் பண்ணுகிறோம் என்று சொல்லுங்கள். அதை அனுமதிக்கிறேன்.

திரு. மா. மணிமாறன் : இந்தச் சட்டத்தை நான் அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன். எதிர்ப்பதற்குக் காரணம், அதிலே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடிய........(குறுக்கீடுகள்).



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: காரணம் சொல்ல முடியாது. இன்ட்ரொடக்ஷன் ஸ்டேஜில் அப்ஜெக்ட் பண்ணலாம். கன்சிடரேஷன் ஸ்டேஜ் வரும்போது ஆதரித்தோ அல்லது எதிர்த்தோ பேசலாம். விதியைக் கொஞ்சம் படியுங்கள். மரபையும் விதியையும் மாற்றச் சொன்னால், நாங்கள் என்ன செய்வது ?

பேரவை முன்னுள்ள கேள்வி.

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஓ) மாவட்ட நகராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (9-5-1987) காலை 10-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 7-48 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

104. 1980–85 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. (1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 17/1961) 125(2) — பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது) (ஆங்கிலம்).

105. 1982–83 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் ஒன்பதாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைள்க ஏனைய தாள்கள்.

226. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும், விடைகளும் (எண்கள் 1 முதல் 50 வரை).

136533

D
V211,31 'N87
N87-43-3

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras 5
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore 1
11 S. M. Jegannatham Book House, 55, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A K Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No 461, Old Market Street, Salem
16 Meenakshi Pathipagam, Pudukkotta.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore 1
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthazhalevam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-12.

© Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras